S. Panchanathan.

ஹநுமான்

THE HANUMAN

வணங்குவம் வாரீர்!

S. Panchanathan.





தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்
திசைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ தென்ற கருத்துடை யோர்கள்
உயிரினுக் குயி ராகிய தெய்வம்
செய்வ தென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை காட்டிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்.
செந்தமிழ் மணி நாட்டிடையுள்ளீர்!
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!

அக்டோபர் 31
1948

விலை 8 அணா

52
பக்கங்கள்

தீபம் பெண்ணே!

"கம்பதாஸன்"

சேர்ந்து சுகித்தும் முன்னே
தீபம் வேண்டும் பெண்ணே!
காதலின் பாதையின் மீது—நடிது
காலடிச் சுவடைக் காண,
ஆதவன் தனையே நோக்கி—ஒளியை
அருள்வாய் எனவே கேட்பேன்!

சேர்ந்து சுகித்தும் முன்னே
தீபம் வேண்டும் பெண்ணே!...
ஆதவன் கடலில் மூழ்கி—இருளை
அளிக்க அகமே கொண்டால்,
சீத வெண்மதி தோன்றும்—காதல்
சிந்தைக் கனவைக் காட்டும்!

சேர்ந்து சுகித்தும் முன்னே
தீபம் வேண்டும் பெண்ணே!...
வெண்மதி முகிலிடைச் சென்று—பூத்த
வெளிச்சம் மறைத்திடு மாகில்,
விண்நிறை தாரகைக் கூட்டம்—காதல்
விந்தை மனத் துடிப் பாடும்!

சேர்ந்து சுகித்தும் முன்னே
தீபம் வேண்டும் பெண்ணே!...
விண்நிறை தாரகைக் கூட்டம்—காலை
வெண்பனித் துளியென வீழ்ந்தால்,
மின்னிடும் பொன்னின வண்டு—காதல்
மேன்மைப் புகழைப் பாடும்!

சேர்ந்து சுகித்தும் முன்னே
தீபம் வேண்டும் பெண்ணே!....
பொன்னின் வண்டுகள் போனல்—சுடரே
பொலியும் கருவைர மான
உன்றன் கண்கள் காட்டும்—காதல்
ஒளியில் முத்த மீவேன்!

சேர்ந்து சுகித்தும் முன்னே
தீபம் வேண்டும் பெண்ணே!

ஹநுமான்

காணிக்கை

கலாதேவி! உன் கமலக் கழலிணைகளில் இவ்விசேஷ வெளியீட்டைச் சமர்ப்பிக்கின்றேன். கொத்துக் கொத்தாக மலர்களைக் கொய்து, ஆர அமர உட்கார்ந்து அழகான மாலையொன்றை வண்ணமும் ஒளியும் உடையதாகப் புனைந்து, உனக்கு அணிவித்துப் பூஜித்து மகிழவேண்டும் என்று ஆசை. அந்த ஆசையை நீ இன்று இவ்விதமாக நிறைவேற்றி வைக்கின்றாய். அதற்கு என் நன்றி.

இந்த மலரை இன்னும் எவ்வளவோ அழகாகத் தொடுக்க வேண்டும் என்று நினைவு. ஆனால் அவகாசம் மிகக் குறைவு. ஒரே வாரத்தில் இந்த வெளியீட்டை இத்தனை அழகாகக் கொணர முடிந்தது என்பதைக் கருதும்போது எனக்கு மிகவும் பெருமையாயிருக்கிறது. அதேசமயத்தில் இன்னும் கொஞ்சம் அவகாசமும், ஆர அமரச் சிந்தித்துச் சீராகச் செய்யும் வாய்ப்பும் மாத்திரம் கிடைத்திருந்தால் இன்னும் எத்தனை அற்புதமான ஆரமாக இது மிளிர்ந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கும்போது எல்லையற்ற மகிழ்ச்சியன்றோ ஏற்படுகின்றது!

கலாவல்லி! இந்த மாலையிலே வண்ண மலர்கள் இருக்கின்றன; வாசப் புட்பங்கள் இருக்கின்றன; கவிதைகளாகவும், கட்டுரைகளாகவும், கதைகளாகவும் படங்களாகவும் அவை வடிவெடுத்து உன் பாத பத்மங்களை அலங்கரிக்கின்றன. தமிழறிஞர்களும், கலைஞர்களும் மனம் உவந்து அளித்த மலர்களைத் தொடுத்து உன் பாதங்களை அர்ச்சிக்கும் பாக்கியம் கிடைக்கப் பெற்றேன்.

இந்த சுதந்தரத் தீபாவளித் திருநாளிலே இத்தகைய பேறு, உன் அருள் அன்றோ? தேவி! தமிழ்ப் பேரறிஞர் ராவ் சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை, ஸ்ரீ பி. ஸ்ரீ யோகி சுத்தானந்த பாரதியார், ஆசிரியர் ஞானசம்பந்தன், காப்டன் என் சேஷாத்திரிநாதன், 'சுகி' ஆர். கே. விசுவநாதன், சங்கீதபூபதி மஹாராஜபுரம் விஸ்வநாதய்யர், 'கம்பதாஸன்' சகோதரி சுப்புலக்ஷ்மி முதலியவர்கள் அற்புதமான கட்டுரைகளும் கவிதைகளும் எழுதியிருக்கிறார்கள். 'மாயாவி,' 'குகப்பிரியை,' பூவாளூர் சுந்தரராமன், 'அகிலன்,' ஜி. எஸ். மணி, ராஜம் ராமமூர்த்தி, சரோஜா ராமமூர்த்தி, சி. சரஸ்வதி, நித்யா வேங்கடராமன் முதலியவர்கள் அழகழகான கதைகளை வரைந்திருக்கிறார்கள்.

சங்கீத வித்வான்களின் படங்களுடன் கூடிய 'வித்வத் மண்டலம்' நமது ரேடியோ நிருபர் ஸ்ரீ 'கானதாஸன்' அவர்களது அரிய முயற்சி. இன்று சினிமா உலகில் சுடர்விட்டெறியும் நக்ஷத்திரங்களும், கலைஞர்களும், நடிகர்களும் உனக்கு ஆரம் அணிவிப்பதில் எத்தனை ஆர்வமுடையவர்களாயிருந்தனர் என்பதைக் கண்டு, நீயே பெருமகிழ்ச்சி எய்துவாய். உன் கலையை வளர்க்கும் கலைச்செல்வர்களுக்கு உன்னிடம் உள்ள அன்புக்கு அளவு ஏது? மேலும், சித்திரகாரர்கள் ராஜு, சீனு, சொக்கன் ஆகியவர்கள் ஓவியம் தீட்டியிருக்கின்றனர். இவ்வளவும் நின்பால் உள்ள அன்பினால் தானே?

எனினும் இத்தனை பேர்களிடமிருந்தும் விதவிதமான மலர்களைப் பெற்று மாலையாகத் தொடுத்து உன் கழலிணைகளில் சூட்டும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததே. அதற்கு என் நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என் கடமையன்றோ!

அறிவின் சுடரே! இம்மலர் மாலையை இன்று ஏற்றுக்கொள். இன்னும் அழகழகான மாலைகளைப் புனைந்து உன் அடிமலர்களிலே சூட்டும் ஆற்றலையும், ஆக்கத்தையும், ஆதரவையும் எனக்கு அருள் புரிவாயாக.

இத்திருநாளிலே உன்னை வழிபடுகிறேன். உன் அன்பர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். உன் சார்பில் என் [ஹநுமான்] அன்பர்களையும் வாழ்த்த அனுமதிப்பாயாக.

வணக்கம்.

H. O.
38, QUEENS ROAD
BOMBAY 1

AHMED A. FAZELBHOY LTD.

159-160, MOORE ST., G.T., MADRAS 1

BRANCH:
55. CANNING STREET
CALCUTTA

Offer the season's greetings and wish to inform their numberous clients that the carry ready stock of:

REFRIGERATION GOODS: Methyl, Freon and Ammonia Condensing Units, "Wagner" Electric Motors, "V" Belts, Copper Tubing, Controls, Corkboard, fittings, tools, Expansion Valves and other refrigeration supplies

Products of:
The Tecumseh Products Co.
The Howe Ice Machine Co.
The Linderme Tube Co.
The Mueller Brass Co.
The Wagner Electric Corporation
The B. F. Goodrich Company

RUBBER GOODS: — Transmission Beltings, Acid Proof Industrial Gloves manufactured by the special Annode process — The International B. F. Goodrich Co. U. S. A.

Electricians Gloves tested to 2000, 6000, 10,000 and 18,000 volts etc. — The Sterling Rubber Company, Canada

As Sales Representatives, the, beg to offer their services to their clients to import the above and undermentioned goods from the factories direct against customers' licences-or if necessary against their own licences wherever available:

ELECTRICAL: — Fractional and Integral Horse Power motors, step-up and step-down transformers, chokes, battery chargers, voltage regulators, Neon sign transformers, fluorescent light ballasts etc. etc. — The Wagner Electric Corp., U.S.A. The Acme Elec. & Mfg. Co., U.S.A.

STEEL: — Structural Steel bars, sheets, tubes etc. for reinforced concrete, furniture and cycles frames and for all other purposes, Stainless Steel Sheets bright clear and wear-resistent — The Republic Steel Corporation

COPPER & BRASS: — "Streamline" water and gas pipes, fittings, castings & forgings of all kinds, rods etc. etc. — The Mueller Brass Co., U.S.A.

MECHANICAL & SURGICAL RUBBER GOODS: Hotwater bottles, Icebags, Surgeon's Gloves, Catheters, Sheetings etc. etc. — The International B.F. Goodrich Co., U.S.A. The Sterling Rubber Co., Canada

Enquiries Solicited

அசோகவனத்தில் கற்புச் சித்திரம்

: ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை :—

சில தினங்களுக்கு முன்னர் சென்னை ராஜாஜி மண்டபத்தில் கம்பர் விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவிற்குப் பெருஞ் சிறப்பு அளித்தவை ஸ்ரீமதி எம். எஸ் சுப்புலக்ஷ்மி அம்மாளின் இசையுடன் நிகழ்ந்த ஆனந்தி ராதா அபிநயமும், இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரின் தமிழிசையும் ஆகும். தலைமை வகித்த ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் ஒரு செய்தியைக் கூறி விழாவில் கூடியிருந்த நன்மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டினர். திருவழுந்தூரில் கம்பன் மேட்டில் இப்பெருங்கவியின் நினைவுக்குறியாகச் சிறந்த நிலயம் ஒன்று வெகுவிரைவில் நிறுவப்படும் என்பதே அச்செய்தி.

இதனைக் கூறியவுடன் ரஸிகமணியின் மனோபாவனையில் ஒரு பெரு நிலயமே கட்டி முடிந்துவிட்டதாகத் தோன்றிவிட்டது. அம்மாளிகையிலுள்ள ஒரு தூணில் எழுதிப் போற்றுவதற்காக ஒரு செய்யுளையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது வருமாறு.

சாணினு முளனோர் தன்மை
அணுவினைச் சதகூறிட்ட
கோணினு முளன்மா மேருக்
குன்றினு முளன்இந் நின்ற
தூணினு முளன் முன்சொன்ன
சொல்லினு முளன் இத்தன்மை
காணுதி விரைவின் என்றான்
நன்றெனக் கனகன் சொன்னான்.

இறைவன் ஸர்வாந்தர்யாமியாய் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றான் என்ற உண்மையை இச் செய்யுள் அழகாகப் புலப்படுத்துகிறது. ஆகவே, இச் செய்யுள் கம்பன் பெருநிலயத்தில் அமைக்கும் தூண்கள் ஒன்றிலே வரைந்து போற்றுதற்குத் தகுதியுடையதே.

சாணினுமுளன் என்பது ஒரு தனிச் செய்யுள். அழகான தனிச் செய்யுட்களையெல்லாம் கம்பன் நிலயத்தில் எழுதிவைப்பதென்றால், எத்தனையோ நிலயங்கள் வேண்டியனவாய் இருக்கும். தனிச் செய்யுட்களைத் தவிர, பல அரிய சட்டங்களும் சித்திரங்களாகத் தீட்டப்பெற்றுச் செய்யுட்களாலும் புலப்படுத்தி இந்நிலயத்தில் வரையவேண்டுவனவாயுள்ளன.

இவ்வகைக் கட்டங்களுள் ஒன்று ஸீதை சோகத்தால் வருந்தி, தன் கற்பின் திண்மையைக் வலியுறுத்தி, அநுமனிடம் செய்தி சொல்லியனுப்பும் இடமாகும்.

ஸீதை ராவணனால் சிறையெடுக்கப் பெற்று, அசோகவனத்தில் அரக்கியர் காவலில் இருக்கின்றாள். ராமனை எண்ணிய வண்ணமாய் நைந்து உருகுகின்றாள். அவன் தன்னை மீட்டுச் செல்வதற்கு வரும் வழியை நோக்கி, திசைகள் அனைத்தையும் தன் கண்களால் அளந்து பார்க்கின்றாள்.

சுருதி நாயகன் வரும் வரும் என்ப
தோர் துணிவால்
கருதி மாதிரம் அனைத்தையும் அளக்
கின்ற கண்ணாள்

என்பது கம்பனது அற்புதத் திருவாக்கு. தான் அவனோடு உடன் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்த அரிய நிகழ்ச்சிகளையெல்லாம் மனத்தால் எண்ணி எண்ணி நைந்து புலம்புகின்றாள். திரிசடை அடிக்கடி தேற்றிய போதிலும், நம்பிக்கை பிறவாது உளம் மாய்கின்றாள். இந்நிலையில் அநுமன் கடல் கடந்து வந்து அசோகவனத்தில் புகுந்து ஸீதையைக் கண்ணுறுகின்றான். அப்பொழுது ராவணன் தோன்றித் தனது காதல் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கின்றான். ஸீதை அவனை இகழ்ந்து அவனுக்கு வரவிருக்கும் கேட்டினை உணர்த்தித் தனது நாயகன் பேராற்றலையும் கற்பின் திண்மையையும் புலப்படுத்துகின்றாள். ராவணனும் இப்பெண்கள் நாயகத்தை அச்சுறுத்தி விட்டு அகல்கின்றான். பின்னர், ராவணனை அங்கீகரித்துக் கொள்ளும்படி அரக்கியர்கள் அவளைத் துன்புறுத்துகிறார்கள். ஸீதை தான் உயிர் வாழ்வது பழிக்கு இடமாகும் என்று கருதி உயிர்விடத் துணிந்து அடுத்து மாதவிக் கொடிகள் சூழ்ந்த ஓர் மறைவிடத்திற்குச் செல்லுகிறாள். அநுமன் அவள் கருத்தை உணர்ந்து அவள் முன் தோன்றி ராமதூதன் என்று தன்னை உணர்த்தி உய்விக்கின்றான். தனது பிரிவால் ராமன் அடைந்துள்ள துன்பங்களைத் தெரிவித்து அவன் அடையாளமாக அனுப்பிய மணி மோதிரத்தைக் கொடுக்கின்றான். இதனைக் கண்டதும் ஸீதைக்கு நம்பிக்கை பிறக்கின்றது. எனினும், இச்சிறு குரங்கைத் துணையாகக் கொண்டு ராவணனை வெல்லுதல் கூடுமோ என்று ஐயுறுகின்றாள். அப்போது தனது விசுவரூபத்தைக் காட்டி, அவளை அநுமன் தெளிவிக்கின்றான். தனது ஆற்றலைப் புலப்படுத்திய பின், தானே ஸீதையைத் தன் தோளின்மீது ஏற்றி, ராமன் இருக்குமிடத்திற்குக் கொண்டு செல்வதாகவும் கூறினன். ஸீதை இதற்கு இணங்காது தனது நாயகனது ஆண்மைக்கும் தனது பெண்மைக்கும் ஒவ்வாது என மறுத்துவிடுகிறாள். ராமனிடம் தனது நிலைமையையும் துன்பத்தையும் உணர்த்தும்படி சில செய்திகளையும் கூறி அனுப்புகிறாள்.

❀

முதலாவது தனது உறுதிப்பாட்டைத் தெளிவுற விளக்குகின்றாள். எத்தனையோ இன்னல்களுக்கு ஆளாகிப் பெண்கள் உயிரெனப் போற்றும் கற்பினைச் சோதிக்கும் முறையில் தான் இருந்தபோதிலும், இன்னும் தனது பகைவனான ராவணனது அசோகவனத்தில் ஒரு மாதகாலம் காத்திருக்க எண்ணுகின்றாள். ஏற்கெனவே இவள் உயிர்விடுவதற்குச் சித்தமாயிருந்ததைத் தெரிந்துள்ள அநுமான் ஒரு மாதத்திற்கு மேல் ஸீதை உயிர்வைத்திருக்க மனம் இசையாள் என்ற இவ் உறுதிப்பாட்டில் சிறிதும் ஐயம் கொள்ளமாட்டான். இவ் உறுதிப்பாட்டை ராமனிடம் தெரிவிக்க வேண்டும் பொறுப்பு அநுமானுக்கு உரியது. நீதிமுறைகளைக் கற்று ஐம்பொறிகளையும் அடக்கி ஒழுகும் அநுமான் தனது கடமையைச் செலுத்தத் தவறமாட்டான். இதனை உணர்ந்து 'நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்' என்று ஸீதை கூறுகின்றாள். ஒரு மாதத்திற்குள் ராமன் வாராமல் போனால், அவள் இறப்பது திண்ணம். இப்பொழுதே அவளுடைய ஆவி தன்னைப் பிரிந்து போதற்குப் பறந்து கொண்டிருக்கிறது. அதனை அடக்கிப் பிடித்து வைத்திருக்கின்றாள் ஸீதை. இந்த உறுதிப்பாடு கேவலம் சொல்லளவில் உள்ளதன்று. ராமன் பேரில் ஆணை வைத்து இதனை அநுமனுக்கு வற்புறுத்துகின்றாள். இப்பொழுது செய்யுளைப் பாருங்கள் :

இன்னும் ஈண்டொரு திங்கள்
இருப்பல்யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதி
யோய்
பின்னை ஆவி பிடிக்கின்றிலேன்
அந்த
மன்னன் ஆணை இதனை மனக்
கொள் நீ.

இங்ஙனமாகத் தனது உறுதிப்பாட்டை வெளியிட்ட பின்பு, ராமனது கடமை ஒன்றனை அடுத்துத் தெரிவிக்கின்றாள். ஸீதை தனது காதற்குரிய நாயகி என்று கருதி அவளைச் சிறைமீட்க வருவது இயல்பு. அவ்வாறு கொள்வதற்கு அவன் மனம் பொருந்தவில்லையென்றாலும், யாரோ ஒரு பெண் பிறனொருவனால் அபகரிக்கப்பட்டுத் துன்புறுகின்றாள் என்ற அளவிலாவது அவன் இரக்கம் கொண்டு தன்னைக் காப்பாற்ற வருதல் கூடும். இந்த இரண்டு மனப்பான்மையும் அவனுக்கு இல்லையென்றாலும், க்ஷத்திரியன் என்ற நிலையில் அவனுடைய வீரத்தைக் காப்பாற்ற முயலுதல் அவனுடைய சிறந்த கடமையாகும். இக் கடமையைக் கருதியாவது தன்னை மீட்கவேண்டும் என்று ஸீதை உணர்த்துகின்றாள். இங்கே ஒரு வீரன், தனது மனைவியைத் துறந்தாலும், தனது தயை முதலிய குணங்களைத் துறந்தாலும், தனது வீரத்திற்குச் சிறிதும் பங்கம் ஏற்படுதலைச் சகிக்கமாட்டான் என்ற தத்துவத்தை ஸீதை நன்றாக உணர்ந்துள்ளமை வெளிப்படுகிறது. எவராலும் யாதொரு வேண்டுகோளும் இல்லாதபடியே, இங்ஙனம் வீரம் காத்தற்கு ராமன் முற்படுவான் என்பதும் புலப்படுத்தப்படுகிறது. இப்போது செய்யுளைப் பாருங்கள் :

ஆரந்தாழ் திருமார்பற்கு அமைந்த
தோர்
தாரம் தானலனேனும் தயாவெனும்
ஈரந் தானகத்தில்லை என்றாலும் தன்
வீரங் காத்தலை வேண்டென்று
வேண்டுவாள்.

இங்ஙனம் ராமனது கடமையை உணர்த்திய பின்பு, தனது மைத்துனனாகிய லக்ஷ்மணனது தனிப் பெருங் கடன் ஒன்றைச் சொல்லியனுப்புகின்றாள். அவன் தன்னைக் காவல் செய்திருந்த காலத்துத்தான் ராவணன் தன்னை அபகரித்துக்கொண்டு சென்றது. ஆகவே, தன்னை மீட்கவேண்டும் பொறுப்பும் அவனுக்குத்தான் உரியது. இதனைக் கூறும் செய்யுள் வருமாறு :

ஏத்தும் வென்றி இளையவற்கு
ஈதொரு
வார்த்தை கூறுதி மன்னரு
ளாலெனைக்
காத்திருந்த தனக்கே கடனிடைக்
கோத்த வெஞ்சிறை வீடென்று
கூறுவாய்.

இக்கடமையை இலக்குமணன் நிறைவேற்றத் தவறினால், உலகம் புகழும் அவனது வெற்றி பயனற்றதாகும். ராமனே தடுத்தபோதிலும், அவன் தனக்குப் புத்திர ஸ்தானமாயுள்ள இளையனாதலால் தனது வேண்டுகோளுக்கு இணங்குதல் உறுதி. இதனால் ராமனுடைய கடமைக்கு யாதொரு பங்கமும் இல்லை. ஏனென்றால், அவனுடைய கட்டளைப்படிதான் தன்னை இவன் காத்திருந்தது. இருவருக்கும் தன்னைச் சிறைவீடு செய்தல் கட

(6-ம் பக்கம் பார்க்க)

முன் செல்வோம்

ஜெயஹிந் தெனமுன் செல்வோம்—இந்த
ஜகத்தினை அன்பினால் வெல்வோம்
பயபந்தனை துயரில்லோம்—அருள்
பாலிக்கும் நாமத்தைச் சொல்வோம்! (ஜெய)

ஆற்றலை மிகமிக வளர்ப்போம்—என்றும்
ஆண்மை ஆண்மைஎன உயிர்ப்போம்
கூற்றையும் போரினிற் தகைப்போம்—தேவர்
தலத்தினை உலகினில் அமைப்போம். (ஜெய)

வகுப்புக் கலகங்கள் ஏன் சொல்
மனஞ்செயல் அனைத்திலும் ஒன்றி
தொகுப்புறப் பொதுநலம் புரியும்—வீர
சுதந்தரத் தொண்டர்கள் யாமே. (ஜெய)

உலகினில் துடிப்பதெம் உள்ளம்—எம்
உள்ளத்தில் துடிப்பதும் உலகே
பலபல நாண்களுக்கோர் வான்—இந்த
பலவகை உயிர்க்கொரு பகவான்! (ஜெய)

—சுத்தானந்த பாரதி



திருநெல்வேலிப் பாலம் பாரதியார் வாயிலாகத் தமிழிலக்கியப் பிரசித்திபெற்றுவிட்டது. கண்ணனின் காதலி, விரக தாபத்தினிடையே திருநெல்வேலிப் 'பாலத்துச் சோசிய'னிடம் குறி கேட்டுவிட்டுத் தோழியிடம்,

"பாலத்துச் சோசியனும்,—கிரகம்
படுத்தும் என்று விட்டான்"

என்று பிரஸ்தாபிக்கிருள். 'பெரிய இந்தியக் கலகம்' என்ற முதலாவது சுதந்தர யுத்தத்திற்கு முன்பே இந்தப் பாலம் கட்டிப் புண்ணியம் கட்டிக்கொண்டவர் சுலோசன முதலியார். தேம்ஸ் நதி மீதுள்ள வாடர்லூ பாலத்தின் அமைப்பைப் பின்பற்றியது தாமிரபருணியின் திருநெல்வேலிப் பாலம். அது கட்டி முடிந்ததும், மிகப் பெரிய யானையொன்று அதன்மீது நடந்துபோயிற்று என்றும், பின்பு பட்டாளமும், பீரங்கிப் படையும் சென்றன என்றும், அப்பால் கலெக்டருடனும், பாலம் கட்டிய எஞ்சினீருடனும் கைகோத்து நடுநாயகமாய் முதலியார் நடந்தாரென்றும், கடைசியாகப் பொதுமக்கள் குதூகலமாய்ப் போனர்களென்றும் சொல்கிருர்கள். இப் பாலமும் இந்நிகழ்ச்சியும், கால வெள்ளத்திலே பாலம் போடும் பெரிய பெரிய எஞ்சினீர்களான பேராசியர்களையும், லோகோபகாரிகளான பேரறிவாளர்களையும் எனக்கு நினைப்பூட்டுவதுண்டு.

இத்தகைய எஞ்சினீர்களான லோகோபகாரிகளிலும் 'உலக சிரேஷ்டர்' என்று மதிக்கப் பெறுகின்ருர் மகாத்மா காந்தி. இவரை ஒருசமயம் பேஷாவரில் ஒரு பெரிய உத்தியோகஸ்தர் பேட்டி கண்டார். சுதந்தர இந்தியாவில் அல்ல, உத்தியோகஸ்தர்களெல்லாம் பெரியவர்களாயிருந்த அந்நாளிலே. உத்தியோகஸ்தர் தென்னிந்தியர். அவர் காந்தியடிகளை நோக்கி, 'நான் தெற்கேயிருந்து வடக்கு முகமாய்ப் பிரயாணம் செய்யச் செய்யத் தென்னிந்தியர்களுக்கும் வட இந்தியர்களுக்கும் இடையே வேற்றுமைகள் அதிகரிப்பதைத் தானே காண்கிறேன்; தென் குமரியும் இமயமும் இணைந்து போகும் காலமும் உண்டோ' என்று கேட்டார். அதற்கு ஒரு பாலம் உண்டு என்ருர் மகாத்மா தம் பொக்கைவாய்ச் சிரிப்புடன். 'ஸ்தூலமாகப் பார்த்தால் வேற்றுமை தோன்றத்தான் செய்கிறது. எனினும் இமயத்தையும் குமரியையும் இணைக்கும் பாலம் ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அது ஒரு தங்கப் பாலம்; பெயர் அஹிம்ஸா தர்மம்...... பட்டாணியர்களையும், சாந்தமும் அறிவுக் கூர்மையும் வாய்ந்த தென்னிந்தியர்களையும் இணைக்கவல்லது அஹிம்ஸைப் பாலம்தான்!' என்று விடையளித்தார்.

இப்பாலத்தைக் காந்தியடிகளுக்கும் முன்பே இந்தியா பல நூற்றுண்டுகளாக—ஏன், வேதகாலம் தொடங்கி—நிர்மாணஞ் செய்து வந்திருக்கிறது எனலாம். தமிழர்களும் சங்ககாலம் தொட்டுக் குமரிக்கும் 'பொற்கோட்டிமய'த்திற்கும் ஒரு பொற்பாலம் கட்ட முயன்றனர். இத்தமிழ் முயற்சிகள் சுமார் 1,500 ஆண்டுகளுக்கு முன் வடமொழியாளர்களின் பெருமுயற்சிகளையும் பயன்படுத்திக்கொண்டு விசேஷ வெற்றி பெற்றன. தெற்கும் வடக்கும் மட்டுமா? கிழக்கும் மேற்கும், நாற்றிசையும் எண்கோணமும் இசைந்து கைகோத்துச் செல்லத்தக்க ஒரு பொற்பாலம் கட்டிப் புண்ணியங் கட்டிக்கொண்டது தமிழகம். இது மயிலாப்பூரிலிருந்து கட்டிய பாலம் என்ருல், சிலருக்கு ஆச்சரியமாகவும் தோன்றக்கூடும். இப்பாலம் பெரிய பெரிய 'யானை'களுக்கு மட்டுமா, வீரர்களுக்கு மட்டுமா, பிரமுகர்களுக்கு மட்டுமா? பொதுமக்களுக்கெல்லாம் ஒரு பொது உடைமை: சாதாரண வாழ்வையும் ராஜவாழ்வாக நிமிரச் செய்து வழியே செலுத்தும் பாலம் இது.

●

இந்த மயிலைப் பாலம் கட்டிய எஞ்சினீரைத் தமிழகத்தின் கதியாவார் இருவருள் ஒருவர் என்பர். இந்த எஞ்சினீரைக் குறித்தும், இவர் கட்டிய பாலத்தைக் குறித்தும் நம் தேசிய வீர முரசு, 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்றும், 'தெய்வ வள்ளுவன் வான் மறை கண்டதும்' என்றும் கொட்டி முழக்குவதை அறியாதார் யார்? தமிழ்நாட்டிலும், 'வான்மறை' தந்து 'வான்புகழ்' சூடியது மயிலாப்பூர் என்ருல், தமிழ் மாகாணத்தின் தலைநகரமாகிய சென்னைக்கு இதைக் காட்டிலும் சிறந்ததோர் உரிமையும் பெருமையும் உண்டோ? திருவள்ளுவர் மதுரையில் பிறந்திருக்கக்கூடும் என்று ஊகஞ் செய்யும் பண்டிதர்களும், இவர் வசித்த இடம் மயிலாப்பூர் என்ற உலக வழக்குச் செய்தியை ஒப்புக்கொள்ளத்தான் செய்கிருர்கள்.

பாரதியார் 'வான்மறை' என்று போற்றும் திருக்குறளைத் தமிழர்கள் 'தமிழ்மறை' என்று நீண்ட காலமாய்ப் போற்றி வந்திருக்கிறார்கள். சைவர்கள் திருவள்ளுவரைச் 'சிவநேசர்' என்று கருதி வந்திருக்கிருர்கள். வைணவ அபிமானியென்று கருதும் வைணவர்களும் உண்டு. புறச்சமயிகள் என்று கருதப்பட்ட ஜைன பௌத்தர்களும், வள்ளுவர் தத்தம் மதத்தைச் சார்ந்தவர் என்று கருதியதுண்டு. தற்காலத்தில் 'காய்தல் உவத்தல் அகற்றி'ப் பொதுநோக்குடன் ஆராய்ச்சி செய்வோரில் சிலர் இவரை ஜைனரென்று துணிந்து கூறுவதும் உண்டு. கிறிஸ்து தாஸரான தாமஸ் முனிவர் (ஸெண்ட் தாமஸ்) அந்நாளிலேயே மயிலாப்பூருக்கு வந்து கிறிஸ்துமதப் பிரசாரம் செய்தாரென்றும், அதனுல் திருவள்ளுவரும் கிறிஸ்து வேதக் கொள்கைகளை அறிந்திருக்கக் கூடுமென்றும், அக்கருத்துக்களைத் தழுவி வள்ளுவர் வாய்மொழி அமைந்திருக்கிறதென்றும் நம்பிய-நம்புகிற- சில கிறிஸ்தவர்களும் உண்டு. ஆனுல் கல்லாடர் என்ற சிவநேசரே,

சமயக் கணக்கர் மதிவழி கூறு(து)
உலகியல் கூறிப் பொருள்இது

என்ற வள்ளுவர்—என்று ஒப்புக்கொள்கிருர். இன்றைய நூலாராய்ச்சியாளர்களும் கல்லாடரின் அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்கிருர்கள்.

எனினும் இந்நூலைக் குறித்து, வேறொரு பழம் புலவர்,

எல்லாப் பொருளும் இதன்பால்
உள; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்

என்று பாடியிருக்கிருரே, அந்த உணர்ச்சியும் திருக்குறளைக் கற்கக் கற்க நமக்கும், இன்றும், ஏற்படத்தான் செய்கிறது. எத்தனையோ துறைகளில் எவ்வளவோ அபிவிருத்தி கண்டிருக்கும் இந்த விஞ்ஞான யுகத்திலும்,

கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்ற குறளின் கூற்றுக்கு இணங்கக் குறளைக்கற்பவர்களுக்கு, இவ்வுலகியல்-வேதத்திலே சமரச சன்மார்க்கத்தின் சாரமான கருத்துக்களெல்லாம், கொள்கைகளெல்லாம் அடங்கிக் கிடக்கின்றன என்று தோன்றத்தான் செய்கிறது.

திருவள்ளுவரின் சமரசக் கருத்துக்களுக்கெல்லாம், சன்மார்க்கக் கொள்கைகளுக்கெல்லாம் அஹிம்ஸா தர்மமே ஆணிவேர் என்று சொல்லவேண்டும். 'கடவுள் வாழ்த்து'ம் 'வான் சிறப்பு'ம் சொல்லித் திருக்குறளை ஆரம்பிக்கும் 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தின் முடிமணியாக அமைந்திருக்கும்,

அந்தணர்என்போர் அறவோர் மற்(று)
எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

என்ற குறள் அந்தணரான வள்ளுவரின் ஜீவநாதம். இது திருக்குறளின் முக்கிய இடங்களில் ஒலிப்பதும் எதிரொலிப்பதுமாய் ஊடுருவிச் செல்கிறது.

அவிசொரிந்(து) ஆயிரம் வேட்ட
லின், ஒன்றன்
உயிர் செகுத்(து) உண்ணாமை நன்று

என்றும் திருவள்ளுவர் கூறுவதால், உயிர்க்கொலை செய்து வேள்வி செய்பவனைக் காட்டிலும் அஹிம்ஸா தர்மவாதியே அந்தணப் பட்டத்திற்கு உரியவன் என்பது இவர் கருத்தென ஊகிக்கலாம்.

இப்படி ஜீவகாருண்யமாகிய அந்தண்மையைப் போற்றும் வள்ளுவர் தியாகமே உண்மையான யாகம், உயர்ந்த தவம் என்கிருர்.

உற்றநோய் நோன்றல், உயிர்க்(கு)
உறுகண் செய்யாமை,
அற்றே தவத்திற்(கு) உரு

என்று தவத்தின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறுவதைக் கேளுங்கள். தனக்கு வந்த துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்; பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யக் கூடாது: இவ்வளவுதான் தவம்—இதற்கு அதிகமாகவும் இல்லை, குறைவாகவும் இல்லை என்கிருர்.

கோடையில் வெயிலிலோ பஞ்சாக்கினி மத்தியிலோ நிற்பதும் மழையிலும் பனியிலும் தண்ணீரில் நிற்பதும் தானு தவம்? இப்படி 'ஊன்வாட வாடத் தவம் செய்'வதைச் சரியான தவமென்று பக்தர்களும் ஒப்புக்கொள்வதில்லை. துன்பம் நிறைந்த வாழ்க்கையில் நாமே அனுவசியமாகத் துன்பங்களை நம்மீது சுமத்திக்கொள்ள வேண்டுமா? நாட்டிலே ஜனங்கள் துன்பம் அடைந்துகொண்டிருக்கையில் சமூக வாழ்க்கையை விட்டுக் காட்டுக்கு ஓடிப் போவதுதான் தருமமா, தவமா? அதில் வீரமும் இல்லையே! துன்ப நெருப்புக்கிடையே நின்று கடமை செய்வதும், பணி செய்வதும், தியாகம் செய்வதுமே தவம்.

தவம் செய்வார் தம்கருமம்
செய்வார்

என்றும் கூறுகிருர். இக்குறள் துறவற இயலில் வருவதால், தவம் செய்கிறவர்களே கடமையைச் செய்கிறவர்கள் என்றும், மற்றவர்கள் அவம் செய்கிறவர்களென்றும் பொருள்பட வியாக்கியானம் செய்கிருர் உரையாசிரியர். ஆகவே தனக்கு வரும் துன்பத்தை ஒருவன் பொறுத்துக்கொண்டு பிறருக்குத் துன்பம் செய்யாமலிருப்பதாகிய தவம் நாமெல்லாம் மேற்கொள்ள வேண்டிய கடமையென்பது வள்ளுவரின் அபிப்பிராயம்.

இப்படி வாழ்கிறவனைத்தான் வள்ளுவர்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்கிருர். தவவாழ்க்கையாகிய தியாக வாழ்க்கையைத் தெய்வ வாழ்க்கையென்கிருர். இவ் அருங் குறளுக்கு ஒரு கவிதைப் பேருரை நிகழ்த்தியுள்ளான் கம்பன்:

ஆவுக் காயினும் அந்தணர்க்
காயினும்
யாவர்க் கேனும் எளியவர்க் ;
காயினும்
சாவப் பெற்றவ ரேதகை
வானுறை
தேவர்க் கும்தொழும் தேவர்கள்
ஆகுவார்.

தியாகமூர்த்திகளான தர்மவீரர்களையே உயர்ந்த வீரர்களென்றும் உத்தம வீரர்களென்றும் திருவள்ளுவர் மதிக்கிருர். பழைய தமிழர்களுடைய வீரதர்மத்தையும்பாராட்டுகிறவர்தான். கோழைத்தனத்தைக் காட்டிலும் ஹிம்ஸை நெறியில் செல்லும் வீரமும் எவ்வளவோ மேலானது என்ற காந்தியடிகளின் அபிப்பிராயம் வள்ளுவருக்கும் உண்டு.

வீரதர்மத்தைக் காட்டிலும் எவ்வளவோ மேலானது என்பது, தர்மவீரம் என்பது வள்ளுவர் கொள்கை. வாழ்க்கையே ஒருவகையில் போர்க்களம்தான். போர்க்களத்திற்குள்ளும் போர்க்களம் வேறு வேண்டுமா? துன்பங்கள், இடையூறுகள் முதலான மதயானைகள் தாக்க வரும்போது, மனுே சக்தியென்ற வேலை வீசவேண்டும். அப்படி வீசும்போது உள்ளத்தில் ஒரு சிறிதும் கலக்கம் வேண்டாம் என்கிருர் திருவள்ளுவர். ஒரு வீரச் சிரிப்புச் சிரிக்கவிட்டு...

இடுக்கண் வருங்கால் நகுக

[இடுக்கண்-துன்பம். நகுக-சிரிக்கக் கடவன்.]

என்ற கட்டளையைக் கேளுங்கள். அந்தச் சிரிப்பைப் போல் துன்பத்தை எதிர்க்கக் கூடியது வேறொன்றும் இல்லையாம்.

இப்படி அகமகிழ்ந்து முகமலர்ந்து சிரித்துக்கொண்டே அறிவாளி தன் மனோசக்தியைப் பிரயோகிக்கிறான் வாழ்க்கையாகிய குருக்ஷேத்திரத்திலே. இம்மனோசக்தி — எண்ணத்தின் திண்மை — துன்பங்களுக்கெல்லாம் துன்பமாகி அவற்றைப் போக்கிவிடும். இந்த எண்ணத்தின் சக்தியை,

எண்ணிய எண்ணியாங்(கு)
எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

[எண்ணியாங்கு-எண்ணியவாறே. எய்துப-அடைவர். திண்ணியர்-திண்மை அல்லது சக்தி வாய்ந்தவர். பெறின்-பெற்றால்.]

என்ற குறள் எவ்வளவு தெளிவாக வெளியிடுகிறது!

துன்பம் என்றால் என்ன? அது ஏன் நம்மைப் பயமுறுத்த வேண்டும்? அது நம்முடைய பகைவன்தானா? 'ஐயோ! அது நெருப்பல்லவா? சுடாதா?' என்று கேட்கிறோம்? திருவள்ளுவரோ,

சுடச்சுடரும்பொன்போல் ஒளி விடும்
துன்பம்,
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

[சுடரும் - ஒளிவீசும். நோற்கிற் பவர்க்கு - நோன்பு அல்லது தவம் செய்பவர்க்கு.]

என்கிறார். நம்முடைய குற்றங்குறைகளைச் சுட்டெரித்துநமது குணாதிசயத்தை ஒளிவீசும் உயர்ந்த மாற்றுத் தங்கமாகச் செய்யும் நெருப்பைத்தானே துன்பமென்று உலகம் சொல்கிறது? ஆகவே வாழ்க்கையை விட்டு ஓட முயலாமல் துன்பங்களைப் பொறுத்துப் பொறுத்து நல்லறிவையும் நல்லொழுக்கத்தையும் பெருக்கிக் கொள்கிறவர்களே உண்மையான வீரர்கள் என்பர் திருவள்ளுவர்.

வாழ்க்கையில் துன்ப நெருப்புகளுக்கிடையே கடமை புரிவோரையும் பணி புரிவோரையும் 'தவசிகள் என்றும் மதிக்கிறார் திருவள்ளுவர். தியாக நெருப்பிலே மூழ்கிக் குளிப்பவர்களோ அதிவீரர், அதிமுனிவர் இவர்களைச் செயற்கரிய செய்யும் பெரியர் என்பர்:

செயற்(கு) அரிய செய்வார்
பெரியர்; சிறியர்
செயற்(கு) அரிய செய்கலா தார்

இப்படி மனிதர்களைப் 'பெரியர்' 'சிறியர்' என்ற இரு பெரும் பிரிவுகளில் அடக்கிக் காட்டுகிறது குறள். 'யாராவது செய்யவேண்டியதுதான்: நான் ஏன் செய்ய வேண்டும்?' என்பது சிறியர் மனநிலையென்றும், 'யாராவது செய்யவேண்டியதுதான்: நான் ஏன் செய்யக்கூடாது?' என்பது பெரியார் மனநிலையென்றும் ஸ்ரீ பெஸன்ட் அம்மையார் தமது சுயசரிதத்தின் முகப்பிலே கூறியுள்ளார். பெரியார் பெரும்பான்மையோரல்லர்; எனினும், இச்சில பெரியாரே மனிதனை மனிதனுக்கித் தெய்வமும் ஆக்கக்கூடியவர்கள். இச்சிறு கூட்டத்தின் முன்னணியிலே புத்தர், சீனஞானி கன்ப்யூஷியஸ், கிரேக்க ஞானி ஸாக்ரடிஸ் முதலானவர்களுடன் தமிழர் பொதுமறையருளிய திருவள்ளுவருக்கு ஒரு விசேஷ கௌரவ ஸ்தானம் உண்டு.

இம்முன்னணியிலும் முதன்மை ஸ்தானம் பெற்றுவிட்ட மகாத்மாவை மயிலை மகாத்மா,

ஒன்றாக நல்லது கொல்லாமை;
மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று

[ஒன்றாக - ஒரு வார்த்தையாகச் சொன்னால். பின்சார - பின்னால்

என்று வரவேற்றிருப்பதாகவும், தமிழ்ப் பெரியாரும், இந்தியப் பெரியாரும் கொல்லாமையால் உலகம் உய்யவேண்டுமென்று நம்மீது ஆசி பொழிவதாகவும் நான் கற்பனை செய்து பார்க்கிறேன், இந்த ஒளித்திருநாளாகிய தீபாவளியிலே 'செயற்கரிய' செய்த செயல்-திறமையில் காந்தியடிகளே உலக சிரேஷ்டராக விளங்கிய போதிலும், இலக்கிய உலகில் குறள்-வடிவமாகச் செய்திருக்கும் செயற்கருஞ் செயலால், இச்சிறிய திருக்கூட்டத்தின் இலக்கிய முன்னணியில் முதன்மை ஸ்தானம் தமிழ்த் திருவள்ளுவருக்குத்தான் என்றும் நினைக்கிறேன்.

'அது இருக்கட்டும்; காந்தியடிகளின் வாழ்க்கை போன்றதுதானா வள்ளுவர் வாழ்க்கை? ஸாக்ரடிசும் கன்ப்யூஷியசும் வள்ளுவருக்கு முற்பட்டவராயினும் அவர்களைப் பற்றிய சரித்திரக் குறிப்புக்கள் கிடைத்திருக்கின்றனவே, அப்படி ஏதாவது வள்ளுவரைக் குறித்த வரலாறு உண்டா?' என்று கேட்கலாம். இதற்கு விடையாக 'வள்ளுவர் குறள் செய்தார்' என்பது தான் நமக்குத் தெரியும் என்றே நான் சொல்லக்கூடும். இவ்வளவுதானா? இதற்கு மேல் ஒன்றும் தெரியாதா? 'ஆம், தெரியும்; திருவள்ளுவரே திருக்குறள் என்!' பேன். திருவள்ளுவரது வாழ்க்கைச் சரிதமும் திருக்குறள்தான். இது இவரது சுயசரிதம். திருவள்ளுவருக்குத் தான் வாழ்க்கை வேறு, உபதேசம் வேறு என்பது கிடையாதே!

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரிய
வாம்
சொல்லிய வண்ணம் செயல்

என்று எச்சரிக்கை செய்யும் பெரியார், 'நான் சொன்னபடி செய்; செய்கிறபடி செய்யாதே!' என்று சொல்லும் அந்தப் 'பெரியார் கூட்ட'த்தைச் சேர்ந்தவராயிருக்க முடியாது. 'அன்பும் சிவமும் இரண்டல்ல, ஒன்றே' என்று சிவநேசர்கள் கூறுவது போல், திருவள்ளுவர் விஷயத்திலும் 'இவருக்கு வாழ்க்கையும் உபதேசமும் இரண்டல்ல, ஒன்றே!' என்று குறளை ஆழ்ந்து கற்போர் துணிந்து கூறுவர்.

குறளில் வள்ளுவரை இன்றும் முகமுகமாய்ச் சந்திக்கலாம்; சந்தித்து உபதேசம் பெறலாம். இவருடைய ஸ்தூல உருவைக் காணமுடியாது, சூட்சும ஞான உருவைத்தான் சந்திக்க முடியும்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா,
உலகம்
பழித்த(து) ஒழித்து விடின்

அதாவது, 'தாடியும் வேண்டாம், சடையும் வேண்டாம், மொட்டைத் தலையும் வேண்டாம் உண்மை முனிவருக்கு!'— என்று உபதேசிக்கிறவரின் உருவத்தை இந்நாளில் தாடி, சடை, வெண்ணீறு, ஜபமாலை முதலியவற்றால் அழகு செய்து மகிழ்கிறார்கள். 'பொய்தீர் ஒழுக்க நெறி, நின்று,

மனத்துக்கண் மாசிலன் ஆதல்,
அனைத்(து) அறன்—

மனமாசு அறுப்பதே அறம்—என்றவருக்கு மதவேடமும் வேண்டுமோ?

இத்தகைய பெரியாரை அறிந்து கொள்ளக் குறளே போதும்; வாழ்க்கை வரலாறு இல்லையே என்று நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

இன்னா செய்தாரை ஒறுத்தல்
அவர் நாண
நன்னயம் செய்து விடல்

என்பது போன்ற குறளை உள்ளபடியே பாராயணம் செய்தால், வள்ளுவர் வாழ்க்கையை உணர்ந்து கொள்வது மட்டுமா, அந்தப் பெரு வாழ்வுடன் பழகிப் பழகி நமது வாழ்வும் அஹிம்ஸா தர்ம வாழ்வாகக்கூடும். வள்ளுவர் என்ற தங்கப் பாலத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டிய உபாயம் இது.

அசோகவனத்தில் கற்புச் சித்திரம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மையே யெனினும், நேர்படத் தனது காவலை இகழ்ந்தமையால் மீட்கும் பொறுப்பு இவனுக்கு மிகுதியாயுள்ளதாகும். இவையெல்லாம் இச்செய்யுளில் நன்கு புலப்படுகின்றன.

இங்ஙனம் கூறியவள் தனது உறுதிப் பாட்டை மீண்டும் வற்புறுத்துகின்றாள். ஒரு மாத காலத்திற்குள் தனது நாயகன், தனது தவக்குறையால் வரவில்லை என்றால் தான் உயிர் வாழ்ந்திருப்பாள் என்று சிறிதும் கருதவேண்டாம். தனக்குச் செய்யவேண்டும் இறுதிக் கடன்களைக் கங்கையாற்றின் கரையிலே செய்துவிடலாம் என்று தெளிவாய் உரைத்துவிடுகின்றாள்.

திங்கள் ஒன்றில் என் செய்தவம்
தீர்தால்
இங்கு வந்திலனே யெனின்,
யாணர்நீர்க்
கங்கை யாற்றங்கரை யடியேற்கும்
தன்
செங்கை யாற்கடன் செய்கென்று
செப்புவாய்.

தனக்குக் கடன் இயற்றுதற்குத் தன் நாயகன் சிரமம் யாதும் எடுக்கும் அவசியம் இல்லை. அவன் மீண்டு செல்லும் வழியிலேயே கங்காநதி ஓடுகிறது. அதன் கரையிலே, தன்னைக் கைப்பிடித்த தோஷத்திற்காக, கதியற்றுத் தவிக்கும் அடிமையாகிய தனக்கு இந்தச் சிறுகடனைச் செய்தால் போதுமானது. இங்ஙனம் கூறியதும், கடனியற்றும் பொழுது கங்கை நீரை ராமன் கையினால் அள்ளியிறைக்கு காட்சி ஸீதையின் மனத்தில் புலப்படுகிறது. அந்த அழகிய கை தானங்கள் செய்து செய்து சிவப்பேறிய கை; விற்பிடித்த வீரக்கை; அன்பிற் குழைந்து தன்னை உயிருறக் கட்டித் தழுவிய கை. அந்தக் கையினால் கடன் செய்யப் பெறும் பேறு தனக்குக் கிடைக்குமா என்று ஏங்குகின்றாள். தான் இறந்தபின், ராமன் மீண்டு செல்லும் வழியில் செய்ய வேண்டும் இக்கடனை அவனது நினைவிற்குக் கொண்டுவந்தாள். அயோத்திக்கு மீண்டு சென்றதும், தான் தனது மாமியரைத் தொழுது கொண்டே இறந்தாள் என்ற செய்தியை மாமியார்களுக்கு ராமன் உணர்த்தவேண்டும் கடமையை அடுத்த செய்யுளில் கூறுகின்றாள்:

சிறக்கும் மாமியர் மூவர்க்கும் சீதை
ஆண்டு
இறக்கின்றாள் தொழுதாள் எனும்
இன்ன சொல்
அறத்தி னாயகன்பால் அருளின்
மையால்
மறந்து மாயினும் நீ மறவேல், ஐயா!

ஆனால் ராமன் இச்செய்தியை அவனது அன்னையர்களுக்குத் தெரிவிப்பானா? அவன் அறத்தின் நாயகன்; அறத்தை நிலைநிறுத்துவதிலே கண்ணும் கருத்துமாயிருப்பவன். தோன்றிய நல்லறம் நிறுத்தத் தோன்றியவன் அல்லவா? அரக்கன் வீட்டில் சிறை புகுந்த தன்னைப் பற்றிய சிந்தனை அவனுக்கு இருக்குமென்று எண்ண இடமில்லை. ஆதலால் அவன் தன்னை அறவே மறந்துவிடலாம், தன்னை மறப்பதே தனக்கு அறமாவது என்று கூடக் கருதிவிடலாம். இவ்வாறு ஒரு வேளை அவன் மறந்து போனாலும், நீ மறந்துவிடக்கூடாது என்று அநுமனை வற்புறுத்துகின்றாள்.

இங்ஙனம் வற்புறுத்தி விட்டு, ராமன் அயோத்தியில் அரசு புரிந்து வாழும் காலத்து அவன் கைப்பிடிக்க வேண்டும் ஒழுக்க நெறியை ஸீதை நினைவூட்டுகின்றாள்.

வந்தெனைக் கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிறவிக் கிருமாதரைச்
சிந்தையாலுந் தொடேன் என்ற
செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்று
வாய்.

தமது நாயகன் தங்களுக்கே யுரியவன். அவனுக்கும் பிற பெண்டிர்க்கும் யாதோர் இயைபும் இல்லை என்று கருதும் பெண்மை இங்கே பேசுகிறது. பெண்மையின் இவ்வுயரிய விருப்பத்தை உட்கொண்டும், தனது தூய ஒழுக்கத்தை உட்கொண்டும், ராமன் அளித்த ஓர் வரத்தை அவன் திருச்செவியில் மெல்லச் சொல்லவேண்டும் என்று ஸீதை விரும்புகிறாள். எப்போது அளித்த வரம்? வைதிகச் சடங்குகளுடன் திருமணம் நிகழ்ந்த சமயத்தே. என்ன வரம்? இந்தப் பிறவியில் உன்னைத் தவிர வேறொரு பெண்ணைச் சிந்தையினாலும் நினைக்கமாட்டேன் என்ற வரம். சிந்தையால் ஒரு பெண்ணைத் தொடுதல் கூடுமா? காமம் பற்றிய அளவில் கூடும்; அதற்கும் ராமன் தனது சிந்தை இடங்கொடாது என்கின்றான். இது போன்ற ஒரு வரம் வால்மீகியில் உள்ளதா? அறியோம். சங்க இலக்கியங்களில் உளதா? இல்லை. உத்தம வாழ்விற்குக் கம்பன் வகுத்துக் கொண்ட ஒழுக்கவுலகில்தான் இச்சீரிய விதி காணப்படுகின்றது.

ராமன் கொடுத்த வரம் இந்தப் பிறவியை மட்டுந்தான் பற்றியது. ஸீதை மறு பிறவியைப் பற்றிய வரம் ஒன்றும் வேண்டுகின்றாள். இப்பிறவியிலே அவள் ஒரு பழிக்கு ஆளாகி விட்டாள். பழைய தீவினையொன்று அவளைப் பீடித்துக்கொண்டது. அந்தத் தீவினை தீர்தற்காக ஒரு வரம் வேண்டுமென்று இரந்து கேட்கின்றாள். இவ்வரம் யாது?

ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்து தன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டினாள் தொழுதென்று விளம்பு
[வாய்.

மீண்டும் பிறவியெடுத்து மீண்டும் ராமனையே நாயகனாகப் பெற்று அவனது திருமேனியைத் தீண்டுதற்குரிய உரிமையைத் தனக்குத் தந்தருள வேண்டுமென்று அவனைத் தொழுது வரங் கேட்கின்றாள். தான் இங்ஙனம் வரம் வேண்டியதைத் தெரிவிக்குமாறு அநுமனிடம் கூறுகின்றாள். பெண்மையின் உத்தம லட்சியத்திற்கு ஸீதையைக் காட்டினும் சிறந்த உதாரணம் இலக்கியவுலகில் எங்கேனும் உளதா?

இந்த அரிய கட்டம் கம்பனது பெருநிலயத்துச் சுவரில் சித்தரிக்கப்பட வேண்டாமா? இதுபோன்று எத்தனையோ கட்டங்கள் உள்ளன. கம்பன் நிலயம் கட்டி முற்றுப் பெறுமளவும் நாம் சிறிது பொறுமையை மேற்கொண்டு இருப்போமாக.

நண்பர் டி. கே. சி. கூறியது கம்பனது நினைவுக் குறியாக அமைக்க வேண்டும் பெருநிலயம். ஆனால் கம்பனே அமைத்துள்ள பெரு மாளிகை பொன்று உள்ளது. அதுதான் அவன் இயற்றிய இராமாயணம். இப் பெரு மாளிகை பழுதுற்றிருக்கின்றது. இதனைப் பழுதுபார்த்துச் செம்மையாக்க வேண்டுவது நமது முதற் கடமையல்லவா?

எப்படிப் பாடினார்

அ. ச. ஞானசம்பந்தன்.

அடியார் எப்படிப் பாடினார் என்ற வினா இங்குக் கேட்கப்படவில்லை. மேலும் அப்படிப் பாட வேண்டும் என்ற ஆசையையும் தெரிவிக்கவில்லை. காரணம் அப்படிப் பாட முடியாது என்பதுதான். உளங் கனிந்த போதெலாம் உவந்து உவந்து பாடிய அடியாரைப் போல நாம் பாட ஆசை கொள்வது இயலாத காரியந்தான். இல்லை, ஒரு வேளை அத்தகைய மனோநிலை வந்தால், பின்னரும் பாட முடியாதா என்று வினவப்படலாம். நன்றாகப் பாடலாம். அப்பொழுது ஆசைப்படாமலேயே பாட்டுக்கள் தாமாகவே வரும். எனவே அடிப்படையில் வேண்டப்படுவது மனநிலைதான்.

ஆனால் எப்படிப் பாடினார்? என்று இங்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பு, நமது காலத்துக் கவியரசர் பாரதியாரைப் பற்றிய வினாவேயாகும். பாரதியாரைப் பற்றி இத்தகைய ஒரு வினாவைக் கேட்டால், சோற்றுக்கில்லாமல் கவலையை மறக்கப் பாடினார், நாட்டுப் பற்றாகிய வெறி பிடித்துப் பாடினார், என்றெல்லாம் விடை தருவார்கள். ஒரு சிலரே, கலைஞராகிப் பாடினார் என்ற விடை தருவர். அஃதென்ன? கலைஞர் ஆதல் என்ற ஒன்றுண்டா? ஆம். பிறக்கும் பொழுது யாரும் கலைஞராகப் பிறப்பதில்லை. பிறந்த அனைவரும் கலைஞராக ஆவதுமில்லை. பிறப்பிலேயே அமைந்த சில பண்புகள், நன்கு போற்றி வளாக்கப் பட்டால் அவை மனிதனைக் கலைஞனாக மாற்றுகின்றன. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் பொறி, புலன்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் அவற்றைப் பயன்படுத்தவோ, சும்மா வீணாக்கவோ, தவறாகப் பயன்படுத்தவோ உள்ள உரிமையும் அவனிடமே தரப்பட்டுள்ளன. பொறிகளின் மூலமாகவே மனிதன் அனுபவத்தைப் பெறுகிறான். ஆனால் அவ்வனுபவம் ஆழமாக அமைவதும், மேலோட்டமாக அமைவதும், அனுபவிப்பவனின் மனநிலையைப் பொறுத்தே யாகும். மனப்பண்பாட்டிற்கு ஏற்பவே அனுபவத்தின் தன்மை இருக்கும். உதாரணமாக ஒரு அழகிய மலரை எடுத்துக் கொள்வோம். மலரில் அழகு எங்கே இருக்கிறது? மலரை ஆராய்ந்தால் விஞ்ஞானியைப் போல் அதன் பல பாகங்களை மட்டும் கண்டு பெயரிட்டு, அம்மட்டோடு அமைந்துவிடவேண்டும். அழகு அங்கே இராது. ஆனால் நாம் அத்தகைய ஆராய்ச்சிகளில் நுழைவதில்லை. அதற்கு மறுதலையாக அழகை அனுபவிக்கிறோம். பக்கத்தில் யாரேனும், இருந்தால் அவர்களிடம் நமது கருத்தை வெளிப்படுத்தி அவர்களையும் நாம் பெற்ற அனுபவத்தைப் பெறுமாறு கூறுகிறோம். ஆனால் பெரும்பாலும் நாம் அவ்வாறு கூறுவது எப்பொழுது என்றால் மலரின் அழகில் ஈடுபட்டு அனுபவிக்கின்ற அந்நேரத்திலேயாம். அனுபவிக்கும் பொழுதுகூட நம்மை நாம் மறப்பதில்லை. நாம் அனுபவிக்கிறோம், அதுவும் மலரின் மணத்தையும், அழகையும் அனுபவிக்கிறோம் என்ற எண்ணத்துடனேயே இருக்கிறோம். இந்நிலை மாறி நம்மை மறந்து சூழ்நிலையை மறந்து இன்பத்தில் ஈடுபட்டு அனுபவிக்கும் இயல்பு ஒரு சிலருக்கே வாய்ப்பதாகும். அவ்வாய்ப்பைப்பெற்றவர்களையே 'கலை உணர்ச்சி பெற்றோர்' என்று கூறுகிறோம். அஃதாவது அனுபவிப்பவன், அனுபவம், அனுபவிக்கப் பெறும் பொருள் என்ற மூன்று போய் அனுபவிப்பவனும், அனுபவிக்கப் பெறும் பொருளும் அனுபவம் என்ற ஒன்றினுள் அடங்கிவிடும் நிலையே கலைஞன் நிலையாகும்.

கவியரசர் பாரதியார் இம் முறையில் பார்த்தால் ஒரு சிறந்த கலைஞர் என அறிய இயலும். ஆனால் இவ்வனுபவம் அனுபவ அளவில் நின்றுவிட்டால் பயனில்லை. அவ்வனுபவத்தைப் பிறருக்குப் பகிர்ந்தளிப்பவரே 'கலைஞர்' ஆவர். முதலாவது பாரதி நல்ல கலை உணர்ச்சி பெற்றிருந்தார் என்பதும், இரண்டாவது அவர் பெற்ற உணர்ச்சியை நம் போன்றவருக்கும் பகிர்ந்து அளிக்கிறார் ஆதலின், கலைஞர் என்பதும் வெள்ளிடை மலை.

❊

நமது காலத்தில் வாழ்ந்த இக்கலைஞர், நாம் தினம் கண்டுங் காணாத பொருள்களிலேயே ஈடுபட்டார். அவர் திளைத்த உணர்ச்சிகளைக் கவிதையாக்கித் தந்துள்ளார். உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்தும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்பது நமது நாட்டில் பழம் பாடம். வயிறு நிறைந்த உணவை உண்டுவிட்டு, வாய் நிறைந்த வெற்றிலை பாக்குடன் வீட்டுத் திண்ணையின் மேல் உட்கார்ந்துகொண்டு, வாய் வேதாந்தம் பேசும்பொழுது யாவரும் மேலே கூறப்பெற்ற உண்மையை நன்கு அறிபவர் போலப் பேசலாம். ஆனால் 'சொல்வது யார்க்கும் எளிது அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்ற மூதுரையை மறத்தலாகாது. பாரதியாரின் வாழ்க்கையை நாம் நன்கு அறிவோம். வறுமையோடு வாணாள் முழுவதும் போரிட்டுத் தோற்ற பெருமை அவருக்கே உரியது. எனினும் பசி பொறுத்தாலும் பாட்டுப் பொறுக்காத அவர் 'ஜயபேரிகை கொட்டடா' என்ற கவிதையைப் புனைந்த வரலாற்றைத் திரு வ. உ. சிதம்பரனார் அவர்கள் கூறக் கேட்டேன். அக்கவிதையின் இறுதிச் சரணமே நாம் காண வேண்டுவது. 'காக்கை, குருவி எங்கள் சாதி, நீள் - கடலும், மலையும் எங்கள் கூட்டம். நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை' என்ற அடிகளைச் சற்றுக் காண்போம். இதில் வியப்பு ஒன்றுமில்லை. காட்டில் வாழும் மயில் ஆடியதைக் கண்டு குளிரால் நடுங்குகிறது என நினைத்துத் தான் போர்த்தியிருந்த மிக உயர்ந்த சால்வையால் அம்மயிலைப் போர்த்திய பேகனும், முல்லைக் கொடிக்குத் தேரை நல்கிய பாரியும் வாழ்ந்த இத்தமிழ் நாட்டில் இக்கருத்து புதியதொன்றன்று. ஆனால் இக் கவிதையை அவர் இயற்றிய சந்தர்ப்பமே வியக்கத் தகுந்தது. பல நாட்கள் பட்டினிக்குப் பிறகு, மனைவியார் ஏதோ ஓர் இடத்தில் கடனாகப் பெற்று ஒருபடி அரிசியை வாங்கி வந்து, முற்றத்தில் முறத்தில் வைத்திருந்தாளாம். அதனைச் சில சிட்டுக்குருவிகள் வந்து கொத்தித் தின்றனவாம். சிட்டுக்கள் மிகவும் பயந்த இயல்புடையன. எனவே அவை உண்பதைக் கண்ட கவிஞன், தன்னை மறந்தான். தன் பசியை மறந்தான். மனைவிமக்கள் பட்டினியையும், பசியையும், வாடிய முகத்தையுங்கூட மறந்துவிட்டான். குருவி உண்பதும், தான் உண்பதும் ஒன்றே என்ற எண்ணம் மனத்தில் முகிழ்த்து அரும்பலாயிற்று. 'காக்கை குருவி எங்கள் சாதி' என்று கவிதை பிறக்கிறது. இத்தனை நாள் பட்டினிக்குப் பிறகு கைக் கெட்டிய அரிசி, சோறாகி வயிற்றுக் கெட்டவிடாமல் சிட்டுக்கள் செய்கின்ற நேரத்தில் பிறக்கும் கவிதைதான் உண்மை உணர்ச்சி ததும்பும் கவிதையாக இருத்தல் கூடும். எப்படிப் பாடினார் என்றால், பாரதி கலைஞராகித் தான் என்பதை மறந்து, அனுபவத்தில் ஆழ்ந்து இப்படிப் பாடினார் என்று கூறுகிறோம்.

மனித வாழ்க்கையில் எவ்வளவு ஆராய்ந்து பார்த்தாலும் தீர்க்கமுடியாத புதிர்கள் சில உண்டு. உலகிடை மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை இவற்றிற்கு விடை கிடைக்கவில்லை. அத்தகைய புதிர்களில் ஒன்று நல்லவர் துன்புறும் விந்தையாகும். நல்ல பண்பட்ட மனமும், சிறந்த கல்வியும், ஒழுக்கமும் உடையவரே மிக்க துன்பங்களை அனுபவித்தலைக் காண்கிறோம். நன்மையே வடிவான இயேசுபெருமான் சிலுவையில் ஏன் மாளவேண்டும்? திருநாவுக்கரசர்க்கு ஏன் சூலை நோய் வரவேண்டும்? இவற்றிற்கு விடை கூறல் எளிதல்ல. இதுதான் உலக நீதி போல் காண்கிறது. திருநாவுக்கரசரே இது பற்றிப் பாடுகிறார்: "நினைந்து உருகும் அடியாரை நைய வைத்தார்" என்று கூறும்பொழுது இன்றைய உலகில் நாம் காணும் இவ்விநோதம் அன்றும் இருந்திருக்கிறது என அறிகிறோம். அவரை அடுத்துத் தோன்றிய நம்மாழ்வார் இதே கருத்தை வெளியிடுதல் வியப்பையே தருகிறது. "நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்து ஏங்க, எண் ஆராத் துயர் விளைக்கு இவை என்ன உலகியற்கை" என்று அப் பெரியார் கேட்கிறார். கடவுளைப் பற்றிக் கவலை கொள்ளாதவர் நன்றாயிருப்பதோடு மட்டுமன்று; நல்லுற்றார் அடையுந் துயரத்தைக் கண்டு எள்ளி நகையாடுகின்றனராம். இதே நிலையை நமது கவியரசரும் காண்கிறார். அதுமட்டும் இல்லை. முழுதும் அனுபவிக்கிறார். தனது அறிவையும், ஆற்றலையும் காண்கிறார்.

❊

வீணாகி விடுமோ இவையனைத்தும் வறுமை காரணமாக என அஞ்சுகிறார். 'நல்லதோர் வீணை செய்தே அதை நலங் கெடப் புழுதியில் எறிவதுண்டோ? சொல்லடி சிவசக்தி! என்னைச் சுடர் மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்" என்று அவரே கேட்கிறார். ஆனால் விடை கிடைக்கவில்லை. சிந்தனைக் கடலில் கீழ்வருமாறு எழுதுகையில்தான் விடை கிடைக்கவில்லை என அறிகிறோம். "தேவீ! நாஸ்திகனாக மாறிவிடுவேன்! இவ்வறுமையைப் போக்கிவிடு. கடன்காரர் தொல்லை ஒழியட்டும்." தேவி வறுமையைப் போக்கவில்லை. ஆனால் பாரதி மட்டும் நாஸ்திகனாக மாறவில்லை. காரணம், என்றுமுள்ள இவ்வினாவிற்கு விடை காண முடியாமைதான். 'என்னை வருத்திலேபல் இடும்பைக்கு இடம் யாது சொல்லே?' என்று கூறிய நாவுக்கரசரும் நாத்திகராக மாறவில்லை. பாரதியும் மாறவில்லை. அதற்கு மாறுதலையாக அக்நாவுக்கரசர் பெருமான் 'அடியாரை நைய வைத்தார்' என்று கூறியது போல் பாரதியுங் கூறுகிறார். கண்ணன் என் தந்தை என்ற பாடலில் இக்கருத்தைப் பாடுகிறார். தந்தையாகிய கண்ணனின் இயல்பு பலவகையிலும் விரித்துக் கூறப்பெறுகிறது.

"பல்வகை மாண்பின் இடையே—கொஞ்சம்
பயித்தியம் அடிக்கடி தோன்றுவதுண்டு.
நல்வழி செல்லுபவரை—மனம்
நையும் வரை சோதனை செய்
நடத்தையுண்டு."

நல்வழி நடப்பவரை ஊக்கி, உறுதியளிப்பது போக ஏன் சோதனை செய்ய வேண்டும்? அதிலும் ஓரளவு சோதனை போதாதா? மனம் நையும் வரையிலா பார்க்க வேண்டும்? தனது அனுபவத்திலே கண்ட உண்மையாதலின் கவிஞர் 'நையும் வரை என்ற அழகானதும் பொருள் செறிந்ததுமான சொல்லைப் பயன்படுத்துகிறார்.' ஏன் சோதனை செய்கிறார் என்ற வினாவிற்கு விடை தெரியவில்லை. வேறு என்ன சமாதானங் கூறுவது? தன்னால் விடை கூற முடியாத இறைவனின் அவ்வியல்பைப் 'பைத்தியம்' என்று கூறிவிடுகிறார். புரிய முடியாத செயலைச் செய்கின்ற ஒருவனைப் 'பயித்தியம' என்று கூறுதல்தானே உலக மரபு. எனவே மரபு பற்றிக் கவிஞர் இவ்வாறு கூறுகிறார் என்று கூறிவிடலாமா? ஆனால் நாவுக்கரசர் பெருமான் இவ்வாறு கூறவில்லை. 'நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்' என்று கூறிய அவர் அதன் காரணம் கூறுவார், போல அடுத்த அடியில் 'நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்' என்று கூறுகிறார். இதனை நன்கு அறிந்த பாரதி, இவ்வாறு தீவினை நீங்கவே துன்பம் நல்லவரை நோக்கி வருகிறது என்பதை மறந்து, ஏன் இறைவனைப் 'பயித்தியம்' என்று கூறல் வேண்டும்? இவ்வாறு கூறினமையாலேயே அவரைக் கவிஞர் என்றும், கலைஞர் என்றுங் கூறுகிறோம். கலைஞன் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து, உணர்ச்சியை அப்படியே வெளியிடும் இயல்புள்ளவனன்றோ? நல்லவர்படுந்துன்பங்கண்ட கலைஞன், தன் உணர்ச்சி வேகத்தில் அத்துன்பஞ் செய்தார் யார்? ஏன் செய்தார்? யாருடைய நன்மைக்குச் செய்தார்? என்றெல்லாம் ஆராயாமல் மனத்தில் தோன்றும் உணர்ச்சியைக் கொட்டிவிடுகிறான். கடவுளே ஆயினும் இது செய்தவுடன் 'ஐயோ! இவன் பைத்தியமா? இவ்வளவு நல்லவருக்கு இப்படிப்பட்ட துன்பஞ் செய்துவிட்டானே' என்றுதானே முதல் உணர்ச்சி தோன்றும்? அந்த உணர்ச்சி வசப்பட்ட கலைஞன் அப்படியே பாடிவிடுகிறான். எனவே அவன் வெறும் மரபு பற்றிப் பாடவில்லை; உணர்ச்சி வேகத்தில்தான் இப் புதிய முறையைக் கையாண்டு கடவுளையும் பைத்தியம் என்று பாடி இருக்கிறான் என்று அறிகிறோம். எனவே, இனி பாரதி 'எப்படிப் பாடினார்' என்றால் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து கலைஞனாகிப் பின்னர்ப் பாடினார் என்றே விடை இறுத்தல் வேண்டும்.

இன்ப சுகம்

தேகத்திற்கும், ஜன்மேந்திரியங்களுக்கும் பலத்தையும், ஊக்கத்தையும் கொடுத்து இழந்துபோன 'தாதுவை'' மீண்டும் பெறச் செய்து, ஆண்மையையும், வீரியப் பெருக்கையும், வயோதிகத்திலும் யௌவனத்தைக் கொடுப்பதில் நிகரற்றது என்மார் (ENMAR) மாத்திரைகள். 10 நாள் மருந்து ரூ. 7-8-0. வி. பி. செலவு வேறு.

STERN & COMPANY
No. 187. MOUNT ROAD, MADRAS-2

விருப்பும் வெறுப்பும்

"குகப்ரியை"

அந்திமயங்கும் நேரம். வைகையாற்றின் பரந்த மணல்வெளி. பக்ஷிகள் செவ்வானத்தை அழகு செய்வதே போல் கூட்டங் கூட்டமாய்ப் பறந்து சென்றுகொண்டிருந்தன. அவைகளின் கலகல சப்தம் மெல்லிய தென்றலிலே தவழ்ந்துகொண்டிருந்தது. கோயில் யானை-டணார் டணார் என்று முன்னே மணியோசை கட்டியங்கூற கம்பீரமாய் அசைந்து அசைந்து மணல் வெளியைத் தாண்டி ஒடுகாலை நெருங்கிச் சென்றுகொண்டிருந்தது. அமைதியான அந்தச் சூழ்நிலையைக் கலைத்தது அதன் பிளிறல்.

அந்த இடம் அதிகமாய் சந்தடியுள்ளதன்று. தனிமையை நாடி வரும் பித்தர்களுக்கு அது ஏற்றதொரு புகலிடமாயிருந்தது. அங்கே வான வெளியை வெறித்து நோக்கியவனாய் மணலிலே துண்டை விரித்து, கைகளிரண்டையும் சேர்த்துத் தலைக்கு உயரமாக வைத்தவாறே நிமிர்ந்து படுத்திருந்தான் அவன். தண்ணீர் முகர்ந்து செல்ல வரும் இரண்டொரு சிறுமிகளைத் தவிர, அவனை யாரும் அதிகமாய்க் கவனித்ததில்லை.

அவன் மெய்மறந்து அப்படியே படுத்திருந்தான். மெல்ல மெல்ல இருள் உலகைப் போர்த்தத் தொடங்கிற்று. பாலத்தின் மேலிருந்த விளக்குகளின் வரிசைகள் அவனையே நோக்கிக் கண் சிமிட்டி நகைப்பது போல் மின்னத் தொடங்கின. அக்கரையிலே எரியும் நீல நிறமான சுடரொளி இவைகளுக்கெல்லாம் அரசியாய் நின்று அவனைப் பரிகசிப்பது போலுணர்ந்தான். மெல்ல மெல்லப் புரண்டான். கைகளை நீட்டிச் சோம்பல் முறித்தவனாய் எழுந்து உட்கார்ந்து கொண்டான். ஒரு நெடுமூச்சு அவனது சிந்தனைகளுக்கு முற்றுப்புள்ளியிட்டது. ஆனாலும் அவனது மனக் கண்களை விட்டுப் பழைய இன்பக் கனவுகள் விலகுவதாய்த் தோன்றவில்லை. மெல்ல அடிமேலடிவைத்து எதிர்க் கரையை நோக்கி நடந்தான்.

ஃ ஃ ஃ

ஆம்! அன்று எங்கள் வீட்டில் நடந்த அமளிதுமளி, இன்றைக்கு நினைத்தாலும் கண்முன்னே வருகிறது. அண்ணா வீட்டிலே தங்கச் சிலைபோலிருக்கும் மதனியைத் தவிக்க விட்டுவிட்டு, அபரஞ்சி வீட்டிற்கே குடிபோய் விட்டான். அம்மா தான் என்னென்னவோ செய்து பார்த்தாள். அவளுடைய அஸ்திரசஸ்திரங்களெல்லாம் பலிக்கவில்லை. ஒரு தாய் எத்தனை விதமான சூழ்ச்சிகள் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்துதான் பார்த்தாள். அவனைப் போன்ற ஒரு முட்டாளுக்கு யார் என்ன சொல்லித்தான் என்ன பயன்?

மதனி இளைத்து இளைத்து எலும்பும் தோலுமானாள். எப்படியாவது அண்ணாவை அந்த மோசக்காரியிடமிருந்து மீட்டு விடுவதென்று கங்கணம் கட்டிக் கொண்டேன். அந்தசமயத்தில்தான் தற்செயலாக மன்னியின் உடல் நிலையைக் கேள்விப்பட்டு அவள் தங்கை லலிதாவுடன் வந்து சேர்ந்தார் அவள் தந்தை.

அவரிடம் அம்மா தன் நிர்க்கதியான நிலையைச் சொல்லி வாய்விட்டுக் கதறிவிட்டாள். என் நெஞ்சிலே நூறாயிரம் சம்மட்டி கொண்டடிப்பது போலிருந்தது. அண்ணா வீட்டு வழி வந்து நாலைந்து நாட்கள் ஆகியிருந்தன. வேறு வழியில்லாமல் நானே அபரஞ்சியின் வீட்டுக்குப் போகத் துணிந்தேன். முதலில் அண்ணா பிரமாதமாய்க் கோபித்தான். பிறகு ஒருவழியாய் வீடு வந்து சேர்ந்தேன்.

மதனியின் உடல்நிலை ஒரே ரீதியிலிருந்தது. லலிதா பாவம். சின்னஞ்சிறு பெண். பதினைந்து வயதுதான். அப்பப்பா! என்ன சுறுசுறுப்பு. ஓடி ஆடி பம்பரம் போல் சுழன்று வீட்டையே புதுமையாக்கிவிட்டாள். சின்னப்பெண்ணாகவா இருந்தாள்? வீட்டையே நெடுங்காலமாய் நிர்வகித்து வரும் ஒரு அனுபவமுள்ள எஜமானி போலல்லவா ஆகிவிட்டாள்! நான் ஆச்சர்யத்தினால் திகைத்துப்போனேன். மதனிக்கும் கெட்டிக்காரி என்றுதான் பெயர். ஆனால் குடும்ப நிர்வாகத்திலும், வாங்கி வைத்து வந்தவரை வரவேற்று உபசரித்து அம்மாவுக்கு வேண்டிய குற்றேவல்களைச் செய்து, எப்படியோ ஒரு நொடியிலே எல்லோருடைய அன்பிற்கும், புகழ் மொழிகளுக்கும் பாத்திரமாகிவிட்டாள்.

முழுச் சோம்பேறியாய் படுக்கையிலேயே காப்பி சாப்பிடும் பழக்கமுள்ள எனக்கு, என் சோம்பேறித்தனத்தையும், ஊழலையும் நினைக்க நினைக்க அவள் எதிரிலே வருவதற்கும் வெட்கமாயிருந்தது. வீடு நிறைய வேலைக்காரர்கள் ஆனால் வேலை வாங்குவது யார்? என் அறையோ கேட்கவேண்டாம். ஒட்டடை அடித்து எத்தனை யுகமாயிற்றோ? அலமாரியிலே புஸ்தகங்கள் ஒழுங்கின்றி நெட்டையும் குட்டையுமாய்க் கலந்து காட்சியளிக்கும். கொடியிலே வேஷ்டிகளும் துண்டும் எது முன்பின் என்றுகூடக் கண்டுபிடிக்க முடியாதபடி தொங்கும் கோட்ஸ்டாண்டைப் பற்றியோ கேட்கவே வேண்டியதில்லை. பாரந் தாங்காமல் ஏற்கி நிற்கும் இந்த அழகிய சூழ்நிலையில், 'பத்திரிகைக்கூட்டம் பழம்பாய் வரிசையெலாம்' சூழ நான் படித்துக்கொண்டிருப்பேன்.

ஆனால் லலிதா வந்த ஒரு வாரத்திலே அவள் கை வேகம் என் அறையிலும் பிரதிபலிக்கலாயிற்று. வேலைக்காரனை ஏவித் தானும் உடனிருந்து என் அறையைச் சுத்தம் செய்து வைத்திருந்தாள். அம்மாவுக்கு கண்களிலே கண்ணீர் துளித்து நின்றது. என் அலமாரியிலிருந்து விழுந்திருந்த கடிதங்கள், துண்டுக் கடிதங்கள் இவைகளெல்லாவற்றையும் கொண்டுவந்து கொடுத்து "இதெல்லாம் பாரடா அப்பா. ஏதாவது முக்யமான விஷயம் இருக்கப் போகிறதே என்று எடுத்து வைத்தாளாம் லலிதா" என்றாள்.

அவளது முன் யோசனையையும் சாமர்த்தியத்தையும் எண்ணி வியந்தது என் மனம். அதிகம் சொல்லுவானேன். லலிதாவின் காலடிகளின் ஓசை கேட்கும்பொழுதெல்லாம் புத்தகத்திலேயே ஆழ்ந்திருக்கும் என் கண்கள் மெல்ல ஒருமுறை நிமிரும். சிற்சில சமயங்களில் நான் பார்ப்பது அவளுக்குத் தெரிந்துவிடும். குப்பென்று சிவந்துவிடும் அவளது மலர் முகம். அட! அந்தக் கண்கள், கவிதைகள் மிதக்கும் கண்கள் ஒருமுறை சுழன்று தாழும். மதனிக்கும் இந்த விஷயம் தெரியாமல் இல்லை. தன் தங்கையைப்பற்றிப் பேசும்பொழுதெல்லாம் அவள் குரலிலே பெருமை தொனிக்கும். அவள் மனம் எங்களிருவரையும் இணைத்துப் பார்க்கும்.

லலிதாவின் பரிவுடன் கூடிய சிசுருஷைகள் மதனியை எழுந்து நடமாடச் செய்தன. மெல்ல மெல்ல நடக்கத் தொடங்கினாள். சாயங்கால வேளைகளில் உலவி வருவது நலமென்று டாக்டர் குறிப்பிட்டார். அந்த ஊரில் ஒன்று தெப்பக்குளத்தை நோக்கிப் போக வேண்டும், அல்லது வைகை மணல் வெளிதான். ஆகவே, மதனிக்குத் துணையாக நானும் லலிதாவும், குழந்தை வேணுவையும் தூக்கிக் கொண்டு போவதென்ற முடிவுக்கு வந்தோம்.

ஆனால், அங்கே நாங்கள் சென்ற அந்த இடத்திற்கே அவளும் வந்திருப்பாளென்பது எனக்கு எப்படித் தெரியும்? அங்கே மணற்பரப்பிலே, எனக்கு சற்றே தொலைவில், அழகிய சந்தனக் கலர் சேலையுடுத்தவளாய் மேற்கு நோக்கி உட்கார்ந்திருந்தாள். தலையிலே அழகிய கனகாம்பரம், நீண்ட பின்னல் தரையில் வந்து அலைந்து கொண்டிருந்தது. சுருண்ட குழற் கற்றைகள் செவிகளை மறைத்தும் மறையாமலும் காற்றிலே பறந்து கொண்டிருந்தது. அவளை அடுத்து ஒரு சிறு பையன், தன் சிறு கால்களை வைத்து மணலைக் குவித்து அடித்தடித் குருவிக் கூண்டு ஒன்று கட்டிக் கொண்டிருந்தான்.

முதலில் நான் அதைப்பற்றிக் கவனிக்கவில்லை. பிறகு, "அடே சுந்தரம், கண்ணிலே மண்ணைத் தூவாதேயடா! என்று அவள் உரத்த குரலில் கூவியது கேட்டதும், எனக்குத் துணுக்கென்றது. அவள் வேறு யாருமல்ல. அபரஞ்சியின் தங்கை அஞ்சுகம். அவளைப் பற்றி அண்ணா சொன்ன வார்த்தைகள் என் நெஞ்சத்துள் எழுந்தன. தான் கெட்டதுமன்றி சந்திரபுஷ்கரிணியையும் கூடக் கெடுத்தாளாம் என்பது போல, அண்ணா, அண்ணாவாவது, மானங்கெட்டவன். அஞ்சுகம் என்னையே நினைத்து ஏங்குகிறாளாம். உபமான உபமேயங்களுடன் வர்ணித்தான். இருக்கலாம்! ஆனால் இந்த மகானுபாவரைப்போல் நானும்ஒழுக்கம் கெட்டவனாக இருக்கக்கூடுமென்று எதிர்பார்த்திருக்கலாம். அவனுக்குத் தம்பிதானே...ஆனால் என் சுடு சொற்கள் அண்ணாவைப் புரட்டித் தள்ளின. அதன் பின் என் முகத்தை இன்றளவும் அவன் நிமிர்ந்து பார்த்ததில்லை. வருகிறான், சாப்பிடுகிறான். மதனியின் கட்டிலருகில் வந்து உட்கார்ந்து அருமையாய்க் குசலம் விசாரிக்கிறான். அம்மா பாவம்! பெற்ற மனம் பித்து, ஏதோ இந்த மட்டுமாவது வந்தானே என்ற சந்தோஷம்.

ஆனால் நான் மட்டும் இன்னும் அவன் எந்தப் பக்கம் இருக்கிறானோ அங்கே போவதில்லை. காலையில் அவன் வீட்டிலேயே இருந்தால், அம்மா தானே தோசையையும் காப்பியையும் என் அறைக்கே அனுப்பிவிடுவாள். தானாகவேயும் கொண்டுவருவாள். 'நீ ஏன் அம்மா கொண்டுவருகிறாய். ஒரு குரல் கூப்பிட்டால் நானே வரமாட்டேனா' என்பேன். அம்மா வாயே திறக்கமாட்டாள். ஒரு பெரு மூச்சுத்தான் இவைகளுக்கெல்லாம் பதில்.

லலிதா மற்ற எல்லா வேலைகளையும் செய்துவிடுவாள். ஆனால் நான் இருக்கும்பொழுது என் அறைக்கு வரமாட்டாள். மல்லிகையின் மணம், வளையல்கள் நாதம், சாவிக் கொத்தின் மெல்லொலி இவைகள் அவளது வருகையை அறிவிக்கும். ஆனால் அந்த மின்னொளி கூடத்தைத் தாண்டி மதனியின் அறையில் மறைந்துவிடும். மதனியைப் பார்த்துப் பேச நான் உள்ளே நுழைய வேண்டியதுதான் ஏதாவதொரு காரணம் கற்பித்து மெல்ல நழுவிவிடுவாள் அவள். ஆனால் குழந்தை வேணு எங்களிருவரையும் இணைக்கும் பொற்சரடாக விளங்கினான். இல்லாவிட்டால் அவளை நெருங்கி இரண்டொரு வார்த்தைகள் பேச அவகாசமேது? எங்களது நட்பு மதனிக்கும் ஓரளவு தெரிந்துதானிருக்கும் இல்லாவிடில் என்னைப் பார்க்கும்பொழுதெல்லாம் விஷமச் சிரிப்பு எதற்கு?

ஃ ஃ ஃ

லலிதா ஊருக்குப் போய்விட்டாள். என் இதயமே சூன்யமாகிவிட்டது. அறை மறுபடி குப்பை மேடாயிற்று. துணிமணிகள் பழையபடி சுமந்தன. எதைப் பார்த்தாலும் எரிச்சலாய் வந்தது. மதனியை ஊருக்கு அனுப்ப அம்மாவும் இஷ்டப்படவில்லை. அவளுக்கும் இஷ்டமில்லை. ஆனால் அந்த முரட்டு மனிதர், உலக ஞானமில்லாத மனிதர் பெண்ணின் உடம்பைத் தேற்றி அனுப்புவதாக அழைத்துப் போய்விட்டார். வேணு இல்லாமல் வீடே வெறிச் சென்றிருந்தது. அதன் தளர்நடை, மழலை முற்றாத மென் சொல் இவைகளால் நிறைந்திருந்த வீடு, இப்பொழுது வெறும் பாலையாய்க் காட்சியளித்தது.

அண்ணா மறுபடி மெல்ல மெல்ல பழைய பாதையைப் பிடித்துவிட்டானே என்ற ஏக்கம் அம்மாவுக்கு. மேலும் எங்களிருவருக்கும் தெரியாமல், லலிதாவை எனக்குக் கொடுக்கும்படி கேட்டிருக்கிறாள் அவள் மாமனாரிடம். அதற்கு அந்த மனிதன், "ஒருத்தியைக் கொடுத்து வாழ்ந்ததுபோதும். உன் பிள்ளைக்குக் கொடுப்பதை விட பாழுங் கிணறு தேடித் தள்ளிவிடுவேன்" என்றாராம். இது பிறகு அம்மா சொன்ன செய்தி. ஆனால் நானும் என் குணம், ஒழுக்கம் இதற்கு அனுகுணமாக மதனிக்கு என்னிடமிருக்கும் எல்லையற்ற அன்பு, இவைகளையெல்லாம்நினைத்து லலிதா, ரோஜாமாலையும் கையுமாய் என்னை வரவேற்க நிற்பதுபோல் கற்பனை செய்து செய்து ஆனந்தப்படுவேன். இந்த நிலையில்தான் திடீரென்று அவள் கலியாணக் கடிதம் வந்து நின்றது. மதனியும் ஒன்றுமே எழுதவில்லை. நெஞ்சு திடித்தது. ஆனால் அவர் நினைத்ததும் நியாயந்தானே. ஒருத்தியைக் கொடுத்து என்ன சுகத்தைக் கண்டார்?

அண்ணாவை நேரில் பார்க்கும்பொழுதெல்லாம் கசக்கிப் பிழிந்துவிடவேண்டுமென்று தோன்றும். இந்த நிலையிலே சாயங்காலங்களெல்லாம் வைகை மணலிலேயே பழிகிடப்பேன். அம்மா ஒருத்தி வீட்டிலிருக்கிறாள் என்ற விஷயமே மறந்துவிடும். இந்த நிலையிலே அஞ்சுகத்தின் உருவம், அவளைப்பற்றி அண்ணா சொன்ன விஷயங்கள் எல்லாம் இருதயத்தின் ஆழத்திலிருந்து தலைதூக்கி எட்டிப் பார்க்கும். சீ! சீ! இதென்ன பேதமை. நான் ஒழுக்கத்தில் ஸ்ரீ ராமனென்று பெயரெடுக்க வேண்டிய நான், இன்று இந்த எண்ணங்களுக்கு இடம் கொடுப்பதா? என்ற நினைவு மேலெழும். இனி அவர்களைச் சந்திக்கக் கூடிய இடங்களுக்குப் போகாமல் தவிர்ப்பது என்ற எண்ணத்தோடு வீடு திரும்புவேன். அம்மா மீனாக்ஷி சந்நிதியிலே நின்று, என்னென்ன பிரார்த்திப்பாளோ? அவள் நிற்கும் நிலையைப் பார்த்தாலே கல்லும் கரைந்துருகும்.

வெளி வதந்திகள் அஞ்சுகத்தைப் பற்றிப்பல. அவன் யாரையோ காதலித்தானாம். அவன் சட்டை செய்யவில்லையாம். ஆகவே, வாழ்நாள் முழுவதும் மீனாட்சி கோவிலுக்குப் பணி செய்வதும், ஏழை எளியவர்களுக்குப் பணி செய்வதுமே நோக்கமாகக் கொண்டுவிட்டாளாம். தாசிப்பெண் இப்படி சன்யாசிக் கோலமாய் கதருடுத்துக் கண்டதுமில்லை கேட்டதுமில்லை என்று ஆச்சரியப் பட்டார்கள் மதுரைவாசிகள். சரி. கோயிலுக்காவது போய்க் கொண்டிருந்தோம். இனி அதற்கும் பிடித்ததும் சனி என்று தீர்மானித்தேன். என்னதானிருந்தாலும் இப்படிக் கட்டுப்பாட்டுடன் ஊரில் எப்படி வாழமுடியும். யுத்த சேவைக்குப் போவதாக அம்மாவிடம் கேட்டேன். மனம் ஒப்புமா?

அண்ணாவின் திருவிளையாடல்கள் காரணமாக வீட்டிலேயே வறுமை ஆட்சி செலுத்தத் தொடங்கியிருந்தது. பெருங்காயம் வைத்த பாண்டம் போல் அம்மா எப்படியோ இழுத்துப் பிடித்து நடத்திவந்தாள். என் சம்பளமோ மிகச் சொற்பம். பஞ்ச காலத்திலே எப்படித்தான் நிர்வகிக்க முடியும். இந்த நிலையிலே லலிதாவின் புக்ககத்திலே சுகமில்லை என்ற செய்தி ஒருபுறம் மனதை வாள்கொண்டறுத்துக்கொண்டிருந்தது. அதனுடவே அஞ்சுகத்தைப் பற்றிய புகழ்மொழிகள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று கலந்து நெஞ்சத்துள் எழும். இப்படி ஏன் இவர்கள் இருவரது நினைவுகளும் ஒரேசமயத்தில் எழவேண்டும் என்பதைப்பற்றி நானே பல முறையும் சிந்தித்ததுண்டு. ஆனால் இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு நிலையினால் தவிப்பேன். லலிதாவின் தெய்வீக சௌந்தர்யம், அவள் சுறுசுறுப்பு, இவைகள் ஒருமுறை முன்வந்து நிற்கும். அதையடுத்து வைகை மணல் வெளியிலே கால்கள் புதையப் புதைய அடியெடுத்து வைத்து, காற்றிலே முன்றானையும் கூந்தலும் பறக்க நடந்து செல்லும் அஞ்சுகத்தின் தோற்றம். மருண்ட ஏக்கத்துடன் கூடிய அவள் பார்வை, அதனுடவே காரிருளில் தோன்றும் மின்னல் போன்ற இளமுறுவல், குழந்தை சுந்தரம். அப்பாவையே அச்சாக உரித்து வைத்திருக்கும் அவன் தோற்றம் இவைகள் முன்வந்து நிற்கும். இன்பமோ துன்பமோ என்று நிர்ணயிக்க முடியாதவனாய்த் தத்தளிப்பேன்.

மதனி உடம்பு தேறி வந்துவிட்டாள். அண்ணாவின் வாழ்க்கை மறுபடி பசுமை பெற்றது. அம்மாவின் முகத்திலும் நிறைவின் சின்னங்கள். ஆனால் வீட்டின் நிலை நாளுக்கு நாள் மோசமாகி வந்தது. பெரியாற்றுப் பாசனத்திலிருந்த நல்ல நிலங்களையெல்லாம், நான் பங்காளி என்றுகூடக் கருதாமல் சூறையாடியிருந்தான். உதவாக் கரை நிலங்கள் வெள்ளப்பெருக்கால் மண் மேடிட்டன. வெட்டித் திருத்துவதற்குள் புதிய நிலமே வாங்கிவிடலாம். மலைவிழுங்கி மகாதேவனுக்குக் கதவு ஒரு அப்பளம் என்பார்கள். அதுபோல என் சம்பளம் எந்த மூலை. வீட்டையும் நிலங்களையும் கடன்காரர்கள் ஏலம் போடக்கூடிய நிலை என்று கேள்விப்பட்டேன். அண்ணாவுடன் பேசாதிருந்த நான் துணிந்து இவ்வளவு விபரீதமாகும் வரை என்ன செய்தாயென்று திட்டினேன்.

ஆனால் அவன் வழக்கம்போல் அசட்டுச் சிரிப்புடன் நிலம் மேடிட்டுப் போகுமென்று நினைக்கவில்லை, அதை விற்றுவிடலாமென்றிருந்தேன். அபரஞ்சிக்கு நான் ஒன்றும் பிரமாதமாய்க் கொடுத்துவிடவில்லை என்றான். வாஸ்தவந்தான். அபரஞ்சி ஏழையல்ல. சொத்து, சுகம், வீடு, வாசல் எல்லாம் உண்டு. அதுமட்டுமல்ல, ஜாதியிலும் தாசி என்ற பெயர் பெற்

பட ரஸிகர்களுக்கும், எக்ஸிபிடர்களுக்கும், மற்றும் அன்பர்களுக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்!

★ எமது உன்னத தயாரிப்பான ★

"ரத்னகுமார்"

வெள்ளித் திரையில் வெளியிடப்படும் நன்னாளை எதிர்பாருங்கள்!

முருகன் டாக்கி பிலிம் கம்பெனி

மதுரை :: பெங்களூர் :: பெஜவாடா



திருந்தாள் அவள். கோயில் முறைக்காரர்களான மற்றவர்களைப் போல அவள் நடந்துகொள்ளவில்லை என்பதனுல் கர்வக்காரி என்றும் பதிவிரதை என்றும் அவளை இனத்தார் கேலி செய்வதுண்டு.

இந்த நிலையில் அவள் மனம் வைத்தால் அண்ணுவின் கௌரவத்தைக் காப்பாற்றலாம். ஆனுல்......வேறு வழியில்லாமல் அம்மவைக் காசியாத்திரைக்கு அனுப்பிவிட்டு விஷயத்தை ஒழுங்கு செய்வதென்ற முடிவுக்கு வந்தேன். அண்ணு வேட்டகம் போயிருந்தான். ஒரு நல்ல நாளிலே தகுந்த துணையுடன் அம்மாவும் புறப்பட்டாள். எப்படியோ எவைகளையெல்லாமோ விற்று, அம்மாவை அனுப்பிவிட்டேன். ஆனுல் மனம் மட்டும் நிம்மதி இழந்து தவித்துக் கொண்டிருந்தது. பெரிய வீட்டிலே தன்னந்தனியனுய் மாடி அறையில் படுத்துப் புரண்டுகொண்டிருந்தேன்.

கோயிலிலே திருநாள். சுவாமி புறப்பாடு. மேளக்காரப் பொன்னுசாமி ஆனந்தமாய் சவுக்க தாலத்திலே நாட்டை வாசித்துக் கொண்டிருந்தான். "மீதி எல்லாமே தொலைந்து போனுலும் நம்மூர் கோயிலும் நாயனமும் உள்ளவரையில் நமக்கு ஒரு குறைவுமில்லை. மீதி விஷயங்களிலெல்லாம் எவ்வளவு தான் புதுமைகளை வரவேற்ருலும், இந்த நாட்டை வாசிக்கிறது மட்டும் எப்போதும் போலத்தானிருக்கிறது. அதிர்வேட்டும் நாட்டையுமில்லாவிட்டால் தொலைவிலிருக்கிறவர்களுக்கெல்லாம் எப்படி விஷயம் தெரியும்" என்று பேசியவராய் வீதியில் நடந்துகொண்டிருந்தார் தமிழன்பும் கலைப்பண்புமுடைய ஒரு பக்தர். என் மனமும் அங்கேயே சென்றது. கோயிலுள்ள வரையில் குறையொன்றுமில்லை என்று அவர் சொன்ன வார்த்தைகள், பக்தியுள்ள என் தாயின் நினைவை எழுப்பியது. அதை ஒட்டி அண்ணு, மதனி, குழந்தை வேணுவின் சின்னஞ்சிறு கைகள். சித்தப்பாவென்று அவன் கூப்பிட்டுக் கைகளைக் கொட்டி நகைக்கும் தோற்றம் இவைகளெல்லாம் இறகு முளைத்து எதிரே வந்தன. லலிதா அவள்...என்ன நினைக்கிருளோ பாவம்! அக்காளுக்கும் தங்கைக்கும்...கணவன் விஷயத்தில் ஒரே அதிருஷ்டம்— என்று நினைத்த என் மனக் கண்களின் முன், அஞ்சுகம் எழுந்து நின்ருள் உயிரோவியம்போல். சீ. சீ—இதென்ன தோற்றம் என்று மனத்துள் நினைத்தவன் சீ-சீ-- என்ற தொடரை வாய்விட்டு உரத்த குரலிற் கூவியிருக்கவேணும்.

ஃ ஃ ஃ

"ஏஞ்சாமி! என்னங்க!" என்று சுருட்டி வாரிக்கொண்டு எழுந்தான் சுருளித் தேவன்.

" ஒன்றுமில்லை'என்றேன். ஆனுலும் அவன் விடுவதாயில்லை, மேலும் அழுத்திக் கேட்கத் தொடங்கினுன்.

ஆனுல் அவன் வாய்மூலம் நான் தெரிந்துகொண்ட செய்திகள் என்னைத் திடுக்கிடச் செய்தன. எனக்கு ஒருவிதமான தகவலும் தெரியாது. ஆனுல் மறுகாட்காலை எட்டுமணிக்கு எங்கள் பரம்பரைச் செல்வமாய்த் தொன்றுதொட்டு விளங்கிய அந்த வீடு பகிரங்க ஏலத்துக்கு வரப்போகிறது. நான், ஒன்றுக்கும் உதவாமல் உட்கார்ந்திருக்கிறேன். என் மனநிலை எப்படி இருக்கும். இப்படி ஒருவன் உயிர் வாழ்ந்துதான் என்ன பயன்?

சரி, அந்த அறையிலேயே—ஒரு சாண் கயிறுதான்—முடிவு —என்ற நிலைக்கு வந்தேன். ஆனுல்—அம்மா! அவளை நினைக்க நினைக்க என் நெஞ்சு தூள் தூளாய்ச் சிதறிவிடும் போலிருந்தது. சுருளி வெற்றிலையை மென்றுகொண்டே உட்கார்ந்திருந்தான். நான் ஒரே கலக்கத்தில் ஆழ்ந்தேன்.

எவ்வளவு நேரம் தூங்கினேனே தெரியாது. கண்ணை விழித்தபொழுது மணி ஒன்பது அடித்திருந்தது. இரவு நிகழ்ச்சிகள் கனவு போல் கண் முன் விரிந்தன. அவசரமாய் எழுந்து வீதிப்புறமுள்ள ஜன்னலை நெருங்கினேன். ஏலம் போடவேண்டிய மனிதர்கள் அங்கே கூடியிருப்பது போல் ஒரு பிரமை. ஆனுல் வீதி வழக்கம் போல் அமைதியாயிருந்தது. பள்ளிக்கூடக் குழந்தைகள் தேங்காய், ஆலமரம் என்று கோஷித்துக்கொண்டு சென்று கொண்டிருந்தன, திரும்பிப் பார்த்தேன், சுருளித் தேவன் பட்டை பட்டையாய் விபூதி அணிந்து அதன் மேல் சந்தனப் பொட்டும் குங்குமப் பொட்டுமிட்டு உட்கார்ந்திருந்தான். "என்ன சுருளி! சாவகாசமா வெத்திலை மெல்லுகிறே," என்றேன்.

வழக்கத்திற்கு மாருக, நேற்றிரவு கண்டதற்கு நேர்மாருக முகமலர்ச்சியுடன், அவன் சிரித்தது எனக்கு எரிச்சலை மூட்டியது.

" என்னடா இது? என்ன?" என்றேன் சற்று கோபத்துடன். குழந்தைப் பருவமுதல் எடுத்து வளர்த்த வேலையாள் அவன். சும்மா போகும்பொழுது அவனிடம்தான் என்னை ஒப்புவித்தாள். இருந்தாலும் இதென்ன இது சமயசந்தர்ப்பம் தெரியாமல்?' என்று சீறினேன்.

" சாமி, கோவிச்சிக்கிறப்படாது. என் தாய் மீனுட்சி இந்த ஊரை ஆள்ற வரைக்கும் தர்மம் ஜயிக்கும் சந்தேகமென்ன?" என்ருன். அவன் குரல் கம்மியிருந்தது. கண்களிலே கண்ணீர் துளித்து நின்றது.

விஷயம் விளங்காதவனுய் அவனை ஏறிட்டுப் பார்த்தேன்.

" சாமி, விடியற்காலை, வெள்ளி முளைக்கையிலே, நம்ம சோங்குப் பயலை இங்கிட்டு வந்து படுக்கச் சொல்லியிருந்தேன் — என்பதற்குள் "ஏன் இந்த அருமையான எசமான் மாண்டு கிடக்கப் போருனேன்னு?—" என்றேன். அவன் திடுக்கிட்டான்.

" என்ன சாமி, நானும் காலிலே நகம் முளைச்ச நாளாய் இக்த வீட்டு உப்பைத் தின்னவன் காசிக்குப் புறப்படையிலே எசமானைப் பாத்துக்கோ சுருளின்னு அம்மா சொல்லிச்சே, அந்த தாயாருடைய வார்த்தைக்கு ஒரு விலை யில்லிங்களா. அதனுலெ எதுக்கும் இருக்கட்டும்னு சோங்கு - ரத்னவேலு சொக்கலிங்கம் இவகளை வரச் சொன்னேன். ஆனு அது நடந்த அற்புதமிருக்கெ, நான் என்ன சொல்ல, விடியற்காலை. தாய் மீனுட்சி ஜல் ஜல்னு சலங்கை ஓசையிட நடந்து வந்து நானிருக்கேன்னு. என்ன நடந்தது தெரியுமா? கனவு தான், ஆனுல் கனவு பலிச்ச விதம்...,..

நான் பொறுமை யிழந்தவனுய் 'என்னதான் சங்கதி சொல்லித் தொலையேன்' என்றேன். 'நேத்து டங்காரங்க வீடு தேடிப் போய் அந்தக் குட்டி அஞ்சுகம் ஜாடா ஏழாயிர ரூபாயையும் கட்டிப் பிட்டாளாமே, உங்களுக்கு வேண்டியது ரூபாதானே. அவர் பரதேசியா வெளியே இறங்குவார்னு நீங்க நினைக்க வேண்டாம். அவங்க குணத்துக்கு தெய்வம் கை விடாது என்ருளாம்." அந்த ஆச்சரியத்தெ நெனச்சு நெனச்சுத்தான் பூரிச்சுப் போறேன் ... இதோ ரசீது தஸ்தாவேஜு எல்லாம்' என்று நீட்டினுன் சுருளித் தேவன்.

" என்ன அஞ்சுகமா? அஞ்சுகமா?" என்று ஆச்சரிய மிகுதியினுல் கூவி விட்டேன்.

அவள் தாசியா? தியாகியா? என்று என்னையே கேட்டுக் கொண்டேன். அவளது மெய்க் காதலின் முன் என் வெறுப்பு தோல்வியுற்று நிற்பது போலுணர்ந்தேன்.

நின்றுபோன
மாதவிடாய்
எவ்விதத்திலும் நின்றுபோனது, சுலபமாகவும் நிச்சயமாகவும் மெண்டகஸ் (MENTEX) மாத்திரையால் வெளியாகும். ஆயிரக்கணக்கானவர்கள் பலனடைந்திருக்கிருர்கள். 1 புட்டி விலை ரூ. 7-8-0. வி. பி. செலவு வேறு.
STERN & COMPANY
NO. 187, MOUNT ROAD, MADRAS - 2

தேவி பிரஸன்ன ஆருடம்
(ESTD. 26-3-1910)
தாங்கள் சீல் செய்த கவரில் மூன்று கேள்விகளுக்கு சரியான விடைகளை உபாசன தேவியின் மகிமையால், தாங்கள் கவரை திறக்காமலே கண்டுபிடித்து ரூ. 1—9—0-க்கு வி. பி— யில் அனுப்பப்படும்.
சித்தாந்தி இராமசுப்பயன்
K. N. தெருவு :. பெங்களூர் ஸிடி.

ஏன் கவலை! இதோ!
உலகப் பிரசித்திபெற்ற
ஆதங்க
நிக்ரஹ மாத்திரைகள்
வாங்கி உபயோகியுங்கள். தேக பலத்தையும், ஞாபக சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், தாரணை சக்தியையும் கொடுத்து இன்ப சுகங்களையடையச் செய்யும்.
16 நாட்களுக்கு வேண்டிய ஒரு டப்பி 32 மாத்திரைகள்
விலை ரூ. 1-4-0
இனம்! கேட்லாக் இனம்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்
26, பிராட்வே - மதருஸ்.

ATANK NIGRAH PHARMACY
26. BROADWAY, MADRAS.

தீபாவளி வெளியீடு!
திரன் கம்பெனீஸ்
கோகுலதாஸி

ஹொன்னப்ப பாகவதர்
எம். வி. ராஜம்மா-மற்றும் பலர்
டைரக்ஷன்: கே. சுப்ரமண்யம், பி.ஏ., பி.எல்.

தீபாவளிப் பரிசு

-ராஜம் ராமமூர்த்தி-

குமாரின் கையிலிருந்த முத்து மாலையைப் பார்த்ததும், குந்தளாவின் கண்கள் மகிழ்ச்சியால் பளபளத்தன.

ஆனந்தத்தால் தடைபட்ட குரலிலே அவள், "என்னன்னு இது. ஏகப்பட்ட விலையாயிருக்கும் போலிருக்கே. இப்போ எதுக்கு இந்த மாலை எனக்கு?" என்று சொல்ல வாயெடுத்தவள் "என்னன்னு இது" என்று கூறி முடிப்பதற்குள்ளே குறுக்கிட்டான் குமார்.

"என்னன்னு இது என்றால், இது ஒரு முத்துமாலைன்னு. இந்தத் தடவை என் 'தீபாவளிப் பரிசுன்னு' உனக்கு இது?" என்று குறும்புப் புன்னகையுடனே கூறியபடியே அதை அவளது அழகிய கழுத்திலே அணிவித்தான்.

எதிரிலிருந்த பெரிய நிலைக்கண்ணாடியில், தன் கழுத்திலுள்ள முத்துக்களைப் பழிக்கும்படியான தன்னழகிய வெண்ணிறப் பற்கள் தோன்ற சிரிக்கும் தன் எழிலுருவத்தை ஒருமுறை பார்த்துக் கொண்டாள் குந்தளா.

கண்கள் கண்ணாடியில் தோன்றும் தன் எழிலைப் பருகியபடி இருக்க, அவள் மனமோ பின்னோக்கிச் சென்று, தான் அவனுக்குத் 'தீபாவளிப் பரிசு' அளித்த அந்த வருஷத் தீபாவளியை அவள் மனக்கண் முன் வருவித்தது.

கடந்த கால சம்பவங்களெல்லாம் அவள் மனக்கிழியில் வரிசையாக ஒன்றன் பின்னொன்றாக உருவாகின. மெல்ல, அவள் நினைவுத் திரையில் சலனச் சுழற்சி பிறந்தது.......

○

மூன்றும் வருஷத்திய தீபாவளி. அதுதான் அவள் வாழ்க்கையிலேயே மிகவும் மோசமாகக் கொண்டாடப்பட்ட தீபாவளியென்று அவள் கருதினாள்.

ஆரம்பத்திலேயே அவளுக்கு அந்த வருஷத்திய தீபாவளி ஒருவித மனக்கசப்பைத்தான் ஊட்டியது. காரணம் அண்ணா வாங்கி வந்த புடவை அவளுக்குத் திருப்தியளிக்காதது தான்.

"இது என்ன புடவை என்று வாங்கிண்டு வந்திருக்கிறாய் அண்ணா? பட்டை பட்டையாய்ப் புலி வேஷம் மாதிரி இருக்கிறதே. விலை சரசமென்று இதைத் தேர்ந்தெடுத்தாயோ?" என்று அவள் அண்ணாவுடன் சண்டை சண்டையாய்ப் போட்டாள்.

"ஏண்டா உனக்கு இந்தப் பிசுனாறித்தனம்? கொஞ்சம் கூட விலையாய் இருந்தாலும் இருக்கட்டுமென்று குழந்தைக்குப் பிடித்ததாய் வாங்கக் கூடாதோ?" என்று அவள் அப்பாவும் அவளுக்காகப் பரிந்து பேசினார்.

ஆனால், அம்மா மட்டும் வெறுப்போடு சூள் கொட்டியபடியே... "ஆ......மா...ம் எந்தப் புடவையாயிருந்தால் என்ன? ஏதோ ஒன்று. நாளைக் குறைக்காதிருக்கணும். அவ்வளவு தானே? இப்போ என்ன தலை தீபாவளியா தட்டுக்கெட்டுப் போகிறது, நிறைய பணத்தைக் கொட்டியாவது நல்ல புடவையாய் ஒன்று வாங்கியாக வேண்டுமே என்பதற்கு?" என்று பொரிந்து தள்ளியபோது குந்தளா

அவளுக்குத் தெரியும் அம்மாவின் எரிச்சலுக்குக் காரணம்; அந்த வருஷம் ஆனி மாதம் குந்தளாவிற்கும், அவளுடைய சொந்த அத்தையின் பிள்ளையான குமாருக்கும் விவாகம் நடப்பதாக இருந்தது. இது வெகு நாட்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட விஷயம். ஆனால், ஆனி மாத ஆரம்பத்திலேயே அத்தை திடீரென்று ஜுரம் வந்து இறந்து போய்விடவே, இந்தக் கல்யாணம் தை மாதத்திலே செய்துகொள்ளலாம் என்று ஒத்திவைக்கப்பட்டது. அதனால், நியாயமாய் தலை தீபாவளியாய் இருக்கவேண்டியது சாதாரணத் தீபாவளியாக ஆகிவிட்டது. அது எல்லோரையும் விட, குந்தளாவின் அம்மாவுக்குத்தான் அதிக தூரம் எரிச்சல் மூட்டியது!

குந்தளா இதை அவ்வளவு தூரம் பாராட்டவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னே ஆகிற காரியம் இரண்டு மாதங்களுக்குப் பின்னே ஆகிவிட்டுப் போகிறது. இவ்வளவுதானே என்று அஸ்வாரஸ்யமாய் இருந்துவிட்டாள்.

ஆனால், தீபாவளியன்று குமார் அவளைக் கோபித்துக்கொண்டதுதான் அவள் மனத்தைப்புண்ணாக்கிவிட்டது!

○

தீபாவளியன்று சாயங்காலம்தான் அவர்கள் வீட்டிற்கு வந்தான் குமார்.

"என்னப்பா, கார்த்தாலையிலேயிருந்து தலையே காட்டவில்லையே நீ? எத்தனை தரம் ஆளனுப்புகிறது வீட்டிற்கு? வீட்டிலே ஒருத்தருமே இல்லையாமே! எங்கே போயிருந்தீர்கள் அப்பாவும் பிள்ளையுமாய்? அப்பாதான் வராவிட்டாலும், நீயாவது வந்திருக்கப்படாதா கார்த்தாலேயே?" என்று அவனைச் சுவாதீனமாகக் கோபித்துக் கொண்டாள் குந்தளாவின் தாய்.

"அப்படியெல்லாம் ஒரு வித்தியாசமுமில்லை மாமி. கோபித்துக்கொள்ளாதீர்கள். என்னை நீங்கள் கூப்பிடக்கூட வேண்டுமா என்ன? நானே வந்திருக்கமாட்டேனா?" என்று அவளிடம் ஒரு அசட்டுப் புன்னகையுடன் மழுப்பிவிட்டான் குமார்.

ஆனால், சற்றுநேரம் பொறுத்துக் குந்தளாவைத் தனியே சந்தித்த பொழுதுதான் அவனது சிரித்த முகத்தினடியிலே மறைந்து கிடந்த அவன் கொதிக்கும் உள்ளத்தின் உணர்ச்சிகள் வெளிப்பட்டன.

புதுப் புடவை 'சரக்' 'சரக்' என்று சப்திக்க, கை வளைகள் குலுங்க, அம்மாவின் உத்தரவுப்படி குமாருக்குப் பக்ஷணமும் காபியும் எடுத்துக்கொண்டு மாடியறைக்குச் சென்ற குந்தளாவுக்கு, அன்று தன்னுடைய தலை தீபாவளிதான் என்றே தோன்றிக்கொண்டிருந்தது.

இதழ்களில் ஒரு பரிகாசப் புன்னகை மலர்ந்திருக்க, அவள் ஒய்யாரமாக நடந்து சென்று அவனருகிலிருந்த மேஜையின் மேல் தட்டையும், டம்ளரையும் வைத்தாள். கடுகடுத்த முகத்தோடு அவளை உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்த குமார், வாயே திறக்க

"என்ன அத்தான், அப்படியே பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? இந்தப் புடவை எனக்கு அழகாயில்லையா?" என்று குந்தளா கொஞ்சலாகக் கேட்டதும், அவன் கோபம் வார்த்தைகளாக மாறியது.

"புடவை அழகாயிருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால், உன் காரியம் மட்டும் ரொம்ப ரொம்ப அழகாயிருக்கிறது" என்று அவன் கடுகடுப்போடு சொன்னான்.

அவன் கூறியதைப் புரிந்துகொள்ளாமல் அவள் தவித்ததும், அவன் கோபம் பன்மடங்கு பெருகியது.

"என்ன பாசாங்கு செய்கிறாய்? குழந்தைக்கு நான் சொன்னது விளங்கவில்லையாக்கும்! எப்படி விளங்கும் பாவம்! அம்மாவுக்கே தெரியவில்லையே. பெண்ணுக்கு எப்படித்தெரியும்? தெரிந்த லட்சணமாயிருந்தால், கண்ணுக்குக் கண்ணான தாயாரை இழந்து நாலு மாதங்கள்கூட ஆகாத என்னைப் போய் தீபாவளி விருந்து சாப்பிடக் கூப்பிட்டிருப்பாளா? இல்லை. உனக்குத்தான் புத்தி எங்கே போயிற்று? நியாயமாய் இது நம் தலை தீபாவளியாய் இருக்கவேண்டும். ஆனால், அதற்கு நேர்மாறாக ஆகிவிட்டது அம்மாவின் திடீர் மறைவினால். "அத்தை," "அத்தை" என்று அப்போதெல்லாம் உயிரை விட்டுக் கொண்டிருந்தாயே? அப்படிப்பட்டவள் மறைந்த பிறகு, இப்படி விருந்தும், புதுப் புடவையுமாய் பண்டிகை கொண்டாட எப்படித்தான் மனம் வந்தது உனக்கு? இவ்வளவு நாள் என் மனைவியாயிருந்தாயானால், நீயும் என்னைப் போலத் துக்கம் கொண்டாடித் தானே இருக்கவேண்டும்? கணவனுடைய சுகத்தில்தான் மனைவிக்குப் பங்கு உண்டு. துக்கத்தில் பங்கு இல்லை என்பதுதான் உன் எண்ணமா? இல்லாவிட்டால் இன்று இவ்வளவு குதூகலத்துடன்—அதுவும் என் எதிரிலேயே காட்சியளிப்பாயா நீ" என்று அவன் அடுக்கிக்கொண்டே போனான்.

உடைந்த தேன் கூண்டிலிருந்து ஆக்ரோஷத்தோடு சீறி எழும் தேனீக்களைப் போல அவன் வாயிலிருந்து வந்த கடுஞ் சொற்கள் குந்தளாவின் வெள்ளை மனதைக் கொட்டின.

அவளுக்குத் துக்கத்தோடு கோபமும் பீறிட்டுக்கொண்டு வந்தது. "ஓஹோ, இப்போதே கணவன் என்ற உரிமையைக் காட்டப் பார்க்கிறீர்களா? இன்னும் அந்த உரிமை ஏற்படவில்லை என்பதை ஞாபகமூட்டுகிறேன். தயவுசெய்து அதிகமாக வார்த்தைகளைக் கொட்டவேண்டாம்" என்று அவளும் பதிலுக்கு இரைந்தாள்.

பலன்? அன்று இருவருக்கும் பலத்த வாக்குவாதம், சண்டை. அன்று காலை புடவை நன்றாயில்லையென்று அழுதாள் குந்தளா. மாலையோ புருஷனாக வரப்போகிறவர் குணம் நன்றாயில்லையே என்று அழுதாள்.

இவ்வாறு மூன்றும் வருஷத் தீபாவளி முழுவதும் அழுகையிலேயே கழிந்துவிட்டது. பிறகு அடுத்த வருஷத் தீபாவளி வந்தது.

○

அந்தத் தீபாவளி அதாவது சென்ற வருஷத்திய தீபாவளியைவிட மிகவும் நன்றாக இருக்கவேண்டுமென்று குந்தளா—சித்திரையிலேயே—அதாவது தனக்கும் குமாருக்கும் விவாகம் நடந்த தினத்தன்றே தீர்மானித்துவிட்டாள். அப்படியே கடைசியில் நடக்கவும்தான் நடந்தது. ஆனால் அதற்கு முன் அவள் பட்டபாடு? சுயநலம் அவள் கண்களைக் குருடாக்கி, அறிவை மழுங்கச் செய்ததின் பயனாய் ஸ்படிகம் போன்ற இருதயம் படைத்த அவள் அத்தையின் புருஷரை—தன் மாமனாரை—அனுபவிக்கச் செய்த அவஸ்தைகள் ..... அப்பா! திரையொளியில் படம் ஓடுவதைப்



ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்தர் செய்தது)

இது மகத்தான கீழ்திசை வாஸனைத் திரவியம். அதன் மனதை மயக்கும் நறுமணம் புகழ்பெற்றது. அற்புதமான மோக்ரா, மல்லிகை மலர்களால் செய்யப்பட்டது. "அத்தர்களின் அரசன்" என்று பொதுஜனங்களால் மதிக்கப்படுவது. அவரவர் சக்திக்கேற்றபடி பலவித சைஸ்களில் கிடைக்கும். எங்கும் கிடைக்கும்.

இரண்டணு ஸ்டாம்பு அனுப்பினல் 'ஸாம்பில் இனம். வாங்கிப் பாருங்கள்.

ஸோல் ஏஜண்டுகள்:

THE ANGLO-INDAN DRUG & CHEMICAL CO.
BOMBAY 2.

Independence Anniversary Offer !
Wholesale Prices In Retail.



Swiss Made, Very beautiful, guaranteed 3 years. The concession allowed for limited period after which the usual price charged.

Quality	Usual Price	Concession
Square Shape	Rs. 20/-	Rs. 17/8
5 Jewels Flat	Rs: 25/-	Rs. 23/-
15 ,, Flat	Rs. 37/-	Rs. 32/-
For Rectangular as in illustration :—		
5 Jewels Chrome	Rs. 38/-	Rs. 34/-
5 ,, R/Gold	Rs. 48/-	Rs. 44/-
7 ,, Chrome	Rs. 45/-	Rs. 42/-
15 ,, Chrome	Rs. 68/-	Rs. 60/-
15 ,, R/Gold	Rs. 80/-	Rs. 72/-

Packing & Postage -/14/-
YOUNG INDIA WATCH CO., (B)
Post Box 6744, CALCUTTA.

இனும் ரூ. 500
ஆச்சரியகாமான சக்திவாய்ந்த
சித்த யந்திரம் (GOVT. REGD.)

சக்தி வாய்ந்தது "குப்த வசீகரண யந்திரத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை, இதனால் (ஆண் பெண்) நீர் விரும்பும் எவராகினும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி, பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம் கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிருபிப்பவர்களுக்கு ரூ. 500 இனும். செம்பு ரூ. 2-8-0 வெள்ளி ரூ. 3-0-0, சுத்த தங்கம் ரூ. 13

SHRI DIN RAKSHAK KARYALAYAH
(381) P. O. RAJ-DHANWAR (HAZARIBAG)

ஜயவசீகரணி

தெய்வீக கவசம் கிரஹசாரதி கஷ்டங்கள்நீங்கி சர்வ காரிய சித்தியும் சுகமும் அதிர்ஷ்டமும் வரும். ரூ. 3-0-0.
வி. பி. அணா 0-9-0.
காந்தி ஜோசியர், திருத்தணி

நயமான
பட்டு & நூல்
ஜவுளி ரகங்கள்
திருப்தியுடன்
கிடைக்குமிடம்:
கோபால பத்ம விலாஸ்
சேலம்.

போலவே அவள் மன இருளிலும் இன்னொரு படம்—அதாவது அவள் சென்ற வருஷத்திய தீபாவளியைக் கொண்டாடிய விதத்தைப் பற்றிய படம் ஓடலாயிற்று.

கல்யாணமான அன்றே குமார் சொல்லிவிட்டான், "குந்தளா, இனி அப்பா நம்கூடத்தான் இருப்பார். தேனும்பேட்டையிலிருக்கிற நம் சொந்தப் பங்களாவிலேதான் நாமும் அவரோடு இருக்கவேண்டுமாம். அம்மா இருந்திருந்தால் அண்ணாவைப் போல நம்மையும் வேறே எங்கேயாவது தனிக் குடித்தனமாக வைத்திருப்பாள். ஆனால், அதுதான் இல்லாமற் போய் விட்டதே. இப்போ போய் நாம் அப்பாவை அவ்வளவு பெரிய பங்களாவில் தனியாய் விட்டு விட்டு வேறே வீடு பார்த்துக்கொண்டால் நன்றாயிருக்குமா? அதனால், நீ நாளைக்கே தேனும்பேட்டைக்கு வரத் தயாராக இரு" என்று.

ஆனால், குந்தளா அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. "என் நீங்கள் மட்டும்தான் உங்கப்பாவுக்குப் பிள்ளையோ? உங்கண்ணா இல்லையா? உங்க அக்கா இல்லையா பரங்கிமலையில்? அவர்கள் யாரிடமாவது போய் இருப்பதுதானே அவர்? புதிதாய்க் கல்யாணமான நம் தனிமையையும் சந்தோஷத்தையும் கெடுக்க நம்மிடம்தானா வரவேண்டும்?" என்று அவளும் பதிலுக்குக் கேட்டுவிட்டாள்.

அவள் வரையில் தன் மாமனாரோடு இருந்து வாழும், அந்த பங்களா வாசத்தை விட, தன் ஆசைக் கணவனுடன் தனியே இருந்து இன்ப வாழ்வு நடத்தும் ஒரு கூரைவீடே மேலென்று பட்டது. இதைத்தான் அவள், அவரிடமும் சொன்னாள்.

ஒருபுறம் தன் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய தந்தை, மறுபுறம் தன் காதலைக் கொள்ளை கொண்டவளான ஆசை மனைவி; இந்த இருவருக்கும் இடையில் இரு காந்தங்களுக்கு மத்தியில் சிதறிய இரும்புத் தூளென கிடந்து தடுமாறினான் குமார்.

நல்ல வேளை, அவன் பிரச்னைக்கு ஒரு முடிவை ஏற்படுத்தி விட்டார் அவன் தந்தை. "குமார், நான் கொஞ்ச நாள் ராமுவிடம் இருக்கலாமென்றிருக்கிறேன். நீயும், குந்தளாவும் கொஞ்ச நாளைக்காவது இந்த பங்களாவிலே நிம்மதியாக இருக்கலாம்" என்று அவரே, திடுதிப்பென்று கூறியபோது குமாரைத் தூக்கி வாரிப் போட்டது.

குந்தளாவோ ஒரே ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்து போய்விட்டாள். ஆனால் சில நாட்கள் தான். பழத்தின் ருசியுள்ள பாகத்தைச் சாப்பிட்டதும், கசப்புள்ள தோல் தானே மிஞ்சுகிறது?

அதேபோல, புது மணத்தின் ஜோர் குறைந்ததும், அவளுக்கும் குமாருக்கும் சண்டைகள் ஏற்பட ஆரம்பித்தன. அப்போதுதான் அவளுக்குக் கட்டுப்பாட்டிலே தான் காதலின் ஜோதி நன்றாகக் கொழுந்து விட்டெரியும் என்ற உண்மை புலப்பட்டது. மெல்ல மெல்ல அவள் மனம் மாமனார் தங்களுடன் வீட்டிலேயே வசிப்பது அவசியம்தானென்பதை உணர ஆரம்பித்தது.

○

அதுவுமன்றி ஒருநாள் அவளுடைய தாயாரும் சொன்னாள், "அடியம்மா, இந்த வீட்டிற்கு வந்தால் உன் அத்தையைப் பார்த்துக்கொண்டிருக்கிறாப் போலவே இருக்கிறது. பாவம். மாமாவுக்கு அத்தை மேலே உசிரு. எப்படித்தான் அவளைப் பிரிந்து இருக்கிறாரோ மனுஷர்! இங்கே இருந்தால் அவளுடைய சாமான்களைப் பார்த்தாவது ஆறுதலடைவார். என்னமோ அவருக்கு இப்போ ராமுவிடம் போய் இருக்கணுமென்று தோன்றிவிட்டதாச்சும். ராமுவுக்கு எப்பவுமே அவரைக் கண்டால் பிடிக்காதே. குமார்தான் அவர் மேலே பிராணனாயிருந்தான். ஆனால், இப்ப எல்லாம் தலைகீழா மாறிட்டாப் போலிருக்கு" என்று.

குந்தளாவுக்குச் சுரீர் என்றது. அப்போதுதான் அவளுக்குத் தான் செய்தது சரியல்ல என்று தோன்றியது. ஆனாலும், அவள் உடனே போய் அழைத்துக்கொண்டு வந்துவிடவில்லை. அதற்குப் பின்னும் பல மாதங்கள் ஆகவேண்டி வந்தது.

ஆவணி போய், புரட்டாசி போய், ஐப்பசி வந்தது. அதோடு தீபாவளியும் வந்தது. "இது தலை தீபாவளியானதாலே நீயும் மாப்பிள்ளையும் நம் வீட்டிற்கு வந்துவிட வேண்டும்" என்று குந்தளாவிடம் அவள் தகப்பனார் சொன்னதற்கு அவள் ஒத்துக் கொள்ளவில்லை.

"வேண்டாம்பா. இங்கே பங்களா பெரியதாயிருக்கு. சௌகரியமாயிருக்கும். அதனாலே நீங்கள் எல்லோருமே இங்கே புறப்பட்டு வந்து விடுங்கள். ஜோராயிருக்கலாம்" என்று கூறி விட்டாள் கண்டிப்பாக.

அப்படியே, தீபாவளிக்குப் பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்னாலிருந்தே பங்களா நிரம்பி விட்டது அவள் பிறந்தகத்து மனுஷர்களால். அவர்களை உபசரிக்கும் தடபுடலிலும், புடவை வாங்கும் பெருமையிலும், பக்ஷணங்கள் செய்யும் உற்சாகத்திலும் மூழ்கிய குந்தளாவுக்குத் தன் கணவனது முகத்திலே தொங்கியாடிய சோகத்திரையைக் கவனிக்க நேரமேது?

தீபாவளிக்கு இரண்டு தினங்களுக்கு முன்தான் அவளால் அதைக் காண முடிந்தது. ஏற்கெனவே அவள் தாயார் சொன்னது, குமாருக்கு அவன் தகப்பனார் மேல் இருந்த அன்பு, தன் கல்யாணத்தின்போது அவன் சொன்னது எல்லாமே அவளுக்கு ஞாபகம் வந்தது.

அவள் மனம் வேதனையிலாழ்ந்தது. அவள் ஒன்றுமே யாரையும் கேட்கவில்லை. யாரிடமும் ஒன்றும் சொல்லவுமில்லை. அன்று மத்தியானமே திடுதிப்பென்று தாம்பரத்திலிருந்த ராமுவின் வீட்டிற்குக்கிளம்பிவிட்டாள் மாமனாரைக் கையோடு அழைத்து வர!

○

"ஏன் மன்னி, மாமா எங்கே போயிருக்கார்? வீட்டிலேயே காணோமே?" என்று ஆவலே வடிவாகக் குந்தளாகேட்டதற்கு ஏளனமாகச்

"இவ்வளவு நாளைக்கப்புறமாவது தயவு பிறந்ததே. இந்த வீட்டிற்கும் வர உனக்குவழி தெரிந்ததே என்று நினைத்துக் கொண்டேன். அவரை தேடிக்கொண்டா வந்தாய்? அப்போ எனக்காக வரலைன்னு நிச்சயமாறது. உ...ம் உனக்கென்னடியம்மா, அகமுடையான் இழுத்த இழுப்பிற்கெல்லாம் வருவான். இவரைப் போலவா? இல்லாவிட்டால், கடலாட்டம் பங்களாவை உங்களுக்கு ஏகபோகமாய் விட்டு, இந்தச் சின்ன வீட்டிலே வந்து ஒண்டிக்கொண்டிருக்குமா அந்த கிழம்? இவருக்கும் அது பாந்தமாகத் தான் இருக்குமா? பெண்ணுக்கு என்னமோ உடம்பு சரியாயில்லைன்னு பார்க்கப் போயிருக்கார் உன்னோட அருமை மாமா. எல்லாம் வந்துடுவார் சாயங்காலமா. இதைவிட அவருக்குத்தான் வேறே போக்கிடம் ஏது?" என்று குத்தலாக ஆரம்பித்த பேச்சைச் குரோதத்தில் கொண்டுபோய் முடித்தாள் செல்லம்.



குந்தளாவுக்குத் தன்னை மீறி அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. "சே, இவ்வளவுக்கும் காரணம் அவள் தானே? அவளால்தானே மாமா, தமது தள்ளாத வயதிலே கண்ட பேரிடம் கண்ட கண்ட வார்த்தைகளைக் கேட்கும்படி நேர்ந்தது? தன்னெதிரிலே இவ்வளவு உதாசீனமாய்ப் பேசும் செல்லம், நேரிலே மாமாவை என்ன பாடுதான் படுத்தமாட்டாள்! ஆனால், அவளைச் சொல்வானேன்? என்ன இருந்தாலும் அவள் வேறு வீட்டுப் பெண்தானே? மாமாவின் மேல் அவளுக்கு அவ்வளவு பாசம் வந்துவிடுமா? சிறுவயதிலிருந்தே அவரோடு பழகி, ரத்தபாசம் உள்ள தானே அவரை இப்படியெல்லாம் தவிக்கவிடவில்லையா? என்ன முட்டாள்தனம்!

குந்தளாவின் உடல் பதைத்தது. அவளுக்கு அங்கு இருப்பே கொள்ளவில்லை.

உங்களதிர்ஷ்டத்தில் எழுதி இருப்பதென்ன?

நீங்கள் ஒரு வருஷத்திற்குள் நடக்கும் சுபா சுபங்களை அறிந்து கொள்ள வேண்டுமெனில், இன்றே ஒரு கார்டில் உங்களுடைய விலாசம், ஒரு புஷ்பத்தின் பெயர் எழுதியனுப்புங்கள். நாங்கள் ஜோதிட சாஸ்திர கணிதப்படி தங்களுக்கு உண்டாகும் லாப நஷ்டங்கள் எந்த, வியாபாரத்தால் லாபம் கிடைக்கும், எங்ஙனம் பொருள் சேரும், உத்தியோகம் எப்போது கிடைக்கும், வேலை ஆட்களுடைய அபிவிருத்தி, தம்பதிகளுடைய சௌக்கியம், ஆரோக்கியம், வியாதி, தூரப்பிரயாணங்கள், வியாஜ்ஜியம் அல்லது பரீக்ஷைகளில் தேர்ச்சி, கல்யாணம், பூமி அல்லது ஆஸ்தியினால் சுகம், புதிய நட்பு, உங்கள் கார்ட்டு சேர்ந்த உடனே மாதவாரி பலனும், வருட பலனும் ரூ. 1-4-0-க்கு தபாலில் வி. பி.-யில் அனுப்புகிறோம். தபால் செலவு வேறு. துரதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டமாக்கிக் கொள்ளவும்வழியுண்டு;எழுதி அனுப்புகிறோம்;இதனால் வரப்போகும்கஷ்டங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். ஒரு முறை பரீக்ஷித்தாலே தெரியும். உங்கள் ஜாதக பலன்களின் திறமையைத் தப்பென்று ருஜு செய்தால் கட்டிய பணம் வாபஸ் செய்யப்படும்.

பண்டிட் தேவ் தத் சாஸ்திரி ராஜ் ஜோதிஷர் (H. M.)
கர்த்தர்பூர் (E. P.)
PT. DEV DUTT SHASTRI RAJ JYOTHSHI, (H. M.)
KARTARPUR (E. P.)

அவசரமாக விடைபெற்றுக்கொண்டு பரங்கிமலைக்கு ஓடினாள்!

காலுக்கு ஒரு திண்டு. கைக்கு ஒரு திண்டு என்று திண்டுகளைப் பரப்பிக்கொண்டு படுத்திருந்த ஜகதா, குந்தளாவைப் பார்த்ததும் 'வா' என்றுகூட சொல்லவில்லை. கையாலே ஜாடை காட்டினாள். "அம்மாவுக்கு உடம்பு சரியாயில்லீங்க. அதிகமா பேசவாணாமின்னு டாக்டர் ஐயா சொல்லியிருக்காரு" என்று விளக்கினாள் அருகிலிருந்த வேலைக்காரப் பெண்.

குந்தளாவிற்கும் சிரிப்பு வந்துவிட்டது. அவளுக்குத் தெரியாதா ஜெகதா அத்தங்காளின் உடம்பு சமாசாரமெல்லாம். சிற்றுனைக்குட்டிபோல இருந்தும், தனக்கு உடம்பு ஒரே பலஹீனம் என்றுதான் அவள் சிறுவயதிலிருந்தே சொல்லிக்கொண்டு வந்தாள். தும்மை எடுத்துத் துரும்போடு போட்டாலும், அவளுக்குக் கை குடைச்சல் ஏற்பட்டுவிடும். அத்தை இருந்த வரையில் அழுதுவிட்டுச் செத்தாள்.

ஜகதாவின் கணவருக்கென்றால் இது சகஜம். அவருக்கே வீட்டு வேலைகளில் நல்ல தேர்ச்சியும் உண்டு. அதைச் செய்வதில் விருப்பமும் உண்டு. ஆனால் மாமாவுக்கு...?

வியர்வை ஆறுப் பெருக, தமது ஸ்தூல சரீரத்தைத் தூக்க மாட்டாமல் தூக்கிக்கொண்டு, அவர் இங்குமங்கும் அலைந்ததைப் பார்க்கும்போது, குந்தளாவின் மனத்தை என்னவோ செய்தது. அத்தை இருந்த வரையில், அவருக்குக் கால் கழுவ முதற்கொண்டு ஜலம் எடுத்துக் கொடுத்துவந்தாள் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்டவர் இன்று இப்படி அலைகிறார். காரணம் யார்? தான்தானே?

குந்தளாவின் கண்கள் நீரை வடித்தன. ஜெகதாவின் கணவர் உடம்பு சரியில்லாத அவளுக்குப் பத்தியமாக எழெட்டு உருளைக்கிழங்கு போண்டாக்களையும், நான்கு மைசூர் பாகு வில்லைகளையும், அரைச் செம்பு காபியையும் எடுத்துக்கொண்டு அவளண்டை போனதும், சட்டென்றா மாமவின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

அவள் உதடுகள் துடித்தன. சொற்கள் இருதயத்தின் ஆழந்திலிருந்து வெதும்பி வெளி வந்தன.

"மாமா, நான் செய்தது ரொம்ப தப்பிதம். உங்களை இந்தத் தள்ளாத வயதில் இப்படியெல்லாம் தவிக்க

இவள் அதிருஷ்டம் பிறந்தகத்தைப் போலப் புக்ககமும் அமைந்ததே ஒரு பிக்கல் பிடுங்கல் இல்லாமல். போயும் போயும் இந்த சோம்பேறியிடமா வர வேண்டும் இவர்? வாயால் கொட்டினாலும் தன் காரியத்தையாவது கவனித்துக் கொள்வாள் செல்லம். இங்கே வீட்டுக் காரியத்தோடு இவளுக்கும்ன சிசுருஷை செய்யவேண்டும்! நல்ல தலையெழுத்து இந்த மாமாவுக்கு? என்று எண்ணியபடியே உள் பக்கம் போனாள் அவள்.

உண்மையில் அங்கே நடந்துகொண்டிருந்தது அது தான்.

வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு மாமனாரும், மாப்பிள்ளையுமாக மத்தியான டிபனையும், ராத்திரி சாப்பாட்டையும் ஏககாலத்திலே கவனிக்கக்கொண்டிருந்தனர்!

விட்டுவிட்டேன். என் கண்கள் இப்போதுதான் திறந்துகொண்டன. நீங்கள் இப்பவே புறப்பட்டு நம் வீட்டுக்கு வந்துவிடுங்கள்" என்றெல்லாம் சொல்லவேண்டுமென்றுதான் அவள் எண்ணினாள். ஆனால் உணர்ச்சி மிகுதியால், "மாமா, நா...ன்,......நீங்கள்......இப்பவே...வந்...து" என்று உளறிக் கொட்டத்தான் முடிந்தது அவளால் விக்கல்களுக்கும், விம்மல்களுக்கும் இடையே.

அன்பு நிறைந்து கண்ணீர் தேங்கிய கண்களால் அவளை உற்றுப் பார்த்தார் அவர். பிறகு அவள் தலையை அன்போடு கோதியபடியே, "அடி அசடே, என் அழகே? நீ என்னைக் கூப்பிடணுமா என்ன? நானே ஓடி வரமாட்டேனா என் குழந்தைகளைப் பார்க்க. அதோடே, செல்வம், ஜெகதா யார் கிட்டயும்

இருக்காதீர்கள். நம்ம குந்தா கிட்டதான் இருக்கணும். அவள்தான் உங்களை அக்கரையா கவனிச்சுப்பான்னு உன் அத்தை வேறே சாகிற சமயத்திலே என்கிட்ட சொல்லியிருக்கா. செத்துப்போனப்புறம்கூட அவள் போட்ட உத்தரவை மீறத் தைரியம் உண்டாம்மா எனக்கு?" என்று அவர் குறும்பாகக் கூறியது, குந்தளாவின் கண்ணீரை மாற்றி அவளைக் குஷிப்படுத்தியது!

○

விடிந்தால் தீபாவளி. இரவு ஒன்பது மணிக்கு ஆபீஸிலிருந்து களைப்போடு வந்தான் குமார். விடிந்ததும் தனக்குத் தலை தீபாவளியாயிற்றே என்ற உற்சாகமே அவன் முகத்தில் இல்லை. அவனுக்குத் தெரியாது குந்தளாவிற்கும், தன் தகப்பனுருக்கும் நடந்த சம்பாஷணையெல்லாம். அதை அவர்கள் வெகு ரகசியமாக வைத்திருந்தனர். திடீரென்று சொல்லி அவனைத் திகைப்படையச் செய்யவேண்டுமென்ற ஆசைதான் அதற்குக் காரணம்.

குதி போட்டுக்கொண்டே அவனருகில் வந்தாள் குந்தளா. "இங்கே வாருங்களேன். உங்களுக்கு ஒரு அருமையான 'தீபாவளிப் பரிசு' வைத்திருக்கிறேன். அதோ அந்த அறையில் இருக்கிறது. போய்ப் பாருங்களேன்" என்று அவனைக் கையைப் பிடித்து தாதரவென்று இழுத்துக் கொண்டுபோய் மூடியிருந்த அறைக் கதவின் முன் நிறுத்தினாள்.

உற்சாகமோ, தெம்போ இல்லாமல் வேண்டா வெறுப்பாக அறைக் கதவைத் திறந்தான் அவன். அங்கே ஜோராக சோபாவில் சாய்ந்துகொண்டு ராகம் இழுத்துக்கொண்டிருந்த தன் அப்பாவைக் கண்டான்! பின்புறம் திரும்பிப் பார்த்தான். குறும்புத்தனம் கூத்தாடும் விழிகளுடன் நின்ற குந்தளாவைக் கண்டான். அவனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. ஆனால், தன் ஆனந்தத்தை வெளிப்படுத்த வார்த்தைகள் அகப்படவில்லை.

ஒரே பாய்ச்சலில் குந்தளாவை இறுகத் தழுவிக்கொண்டு, அவள் கன்னங்கள் சிவந்து போகும்படி செய்துவிட்டான்! இதை அந்த 'பொல்லாத 'மாமா' பார்த்துக்கொண்டிருந்தார் என்று அறிந்துகொண்டதும், குந்தளாவின் கன்னங்கள் பின்னும் சிவந்துவிட்டன !.........

"என்ன யோசனை பலமாயிருக்கே! நான் எதிரே இருக்கும்போதே என்னைப்பற்றி என்ன யோசனையோ?" என்று குமார் கேட்டதும்தான் சிந்தனை உலகிலிருந்து இந்த உலகிற்கு வந்தாள் குந்தளா...

"ஒன்றுமில்லை. நான் சென்ற வருஷம் உங்களுக்குக் கொடுத்த அந்த 'தீபாவளிப் பரிசை' எண்ணிக்கொண்டேன்" என்று அவள் சொன்னதும், "ஒஹோ அதையா. ஆனால் நான் அதை நினைக்கவில்லை. அதற்குப் பதிலாக நான் உனக்குத் தந்தேனே அந்த பரிசைப் பற்றித்தான் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று குறும்பாகக் கூறிவிட்டு அவளருகில் நெருங்கினான் குமார். அதைக் கண்டதும் நாணத்தின் செவ்விய ரேகை படர, தன்னழகிய முகத்தைக் கீழே தாழ்த்திக்கொண்டாள் குந்தளா.

ஆச்சரியம்!

காமு: நான் சமையல் பண்ணக் கற்றுக்கொண்டால் ஒரு ஆச்சரியம் ஏற்படும்என்று எங்கள் வீட்டுக்காரர் சொன்னார்.

சீதா: என்ன ஆச்சரியம் ஏற்பட்டது?

காமு: சமையல்காரனை நிறுத்தி விட்டதான்.

நிமிழக் கதை

சாமர்த்தியசாலி

குளியம்பட்டி என்றொரு கிராமத்திலே முனியாண்டி என்றொரு குடியானவன் இருந்தான். அவன் மிகவும் சோம்பேறி. வேலைக்கே போகமாட்டான். அவனது உறவினர்கள் எவ்வளவோ நாட்கள் அவனை வேலைக்குப் போகச் சொல்லி, வற்புறுத்தினர். அவனுக்கு வேலை செய்யவே பிடிக்கவில்லை. கெட்டிக்காரனுதலால் அவன் புத்தியைக் கொண்டே சம்பாதிக்க எண்ணினான். மற்ற குடியானவர்களைப் போல நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட விரும்பவில்லை.

இப்படியாக சில வருஷங்கள் இருந்தான். அவனுக்கு சும்மா சாப்பாடு போட யாரும் முன்வரவில்லை. பிச்சை எடுத்தும் ஒரு பயனுமில்லாமல் போய்விட்டது. அந்த ஊரைவிட்டு வெளியூர் போய் பிழைக்க அவன் விரும்பவில்லை. உள்ளூரிலேயே தனது புத்திசாலித் தனத்தைக் காட்ட எண்ணினான். அவனுக்கு எளிதில் சம்பாதிக்க ஒரு வழி தோன்றியது.

திருடி சம்பாதிப்பதையே தன் தொழிலாகக் கொண்டான். பல நாள் திருடன் ஒருநாள் அகப்படாமலா போகப் போகிறான். ஒருநாள் அகப்பட்டே விட்டான். போலீஸ் அதிகாரிகள் அவனை சிறையிலடைத்து விட்டார்கள். வயிற்றுக்கு இல்லாது திருடினன் பாவம். சிறையிலடைப்பட்டுவிட்டான். சுமார் ஐந்தாறுவருஷங்கள் சிறையிலேயே அவதிப்பட்டான்.

ஒருநாள் நள்ளிரவில் முனியாண்டி சிறையிலிருந்து தப்பி ஓடி விட்டான். இந்த விஷயம் சிறை அதிகாரிகளுக்கெல்லாம் ஒரு நிமிஷத்தில் பரவிவிட்டது. எல்லோரும் முனியாண்டியைத் தேடுவதில் முனைந்தனர்.

இதற்குள் முனியாண்டி சுவரேறி குதித்து, ரோட்டுக்கு வந்து விட்டான். அவன் வந்த வேளை நல்ல வேளையாகவே தோன்றிற்று.

அதிர்ஷட வசமாக ஒரு லாரி அந்த வழியே வந்தது. லாரியை நிறுத்தி 'ஐயா! என்னை தயவுசெய்து ஏத்திகுங்க!' என்று கெஞ்சினான்.

அந்த லாரி டிரைவர் அவனைப் பார்த்து, "என்னப்பா, ஜெயில்லேருந்து தப்பி ஓடியாந்துட்டியா! அங்கே ஒரே கூச்சலாயிருக்குது, என்ன சமாச்சாரம்" என்று சொன்னான்.

முனியாண்டி கெட்டிக்காரன் ஆதலால், அவனைப் பார்த்து, 'ஐயா, நான் ஆறு வருஷமாக ஜெயில்லேருந்தேன். இன்னிக்குத்தான் எனக்கு விடுதலை. புள்ளே குட்டிகளே பாக்கணும். அதுக்காவத்தான் இப்படி ஓடியாந்தேன். என் விடுதலையைக் கேட்டுபுட்டு அவுங்களுக்கு சந்தோசம் தாங்கமுடியலே! அதுக்காவ இப்படி கத்தறாளுக! அவ்வளவுதான் விஷயம்" என்று கூறினான்.

இவ்வளவு வார்த்தைகளைக் கேட்ட டிரைவர் மனமிரங்கி அவனை ஏற்றிக்கொண்டு போகாமலிருக்க முடியுமா என்ன ?

குறை விலகிற்று

பூவாளூர் சுந்தரராமன்

கண்ணம்மாவுக்கு மூன்று நாட்களாக அந்த சம்பவம், மனதை உறுத்திக்கொண்டே இருந்தது; அவளால் அதை மறக்க முடியவேயில்லை. கதவு இல்லாத அலமாரியில் இருந்த துருப் பிடித்த தகரப் பெட்டி, கண்களில் படும்போதெல்லாம் அவள் ஹிருதயத்தை உலுப்பி, அந்தப் பெட்டிக்குள் இருக்கும் புடவைக்காகக் கண்கலங்கச் செய்தது. "இன்னும் மூணு ரூபா இருந்திருந்தால்....அந்தப் புடவையையே எடுத்துக் கொண்டிருக்கலாம்! கரையும் உடலும் எவ்வளவு பொருத்தமாகத்தானிருந்தது!.... உம், நமக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!" என்று அடிக்கடி பெருமூச்சுவிட்டாள். வேறு விதியின்றி இளையாளாக வாழ்க்கைப்படும் பெண்ணின் மனம் போல தனக்குப் பிடிக்காத புடவையை எடுத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தால் அவள் மனம் கலங்கிற்று.

மூன்று நாட்களுக்கு முன்னால் வாசலில் புடவை வியாபாரி ஒருவன் புடவைகள் விற்க வந்தான். கண்ணம்மாவின் புருஷன் ரயில்வே 'காங்கு' கூலி; அவனுக்குக் கடைக்குப் போய்த் துணி மணிகள் வாங்கப் பொழுதில்லை; பணத்தை அவளிடம் கொடுத்து, அவளுக்கும் குழந்தைக்கும் வேண்டியதை வாங்கிக்கொள்ளச் சொல்லியிருந்தான். முதல் நாளே தன் மகளுக்கு மூணு ரூபாயில் கவுன் தைத்துவிட்டாள். இருப்த்தைந்து ரூபாய்க்குள் தனக்கு ஒரு புடவை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தாள். அதனால் வாசலில் புடவைக்காரனுடைய சத்தம் கேட்டதும், கண்ணம்மா அவனைக் கூப்பிட்டு புடவைகளையெல்லாம் எடுத்துப் பார்த்தாள்.

கடைசியில் கனகாம்பரக் கலர்ப் புடவை ஒன்று நன்றாக இருந்தது. நல்ல இலைப் பச்சை பார்டரும், உடலும் வெகு பொருத்தமாக இருந்தது. ஆனால் விலை மட்டும் முப்பது ரூபாய்க்குக் குறைய சம்மதிக்கவில்லை புடவைக்காரன். அவளுடைய கையில் புருஷன் கொடுத்திருந்ததில், குழந்தைக்குக் கவுன் வாங்கினது போக மீதியிருந்ததும், அவள் காலரையாகச் சேர்த்ததும் கூடி இருபத்தேழு ரூபாய்க்கு மேலில்லை. அதனால் அவள் இருபத்தைந்து ரூபாயிலிருந்து அந்தப் புடவையைப் பேரம் பேச ஆரம்பித்தாள். அநேகமாக இருபத்தேழு ரூபாய்க்குச் சம்மதித்து விடுவான் போலிருந்தது. மிஞ்சினால் அக்கம் பக்கத்தில் கடன் வாங்கியாவது அந்தப் புடவையை எடுத்துக்கொண்டு விடவேண்டும் என்று நினைத்தாள். ஆனால் திடீரென்று எதிர் வீட்டுச் சந்திரா அங்கே வந்து அந்தப் புடவையை எடுத்துப் பார்த்தாள்; விலை கேட்டாள்; முப்பது என்று தெரிந்ததும், ஆறு ஐந்து ரூபாய் நோட்டுகளைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டாள். அவள் வந்து வியாபாரம் செய்து விட்டுப் போன 'சுவடே' தெரியாமல் வெகு சீக்கிரமாக வியாபாரம் நடந்து விட்டது.

ஐந்தே நிமிஷங்களுக்குள் தான் பார்த்துப்பேசிய சேலை, கை மாறிவிட்டதென்று அறிய கண்ணம்மாளுக்குக் கோபம் கோபமாக வந்தது. அதுவும் சந்திரா—ஒரு தேவடியாள்—தனக்குப் போட்டியாக வந்தது பெருத்த அருவையை அவள் மனதில் கிளப்பிற்று. சந்திராவுக்கு என்ன? அவளுக்குப் பணம் காசைப் பற்றிய கவலையேயில்லை. யார் யாரோ வருகிறார்கள்; பணம் கொடுக்கிறார்கள். ஆனால் இருபத்திரண்டு ரூபாய் சம்பளத்தில் வேலை செய்யும் 'காங்கு' கூலி முருகையன் சம்சாரம், பாவம்! அவ்வளவு பணத்துக்கு எங்கே போவாள்?

திரும்பத் திரும்ப அதே நினைவும், அதனால் ஆத்திரமும்தான் கண்ணம்மாவுக்கு வந்தது. அந்த 'எதிர்வீட்டுப் பேய்' மட்டும் வந்து எடுத்துக் கொண்டு போயிருக்காவிட்டால், எப்படியும் அந்தப் புடவை தனக்கே கிடைத்திருக்கும் என்று நிச்சயமாக எண்ணியிருக்க, தன்னிடத்தில்—தன் மானத்தையும் உடலையும் விற்றுச் சம்பாதித்த—பணம் இருக்கிறது என்றுதானே அப்படிப் புடவைக்காரன் கேட்ட விலையைக் கொடுத்து வாங்கிக் கொண்டாள்? ஆனாலும் பெண்களுக்குப் பணம் ஒன்றுதானா முக்கியம்? மானம்தானே பெரிது! எப்படித்தான் இப்படி மானத்தை விற்றுப் பணத்தைச் சம்பாதிக்கிறார்களோ' என்று ஆத்திரப்பட்டாள்.

★

மறுநாள், தானே இரண்டு மைல் தூரத்தில் இருந்த நகரத்துக்குப் போனாள். கடைத்தெருவெல்லாம் சல்லடை போட்டுப் பார்த்தும் அதேமாதிரிப் புடவை—கனகாம்பரக் கலரில் பச்சை பார்டர் போட்டது—கிடைக்கவில்லை; கடைசியில் வேண்டா வெறுப்பாக பாக்குக் கலரில் ஒரு புடவையை வாங்கிக் கொண்டுவந்து சேர்ந்தாள். ஆனாலும் அவள் மனது மட்டும் அந்தக் கனகாம்பரக் கலர் புடவையின்மீதே லயித்திருந்தது என்பதை அவள் முகத்தின் ஏமாற்றம் காட்டிற்று.

அந்த ஒரு குறையினால் அவளுக்குப் பாதி உற்சாகம் மட்டுப்பட்டிருந்தது. அதற்கேற்றாற் போல, அன்று மாலை அவள் கணவன் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டே வந்தான்.

"என்னாது, ஏன் இப்படி ஒரேயடியாக மூஞ்சியைத் தூக்கி வச்சுகிட்டிருக்கே?...." என்று கேட்டாள் கண்ணம்மா.

"பாளும் வேலைக்குத் தலை முழுகிவிட்டு நிம்மதியா இருக்கலாம், எதாச்சியும் கூலிவேலை செஞ்சுகிட்டு...."

"ஏ, என்னுவாம்?"

"தீவுளிக்குத் தலை முழுகக் கூட முடியாது போலிருக்கு; 'ஸ்பெசல் டூடி' போட்டிருக்காகளாம் .... இவ்வளவுக்கும் அன்னிக்கு எனக்கு ராவு 'டூடி'கூட இல்லை; இன்னொரு 'காங்கு'கூலி வேலை நம்ம தலையிலே விழுந்திருக்குது' என்று நொந்துகொண்டான் முருகையன்.

"முடியாதுன்னு சொல்லிடுறது தானே....!"

"அப்படியெல்லாம் சொல்லமுடியுமா? அவனுக்குத் தலை தீவுளியாம்; அவன் நாலு நாளு லீவு போட்டுட்டு மாமியாவூட்டுக்குப் போயிருக்கான் ஜோரா, ... உம். புடவை வாங்கிக்கிட்டயா?"

"என்னமோவாங்கிக் கொண்டேன்!" என்று மிகவும் அஸ்வாரஸ்யமாகச் சொன்னாள்.



"என்ன, என்னமோ போல சொல்லறயே? சேலை மனசு பிடிச்சதில்லே....?"

கண்ணம்மா நடந்த கதை பூராவும் சொல்லிவிட்டு, அந்த "சாதி கெட்ட கழுதை' வாங்காம இருந்திருந்தா அந்தப் புடவையை நான் வாங்கிக்கொண்டு இருப்பேன். மானங்கெட்ட நாய்! அவ பணத்திலே இடி விழ...." என அடுக்கிக்கொண்டேபோனாள்.

"இதா, என்ன பேச்சு இது? அவளை இப்படி வாய்க்கு வந்தபடி ஏன் வையறே? உனக்கு வாங்கத் துப்பில்லாட்டி...."

"ஒத்தர் பேரம் பேசிக்கிட்டு இருக்கிற சாமானை இன்னொத்தர் எப்படி வாங்கலாம்?"

"நீ ரொம்ப ஆசைப்பட ஆசைப்படத்தான் முதலுக்கே மோசம் வருது! லீவு கூட கிடைக்காமல்...." என்று முணுமுணுத்தான். தன் கணவன், தன் மீதே பாய்வதைக் காண கண்ணம்மா பீறிட்டுக்கொண்டு வரும் துக்கத்தை மறைத்துக்கொண்டு எழுந்து சென்றாள்.

★

விடிந்தால் தீபாவளி; வாசலில் 'கதம்பம் கதம்பம்' என்று விற்கும் சப்தம் கேட்டது. 'கங்கா ஸ்நானம்' செய்ததும் தனக்கும் குழந்தைக்கும் வைத்துக்கொள்ளலாம் என்று வாசலுக்கு ஓடிப் போய்ப் பூக்காரனைக் கூப்பிட்டாள்.

"முழம் என்ன விலையப்பா?"

"இரண்டரையணுங்க" என்று அவன் தீபாவளி கிராக்கியை உத்தேசித்து விலை சொன்னான்.

"அடேயப்பா, என்ன ஒரேயடியா விலை சொல்லறையேயப்பா! முளம் ஒரு அணாக்கு மேலே கொடுக்க அதிலே என்ன இருக்குதப்பா?"

"இதோ பாருங்கம்மா, மல்லிகை, ரோசா, மருக்கொழுந்து, தாளம்பூ எல்லா வாசனைப்பூவும் வைத்திருக்கம்மா...."

"எல்லாம் சரிதான், முளம் ஒரு அணா போட்டுக்கிட்டு கொடு, ஒரு முளம்...."

"ஏம்மா இப்படிக் கேக்கறே? இன்னும் போணி கூட ஆவல்லே அதுக்குள்ளே பூவையும் தொட்டு வச்சிட்டே.... உனக்காக இரண்டணா, எடுத்துக்கம்மா..."

"அதெல்லாம் இல்லை! வேணும்னா இன்னும் காலணா மேலே வச்சுக்க; ஒண்ணே காலணா! கொடுத்தா கொடு; இல்லாட்டிப் போ!"

"நீயும் ஒரு பொம்பளை மாதிரி உங்கிட்ட முதல்லே வந்தேனே, சனியன் மாதிரி.... பூவாங்க வந்திட்டே பெரிய மவராசிக்

கணக்கா....'' அவனுடைய வாய் பொரிந்து தள்ளிற்று.

அதே சமயத்தில் எதிர் வீட்டிலிருந்து சந்திரா, 'ஏ கதம்பம், இங்கே வா அப்பா!' என்று கூப்பிட்டாள்.

''முளம் என்ன விலையப்பா?..''

'' இரண்டரை அணு அம்மா, கதம்பம்னு ஏங்கணும், பாருங்க... வாசனைப் பூவெல்லாம்போட்டு..'' என்று எடுத்துக் காட்டினுன்.

''இப்ப எதிர் வீட்டுலே என்ன விலையப்பா கொடுத்தே?''

'' அந்த மூதேவி கிட்ட யாரு பேரம் பண்ணினுங்க. அது ஒரு அணு கேக்குது! நீங்க ஒரே விலையா இரண்டணு போட்டுக்குங்க, போணி முதமுதல்லே உங்க கையாலேதான்'' என்றுன்.

''சரி, இரண்டு முழம் கொடு!'' என்றுள்.

''பெரிய மனுசங்கன்னு பெரிய மனுசங்கதான்; பொருளைத் தெரிந்து விலை கொடுப்பாங்க!''

என்று சொல்லிக்கொண்டே போனுன்.

கண்ணம்மா இந்த நாடகம் பூராவையும் ரேழியிலிருந்து கேட்டுக் கொண்டேதானிருந்தாள். தன்னை மூதேவி, சனியன் என்றெல்லாம் வைததை நினைத்து நினைத்து மனம் புழுங்கினுள். அந்தப் பூக்காரனுக்கு எதிர்வீட்டுக்காரி 'மகராசி' ஆய்விட்டாள்! அவள் நடத்தை கேவலமாக இருந்தும், அவளுடைய கைப் பணத்துக்கு உலகமே சாய்கிறது என்று எண்ணினுள். தன் வறுமை காரணமாக விலை குறைவாகக் கேட்டால் அதுகூட ஒரு தவருகி, தனக்கு அவமரியாதைதான் கிடைக்கிறது என்று கண்கலங்கினுள். தனக்குப் பண்டிகையும் கொண்டாட்டமும் எதற்கு? குடும்பப் பெண்டுகள் உழைக்கவும் செய்து என்ன கௌரவம் கிடைக்கிறது? எல்லாரிடத்திலும் வசவும் அவமரியாதையும் தான்! என்று ஒரே வெறுப்புடன் இரவு படுத்துக் கொண்டாள். சில சமயங்களில் மறுநாள் காலை தீபாவளி கொண்டாடாமல் இருந்தால்தான் என்ன என்றுகூட நினைத்தாள்.

★

அன்று இரவு பன்னிரண்டு மணி இருக்கும். 'ஐயோ என்னை அடிக்காதே, நான் போயிடறேன்! நான் போயிடறேன்!' என்று எதிர்வீட்டில் கூச்சல் கேட்டது.

கண்ணம்மா எழுந்து போய் கதவைத் திறந்து பார்த்தாள். வாசலில் ஏகக் கூட்டம். சந்திராவை ஒரு முரட்டு மனிதன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிக்கொண்டே 'போக்கடா களுதை! நட வெளியே! உன்னை வரிசையெல்லாம் என் கிட்டயா காட்டறே? இவளுக்காக தீவுளிக்கு முப்பது ரூபாய் போட்டுப் புடவை எடுத்தேங்க! நன்னிகெட்ட நாய்! உன் சாதிக் குணம் எங்கே போவும்?'' என்று உறுமினுன்.

சந்திராவினுடைய முகம் எல்லாம் அடிபட்டு வீங்கிக் கிடந்தது. தலைமயிர் அலங்கோல மாகப் புரள, மாலையில் வாங்கின கதம்பம் வாடித் தொங்கிற்று.

தெருவில் ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்; 'இந்த ஆளு இவளைக் கொண்டுவந்து வச்சுகிட்டுஇருக்கான். வேறு யாரோ நுளைஞ்சிட்டாளும்; அதனுலே இவ்வளவு 'மரியாதையும்' நடக்குது!'

கண்ணம்மாளுக்குத் 'திக்' கென்றது. சந்திரா இரண்டு நாட்களாக ஆடின ஆட்டமும் பாட்டமும் போன இடம் தெரியவில்லை; தெருவில் நின்ற யாவரும் காறி உமிழ, அவள் அழுது கொண்டு நிற்பதைக் கண்டதும், தான் உலகத்தைப் பற்றி குறைவாக நினைத்ததற்கும் அலுத்துக்கொண்டதற்கும் வெட்கப்பட்டுக் கொண்டாள். உள்ளே ஓடிப் போய் முருகன் படத்துக்கு எதிரில் 'சுவாமி! மன்னிச்சுடு! இந்த ஏழைக்கு உலகத்து விசயம் என்ன தெரியப் போவுது!' என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டேயிருக்கும் பொழுது, 'என்னுது வாசல் கதவைத் திறந்து போட்டுட்டு உள்ளே என்ன செய்யறே?' என்று கேட்டுக்கொண்டே அவள் புருஷன் வந்து நின்றுன். அவன் கையில் பூப்பொட்டலம் இருந்தது.

'' எதிர் வீட்டில் என்னமோ சத்தம் கேட்டது. எளுந்து பார்த்தேன்; ஆமாம் நீ என்னமோ வாது சந்தேகமின்னையே?''

''நல்ல வேளை; வேறு ஒரு ஆளைப் போட்டுட்டாங்க!'' என்று சந்தோஷத்துடன் சொன்னுன்.

விடியற்காலையில் கண்ணம்மா, அந்த பாக்குக் கலர்ப் புடவையைக் கட்டிக்கொண்டு, முல்லைப் பூவையும் தலையில் வைத்துக் கொண்டு சுவாமியைக் கும்பிடும் போது முருகையன், 'இந்தப் புடவைக்கு என்னவாம்? இந்த நிறம்தான் எனக்குப் பிடிச்சிருக்குது!' என்று சிரித்துக் கொண்டேகூறினுன்

<u>குட்டிக்கதை</u>

வாத்தியார்த்தனம்

பள்ளிக்கூடத்தில் மணி அடித்ததும் எல்லா மாணவர்களும் தம் தம் வகுப்பிற்கு சென்று உட்கார்ந்து கொண்டனர். ஆறுவது வகுப்புக்கு உபாத்தியாயர் வராததால் அங்கே மாணவர்கள், ஒரே கொம்மாளமடித்துக் கொண்டிருந்தனர். 'கிளிமூக்கு வரலைடோய்' என்று சில மாணவர்கள் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் 'கிளிமூக்கு' என்று சொல்வது அவர்களது வகுப்பு உபாத்தியாயரையல்லாமல் வேறு யாரை?

ஆத்மநாதய்யர் - அவர்தான், பிள்ளைகள் குறிப்பிடும் 'கிளிமூக்கு'—அவசர அவசரமாய் வந்தார். அத்தனை மாணவர்களும் 'கப்சிப்'பென்று அடங்கிவிட்டனர். சில மாணவர்கள், தங்கள் புத்தகங்களுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டனர். ஆத்மநாதய்யர் வகுப்பு அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தார். ஒரு தரம் கனைத்துவிட்டு, 'பிள்ளைகளே! பாடங்களை எழுதிக் கொண்டு வந்தீர்களா?' என்று கேட்டார்.

ஒரு சில பிள்ளைகள், தாங்கள் எழுதிவந்ததைக் காண்பித்தனர். மற்றும் சிலர் பேசாமல் எழுந்து நின்றனர் ஒவ்வொரு பையனுகக் கூப்பிட்டு அவர்களது காதைத் திருகி, கன்னத்தில் ஒரு அறை விட்டார். எல்லாப் பிள்ளைகளும் இக்காட்சியை பயந்தவண்ணம் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கடைசியாக உதை வாங்கிக் கொள்ளவேண்டியவன் கோபு, அவன் முறை வந்தது உபாத்தியாயர் காரணம் கேட்டார். கோபு தான் தாயாருக்கு உடல்நலமில்லாமலிருந்ததால், பாடங்களை எழுதமுடியாது போய்விட்டதெனக் கூறினுன்.

ஆத்மநாதய்யர், தம் வீட்டிலே ஏற்பட்ட ஏதோ சிறு மனஸ்தாபத்தால் அன்று கோபாவேசத்துடன் இருந்தார். கோபுவின் கன்னத்தில் பளீரென ஒரு அறை விட்டார். அவன் மயங்கிக் கீழே விழுந்துவிட்டான். சில பிள்ளைகள், அவனைத் தூக்கி ஒரு ஓரமாய்க் கிடத்தினர். அந்த வகுப்பு ஒரு வழியாக முடிந்தது. ஆத்மநாதய்யர் சரேலென எழுந்து வகுப்பு அறையை விட்டுப் போய்விட்டார். பிள்ளைகள் அனைவரும் ஒரு பெரிய கண்டத்திலிருந்து விடுபட்டது போல்பெருமூச்செறிந்தனா.

விர்ரென்று கிளம்பிய ஆத்மநாதய்யர், ஆறும் பாரம் வகுப்பு இருக்கும் அறைப் பக்கம் சென்றூர். அங்கே அவர் கண்ட காட்சி அவரைத் திடுக்கிடச் செய்தது. அவரது மகன் கோண்டு, பெஞ்சியின்மேல் நின்று கொண்டிருந்தான். ஹெட்-மாஸ்டர் அவனைப் பாடம் ஒப்பிக்காததற்கு காரணம் என்னவென்று கேட்டுக்கொண்டிருந்தார். தாயாருக்கு உடல் நலனில்லை. அலைச்சலாய் இருந்துவிட்டேன். நேரமில்லை என்றுன். பளீரென ஹெட்மாஸ்டர் அவனை இறங்கச் சொல்லி அறைந்தார். அவன் 'ஐயோ!'வென அலறிவிட்டான்.

ஆத்மநாதய்யருக்கு அப்பொழுதுதான், தான் செய்த காரியம் நினைவுக்கு வந்தது. கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டார்.

பெரிய கிராக்கி

ஒரு தடவை முதலாவது ஜார்ஜ் ஹாலந்தில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். ஒரு நாள் ஒரு கிராமத்து சத்திரத்தை அடைந்து தன் குதிரையை சத்திரக்காரனிடம் ஒப்படைத்துவிட்டு உள்ளே சாப்பிடச் சென்றூர். அத்தேச வழக்கப்படியே ஒரு தட்டில் சில வேகவைத்த முட்டைகளைக் கொண்டு வரும்படி சத்திரக்காரனுக்குக் கட்டளையிட்டார். அதன்படியே அவருக்கு முட்டைகள் கிடைத்தன. ஆனுல் சாப்பிட்டு முடிந்தபின் சத்திரக்காரன் கொடுத்த பில்லைப் பர்ாத்ததும் அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏனெனில், அதில் அந்த முட்டைகளின் விலை நானூறு பிராங்குகளாகப் போடப்பட்டிருந்தது. உடனே அவர் சத்திரக்காரனைக் கூப்பிட்டு, ''இதென்ன நான் சாப்பிட்ட நான்கு முட்டைகளுக்கு இவ்வளவு விலையா? இந்த ஊரில் முட்டைகள் கிடைப்பதே ரொம்ப சிரமமா என்ன?'' என்று கேட்டார்.

''முட்டைகள் தாராளமாகக் கிடைக்கின்றன. ஆனுல் தங்களைப் போன்ற மகாராஜாக்கள் கிடைப்பதுதான் அபூர்வம் இங்கு'' என்று சாதுர்யமாக அவன் பதிலளித்தான்.

ஜார்ஜ் மன்னர் அந்த சத்திரக்காரனின் அறிவை மெச்சியவாறே அவன் கேட்ட தொகையைக் கொடுக்கும்படி தன் காரியதரிசிக்கு உத்தரவிட்டார்.

ஜோதிஷ மகுடவர்த்தனர்

9-5-38ல் ஜோதிஷ மகாநாட்டின் தலைவர்

ஆதாயம் விரயம், தொழில், குடும்பம், சத்துரு, கடன், காதல், அதிருஷ்ட மாதம், நாள், நெம்பர், நேரம், லாட்டரி, ரேஸ், காரியம் சித்தி பெறும். சந்திர நாட்கள் மணிக்கு மணி பலன். மற்ற பலனுடன் ஒரு வருடமாதப்பலன் ரூ. 5. கேள்வி 4-க்கு ரூ. 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரபஸர் N. V. சுப்பிரமணியம்

J. M. & J. A.

(மிராசுதார்) நெ. 7, ஜோதிஷ ஆசிரமம்

வாலாஜாபாத் P. O., S. I. Ry.

சண்டையும் சமாதானமும்

ஜீ.எஸ்.மணி

தெருவில் கோலி விளையாட்டு வெகு மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. அந்தத் தெரு சிறுவர், சிறுமியர் அனைவருமே, அந்த விளையாட்டில் தம்மை மறந்து ஈடுபட்டிருந்தனர். கோலியாடிக்கொண்டிருந்தவர்கள் என்னவோ ஐந்தாறு சிறுவர்கள் தான். மற்றவர்கள் சுற்றிக் கூடிக்கொண்டு விளையாடுபவர்களுக்கு அவ்வப்போது உற்சாகமும், ஊக்கமும் கொடுத்துக் கொண்டிருந்தனர். வேடிக்கை பார்த்து வந்தவர்கள் இரண்டு கட்சியாகப் பிரிந்து கொண்டிருந்தனர். ஒரு கட்சியைச் சேர்ந்த சிறுவனோ அல்லது சிறுமியோ விளையாடுபவர்களில் ஒருவனுக்கு ஊக்கமளித்தால் உடனே எதிர் கட்சிக்காரர்களில் ஒருவன் இன்னொருவனுக்கு நிச்சயமாய் உற்சாகம் ஊட்டத் தவற மாட்டான். இதனால் ஆட்டத்தில்ஸ்வாரஸ்யம் மிகுந்து காணப்பட்டது.

விளையாடுபவர்களில் நடுநாயகமாக விளங்கியவன் பசுபதி. கோலியாட்டத்தில் நிபுணன் என்று பெயர் எடுத்தவன்; கோலி எவ்வளவு தூரத்திற்கு உருண்டோடிவிட்டாலும் குறி பார்த்துத் தவறாமல் அடிப்பதில் சூரன். ஆகவே அவனிடம் மற்ற பிள்ளைகளுக்கு சற்றே பயமிருந்தது. அவன் வார்த்தைக்கும் மதிப்பு இருந்தது.

ஆயினும் ஒருநாளும் இல்லாத திருநாளாக பசுபதிக்கு அன்று சரியாக ஆடவே வரவில்லை. அவன் குறிவைத்த ஒவ்வொருகோலியும் மயிரிழையில் தவறிக் கொண்டே வந்தது. அதனால் மற்ற பையன்களின் கொண்டாட்டம் அதிகரித்தது. நிபுணனான பசுபதியே ஆட்டத்தில் தோற்பதென்றால், மற்றவர்களுக்கு கும்மாளம்தானே! மற்றவர்கள் செய்த பரிஹாஸத்தினால் பசுபதி பரபரப்புக் கொண்டான்; அளவுக்கு மீறிய அந்தப் பரபரப்பே அவனுக்குத் தோல்வியைக் காட்டிக் கொண்டே வந்தது.



அவனது தடுமாற்றத்தை மேலும் அதிகப்படுத்தியவள் வேடிக்கை பார்த்தவர்களுள் ஒருத்தியான காமு, பசுபதிக்கு அடுத்தபடியாக கூட்டத்தில் அவள்தான் நடுநாயகியாகப் பிரகாசித்தாள். பசுபதியின் கோலி குறி தவறும்போதெல்லாம் அவள்தான் அதிகமாகக் கைகொட்டி ஆர்ப்பரித்தாள். பசுபதி கோபம் கொண்டு அவளை முறைத்துப் பார்த்தால் அந்தப் பொல்லாத சிறுமி மேலும் சிரித்து அட்டஹாஸம் பண்ணினாள்.

"சரியாகக் குறி வச்சுக் கோலியை அடிக்க முடியாமல் என்னைப் பார்த்து முழிக்கறதைப் பாருங்கடா! மகா ஆட்டக்காரனாம், ஆட்டக்காரன்!" என்று கூசாமல் கேலி செய்தாள்.

மற்ற சிறுவர்கள் 'ஹோ – ஹோ' என்று கூடவே சிரித்தார்கள்.

பசுபதியின் முகம் சுண்டிப் போய் விட்டது.

வேண்டுமென்றே காமு, அவன் தோல்வியை விரும்புவதாக அவனுக்குத் தோன்றியது. கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. "ஆட்டத்துக்கு சம்பந்தமில்லாத நீ எதுக்கடி சிரிக்கறே?" என்று உறுமினான் அவளை எரித்து விடுபவன் போல் பார்த்துக்கொண்டே.

"ஆட்டத்துலே எனக்கு ஏண்டா சம்பந்தமில்லே? நான் இல்லாட்டா இன்னிக்கு ஆட்டமே இல்லெ—தெரியுமா?" என்று தைர்யத்துடன் எதிர் வெட்டுப் போட்டாள் காமு.

பல்லைக் கடித்துக்கொண்டு பேசாமல் இருந்தான் பசுபதி.

ஆனால் காமு அவனை விடவில்லை; மேலும் குத்திவிட்டாள். "ஆட்டம் வரல்லையாம்! அழுகுண்ணி பிடிக்கறான்!" என்றாள்.

"என்னடீ அழுகுண்ணியைக் கண்டு விட்டே நீ?" என்று மறுபடியும் சீறினான்.

"ஆமா! கோலியைக் குழியிலே உருட்டறத்துக்குப் பதிலா நீதான், யாரும் கவனிக்காத சமயத்துலே, மொள்ளத் தள்ளி விட்டுட்டியே! அது அழுகுண்ணியில்லாமல் பின்னே என்னவாம்? நான்தான் பார்த்துண்டேயிருந்தேனே!"

காமு சொன்னதை மறுக்க முடியாமல் விழித்தான் பசுபதி. உடன் விளையாடும் மற்ற பையன்கள் பார்க்காத சமயத்திலே அவன் அர்த்தமாதிரி செய்துவிட்டது வாஸ்தவமே. அந்தப் பாவி மட்டும் எப்படியோ அதைப் பார்த்துவிட்டாளே!

அவன் முகம் அசடு தட்டியது; வஞ்சம் தீர்த்துக்கொள்ள அவன் கோபமெல்லாம் வேறு வழியில் பாயலாயிற்று. "நீதான் ரொம்பக் கண்டுட்டியோ! என் ஜோலிக்கு வந்தையானால் உன் பல்லை உடைச்சுப்புடுவேன்!" என்று கொதித்தெழுந்தான்.

"ஆமா, ஒரு பொம்மனாட்டிக் குட்டி கிட்டேதான் உன் வீரத்தையெல்லாம் காட்ட வருவே! ஆட்டத்துலே காட்டேண்டா!" என்று அவனுக்குச் சரியாக சவால் கொடுத்தாள் காமு.

மற்ற பிள்ளைகள் அனைவரும், அவள் சொல்வதை ஆமோதிப்பது போல் அவனைப் பார்த்துச் சிரித்தனர்.

அவன் தேகமெல்லாம் துடித்தது. உள்ளம் துள்ளி விழுந்தது.

காமுவின் தம்பி கோபுவுக்கு திடீரென்று 'குஷி' பிறந்துவிட்டது. "என் அக்கா கிட்ட உன் கை வரிசையைக் காட்டினையோ, உன் கையைக் கடிச்சுப்பிடுவேன்!" என்று காமுவுக்குப் பரிந்துகொண்டு அந்தப் பொடிப் பயல் பசுபதியை பயமுறுத்தினான்.

அவ்வளவுதான், வெளிப்பட வழியின்றி குதித்துக்கொண்டிருந்த பசுபதியின் ஆத்திரத்திற்கு அவள் தம்பி பேசிய பேச்சு ஒரு வாய்க்காலை வெட்டி விட்டுவிட்டது.

"சீ, போடா!" என்று அந்தச் சிறுவனிடம் பாய்ந்த பசுபதி, கோபத்தில் அவனைப் பிடித்து தூரத் தள்ளினான். "கையைக் கடிப்பானாம்! ஆளைப் பாரு ஆளை!" என்று கர்ஜித்தான்.

ஆவேசத்துடன் தள்ளப்பட்ட அந்த வாண்டு, உருட்டியடித்துக் கொண்டு தரையில் விழுந்தது; மீண்டும் எழுந்திராமல் அப்படியே அசைவற்றுக் கிடந்தது; ஓடிப் போய் கோபுவைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினாள் காமு.

அவன் வாயெல்லாம் ஒரே மண்மயம்; தலையெல்லாம் புழுதி; தவிர அவன் தடுமாறி விழுந்த வேகத்தில் அருகில் இருந்த வாசற் படிக்கட்டில் முகம் மோதியதால் உதட்டின் வழியே ரத்தமும் கசியத் தொடங்கியது.

ரத்தத்தைப் பார்த்ததும் பசுபதியே பயந்துவிட்டான்.

காமுவோ காளியாகவே மாறிவிட்டாள். "பசுவாம், பசு! எருமை மாடே! தடிக்கழுதை மாதிரி நிக்கறயேடா! ஏண்டா என் தம்பியைத் தள்ளினே? பாருடா. அவன்பல் ஒடஞ்சு ரத்தமாக் கொட்டறதே! மூஞ்சியைப் பாரு. முகரையா!" என்றெல்லாம் சரமாரியாகத் தொடுத்துவிட்டாள்.

பசுபதி ஒன்றுமே தோன்றாமல் ஸ்தம்பமாய் நின்றான். மற்ற பையன்களும் அப்படியப்படியே நின்று திகைத்தனர்.

"ஆத்துக்கு கூட்டிண்டு போயி மருந்து போடு! பாவம்!" என்றான் யாரோ ஒரு பையன்.

"இரு, இரு! உங்கம்மா கிட்டச் சொல்லி உன் கையை முறிக்கச் சொல்றேன்!" என்று பசுபதியைப் பார்த்துக் கருவிக் கொண்டே காமு, கோபுவை அழைத்துக்கொண்டு அப்பால் நகர்ந்தாள்.

அத்துடன் அன்றைய ஆட்டத்திற்கு முற்றுப்புள்ளி விழுந்தது.

●

பசுபதி பயந்து கொண்டே வீட்டிற்குப் போனான். அன்றையச் சம்பவத்தைப் பற்றி தன் அம்மாவிடம் காமு கட்டாயம் சொல்லியிருப்பாளென்றே அவன் நிச்சயமாய் நம்பினான். ஆகவே அவன் செய்துவிட்ட பிசகிற்கு கிடைக்கப் போகும் தண்டனையை பயத்துடன் எதிர்நோக்கினான்.

பசுபதியைப் பார்த்த அவன் தாயார் ஆத்திரத்துடன், "விளையாடப் போயிட்டையானால் வீட்டு நினைவே வரதில்லையோ உனக்குக். இருட்டற வரைக்கும் என்னடா விளையாட்டு அப்படி? ஒரு படிப்பா—எழுத்தா ஒண்ணுமே கிடையாது? எருமை மாடு மேய்க்கத்தான் லாயக்கு!", என்று அவனை மிரட்டினாள்

எப்போதுமே அவன் அம்மா அந்த மாதிரி விரட்டுவது வழக்கம்தான். மேலே ஏதாவது அம்மா தொடுப்பாளோவென்று அவன் அச்சத்துடன் எதிர்பார்த்து நின்றான்.

"எதுக்குடா இன்னும் முழிச்சுண்டு நிக்கறே? சோறு திங்க வந்து தொலையேன்!" என்றுதான் அடுத்தபடி சொன்னாள்.

பசுபதிக்கே ஆச்சர்யமாகத்தானிருந்தது. காமு அம்மாவிடம் சொல்லவில்லையா, என்ன! அப்படித்தான் இருக்கும். இல்லாவிட்டால் கோபுவை அவன் தள்ளிவிட்டது பற்றி அம்மா கேட்காமல் இருப்பாளோ?......

"காமு ரொம்ப ரொம்ப நல்லவள்!" என்ற அபிப்பிராயத்துடன் பசுபதி அன்று தூங்கப் போனான். ஆயினும் அவன் கவலை முழுவதும் நீங்கிவிடவில்லை.

அவன் தள்ளிவிட்டதால் கோபுவின் உதட்டிலிருந்து கசிந்த ரத்தத்துளி, அந்த உள்ளத்தை ரொம்ப தூரம் குழப்பிவிட்டிருந்தது. ஒருவேளை ரொம்பக் காயம் பட்டிருக்குமோ? அவன் பல் நிஜமாகவே உடைந்துதான் போயிருக்குமோ?...

"பாவம்! சின்னப் பையன்!" என்று அவன் மீது பரிவுகொண்டான்.

கோபுவின் பல் எல்லாமே உடைந்துபோய் பேச முடியாமல் அவன் திண்டாடுவதாகப் பசுபதி அன்றிரவு தூக்கத்தில் கனவு கண்டான்.

மறுநாள் காலையில் கோபுவைத் தெருவில் கண்டதும், அவனுக்குப் பேச முடிகிறதாவென்று பரிசோதித்துப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் பசுபதியின் இளம உள்ளத்தில் அவனையும் அறியாமல் எழுந்து நின்றது.

"ஏய்! கோபு! காயம் ஆறிப் போச்சா?" என்று கனிவுடன் கேட்டுக் கொண்டே அவனருகில் நெருங்கினான்.

கோபு திடீரென்று நினைத்துக் கொண்டவன் போலே தன் உதட்டைத் தடவிப் பார்த்துக்கொண்டான்.

"தெரியாமெ தள்ளிவிட்டுட்டேண்டா. வேணுமின்னு தள்ளல்லே!" என்று குழைவுடன் மன்னிப்புக் கோரினான் பசுபதி.

எதிரொளி பணிவதைக் கண்டதும் கோபுவுக்கு விறைப்புத் தட்டிவிட்டது: "போடா, சரித்தான்! தள்ளிக் காயப்படுத்தினதும் இல்லாமெ இப்பொ வந்து ரொம்ப நல்லவனாட்டம் பேசறியோ?" என்று மிடுக்குடன் சொல்லிவிட்டு ஓடிவிட்டான்.

அவன் நன்றாகப் பேசியது பசுபதிக்கு மிகவும் ஆறுதலைக் கொடுத்தது; 'நல்லவேளை — ஊமையாகிவிடவில்லை!' என்று எண்ணி சந்தோஷப்பட்டுக் கொண்டான். ஆயினும் மனம் பூரணமாக சமாதானம் அடையவில்லை. காமுவின் கோபத்தைப் பற்றி அவன் நினைத்துக்கொண்டான்; அத்துடன் தன் அம்மாவிடம் அவள் காட்டிக் கொடுக்காமல் இருந்ததுபற்றியும் நன்றியுடன் நினைத்துக்கொண்டான்.

அவனையறியாமலேயே அவன் கால்கள், காமுவின் வீட்டை நோக்கி நடந்தன.

அவள் வீட்டிற்கெதிரே நின்றுகொண்டு உள்ளே நுழையலாமா— வேண்டாமாவென்று தயங்கியபடியே இருந்தான்.

அதற்குள் காமுவே தெருவிற்கு வந்துவிட்டாள். பசுபதி நிற்பதைப் பார்த்தும் பார்க்காதவளைப் போலே முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"காமு!" என்று அவன் அழைத்ததும் வெகு அலட்சியமாக அவன் பக்கம் திரும்பினாள்.

"கோபுவை வேணுமின்னு தள்ளிவிடல்லேடீ! கோவிச்சுக்காதே— எங்கம்மாகிட்டே சொன்னியா நேத்திக்கு?" என்று குழைவுடன் கெஞ்சிக் கேட்டான்.

காமுவின் முகத்திலிருந்த கோப பாவனை அந்த க்ஷணமே மறைந்து விட்டது. அந்தக் கண்களிலும் ஒரு குழைவு காணப்பட்டது; ஆயினும் தன் மிடுக்கை மட்டும் குறைத்துக்கொள்ளவில்லை அவள். வெகு அலட்சியமாக, "நான் ஒண்ணும் உங்கம்மாகிட்ட சொல்லல்லே; 'பாவம்'னு பேசாமெ இருந்துட்டேன்?" என்றாள். சொல்லி முடிப்பதற்குள்ளாகவே குரல் வெகு தூரத்திற்கு இரக்கம் கொண்டுவிட்டது.

"நீ ரொம்ப நல்லவடீ, காமு! உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!" என்று அதற்குமேல் தன் அபிப்பிராயத்தை அவளிடம் தெரிவித்தான் பசுபதி.

காமுவின் அகம் மலர்ந்தது போலவே அவள் முகமும் மலர்ந்தது. இருந்தாலும் இயல்பான துடுக்குடனே, "போடா சரிதான்! உன்னைவிடச் சின்னவனுச்சேன்னு கூடப் பார்க்காமெ என் தம்பியை மொரட்டுத்தனமாப் பிடிச்சுத் தள்ளினையே! உன்னை எனக்குப் பிடிக்கவேயில்லை போ!" என்று சொல்லிவிட்டாள்.

அதற்குமேல் அவளிடம் எப்படிப் பேசுவதென்று தெரியாமல் சிலையாக நின்றுவிட்டான் பசுபதி.

சிறிதுநேரம் எங்கேயோ பார்த்தபடி நின்ற காமு, பசுபதி இன்னமும் தன் எதிரே நின்றுகொண்டேயிருப்பதை லட்சியம்செய்யாத பாவனையில், 'விருட்'டென்று உள்ளே போய்விட்டாள். வழக்கமாகக் கூப்பிடுவது போல் அவனையும் உள்ளே வரச் சொல்லி அவள் அழைக்கவில்லை.

பசுபதியின் உள்ளம் வாடியது போல் அவன் முகமும் வாடியது. பேசாமல் அவன் தன் வீட்டிற்குத் திரும்பினான்.

●

அன்று மாலையிலும், வழக்கம் போல், அந்தத் தெருச் சிறுவர்கள் கோலியாடுவதற்குக் கூடினர்; அன்றும் காமு அங்கே பிரசன்னமாயிருந்தாள்.

ஆனால், வெகு நேரமாகியும் பசுபதி மட்டும் அன்று ஏனோ ஆட்டத்திற்கு வரவில்லை; அந்தமாதிரி, அதுவரையில் அவன் வராமலிருந்ததே இல்லை; வராமல் இருக்க அவனால் முடியாதே!

அவனைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தவள் காமுதான்; அவன் வரவை அதி ஆவலுடன் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவளும் அவள்தான்.

"பசு எண்டா வரவில்லை?" என்று அவள் ஒருவனைக் கேட்டாள்.

"ஏனோ—தெரியல்லே; வராட்டா வேண்டாமே! அவன்தான் எதுக்கெடுத்தாலும் கோவிச்சுக்கறானே!" என்றான் அந்தப் பிள்ளை; பசுபதியிடம் அடிக்கடி 'முட்டி' கொடுக்கும் பையன் அவன்; அன்றாவது 'முட்டி' கொடுப்பதிலிருந்து தப்பிக்கலாமே என்று எண்ணினானோ என்னவோ!

காமு பசுபதியைப்பற்றி யோசித்தபடியே இருந்தாள்.

அவன் ஏன் வரவில்லை? ஒருவேளை நேற்று தோற்றுப் போய்விட்டதுதான் காரணமோ? அல்லது அவள் செய்த கேலியின் விளைவோ? அல்லது அந்தச் சிறு சண்டைதான் காரணமோ?...

அன்று காலையில்கூட அவளிடம் வலுவில் வந்து பேசினானே அவன் செய்துவிட்ட தப்புக்காக மன்னிப்பும் கோரினானே அவளிடம்? ஆனால் அப்போதும் அவள்தான் அவனிடம் பராமுகமாயிருந்தாள்! அவள் பேச்சிலும் தான் அப்போது எவ்வளவு அசட்டை! நேற்று வேண்டுமென்றே அவனைப் பரிகாசம் பண்ணியது போல் அன்றும் வேண்டுமென்றேதான் அவள் அவனிடம் சரியாகப் பேசவில்லை?... அவனுக்குத் 'தண்டனை' கொடுக்க விரும்பினாளோ?... பாவம், பசுபதி!... அவன் எவ்வளவு நல்லவன்! எத்தனை அற்புதமாக கோலியாடுவான்! சடீர்—சடீரென்று என்ன குறிப்பாகக் காய்களை அடிப்பான்!... நேற்று மட்டும் ஏன் அவனுக்கு ஆட்டமே வரவில்லை?... இன்னும் அவன் வரக் காணோமே!......

பசுபதியைப் பற்றியே நினைத்து நினைத்து அவள் உள்ளம் ஓயாமல் குழம்பியது. அவன் இல்லாமல் அவளுக்கு அன்றைய ஆட்டமே ரஸிக்கவில்லை.

விளையாடிக்கொண்டிருந்தவர்களுக்குள் திடீரென்று ஒரு சின்னப் பூசல்; காமுவை ஒருவன் மத்தியஸ்தத்திற்கு அழைத்தான். அதை அவள் காதில் வாங்கவேயில்லை.

●

"போடா, சரிதான்! உங்க ஆட்டமோ, நீங்களோ! பசு இல்லாமல் இன்னிக்கு ஆட்டமே பிடிக்கல்லேடா!" என்ற மிகுந்த சலிப்புடன் சொல்லியவளாய் காமு, அவ்விடம் விட்டு அப்பால் நகர்ந்தாள்.

பசுபதியின் வீட்டை நோக்கி அவள் கால்கள் தாமாக நடந்தன. அவன் வீட்டண்டை வந்ததும் அவள் சற்று நின்றாள்; உள்பக்கம் பார்த்தாள்; தயங்கினாள்; மறு நிமிஷம் அவன் வீட்டிற்குள்ளே நுழைந்துவிட்டாள்.

அங்கே பசுபதி காணப்படவில்லை.

"பசு இல்லையா மாமி?" என்று அப்போது அங்கு எதிர்ப்பட்ட அவன் அம்மாவைக் கேட்டாள்.

"கொல்லைக் கிணத்தடியிலே சறுக்கி விழுந்து கையை முறிச்சிண்டு படுத்துண்டு கிடக்கான்! மாடியிலே போய் பாரு!" என்று சலிப்புடன் சொன்னாள் அவன் அம்மா.

காமுவின் உள்ளத்திலே 'திக்'கென்ற உணர்ச்சி; 'கையை முறிச்சிண்டு கிடக்கானா!'...

அவள் பரபரவென்று மாடிக்கு ஓடினாள்.

பசுபதி சுவர் பக்கம் தலையைத் திருப்பிக்கொண்டு படுத்திருந்தான்.

"பசு!" என்று உள்ளக் கனிவுடன் அவள் அழைத்த குரலையும், நடைச் சத்தத்தையும் ஒருங்கே கேட்டு பரபரப்புடன் திரும்பிப் பார்த்தான்.

"காமுவாடீ!" என்றான் ஆச்சர்யக் குரலிலே.

"கொல்லையிலே விழுந்துட்டியாமே? கை...?" என்று முடிக்காமல் ஏதோ எண்ணெய் தடவப்பட்டிருந்த அவன் கையைக் கவனித்தாள்.

"கை சுளுக்கு விழுந்து போச்சு; அம்மா வழிச்சுவிட்டா" என்று சொன்னான் பசுபதி.

"ரொம்ப வலிக்கறதா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"அவ்வளவு வலி இல்லெ; இருந்தாலும்...?"

"நான் மொள்ள—உனக்கு வலிக்காமெ—தொட்டுப் பாக்கட்டுமா?"

"உம்!"

"காமு, அவன் கையைத் தொட்டுப் பார்த்தாள்; மிருதுவாகத் தடவிக் கொடுத்தாள்.

"வலிக்கு எதம்மா இருகுடி காமு?" என்று சந்தோஷப்பட்டான் பசுபதி. அவள் ஸ்பரிசத்தின் விசேஷமோ! உள்ளக் கனிவின் மகிமையோ!

"இப்போ கொஞ்சம் தேவலையா வலி?" என்று பரிவுடன் கேட்டாள் காமு. அவள் தன்னிடமிருக்கும் மாயா சக்தியை உணர்ந்துகொண்டு விட்டாளோ!

"சரியாப் போயிடும்!" என்று பசுபதி பதில் சொன்னான்.

"நாளைக்கு நீ கோலி விளையாட வரமுடியுமோ?" என்று காமு கவலைப்பட்டாள்.

"ஓ! இன்னிக்கும் அந்தப் பசங்க ஆடறாங்களா?"

"ஆமா! ஆனா நீ இல்லாமெ இன்னிக்கு ஆட்டமே எனக்குப் பிடிக்கல்லேடா!"

காமு அந்தமாதிரி சொன்னதும், பசுபதிக்கு மகுடாபிஷேகம் செய்யப்பட்டது போன்ற ஒரு பெருமை உணர்ச்சி தோன்றியது. கை வலியைக் கூட மறந்துவிட்டான்: "இப்பவே ஆட வரட்டுமா?" என்று கிளம்பினான்.

"வாண்டாம், வாண்டாம்! உன் கை வலி நன்னா சொஸ்தமாகட்டும்; நீ இருக்கியான்னுதான் பாக்க வந்தேன்; ஆட வரக்காணமேன்னு—உங்கம்மாவைக் கேட்டேன்; கையை ஒடிச்சிண்டு கிடக்கேன்னு சொன்னா; எனக்கு என்னமோ போலாய்விட்டதுடா பசு!"

பசுபதியின் முகத்திலே சந்தோஷம்—வருத்தம், ஆனந்தம், பெருமை, கஷ்டம் — இன்னும் என்னென்ன உணர்ச்சிகள் எல்லாமோ ஒருங்கே போராடின; அவன் சொன்னான்:

"ஆமா! குளிக்கப் போனபோது கிணத்தடியிலே வழுக்கி விழுந்துட்டேன். நேத்திக்கு. பாவம், கோபுவைப் பிடிச்சுத் தள்ளிவிட்டுட்டேனோன்னோ; அதுதான் சாமி இன்னிக்கு என்னைப் பிடிச்சுத் தள்ளிவிட்டுட்டார். கோபுவுக்குப் பல் ஒடஞ்சு ரத்தம் கொட்டித்து—எனக்கு கை சுளுக்கு விழுந்து போச்சு!......"

காமுவின் சின்னஞ் சிறு உள்ளத்திலே அவன்மீது சொல்லமுடியாத பரிவும், அன்பும் பொங்கிவந்தது; "உஸ்ஸ்ஸ்! போடா பசு! நீ இப்படியெல்லாம் பேசப்படாது! கோபுவுக்கு இப்போ ஒண்ணுமில்லை; காயம் ஆறிப் போயிட்டுது; உனக்கும் கை சொஸ்தமாயிடும்!" என்று சொல்லியவளாய் தன் கையினால் அவன் வாயைப் பொத்தினாள்.

●

அதேசமயம் கீழே கூடத்தில், காமுவின் தாயார், பசுபதியின் தாயாரிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

"என்னவோ அம்மா! பசுபதிக்கும் காமுவுக்கும் கல்யாணமுடி போட்டுடணுமென்னமோ பேசிக்கொண்டிருக்கோம்; அதுகள் பெரிசானால் என்ன சொல்லுகிறதுகளோ! அப்புறம் தெய்வ சங்கல்பம் எப்படியிருக்கிறதோ!......"

———

கடிதம்

ஒரு பெண் பாடசாலை உபாத்தியாயனிக்குக் கீழ்க்கண்ட கடிதம் ஒரு மாணவியின் தாயிடமிருந்து வந்தது.

"அம்மணி, இனிமேல் குழந்தைக்கு வீட்டுக் கணக்குக் கொடுக்கவேண்டாம். பார்க்கை ௧0 தடவை சுற்ற எவ்வளவு நேரம் பிடிக்கும் என்று கணக்குக் கொடுத்தது போதும் என்றாகி விட்டது. அந்தக் கணக்கைச் சரியாகப் போட குழந்தையின் அப்பாவுக்கு ஒருநாள் வீணாகி விட்டது. நாள் பூராவும் பார்க்கைச் சுற்றி விட்டுக் கணக்குப் போட்டு அனுப்பினால் கணக்கு தப்பு என்கிறீர்கள்."

அம்மன் கோவில்

சரோஜா ராமமூர்த்தி

ஐப்பசி மாதத்து அடை மழையில் நானும், என் தோழி சியாமளாவும் ஒரு சிறு கிராமத்தில் அகப்பட்டுக் கொண்டோம். காலேஜ் ஹாஸ்டலிலேயே அடைபட்டுக் கிடந்த எங்களுக்குக் காலாற ஊர் சுற்றி விட்டு வரவேண்டும் என்று ஆசையாக இருந்தது. தீபாவளி விடுமுறைக்கு ஹாஸ்டல் மாணவிகளில் அநேகர் ஊருக்குப் போயிருந்தார்கள். முதல் நாள் நாங்கள் இருவரும் போட்டிருந்த திட்டத்தின்படி ஹாஸ்டல் தலைவியிடம் அனுமதி பெற்றுக் கொண்டு அதிகாலையில்—சூரிய உதயத்துக்கு முன்—ஹாஸ்டலுக்கு இரண்டு மைல் தொலைவில் இருந்த சமுத்திரக் கரையை நோக்கிப் புறப்பட்டோம். முதல் இரண்டு நாட்களாகப் பெய்த மழையின் காரணமாக ஒவ்வொரு பள்ளத்திலும் ஜலம் நிறைந்து, பசேல் என்று, எங்கு பார்த்தாலும் இயற்கையின் மலர்ச்சி எங்களைச் சந்தோஷத்தில் ஆழ்த்தியது. வருஷத்தில் பத்து மாதங்களில் மழையின்மையால் துவண்டு கிடந்த செடி கொடிகள் இளங்காற்றில் ஆடி அசைந்து நகைத்துக் கொண்டிருந்தன.

'சியாமளாவின் தோளில் காமிரா தொங்கிக் கொண்டிருந்தது. எதைக் கண்டாலும் அந்தச் சிறு கருவிக்குள் அதைப் பிடித்து விடவேண்டும் என்று ஒரே தீர்மானத்துடன் இரண்டு சுருள் பில்மை பையில் திணித்துக் கொண்டு வந்திருந்தாள் அவள். எந்தக் காட்சியையும், கற்பனையுடன் கலந்து ஒரு கதை எழுதிவிட வேண்டும் என்று நான் சிந்தனையில் மூழ்கியிருந்தேன். ஆகவே, வெட்டிப் பேச்சுக்கிடமில்லாமல் நாங்கள் மௌனமாக நடந்தோம்,

கடற்கரையை அடைந்து பகலெல்லாம் கடலில் செல்லும் படகுகளையும், மீன் பிடிக்கும் சிறுவர்களையும், அலைகளில் நீந்தி விளையாடுபவர்களையும் சியாமளா ஓயாமல் படம் எடுத்தாள். என் கற்பனைக்குத் தூண்டுகோலாக ஒன்றும் அமையவில்லை. மனம் வெறிச்சென்று கிடந்தது.

ஒய்வு நாளை வியர்த்தமாகக் கழித்து விட்டோமே என்று நான் வருந்திக் கொண்டிருக்கையில், இயற்கைக்கு ஆவேசம் வந்தது போல் எங்கிருந்தோ பெருங்காற்று ஒன்று சூறுவளியைப் போல் கிளம்பி வந்தது. 'உஸ்' என்று படமெடுத்த நாகம் சீறுவதுபோல் கிளம்பிய அக்காற்று வானத்தில் நாலாப்புறமும் சிதறிக் கிடந்த மேகங்களை ஒன்று சேர்த்து விட்டு எங்கோ சென்று மறைந்தது. எங்கும் காரிருள் சூழ பளீரென்று கண்ணைப் பறிக்கும் மின்னலுடன் மழை ஆரம்பித்தது. இதுவரையில் படம் எடுப்பதில் முனைந்திருந்த சியாமளா மிகுந்த கவலையுடன். என்னையும், கைக் கடியாரத்தையும் கவனித்தாள். மணி நாலுதான் ஆகியிருந்தது.

அந்தப் பெரு மழையில் நிற்கக்கூட இடமில்லாமல் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டே நாங்கள் அருகில் இருந்த ஊரை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தோம். அந்தக் கிராமத்தைக் காக்கவும், எங்களைப்போல் மழையில் அகப்பட்டுக் கொள்பவர்களுக்கு அடைக்கலம் அளிக்கவும் ஒரு காளி அம்மன் கோவில் தென்பட்டது. அந்தக் கோவில் புராதனமானது. ஆனால் புதிதாகப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தார்கள். ஐப்பசி மாதமாதலால் மழைக்காகச் சாரம் கட்டிக் கொண்டு அநேகர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தலைவனாக ஒருவன் உட்கார்ந்து கொண்டு அவர்களுக்கு யோசனை சொல்லி வந்தான். தலைவனாக இருந்த அவனுக்கு வயது முப்பதுகூட இருக்காது. இருந்தாலும், அந்தக் கோவிலைப் பற்றியும், அதிலுள்ள சிலாரூபத்தின் கதையைப் பற்றியும் அவன் தலைமுறையாக அறிந்தவன் போல் இருந்தது.

அவன் எங்களை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றான். “நல்ல மழையில் அகப்பட்டுக் கொண்டீர்களே அம்மா” என்றும் வருந்தினான். அப்பொழுது மழை அநேகமாக நின்றிருந்தது. இருந்தாலும், முழுதும் நனைந்திருந்த எங்களால் மேலும் நனைந்து கொண்டு போக முடியாமல் போய் விட்டது. ஆயாச மிகுதியால் நாங்கள் இருவரும் அங்கிருந்த கல் ஒன்றின் மேல் உட்கார்ந்தோம். கோவிலின் பழைய வரலாற்றை அறிந்த பழனியும் அவன் கதையை ஆரம்பித்தான்.

● ● ●

பழனி தொண்டையைக் கனைத்துக் கொண்டு தன் முன்னோர்களின் பூர்வ வரலாற்றை ஆரம்பித்தான். என் தாத்தா பழனி ஆசாரியால் செய்யப்பட்ட இந்தச் சிலைக்கு எழுபது எண்பது வயது ஆயிற்று. ஆனால், மனுஷர்களுக்குத்தான் இளமை, முதுமை, சாவு எல்லாம்; நிரந்தரமான இச்சிலைக்கு ஒன்றும் கிடையாது. பழனி ஆசாரி இந்தப் பிராந்தியத்திலே இருந்த கல் தச்சர்களில்—சிற்பிகளில்-பெயர் போனவர். முருக பக்தர். முருகனைத் தவிர வேறு எந்த தெய்வத்தினிடமும் நம்பிக்கை இல்லாத அதி தீவிர பக்தர். முருகனுடைய சிலையைத் தவிர வேறெதையும் அவர் உளி செதுக்கியதில்லை அநேக ஊர்களில் அம்மன் விக்ரகம் சிவலிங்கம் முதலியவை செய்யச் சொல்லி வந்த அழைப்பை எல்லாம் அவர் இறுமாந்து நிராகரித்தார். இந்த ஊரில் இந்தச் சிலை இருக்கும் இடத்தில் ஒரு சிறிய கல், —கண், காது, மூக்கு ஒன்றும் அடையாளம் தெரியாமல் வெகு காலமாக இருந்து வந்தது. அதிலே எங்கும் வியாபித்து விளங்கும் அன்னை சக்தி இருப்பதாக ஜனங்கள் துதித்து வந்தார்கள். அதற்குக் கூரை வேய்ந்து சிறிய கோயில் ஒன்றை அமைத்தார்கள். அதற்குத் தலைமை வகித்து கிராமத்துப் பெரியதனக்காரன் பொன்னம்பலம் செலவு முதலியவைகளைக் கவனித்து வந்தான். நாளடைவில் அவன் அந்தக் கோவிலுக்குத் தர்மகர்த்தாவானான். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். சேற்றில் செந்தாமரை முளைத்தமாதிரி நத்தை வயிற்றில் முத்துப் பிறந்தது போல் செங்கமலம் விளங்கினாள். அழகும், அறிவும், அன்பும், பக்தியும் அவளிடத்தில் இருந்தன. செங்கமலம் சிரித்தால் போதும், பேசினால் போதும், நிமிர்ந்து பார்த்தால் போதும் என்று இந்த ஊர் வாலிபர்கள் ஆசைப்பட்டார்கள். அவர்களில் பழனி ஆசாரியும் ஒருவன். அவள் சிரிப்பை மட்டும், பேச்சை மட்டும், பார்வையை மட்டும் அவன் அடைய ஆசைப்படவில்லை. அவளையே அடைந்துவிட ஆசைப்பட்டான்.

ஒரு வருஷம் ஆடி மாசத்தில் ஊரில் கக்ஷிச்சண்டை வலுத்தது. பொன்னம்பலம் பெரியதனக்காரனாக வாழ்வது சிலருக்குப் பிடிக்கவில்லை. அவன் வயலை ஆட்டையும், மாட்டையும் விட்டு மேய வைத்தார்கள். அவனுடைய தென்னந்தோப்பில் காய்களை சூறையாடினார்கள். கடைசியாக 'ஒரு நாள் காலையில் அவனும், செங்கமலமும் பயபக்தியுடன் பூஜித்து வந்த அம்மன் விக்ரகம்—அந்தக்கல்—மாயமாக மறைந்து விட்டது. செங்கமலம் கண்களில் நீர் பெருக நின்றுகொண்டிருந்தாள். பொன்னம்பலம் இடி விழுந்தவன் போல் உட்கார்ந்திருந்தான். கோயிலாக இருந்த இடம் வெறும் வெட்ட வெளிச்சமாயிற்று. செங்கமலத்தின் முகமும் நகை இழந்து வாடியது.

அந்தக் காலத்திலேயிருந்து நாளது வரைக்கும் அந்த ஊரில் ஒரு வழக்கம் உண்டு. ஊரில் கல்யாணம் நிச்சயம் செய்வதற்கு முன் இந்த அம்மனிடம் பூ வைத்துப் பார்ப்பார்கள். அவள் உத்தரவு கொடுத்தால்தான் கல்யாணம் நிச்சயம் செய்வார்கள். இல்லாவிட்டால் இல்லை. இனிமேல்—அதாவது அம்மான் காணாமல் போனபிறகு ஊரில் இருக்கும் அத்தனை பெண்களும் கன்னிகைகளாகவா இருப்பது? அவர்கள் இருந்தார்களோ இல்லையோ, செங்கமலம் இருக்கவேண்டியதுதான் என்று பொன்னம்பலம் தீர்மானித்தான். அம்மனைத் தேட ஒவ்வொரு ஊருக்கும் ஆள் சென்று வெருங்கையுடன் திரும்பி வந்தார்கள். பொன்னம்பலமும் நிராசை அடைந்தான்.

● ● ●

பழனி ஆசாரி செங்கமலத்தை அடைந்துவிடவேண்டும் என்று ஆசைபட்டது போல் செங்கமலமும் பழனியை அடைந்துவிடவேண்டும் என்று ஆசைப்பட்டாள். ஆனால், அம்மனுடைய உத்தரவு இல்லாமல் பொன்னம்பலம் கல்யாணத்தை நடத்தமாட்டான். பழனியின் தீவிர வைராக்கியம் வேறு நம்பிக்கையைக் குலைத்தது. பொன்னுக்கும், பொருளுக்கும் அவன் ஆசைப்படமாட்டான். அவன் உளி முருகன் சிலையைத் தவிர வேறு எதையும் செதுக்கியதில்லை. ஆயினும், சின்னஞ் சிறு வயதிலிருந்து செங்கமலம் வழிபட்டு வந்த தேவி பழனியின் மனதை மாற்றமாட்டாளா? தனக்கென்று அவன் கையால் ஒரு சிலையை வடிக்க அவன் மனதை மாற்றிவிடுவாள் என்று செங்கமலம் நம்பினாள். பழைய விக்ரகம் இருந்த இடத்தில்ஒரு நாள் அதிகாலையில் சென்று பூவும், பழமும் வைத்துப் பூஜித்தாள். “அம்மா, தாயே! என் ஆசையை நிறைவேற்று” என்று வேண்டிக் கொண்டாள்.

அன்று பழனியின் மனமும் ஏக்கமடைந்திருந்தது. இப்படியே எத்தனை காலம் இருப்பது? காணாமல் போன அம்மன் வந்தால்தான் கல்யாணம் நடக்கும், நாமாகவே ஏன் ஒரு சிலை செய்துவிடக்கூடாது?” என்று அவன் மனம் தீவிரமாக யோசித்தது. பழனியும், செங்கமலமும் வழக்கம்போல் குளத்தங்கரை தோப்பில் சந்தித்தார்கள். “ஆமாம், உங்கப்பனைக் கேட்டாயா?” என்று பழனி செங்கமலத்தைக் கேட்டான்.

“என்னத்தைக் கேட்க?” என்று அவள் பதிலுக்குக் கேட்டாள். அவள் குரலில் கோபமும் சோகமும் சேர்ந்து ஒலித்தது.

“நல்ல பைத்தியக்கார மனுசன்! ஒரு விக்ரகம் காணாமப் போச்சாம். அதுக்காகப் பெண்ணை கன்னியாகவே நிறுத்தியிருக்கானாம்!” என்று கேலி செய்தான் பழனி.

“நீயும் பைத்தியம்தான்!” என்று முகத்தில் அடித்ததுபோல் கூறினாள் அவள்.

“ஏன்?” என்றான் பழனி.

“சாமி என்றால் எல்லாம் சாமிதான். நீதான் முருகனைத் தவிர வேறு எந்தச் சிலையையும் செய்யறதில்லையே! அதென்ன அப்படி!” அவள் கண்களில் நீர் நிறைந்தது

பழனி மனமாறுதல் அடைந்தான்.

“சரிதான்! அதுக்காக அழாதே. நான் அம்மன் சிலை செய்துடறேன். நீ அவகிட்டே உத்தரவு வாங்கிடு” என்று சிரித்துக்கொண்டே கூறினான்.

செங்கமலத்தின் முகத்தில் புன்முறுவல் படர்ந்தது.

● ● ●

பழனி செய்த சிலை அபாரமாக இருந்தது. அசப்பில் பார்த்தால் அது செங்கமலம் மாதிரியே இருந்தது என்று சொல்லிவிடலாம். பொன்னம்பலம் சிலையைப் பார்த்து வியந்தான். பழனியே மனமாறுதல் அடைந்து சிலை செய்வதென்றால் அது அம்மனின் சக்தியாகத்தான் இருக்கும். இதைப் போலவே செங்கமலத்தின் கல்யாணமும் நடக்கும் என்று நம்பினான்.

அன்று கும்பாபிஷேகம். அத்துடன் செங்கமலத்தைப் பழனிக்குக் கொடுத்துக் கல்யாணம் செய்யப் பூ வைத்துச் சகுனம் பார்க்கவும் ஏற்பாடாகியிருந்தது. காலையிலிருந்து செங்கமலம் பயபக்தியுடன் உபவாசமிருந்து கோவிலை அடைந்தாள். பழனியும் வெற்றிக்குறி முகத்தில் தாண்டவமாட கோவிலை அடைந்தான். அவன் கண்கள் அடிக்கடி செங்கமலத்தின் கண்களைச் சந்திக்க விரும்பின. ஆனால், அவள் அவனை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. அவள் மனோரதம் பூர்த்தியடையும் வரையில் யாரையும் பார்க்க விரும்பவில்லை. அபிஷேகம், ஆராதனை ஆயிற்று. சிவப்பு புஷ்பம் ஒரு பொட்டலத்திலும், வெள்ளை புஷ்பம் ஒரு பொட்டலத்திலும் வைத்துக் கட்டி தேவியின் பாதத்தில் வைத்தார்கள். கண கணவென்று மணி ஒலித்தது. பூசாரி கற்பூரம் கொளுத்திக் காட்டிவிட்டுப் பயபக்தியுடன் ஒரு குழந்தையைவிட்டு ஒரு பொட்டலத்தை எடுக்கச் சொன்னான். செங்கமலம் ஆவலுடன் குழந்தையின் கையிலுள்ள பொட்டலத்தை நோக்கினாள். பொன்னம்பலம் அதை வாங்கிப் பிரித்தான். அவன் கைகள் நடுங்கின. “அம்மாடி! அவள் உத்தரவு கொடுக்கவில்லை!” என்று கத்தினான். பொட்டலத்திலிருந்து நழுவி வெள்ளை புஷ்பம் கீழே விழுந்தது. எல்லோரும் அயர்ந்து நின்றுவிட்டார்கள்.

செங்கமலம் கண்ணீர் வழிய அந்த இடத்தைவிட்டுப் போனாள். அதன் பிறகு செங்கமலத்துக்கு வேறு எங்கேயோ கல்யாணம் நடந்தது. என் தாத்தாவும் வேறு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொண்டார்.

நேற்றும், இன்றும், நாளையும் இந்த அம்மன் உத்தரவு கொடுத்துதான் இந்த ஊரில் கல்யாணம் நடக்கிறது அம்மா” என்று பழனி கதையை முடித்தான்.

“அவள் உத்தரவு கொடுக்காவிட்டால் எவ்வளவு உயர்வான இடமானாலும் விட்டுவிடுவீர்களா?” என்று கேட்டேன் நான்.

அதற்கு அங்கிருந்த கிழவர் ஒருவர்—பழனியின் தாத்தா காலத்து மனுஷர்—கூறினார்: செங்கமலத்துக்கும் பழனிக்கும்தான் இவள் உத்தரவு கொடுக்கவில்லை அம்மா. அதன் பிறகு எனக்குத் தெரிந்த எல்லா கல்யாணங்களும் நடந்திருக்கிறது என்றார்.

தெய்வ சித்தத்தை நம்மால் அறியும் திறன் உண்டா என்று நினைத்துக் கொண்டே நானும், என் சிநேகிதியும் ஹாஸ்டலை அடைந்தோம்.

ஹநுமான்

தீபாவளி விசேஷ சினிமா அநுபந்தம்

ரசிகர்கள் உளங்கவர்ந்த

டி. ஆர். ராஜகுமாரி

"ராவே! ராவே! பங்கரு பாபா"

குணசித்திர நடிகர் நாகையா, பல படங்களில் தமது ஒப்பற்ற நடிப்புத் திறனைக் காட்டியிருக்கிறார்.

''ஆதரவற்றவர்க்கெல்லாம்''

'ஆதரவற்றவர்க்கெல்லாம்' என்று எந்த வேளையில் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி பாடினாரோ, ஆதரவற்ற கோயில்களும், பள்ளிகளும் அவரது கச்சேரி ஆதரவைக் கொண்டு மேலோங்குகிறது.

"நான் புதிசு!"

'நான் புதிசு' என்று சொல்லிக்கொண்டு 'பில்ஹணு'வில் நடித்த ஜயஸ்ரீ பல படங்களில் உப-பாத்திரங்களில் தோன்றினாரென்றாலும், சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

"சிந்தையறிந்து வாடி"

'வள்ளி'யின் பாட்டுக்கு வாயசைப்புக் கொடுத்த குமாரி ருக்மணிக்கு சொந்தமாகப்பாடும் திறனுண்டு என்பதை 'லவங்கி'யும், 'ராமதாஸு'ம்' நிரூபித்துவிட்டது.

"சிவபெருமான் கிருபை"

'சிவபெருமான் கிருபையால்' சினிமாப் படங்களில் சீரும் சிறப்புமாய் நடித்து, படவுலகில் மின்னி வருகிறார் பாகவதர்.

ஓஹோஹ்ஹோ !

ஓஹோஹ்ஹோ! இது பாவுரமா பானுமதியா ! படவுலகில் நல்ல கிராக்கிதான்.

"கொஞ்சும் எழில் சோலை"

கொஞ்சும் எழில் சோலையில் நாம் இருவருடன் இருந்துவிட்டு 'பிழைக்கும் வழிக்காக' 'நவஜீவன'த்திலும் 'பாரிஜாத'த்திலும் நடிக்கிறார் இந்த நாரீமணி !

"மஞ்சளழகி"

'சபா பதி' பத்மாவுக்கு, அந்தப் பெயர் போய் 'மஞ்சளழகி' பத்மா என்று ஆகிவிட்டதாம் அபூர்வ சிந்தாமணிபால் ! சில படங்களில் நடித்து வருகிறார்.

கதை ஒன்று சொல்லுறேன் கேள்!

"கதை ஒன்று சொல்லுகிறேன் கேள்" என்ற வரிகளைப் பார்த்ததும், இதென்ன மந்திரி 'மதனகாமராஜன்' படத்திலே பாடினுனே, அதுமாதிரியல்லவா இருக்கிறது என்று நினைப்பீர்கள்.

நீங்கள் நினைப்பதில் தவறொன்றுமில்லை. அந்தப் பாட்டை பாடி, ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்ற மந்திரி வேஷதாரியின் கதையைப் பற்றித்தான் எழுதப் போகிறேன். மதனகாமராஜனில் மந்திரி வேஷமணிந்த என். கிருஷ்ணமூர்த்தியின் வரலாறுதான் நீங்கள் படிக்கப் போவது.

என். கிருஷ்ணமூர்த்தியின் நடிப்பை மதனகாமராஜனில் பார்த்ததும், இந்த நடிகர் புதியவரா அல்லது பழைய ஆசாமிதானு என்று பலர் கேட்டனர். அவர்களுக்கெல்லாம் என்ன பதில் கிடைத்தது தெரியுமா? பழைய ஆசாமிதான்! பொதுஜனங்கள் தெரிந்துகொள்ளும் அவ்வளவு பிராபல்யத்திற்கு வரவில்லை என்ற ஒரே காரணத்தினுல்தான் இவரை பழைய நபர் என்று சொன்னுலும் நம்புவதற்கு சற்று சந்தேகமாக இருக்கிறது. முழு வரலாற்றை படித்த பின், நீங்கள் இச் சந்தேகத்தை போக்கிக் கொண்டவர்களாவீர்கள்.

சுகுண விலாச சபையில் ஒரு நடிகர் நடித்து நற்பெயர் வாங்குவது எளிதான காரியமல்ல! நடிப்பிலே நல்ல தேர்ச்சியுள்ளவர்கள்தான் இந்தச் சபையிலே நல்ல பெயரை அடைய முடியும். இப்படிப்பட்ட சபையிலே சில வருஷங்களுக்கு முன் சுமார் ஏழு வயது நிரம்பிய சிறுவன், சபையினரை மெய்மறக்கும்படிச் செய்தான். அவனுடைய சாரீர வளமையைக் கண்டு சகலரும் பிரமித்தனர். பிரகலாதா நாடகத்திலே அவன் பிரகலாதனுக நடித்து அனைவருடைய அன்பிற்கும் பாத்திரமானுன். ஆம். அப்பொழுது சிறுவனுயிருந்த ஸ்ரீ என். கிருஷ்ணமூர்த்திதான் இப்படியெல்லாம் அமர்க்களப் படுத்தினுர்.

என். கிருஷ்ணமூர்த்தியின் குடும்பத்திலுள்ள எல்லோரும் சங்கீதத்தில் பரிச்சயமுள்ளவர்கள். அவரது சகோதரர் சகோதரிகள் அனைவரும் நன்கு பாடுவார்கள். சொல்லப் போனுல் அவரது குடும்பத்தில் யாருக்கு பாட வராது என்று கேட்பது தப்பாகும். பூர்விகத்திலேயே, சங்கீத 'வாசனை'யுள்ள குடும்பத்தில் பிறந்த கிருஷ்ணமூர்த்தி பாடுவதில் ஒரு ஆச்சர்யமுமே இல்லை எனலாம். சென்னை செகரடரியேட்பார்ட்டியிலும் சுகுண விலாச சபையிலும் நாடகம் ஆடி நற்பெயரெடுத்து வந்த கிருஷ்ணமூர்த்திக்கு எங்ஙனம் பள்ளிப்படிப்பில் அக்கறை இருக்கும்?

நாடக மேடை பிரகலாதன் புகழைக் கேட்ட கல்கத்தா ஈஸ்ட் இந்தியா பிலிம் கம்பெனியார் 'பிரகலாதனை' படம் பிடிக்க விரும்பினர். அப்படத்தை டி. வி. வடிவேல் நாயக்கர் டைரக்ட் செய்திருக்கிறுர். ஸ்ரீ நாயக்கரும் சுகுண விலாச சபையில் ஒரு நடிகர் என்பதையும் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. ஏற்கனவே நாடக மேடையில் நடித்துப் புகழ் பெற்ற கிருஷ்ணமூர்த்திக்குஇந்தப் படத்தில்நடித்ததற்கு அதிக சிரமப்படவில்லை. முதலில் இவரை சினிமாவுக்கு நடிக்க அனுப்புவதற்கு இவர் பெற்றோருக்கு சம்மதமே இல்லையாம். பின்பு அவர்களுக்கு சமாதானம் சொல்லி, கிருஷ்ணமூர்த்தி அழைத்துச் செல்லப்பட்டாராம்.

ஸ்ரீ. என். கிருஷ்ணமூர்த்தி

நாடக மேடையிலும் சினிமாவிலும் இவரது புகழ் பரவக் கண்டு, இவரது குடும்ப நண்பர் ஒருவர், 'ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ்' கிராமபோன் கம்பெனிக்கு ஒரு சிபாரிசு கடிதம் கொடுத்து, சில பாடல்களை இசைத்தட்டுகளில் பாட ஏற்பாடு செய்தாராம். ஆனுல் அக் கம்பெனி சம்பந்தப்பட்ட ஒருவர், இவர்மட்டிலுமின்றி, இவரது குடும்பத்தினரின் சங்கீதத் திறனைக் கண்டு சில நாடகங்களை இசைத்தட்டுக்களில் வெளியிட விரும்பினுராம். கிருஷ்ணமூர்த்தியின் தகப்பனுரே சில நாடகங்களை தயாரித்துக் கொடுத்ததுடனில்லாமல் அக்கம்பெனியிலேயே ஒரு உத்தியோகத்தையும் சம்பாதித்துக்கொண்டார். 'ஷைனிங் ஸ்டார் ஸொஸைட்டி' என்ற பெயரிலே பல நாடகங்கள் இசைத் தட்டுகளில் வெளிவந்தன. மக்கள், நாடகங்களை பார்ப்பது போக கேட்கவும் வசதி ஏற்பட்டுவிட்டது. எந்தக் கம்பெனியின் நாடக செட்டுகளும் இவ்வளவு செல்வாக்கை பெற்றதில்லை. அமோகமான வரவேற்பு கிடைத்தது. இந்த நாடகங்களிலெல்லாம் கிருஷ்ணமூர்த்தி பேச்சால் 'நடித்திருக்கிறுர்' இசைத்தட்டுகள் மூலம்! சுமார் ஆறு வருஷ காலம், இந்த இசைத்தட்டு நாடகங்கள் வெளிவந்து கொண்டிருந்தன.

இந்த ஸொஸைட்டியாருக்கு சினிமாப் படம் தயாரித்து அதிலேயும் தாங்கள் நடிக்கவேண்டுமென்ற அவா ஏற்பட்டுவிட்டது. அதன் பயனுக ஏகநாத், சக்திமாயா ஆகிய படங்கள் வெளிவந்தன. இரண்டிலும் கிருஷ்ணமூர்த்தி நடித்திருக்கிறுர். அவரது சகோதரரும் நடித்திருக்கிறுர்.

இதன் பின்னர் கிருஷ்ணமூர்த்தி வெகுநாள் வரை 'சும்மா'வாகவே இருந்து விட்டார். ஆனுல் விளையாட்டுகளில் தீவிர கவனம் செலுத்தி வந்தார். விளையாட்டுக்களிலே இயற்கையாகவே, அவருக்குப் பிடித்தம் அதிகம். உங்களுக்கும் எனக்கும் ஒரு சகோதரர் இருந்தால், நம்மைப் படிக்கச் சொல்லி உபத்திரவப்படுத்துவார். ஆனுல் கிருஷ்ணமூர்த்தியின் சகோதரரோ, செலவுக்குக் காசைக் கொடுத்து விளையாடச் சொல்லி வந்தாராம். இப்படிப்பட்ட சகோதரர் நமக்கில்லையே என்று பல மாணவர்கள் கஷ்டப்படுவது எனக்குத் தெரியாமலில்லை. எதற்கும் அதிருஷ்டம் செய்திருக்க வேண்டாமா?

இப்படி விளையாட்டுக்களிலே காலம் கழித்து வந்த கிருஷ்ணமூர்த்திக்கு, ஜெமினியாரிடமிருந்து ஒரு அழைப்பு கிடைத்தது. ஆச்சரியத்திலாழ்ந்து விட்டார் கிருஷ்ணமூர்த்தி. இதன் பலன் அவர் 'மதனகாமராஜனில்' மந்திரியாக நடித்திருக்கிறுர். இப் படத்திலே நல்லதொரு ஸ்திரமான பெயரை அடைந்துவிட்டார். அவர் 'கதை ஒன்று சொல்லுறேன் கேள் பாவாய்' என்று பாடியது ஒவ்வொருவர் காதிலும் ரீங்காரம் செய்துகொண்டிருந்தது.

இப்படம் முடிந்தவுடன் சென்னைக்கு 'சண்டை பயம்' வந்துவிட்டது. ஜப்பான் குண்டுக்கு பயந்து பலர் சென்னையிலிருந்துபிரயாணமானுர்கள். ஸ்டுடியோக்களில் சில மூடப்பட்டன. இது கிருஷ்ணமூர்த்தியையும் பாதித்தது. இவருக்கு விளையாட்டுக்களில் விருப்பம் அதிகம் என்று எழுதியிருக்கிறேனல்லவா? அந்தக் 'கலை' நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டு வந்தது பல விளையாட்டுக்களில் பரிச்சயமுண்டென்றுலும், 'டேபில் டென்னிஸ்' விளையாட்டிலே பிரபல சாம்பியனுகிவிட்டார்.

இது சம்பந்தமான ஒரு போட்டிக்காக டெல்லி சென்றிருந்தபொழுது, தற்செயலாய் அகில இந்திய ரேடியோ நாடகம் ஒன்றில் பங்கெடுத்துக் கொண்டார். அந்த நாடகத்தைக் கேட்ட சில உள்ளூர் நேயர்கள், நிலைய டைரக்டரிடம் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைக் குறித்துப் பாராட்டினுர்களாம்.

இந்தப் பாராட்டுதல்களையெல்லாம் பெற்ற கிருஷ்ணமூர்த்தி, அகில இந்திய ரேடியோவிலேயே நிரந்தரமாக வேலைக்கு இருக்க நேரிடும் என்று எண்ணவேயில்லை. நிலைய அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க, புது டெல்லியில் ஒரு நடிகராகவும், அறிவிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுவிட்டார். விளையாடவந்த இடத்தில் விளையாட்டாக ஒரு வேலை கிடைத்துவிட்டது. அங்கிருந்த பொழுதுதான் ஜூபிடர் பிக்சர்ஸாரிடமிருந்து 'என் மகன்' என்ற படத்துக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார். 'என்மகன்' படத்திலே என். கிருஷ்ணமூர்த்தி அளவுடன் நடித்திருக்கிறுர். இதன் பிறகு, மூர்த்தி பிரதர்ஸார் தயாரித்த 'தியாகி' என்ற படத்தில் கதாநாயகனுக நடித்தார். தற்பொழுது வினைடைன் போனே பிலிம்ஸார் மைசூரில் தயாரித்த 'வினோதினி' படத்தில் நடித்து முடித்திருக்கிறுர். இந்த சமயத்தில் சென்னையில் தயாரிக்கப்பட்ட 'கோகுலதாஸி'யிலும் நடித்து முடித்திருக்கிறுர், இம்மூன்று படங்களுக்கு முன்னர் 'உதயணன்' படத்திலே மந்திரியாக நடித்திருக்கிறுர். போதிய சந்தர்ப்பம் இல்லை.

"மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி! ஆதிகாலத்திய நடிகராயிருந்தும், ஏன் நீங்கள் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் அளவுக்கு தெரியாமல் இருக்கிறீர்கள்" என்று கேட்டேன்.

"நான் மிகவும் சங்கோஜமான நபர். சினிமா உலகத்திற்கு இருக்கவேண்டிய ஜபர்தஸ்து, இன்னும் சில விஷயங்கள், இதெல்லாம் இல்லாமல் இருந்து வந்தேன். மேலும் நானே அமெச்சூர். எனக்குள்ள தாழ்வு மனப்பான்மையே அப்படிச் செய்துவிட்டது. இப்பொழுது இந்த சினிமா உலகத்துக்கு என்னென்ன யோக்கியதை இருக்கவேண்டும். யாரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறேன். முன்பு இருந்த பயமெலாம் போய்விட்டது" என்றுர்.

சுபாவமாகவே சாதுவாகக்காணப்படும் கிருஷ்ணமூர்த்தி சமூகப் படத்துக்கு லாயக்கான நடிகர். அவர் ஹாஸ்ய பாகத்தில் சிறந்த நடிகராக விளங்குவார் என்பது என் எண்ணம். பிராமண குலத்திலுதித்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு இன்னும் விவாகமாகவில்லை. சினிமாக் கலையை விட அவருக்கு விளையாட்டுக்களில் பிரியம் அதிகம். வட இந்தியாவிலுள்ள ஜானகிதாஸ், சினிமா உலகில் பிரகாசிக்கவில்லையா என்ன? அதுபோல இவரும் சினிமா உலகில் பிரகாசிக்கத் தகுதியுடையவர்தான். ஆனுல் இது வரை அவர் பொருத்தமற்ற சில வேஷங்களில் தோன்றியிருப்பதால், அவ்வளவு பிராபல்யத்திற்கு வெளிவரவில்லை.

சினிமாப் பத்திரிகைகளில் இவரது பெயர் அதிகமாக அடிபடாமல் போனுலும், ஹிந்துப் பத்திரிகையின் விளையாட்டுப் பகுதியிலே அதிகமாக அடிபடுகிறது!

நல்லதொரு வேஷத்தைக் கொடுத்து இந்த நடிகரை பரீக்ஷித்துப் பார்க்க ஒரு முதலாளியாவது வராமலா போவார்! பொறுத்துப் பார்ப்போம்.

— "மைனு"

"சிவக்ருபையால்"

'சிவக்ருபையால்' என்ற பாட்டு சின்னப்பா பாடிய பாட்டுகளில் அதிகமாக அடிபடுகிறது. சிரீய நடிப்புக்கு சின்னப்பாவும் சினிமா உலகில் ஒரு உதாரணம்.

"தமிழ்க் கண்ணகி"



கண்ணிய மிக்க நடிகை கண்ணாம்பாவின் நடிப்பால், சினிமா விலேபார்த்தபொழுது கண்ணகி இப்படித்தான் இருந்திருக்கவேண்டுமெனத் தோன்றிற்று.

உலகினில் எனக்கிணை

'உலகினில் எனக்கிணை யாரே!' என்று பாடிய ஹொன்னப்பாவுக்கு நடுவில் சினிமா உலகில் அவருக்கிணையாக யாருமே இல்லாதிருந்தது ஆச்சரியம் அல்லவா?

'பெண்களே மணக்காதீர்' என்று சஹஸ்ரநாம 'பைத்தியக்காரனில்' கூறிய வார்த்தைகளே மனதைவிட்டு அகலாது இருக்கின்றன.

சில திரை உலக முக்கியஸ்தர்கள்


எஸ். எஸ். வாஸன்
(ஜெமினி)

எம். சோமசுந்தரம்
(ஜூபிடர் பிக்சர்ஸ்)

எஸ், கே. மொஹிதீன்
(ஜூபிடர் பிக்சர்ஸ்)

கே. எஸ். நாராயணன்
'பக்ஷிராஜா
ஸ்டூடியோ'

ஏ. கார்டினர்
(சிலோன்
தியேட்டர்ஸ்)

எஸ். சௌந்தரராஜன்
(தமிழ்நாடு டாக்கீஸ்)

கே. சுப்ரமண்யம்
(டைரக்டர்)

கே. ராம்நாத்
(காமிரா நிபுணர்)

ஏ. கே. சேகர்
(ஆர்ட் டைரக்டர்)

எஸ். எம்
ஸ்ரீராமுலு நாயுடு
(டைரக்டர்)

எப். நாகூர்
(டைரக்டர், ஆர்ட் டைரக்டர்)

ஒய். வி. ராவ்
(டைரக்டர்)

பி. எஸ். ராமையா
(வசனகர்த்தா, டைரக்டர்)

ஏ. டி. கிருஷ்ணஸ்வாமி
(டைரக்டர்)


எஸ். டி. சுந்தரம்
(வசனகர்த்தா)

உதயகுமார் (வசனகர்த்தா)

"வன ராஜகுமாரி!"

'வன ராஜகுமாரி' என்று பாடிய சீனு ராஜ குமாரியுடனும் மற்றும் சிலருடனும் கதாநாயகனாக நடித்துப் பாடியிருக்கிறார்.



'ஐயோடா' இவுரைப்பற்றி என்ன எழுதுவது? என்ன ஆச்சரியம்! மதுரமும் பக்கத்திலேயே இருக்கிருரே! இது சகஜம்தானே! இவுருகிட்டயா நடக்கும்' நமது தந்திரம்? எல்லாம் 'ஐனிலோ பகரியாமா'

'வச்சேன்னு வச்சதுதான்' என்ற திட கொள்கையையுடையராஜகாந்தம், தனது பாகம் வரை நன்ருக நடித்து பெயரையடைகிருர்.

ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு பாணி உண்டு. இந்த பாணிகளிலெல்லாம் மாறுபட்டது இவரது பாணி.

"கை கொடுப்பேன் அம்மா"

அன்று 'கை கொடுப்பேன் அம்மா' என்று பாடிய ராஜம்மாவுக்கு பதிலாக தன் 'கைகளை கொடுத்தாள்' கன்னிமா மரித்தாய். கை கொடுத்ததின் பலன் அவரின் நக்ஷத்திரப் புகழ் ஒளி வீசி, 'ஆதியே இன்ப ஜோதி'யாக விளங்குகிறது.

"நாடகமே உலகம்"



'நாடகமே உலகம்' என்று ஷேக்ஸ்பியர் சொன்னதை விட அவரது 'ஷைலக்'காக தமிழில் தோன்றிய சிறுகளத்தூர் சாமா சொன்னதுதான் ஞாபகத்தில் இருந்துவருகிறது.

'தாலேலோ' பாடியவர்களெல்லாம் தாயார் வேஷமணிபவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. பலவித குணசித்திர நடிப்பிலும் தேர்ந்து விளங்கும் கே. ஆர். செல்லம் இதற்கு ஒரு உதாரணம்.

விசித்ர வனிதா

'மங்கம்மா'விலிருந்து பல்டியடித்து பல படங்களில் நடித்து 'விகடயோகி'யிடம் அகப்பட்டுக்கொண்ட 'விசித்ரவனிதா' சரோஜாவுக்கு, தற்சமயம் பட உலகில் நல்ல கிராக்கி.

வன்னப் புருவே நீ யார் ?

ரஞ்சன் பாடிய பாட்டுகளில் அவருக்கு புகழையளிக்கக் கூடிய வகையில் இது சிறந்து விளங்குகிறது. சமீப 'சந்திரலேகா'வில் சசாங்கனைக் கண்டு 'சபாஷ்' போடாதவர்கள் யார் ?

நிஜமா? இது நிஜமா?

நிஜமா ! இது நிஜமா ? இப்படி ஒரு நூதன படமா என்று ஆச்சரியத்தில் ஆழ்ந்து போகும்படி செய்தார் 'இது நிஜமா' படத்தின் கதாநாயகர் எஸ். பாலசந்தர்.

என்ன யோசனை ?

என்ன யோசனை? நக்ஷத்திரமாகப் பாடுபட்டார் ஜானகி. நக்ஷத்திரமே ஆகிவிட்டார்.

கப்பல் கத்திக் கப்பல்

அன்று 'சேவாசதனத்தில்' கத்திக் கப்பல் பாட்டு பாடிய எஸ். வரலக்ஷ்மி என்ற நக்ஷத்திரக் கப்பல்தான் படக் கடலை சுற்றி சுற்றி மிதந்து வருகிறது. 'நவஜீவனத்தில்' இது ஒரு தோற்றம்.

கதம்பக் காட்சிகள்



'கிருஷ்ணபக்தி' யில் ராஜகுமாரி.

ஜி. சுப்புலக்ஷ்மி

எம். ஆர். சந்தானலக்ஷ்மி

ஹிந்தி 'சந்திரலேகா' விலும் சக்கைபோடு போடும் ரஞ்சன்.

பில்ஹணவில் ஏ. ஆர். சகுந்தலா.

'காளிதாஸி'யில் எம். ஜி. ராமச்சந்தரும் வி. எஸ். டி. செக்கும்.

பரந்த அனுபவம் !



'நல்ல தம்பி'யில் நடிக்கும் வி. எஸ். பாண்டியன்.



பைத்தியக்காரனில் சோமுவாக நடித்த சந்திரசேகர்.

பூலோகரம்பை - வஸந்தா

சினிமா 'விசிறி'கள் இருக்கிறார்களே! அவர்களது போக்கே ஒரு அலாதி ரசத்தைச் சேர்ந்தது. அவர்களுக்கு, படத்தொழிலில் உள்ள அனைவரிலும், சினிமா நடிகர்களிடத்திலும், சினிமா நடிகைகளிடத்திலும் உள்ள 'வாஞ்சை' சொல்லமுடியாது. அவர்கள் மனது வைத்தால்தான் நக்ஷத்திரம், அவர்களது அபார 'பிரியத்'தைக் கண்டு இந்த நக்ஷத்திரங்கள் வெளிவரவே பயப்படுவார்கள். இவர்களுக்குப் பிடித்தமான நக்ஷத்திரங்களுக்கு பெயரிடுவதே ஒரு தனி விஷயம். ஸ்ரீமதி கே. எல். வி. வஸந்தாவைப் பற்றி நினைக்கும்போது மேற்கூறிய விஷயங்கள் நினைவுக்கு வந்தது.

வஸந்தாவின் இயற்கைத் தோற்றம்.

ஸ்ரீமதி வஸந்தா எத்தனையோ படங்களில் தோன்றினாரென்றாலும், அவருக்கு ஏற்பட்ட புகழ் 'ரம்பையின் காதல்' என்ற படத்தின் மூலம் தான் என்பது தெரிந்த விஷயமே. 'ரம்பையின் காதல்' படத்தைப் பார்த்த மக்கள், இவரை 'பூலோக ரம்பை' என்றே அழைக்கத் தொடங்கி விட்டனர். இதன் பயனாகவோ என்னவோ, இந்தப் படத்துக்குப் பிறகு, 'பூலோக ரம்பை' என்ற படமே வெளிவந்துவிட்டது. இவ்விதமாக இவர் 'பூலோகரம்பை'யாகி விட்டார்.

அவரது பெயருக்கு முன்னிருக்கும் எழுத்துக்களைப் பற்றி பலருக்கு பலவித சந்தேகங்கள் கிளம்பியது. இன்னமும் சிலருக்கு விளங்காமலேதான் இருக்கிறது. 'கேஎல்வி'யா, 'கேவி எல்லா' 'எல்கேவியா' 'விகேஎல்'லா. என்பவைதான். குன்னக்குடி சொந்தவூரானதால் 'கே' எழுத்து முதலிலும், அவரது தாயார். பெயர் லக்ஷ்மியம்மாளானதால் எல். இரண்டாவது என்றும், அவரது வீட்டுப் பெயர் வள்ளிக்கண்ணு என்றிருந்ததால் 'வி' மூன்றாவதாக வந்தது என்றும், பிறகு ஒரு சிலருக்குத் தெரிந்தது. சினிமாப் பெயர் வஸந்தா தேவி என்று இருந்தது நாளடைவில் வஸந்தா என்று மாறி ஸ்திரமாகிவிட்டது.

ஸ்ரீமதி வஸந்தா, படவுலகில் 'பவளக்கொடி' என்ற படத்தின் மூலம் நுழைந்தாரென்றாலும் அவரை அப்படத்தில் கண்டுபிடிப்பது மிகவும் சிரமசாத்தியமான காரியம்.

வஸந்தா, அடுத்தபடியாகத் தோன்றியது 'ஸ்கந்தலீலா' என்ற படமாகும். கந்தனது லீலைகளை விளக்கும் இப்படத்தில் தனது பூர்வ பெயருக்கேற்ப வள்ளியாக நடித்திருக்கிறார். அவர் 'ஆலோலம்' கூறி, கண்ணைக் கட்டிக் கொண்டு விளையாடிய காட்சி மறக்க முடியாத காட்சியாகும். யானையைக் கண்டு பயப்படும் இடத்திலும் நன்றாகவே நடித்திருக்கிறார்.

இந்தப் படத்தில்தான் அவரது பெயர் பலருக்குத் தெரிய ஆரம்பித்தது. நல்ல முகவெட்டும், நடிப்புத் திறமையும் கண்ட சில படமுதலாளிகள், இவரைப் பிரதானமாகக் கொண்டு ஒரு படம் தயாரிக்க எண்ணினர்.

பலர் எண்ணிய காரியத்தை ஒருவர்தான் செயலில் ஸ்தாபித்தார். இதன்பயனாகத்தான்'ரம்பையின்காதல்' வெளியாயிற்று. வசந்தாவை ஒரு நடிகை என்பதையே மறந்து 'பூலோக ரம்பை' என்றே ரசிகர்கள் கருதி, அப்படத்துக்கு அமோக ஆதரவளித்தனர். அவரது நடிப்பும், பாட்டும், அவர் ஏற்ற வேஷத்துக்கு பொருத்தமாகி விட்டது. அவர் பாடிய 'பூலோக ஆசையாலே' என்ற பாட்டு மிகப் பிரபலமாகிவிட்டது. அந்தப் படத்தைத் திரும்பத் திரும்ப பார்த்தவர்கள் அனேகர். பல ஊர்களில் அப்படம் வெள்ளி விழா, தங்கவிழாவெல்லாம் கொண்டாடியது.

ரசிகர்கள், தியேட்டர் மானேஜர்கள் வேண்டுகோளுக்கிணங்க, ஸ்ரீமதி வஸந்தா மதுரை, காஞ்சிபுரம் போன்ற ஊர்களுக்கெல்லாம் சென்று மேடையில் தோன்றி மக்களை மகிழ்வித்தார். அவர் ஆடிய நடனம் எல்லோராலும் ரசிக்கப்பட்டது.

காலண்டர் தயாரிப்பவர்கள் பலர், ஸ்ரீமதி வஸந்தாவின் நடனத் தோற்றத்தை மூவர்ணத்தில் தங்கள் காலண்டர்களில் வெளியிட்டனர். எந்தக் கடையைப் பார்த்தாலும் 'ரம்பையின் காதல் வஸந்தா' படம்தான்.

இப்படத்துக்குப் பிறகு வஸந்தா, சத்யவாணி என்ற சமூகப்படத்தில் நடித்தார். இதேசமயம் அவர் 'பூலோக ரம்பை' என்ற படத்துக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டார். இரண்டு படங்களில் அமிதமான வெற்றியைப் பெற்றது பூலோக ரம்பை. ரசிகர்களின் அவாவுக்கிணங்க, பூலோக ரம்பை வஸந்தாவே 'பூலோக ரம்பை'யில் நடித்துவிட்டார்.

ரம்பை எக்கெந்தெக் கதைகளில் வருகிறாளோ, அக்கதையிலே வஸந்தாவை போட்டால் நன்றாக இருக்கும் என்று பலர் எண்ணினர். எவ்வளவோ படங்களில் 'ரம்பை' வேஷமணிந்திருக்கிறார்கள் பலர். ஆனால் இந்த வேஷத்திலே ஸ்ரீமதி வஸந்தா பிரகாசித்த மாதிரி வேறு யாரும் பிரகாசித்ததில்லை.

இந்தப் படத்திலே கச்சிதமாகப் பேசி நடித்துப் பாடினார். நக்ஷத்திர உலகில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தாரகையாக விளங்கினார். இதற்குப் பிறகு 'பரசுராமர்' படத்திலே நடித்தார். சரியான வேஷமாக அமையவில்லை என்றாலும், அவ்வளவு மோசமாகப்போய் விடவில்லை.

'பர்மாராணி'யில் வஸந்தாவும் சுந்தரமும்.

'மதனகாம ராஜனில்' வஸந்தாவும் கமல குமாரியும்.

சிருங்கார ரஸ நடிப்பிலே சிறந்து விளங்கக்கூடிய சில நடிகைகளில் வஸந்தாவும் ஒருவர். சிருங்கார ரஸ நடிப்பிலே, நடித்துப் பெயர்வாங்குவது சிரமமான காரியம். இதேபோலத்தான் சோக ரஸ நடிப்பும்.

ஸ்ரீமதி வஸந்தா மேற்கண்ட படங்களில் நடித்த பிறகு ஜெமினி ஸ்டுடியோவிலே ஸிரந்தரமாக ஒப்பந்தம் செய்துகொள்ளப் பட்டார். ரம்பையின்காதல். பூலோகரம்பை போன்ற கிராமியக் கதைகளில் நடித்து புகழ் பெற்ற ஸ்ரீமதி வஸந்தாவுக்கு ஜெமினியிலே கிடைத்த மற்றொரு கிராமியக் கதைப் படம்தான் 'மதனகாமராஜன்.'

மதனகாமராஜனிலே வஸந்தா, எளிதில் நல்ல பெயரை அடைந்துவிட்டார். சில பாட்டுகளையும் நன்றாகப் பாடிவிட்டார். அவர் பூமாலையோடு கற்சிலைபோல் கோயிலில் நின்றகாட்சி ரஸிகர்களை கரகோஷிக்கச் செய்துவிட்டது. மந்திரி குமாரனோடு பேசும்போது 'இன்னொரு கதையா!', என்று பயந்த சுபாவத்துடன் கேட்டபோது, 'சபாஷ்' என்று சொல்லாதவர்களே இல்லையெனலாம்.

'பர்மா ராணியில்' வஸந்தாவும் சுந்தரமும்.

இப்படத்தின் மூலம் வஸந்தா, சோகரஸ நடிப்பிலும் சிறந்து விளங்குவார் என தெரியவந்தது. ஜெமினியிலிருந்த போது இவரைக் கொண்டு 'சந்திரலேகா' தயாரிப்பதாக இருந்தது. தவிர, ஞானசௌந்தரியைத் தெலுங்கில் எடுப்பதாகவும் இருந்தது. இதற்காக ஸ்ரீமதி வஸந்தா தெலுங்கையும் கற்றுக்கொண்டார். சுமார் மூன்று வருஷ காலம் ஜெமினி ஸ்டுடியோவின் ஒப்பந்தத்திலேயே இருந்தார். 'மதனகாமராஜ'னுக்குப் பிறகு ஒரு படமும் இவரைக் கொண்டு தயாரிக்கப்படவில்லை.

படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் போதே விவாகம் ஆயிற்று. சென்னையிலேயே ஒரு பங்களாவைக் கட்டிக் கொண்டு தடபுடலாய் ஒரு கிரகப்பிரவேசமும் நடத்தினார்.

இதன் பிறகு ஜெமினியிலிருந்து விலகி, தனிப்பட்ட படமுதலாளிகளின் படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டார்.

பாஸ்கர் பிக்சர்ஸ் தயாரித்த 'சாலிவாஹன்' படத்தில் குறும்புக்காரியாக வந்தார். கபடமற்ற குணத்தையுடையவள் எப்படியிருப்பாள் என்பதை வடநாட்டு நடிகைபோல் நடித்துக் காட்டினாரென்றாலும், உடை விஷயம் சிறிது மோசமாக இருந்ததால், ரசிகர்களின் கோபத்துக்கு ஆளானார்.

இப்படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் போதுதான் ஸ்ரீ டி. ஆர். சுந்தரம் அவர்கள், தமது ஸ்டுடியோவின் பிரசாரப் படமான 'பர்மா ராணி'க்கு வஸந்தாவை ஒப்பந்தம் செய்துகொண்டார்.

முன்பு ஜெமினியிலிருந்தபொழுதே ஸ்ரீமதி வஸந்தாவுக்கு பாமாக்காரி உடை போட்டால் எப்படி இருக்கும் ஒரு வேஷப் பரீக்ஷை நடந்து, அவரின் பர்மாக்காரி வேஷப் படம் 'ஆனந்த விகடன்' மலரில் வெளிவந்தது.



'ராஜராஜேஸ்வரி'யில் ஹொன்னப்பாவுடன் வஸந்தா.

இதையும் ஸ்ரீ டி.ஆர்.எஸ், கவனித்திருக்கவேண்டும் என்றே தோன்றுகிறது. இல்லாவிட்டால்'பர்மாராணி'க்கு எவ்வளவோ நடிகைகள் இருக்க வஸந்தாவை அழைப்பானேன்!

'பர்மா ராணி'யில் வஸந்தாவின் வேஷப் பொருத்தம் பலே ஜோராக இருந்தது. சிரமப்பட்டே நடித்திருக்கிறார். பாடல்கள் அவ்வளவாக எடுபடவில்லை. இது ஒரு பிரசாரப் படமானதால் கிராமிய மக்கள் அவ்வளவு ரசிக்கவில்லை.

மாடர்ன் தியேட்டர்ஸின் ஒப்பந்தத்தில் இருந்தபோதுதான், காலஞ்சென்ற வி. வி. ராமனுல் தயாரிக்கப்பட்ட 'பக்த ஹநுமானுக்கு' ஒப்பந்தம் செய்யப்பட்டார். படம் வெளியாயிற்று. சீதையாகத் தோன்றினுர் வஸந்தா. அவ்வளவுதான்.

மாடர்ன் தியேட்டர்ஸின் 'பர்மா ராணி'க்குப்பிறகு வஸந்தா, அவர்களே தயாரித்த 'ராஜராஜேஸ்வரியில்' தோன்றினுர். முன்பே நான் சொன்னபடி வஸந்தாவுக்கு, சிருங்கார ரஸ நடிப்பை விட,இதில் சோகரஸ நடிப்புக் கொடுக்கப்பட்டது. சில இடங்களில் 'கண்ணகி'யை நினைவூட்டினுலும் வஸந்தா, சிறந்த நடிகை கண்ணும்பாவுக்கு இணையாக நடித்துவிட்டார். அவர் கண்களில் நீருடன், நா தழுதழுக்க நடித்தது மனதை உருக்குவதாக அமைந்திருந்தது. இதற்குப் பிறகு 'சுபத்ரா'வில் நடித்தார். செவிக்கினிமையாகப் பாடினுர். நடிப்பு அவ்வளவு சுகமில்லை.

'ராஜ ராஜேஸ்வரி'யில் வஸந்தா.

'சுபத்ரா'வுக்குப் பிறகு வஸந்தா நடித்து வெளிவந்தது 'சித்ரா' என்ற சமூகப் படமாகும். இந்தப் படத்தில் வஸந்தாவின் வேஷப் பொருத்தமும் நடிப்பும் பரவாயில்லை. இவரைக் கொண்டு சமூகப் படங்கள் தயாரித்தால் எவ்வளவோ நன்ருக இருக்கும் என்ற எண்ணமே உதித்தது. புராணப் படங்களை விட சமூகப் படத்தில்

'சுலோசன'வில் வஸந்தா.

'ராஜ ராஜேஸ்வரி'யில் ஒரு காட்சி.

வஸந்தாவுக்கு வேஷப் பொருத்தம் நன்கு இருந்தது.

'சித்ரா' முடிந்ததும், இவர் 'குண்டலகேசி'யில் நடித்தார். வஸந்தா நடித்து கடைசியாக வெளிவந்தது கணபதி பிக்சர்ஸ் தயாரித்த 'சுலோசன'வேயாகும். இதிலே இவர், டைரக்டர் ஸ்ரீ டி.ஆர்.எஸ். ஸுடன் நடித்திருக்கிறுர். உடை விஷயம் தான் இவரது நக்ஷத்திர மதிப்பை பாதித்தது. இந்திரஜித்தின் சரம் அறுந்து விழுந்தவுடன், இவர் அலறித் துடித்து நல்ல பெயரை சம்பாதித்துக்கொண்டார். படத்தில் இந்த ஒரு அம்சம்தான் நன்ருக இருக்க வேண்டும்.

இக்கட்டத்தில் நன்ருக நடித்துவிட்டார். வஸந்தாவுக்கு ரசிகர்களின் ஆதரவு நிறைய இருக்கிறது. ஆனுல் அவரது உடை விஷயத்தில் ஏற்பட்ட ரசிகர்களது 'கோபம்'தான் அவரது புகழுக்கு சிறிது பங்கம் விளைவித்தது எனலாம்.

ஸ்ரீமதி வஸந்தா, சமீபகாலமாக படத் தொழிலில் பிரவேசிக்காது இருக்கிறதினுல், அவருக்கு நக்ஷத்திர மதிப்பு போய்விட்டது என்று அர்த்தமல்ல!

இன்றுகூட ஸ்ரீமதி வஸந்தா 'ஒரு நடிகை' என்ற ஸ்தானத்தில் நடிக்க வருவாராஞல், அவர் வெற்றி பெறுவது நிச்சயம். இதுமட்டுமல்ல. ரசிகர்கள், அவருக்கு ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறுர்கள் என்பதும் எனக்கு வரும் கடிதங்களிலிருந்து தெரிகிறது.

ரசிகர்கள் அபிலாஷைகளை உணர்ந்து ஸ்ரீமதி வஸந்தா நடிக்க முன் வருவாரென்று நினைக்கிறேன்.

—"மைனு"

'சித்ரா'வில் வஸந்தாவும் பாலையாவும்.

முடிவு

'சுகி'

கதை நன்றாக இருக்கிறது. முடிவு சுகமில்லை."

"நாடகம் நல்ல ஓட்டம்; இருந்தாலும் கடைசி கட்டம் ரொம்ப மட்டம்."

"முடிவு நல்லாயில்லை. வேறு மாதிரி இருக்கவேண்டும்."

சினிமா, நாடகம் பார்த்துவிட்டு வரும்போதும், கதை, நாவல், கட்டுரை படிக்கும்போதும் சரி, ரசிகர்களுக்குள் முடிவு—ஒரு முடிவற்ற பிரச்னையாக எழுகிறது கடவுள் தத்துவம் போன்று.

இலக்கியத்தை அனுபவிக்க ஆரம்பிக்கும் முன்பாக, பல வேறு துறைகளிலுள்ள முடிவுகள் நம் தலையில் ஒவ்வொரு பருவத்திலும் விழுந்து கொண்டிருக்கின்றன. பரீட்சை முடிவு, பெண் தேர்ச்சி படலம், உத்தியோக வேட்டை முடிவு, உத்தியோக ஓய்வு முடிவு, இப்படித் தனிமனிதன் வாழ்விலும் சரி; சண்டை, ஏற்றுமதி, இறக்குமதி, நாணயமாற்றம் என சமூகவாழ்விலும் சரி, முடிவுகள் வளையம் வளையமாகத் தொட்ட குறை விட்ட குறை சங்கிலி போல பிணைகின்றன. ஒரு முடிவுக்கும் வராமல் நாம் வளைய வளைய வருகிறோம்.

நோயாளியின் (வியாதி) முடிவை எதிர்பார்க்க ஆரம்பிக்கும் முன்னதாகவே, டாக்டர் பில்லின் முடிவை நோயாளி எதிர்பார்க்கிறான். புள்ளி விபர நிபுணர்கள்—ஜனன மரண விகிதாசார முடிவையும், தளகர்த்த சேனாபதிகள் யுத்த முடிவையும், ராஜதந்திரிகள் சமாதான முடிவையும், பணக்காரன் செல்வ போகத்தின் முடிவையும் தொடுவானமாக பார்க்கிறார்கள். ஒரு விஷயத்தின் முடிவு, மறு விஷயத்திற்கு ஜனன காலம்.

கலியாணத்தின் முடிவு—கஷ்டத்தின் அறிகுறியாகப் பிறக்கும் சூர்யோதயம். தாரத்தின் சாவு—மறு தாரத்தின் வருகைக்கு அறிகுறி. கணவனின் மறைவு—அனாதைக் குழந்தைகளின் முடிவைத் தெரியப் பிறக்கும் சங்கொலி. உதவி-ஆசிரியனுடைய மனக்கசப்பின் முடிவு—மறு பத்திரிகையின் ஜனனம். கீழ்க் கோர்ட்டில் செலவுடன் தள்ளுபடியாகும் வியாஜ்யம்—மேல் கோர்ட்டில் செலவுடன் ஆரம்பமாகும் அப்பீல். வியாதிஸ்தன் முடிவு—இன்னொரு ஆரோக்கிய கர்த்தாவின் ஆஸ்பத்திரி பிரவேசம். ஆகவே முடிவு அகண்டமானது. ஆழமானது. உயர அகலத்திற்கும் எட்டாத விஸ்வரூபம் கொண்டது. ஒவ்வொரு காரியத்திலும் முடிவு இல்லை. முடிவுதான் பிறப்பின் தாயகம். இந்த உண்மையை முடிவுரைக்கு வரமுடியாமல் தயங்கும் பிரசங்கியாரைப் பார்க்கும்போது நாம் அனுபவிக்கிறோம்.

"அன்பர்களே, மெய் நேசர்களே, நான் நாலு வார்த்தை பேசி, என் சிற்றுரையை முடித்துக்கொள்ளப் போகிறேன்..."

நாலே வரியில் முடிக்க ஆரம்பித்... நெல் வாடை, புற நானூறு, அகநானூறு முறையே 40, 50, 60 என அடுக்கிக்கொண்டு போய், அப்படியாவது முடிப்பாரா?

"முடிவாக நான் சொல்வது எம்பெருமான் திருவடி நிழலை நாம் அடைய வேண்டும். வேண்டும் வேண்டுமெனச் சொல்லுங்காலத்து திருவடி நிழலை பற்றி சேக்கிழார் பெருமானும், திருமங்கை மன்னரும் கொண்ட கருத்துக்கள்..."

அப்படியே திருவாசகம் திவ்ய பிரபந்தம் இரண்டுக்குள்ளும் அவர் போய் ஒளிந்துகொள்வார். ஒளிந்து கொண்டால் மரத்துள் மறைந்த மாமத யானையாகவோ மரத்தை மறைத்த மாமத யானையாகவோ விஷயம் தெளிவாகிவிடும். அரை மணி, முக்கால் மணி சென்ற பின் முடிவுரைக்கு வருவார். வருவாராவது? மீண்டும் கச்சி புராணம், கந்த புராணம் போய் சுய புராணம் பாட ஆரம்பிப்பார். இதனால் பிரசங்கியை நாம் குறை கூற வேண்டியதில்லை. அவருக்கு முடித்து விட ஆசை. முடிவுக்கு வரமுடியாமல், கரை தெரியாத கப்பல் போல் தத்தளிக்கிறார்.

பிரசங்கியின் முதுகுக்கு மண் காட்டும் கண் கட்டி வித்தைக்காரன் ஒரு விஷபத்தையும் முடிக்காமல் வித்தைக்கு வித்தை தாவுவது அவனது வித்தை. பிரேதம் போல் படுத்துக் கிடக்கும் மனிதனை ஆறடி உயரம் அந்தரத்தில் நிறுத்துவதாகச் சொல்வான். வாயில் ஈ புகுந்தது தெரியாமல் திகைத்து ஆறடி உயரத்தில் எதிர் பார்த்து கூட்டம் நிற்கும்போது, தேளும் பாம்பும், அல்லது கீரியும் பாம்பும் விளையாட விட்டு, வேறு விஷயத்துக்குத் தாவிவிடுவான். மண்டையோட்டில் நமது புத்தியைக் இறங்க வைத்து விஷக்கடி மருந்து, வீர்ய லேகியம், பல்பொடி, என்னென்னவோ மருந்துவிற்பனைக்குள் இறங்கிவிடுவான். ஆறடி உயரம் வரவேண்டிய சடலம் தரையோடு கிடக்கும். முடிவுரைக்கு வராமலேயே அவன் தப்பிப் பிழைப்பது தொழில்.

ஃஃஃ

முடிவையே பிழைப்பாகக் கொண்டவர்கள் எழுத்தாளர்கள். எப்படி ஆரம்பம் செய்கிறது என்ற பிரச்னையை உதய சூரியன் கரம் பட்ட உஷா தேவிக்கு ஒப்பிடலாம். முடிவோ மாயா நாடகம் நடத்தும் அந்திக் கன்னியின் அழகு மயக்கம் கொண்டது. முடிவுக்குப் பெருமை உண்டென்பது கவிஞர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள் முதலானோர் சாவிலிருந்து பிறக்கின்ற உண்மை. பிறக்கும்போது யாரென உலகம் தெரியாத பிரகிருதியை, முடிவு நெருங்கும் போதுதான் உலகம் உணர ஆரம்பிக்கிறது. காந்தி பிறந்த போதும், நாம் பிறந்த போதும் உலகம் தெரிந்து கொண்டதும் ஒன்றுதான். ஆத்மாவுக்கு அஸ்தமனம் நெருங்குகிற போது தான் உலகமே கண் விழிக்கிறது. முடிவின் பெருமையை அந்நாளில் ... அகப்பட்டுக்கொண்ட கதாபாத்திரங்களுக்கு பிள்ளைப் பேறு நிச்சயம். அவர்கள் படுகிற ஹிம்சைகள் வித விதமாக இருந்தாலும் அவர்களுக்கு ஏற்படுகிற முடிவு? சுபம்! சுபம்!! சுபம்!!! பெத்துப் பெருகி பத்தும் நிறைந்த வாழ்வில் இருந்ததாக எழுதுவார்கள். ஆனால் தற்காலக் கதைகள் பிரம்ம முடிவு போல கோரமும் கொடூரமும், இன்பமும் துன்பமும், புதுமையும் புதிரும் நிறைந்தவையாக இருக்கின்றன.

இதிகாச புராண ஆசிரியர்களுக்கு, தமது கதாபாத்திரங்களின் வம்ச விருத்தியில் கண். புத்தென்னும் நரகை தாங்கள் எட்டிப் பார்க்க ஆசைப்படாதது போலவே, தங்களுடைய பாத்திரங்களையும் அவ்விடம் ஒதுங்க இடங்கொடுக்காத இளகிய சுபாவமுடையவர்கள். இன்றைய நவீன காலத்திய ஆசிரியர்கள், வக்கிர புத்தியுடையவர்கள். பிள்ளைப்பேறில் அவநம்பிக்கை பிடித்தவர்கள். அநேகமாக கலியாணம் ஆயிற்று என முடித்து விடுவார்கள். அத்தோடு முடிகிற கதையமைப்பே சரியான முடிவு என்பது இவர்கள் கூற்று. பிள்ளை பிறக்கலாம், மலடாகவும் இருக்கலாம் என்பது எழுத்தாளர்கள் துணிபு ஆனால் புரட்சி நிறைந்த எழுத்தாளர்களின் சொல்லோவியங்களின் மூலம் முடிவில் கலியாணமா, காடையத்தா, இல்லை தம்பதிகள் விவாக ரத்து செய்துகொண்டார்களா, என ஒரு (இழவையும்) முடிவையும் கொடுக்காமல் குறை மாசக் குழந்தைபோல நம் கையில் முடிவைத் தூக்கி கொடுத்து விட்டு ஆசிரியர்கள் தலை மறைவாய் நின்று சிரிப்பார்கள்.

சரியான முடிவுக்கு வரமுடியாத ஆசிரியன், சற்றும் சிரமப்படாமல் ஒரு புதிரோடு கதையை முடித்துவிடுகிறது இன்றைய தமிழ்வசன இலக்கியத்தில் ஒரு தொற்றுநோய். நாமோ மண்டையை உடைத்துக்கொண்டு என்ன நடந்திருக்கலாம் என மனக் கோட்டை கட்டுகிறோம். இந்தக் கோட்டையின் அஸ்திவாரம், நீள அகல கட்டுக்கோப்பு விஸ்தாரங்கள், வாசகர்களின் இலக்கிய ரஸமட்டத்தின் அறிவு, விலாசத்தைப் பொறுத்து சிறிதும் பெரிதுமாக இருக்கும். சிறுகதை எழுத்தாளர்களில் 99 சதவிகிதம், இந்தமாதிரி முடிவுகளை ஒப்புக் கொண்டு விட்டார்கள். ஆனால் கொஞ்சகாலத்திற்கு (பத்து வருஷத்திற்கு முன்) கிணறு, ஆறு, குளம், சமுத்திரம் இவைகளுக்குள் அமுக்கிக் கொல்வது இலக்கிய (லெ)க(ா)லையாக இருந்தது. நாகரிக வளர்ச்சியின் காரணமாக தண்ணீரில் தள்ளிக் கொல்லாமல், கண்ணீரில் நனைத்துக் கொல்லுகிறார்கள்.

"தழுதழுத்த குரலில் விம்மினாள், கண்ணில் நீர் ததும்பி நின்றது."

"ஆ அன்பே! என் இதய ... பாபச் சேற்றை குளிப்பாட்டித் துடை."

"சாரல் காலத்துப் பனித்துளி போல அரும்பி நின்ற கண்ணீர்த் துளிகளைத் துடைத்தான் அவன்"

"துன்பக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறிற்று. உவகை ஊற்றிலிருந்து பிறந்த கண்ணீர், பெருமூச்சுக்குள் குமிழியிட்டு விழிக்கடையில் முத்துக்களாய் அரும்பின."

"கண்ணீர் ததும்ப நின்ற முக ஒளி, மங்கிய நிலவை நினைப்பூட்டியது."

திரும்பத் திரும்ப தண்ணீரிலிருந்து கண்ணீருக்கும், கண்ணீரிலிருந்து தண்ணீருக்கும் பாத்திரங்களை நனைத்தெடுத்துச் சாயந்தோய்ப்பதே சிறுகதை முடிவென எல்லோரும் ஒப்புக் கொண்டுவிட்டார்கள். இதைக் கண்ட இளம் எழுத்தாளர்கள் கண்ணீரும் கம்பலையுமாக பாத்திரங்களை நட்டாற்றில் விடுவதே பேரும் புகழும் பெற வழியெனக் கண்டார்கள். அடிக்கடி கண்ணீரை வரிக்கொருதரம் வடிக்க ஆரம்பித்தார்கள். கதைப்போக்கை விட, கண்ணீர் பெருக்கின் நீர்மட்ட விபரமே ரொம்ப அதிகமாயிற்று.

ஃஃஃ

துப்பறியும் கதைகளில் நடைபெற்ற தந்திரங்களைச் சுருக்கிக் கூறி, காணமற் போன பொருள்களை கண்டுபிடித்து கலியாணம் நடத்திவைப்பது முன்னால் சம்பிரதாயம்.

நான் எழுதப்போகும் துப்பறியும் கதையில் கலியாணம் முடிவன்று. அதுதான் (இரண்டாவது பாகத்தின்) ஆரம்பம்.

கைகோர்த்துக்கொண்டு வாழ்க்கைச் சாலையில் பிரயாணம் செய்தார்கள். அப்போது அமிர்தகலசமாக வானிலே மிதந்த இன்ப நிலவும், இன்னிசை அதனுள் உள்ள மதுவாகவும் கண்ணில் பட்டன. நுண்ணிய வேலைப் பாடமைந்த தந்தப் பேழையொன்றை அவ்வேளை கதாபோக்கிரி (வில்லன்) கொடுத்தான்.

நாயக - நாயகி அதை ஏற்றுக் கொண்டனர். அப்பேழைக்குள் விஷம் இருந்ததா? இல்லை, விஷப் பாம்பு இருந்ததா? ரத்னஹாரம் இருந்ததா? அப்பேழைக்குள் இருந்த பரிசுகள் இரண்டு. ஒன்று அநாதைக் குழந்தை—ஊமையுங்கூட

நாவலை இப்படி முடித்துவிடுவேனா? மீண்டும் வாசகர்கள் மனக் கோட்டை கட்டி அநாதைக் குழந்தையின் பூர்வோத்திரத்தை ஆராய ஆரம்பிப்பார்கள். வாசகர்களுக்கு சிரமம் கொடுக்காமல் நானே முடிவையும் சொல்லுவேன். முடிவே கலையாகக்

அக்குழந்தையின் அருகே கூர்ந்து பாருங்கள். செவ்விய நிறங்கொண்ட ஓர் பொட்டலம. அதைப் பிரிக்கிருர்கள் ஆவலோடு. கதாநாயகி விடும் கொஞ்சொலியும், கதாநாயகன் விடும் பெருமூச்சும் இணைந்து இரு குரலிசை போல் ஒலித்தன. அவை என்ன? ஏன் இப்படி முகத்தைச் சுழிக்கிருர்கள்?

ஆம் அவை கர்ப்பத்தடை மருந்துகள்.

இத்தோடு நாவலை முடித்துவிடுவேணு? இரண்டு வார்த்தை சொல்லி முடிக்க நினைத்த பிரசங்கிபோல மேலும் மேலும் முற்றும் வளர்ந்து படர ஆரம்பிக்கும்.

அநாதைக் குழந்தையை ஒரு கண்ணுலும், கர்ப்பத்தடை மருந்தை வேறு கண்ணுலும் பார்த்த நாயக—நாயகி இருவரும் பரவசம் ஆனுர்கள். தங்களுக்கு குழந்தை பிறக்காது என்ற சந்தோஷத்தில், ஆனந்த களிப்பில் சிரிக்கச் சிரிக்க அவர்கள் இதயம் இன்ப வாணமாக வெடித்தன. அந்தோ பரிதாபம்!

அந்தக் கதா படுக்காளி (வில்லன்) ஒரு கரத்தில் அநாதைக் குழந்தையையும், மறு கரத்தில் கர்ப்பத்தடை மருந்துகளையும் எடுத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

விடிந்தது?

மேற்படி நாவலின் முடிவுகள் முழுவதையும் நான் இங்கேயே எழுதி, இடத்தை வீணுக்கவில்லை. இன்னெரு துப்பறியும் நாவலில் என் முடிவு நூதனமானது.

துப்பறியும் தூக்கித்தூக்கி சன்மானத் தொகையை எதிர்பார்த்து இருந்த வேளை இளைய பள்ளம் ஜமீந்தார் (ஜமீன் தடைமசோதா நிறைவேறுவதை எதிர்பார்த்திருந்தவர்) தாம் வாக்களித்த சன்மானம் கொடுக்க முடியாதென சொல்லிவிட்டார். துப்பறிந்தவர், "ஜமீந்தாரே உம்மைக் கோர்ட்டில் சந்திப்பேனுகவும்" என வன்மம் கூறி நகர்ந்தார்.

ஃஃஃ

டாக்டர், மளிகை வியாபாரி, ஜவுளி வியாபாரி முதலான தொழிலாளிகள் 'பில்' போடுவது போல, துப்பறிபவனும் ஏன் 'பில்' போடக்கூடாது? அதுதான் கதையுலகத்திற்கு நூதனமும் நியாயமும் ஆகும். துப்பறியும் தூக்குத்தூக்கி போட்டிருந்த 'பில்' சென்னை சட்டசபை பட்ஜெட்டைவிட பிரமாண்டமாகவும் குளறுபடி நிறைந்ததாகவும் இருந்ததால், அதைப் பார்த்த பிராசிகூஷன் வக்கீல் மயக்கமடைந்து மரணமடைந்தார். இதனுல் நான்கு பேர் சந்தேகத்தின்மேல் கைதியாயினர். அதைப் பரிசீலனை செய்ய வந்த ரகஸிய போலீஸார் பகிரங்கமாக மரணமடைய, போலீஸ் இலாகாவில் மரண விகிதம் நாளுக்கு நாள் அதிகமாயிற்று. சந்தேகப்பட்டு கைதியானவர்கள் தொகையும் விஷமாக ஏறியது. மேற்படி துப்பறியும் தூக்கித்தூக்கியின் 'பில்'லின். 000012 பகுதிகளை மட்டும் இவ்விடம் வெளியிட்டுள்ளேன்:

ரூ. அ. பை.

1. (அ) யோசனை கலைந்து போகாமல் இருக்க குடித்த சிகரெட் விலை... 10 9 0

போட்ட புகையிலை விலை 9 10 0

9. (ஈ) சம்பவங்களை 33-ம் அத்தியாயத்தில் நடந்ததை 3-ம் அத்தியாயத்துடன் சேர்த்து பார்க்க சிந்தனைத் தொடர் 1003 அடி நீளம். அடிக்கு 8 தம்படி வீதம்... 20 14 8

11. (ஒ) சாய்வு நாற்காலியில் சாய்ந்து யோசிக்கலாமா வேண்டாமா என உலாவியபடியே யோசித்த மணி 70, நிமிஷம் 10-க்கு நிமிஷத்துக்கு ஒரு தம்படி வீதம்... 2 3 6

18. (இ) வெளியூர் பிரயாணம் தவருன ரயிலில் சென்றதும் மும்முறை டிக்கட் எடுக்க அவகாசம் கொடுக்காமல் கதாபோக்கிரி டிமிக்கி கொடுத்தாலும்... அபராதம் உள்பட ரயில் சார்ஜ்... 103 7 0

ரயிலில் சோடா கலர்... 0 10 3

21. (ஃ) குதிரைவண்டி, லாயம், வைக்கோல் படப்பு, 13-ம் அத்தியாயத்தில் கொளுத்திய செலவு 7006 9 0

22. (அ) மேற்படி காரியத்துக்கு ஒத்தாசையாக நெருப்புப் பெட்டி ஒன்று... 0 0 6

25. (ஏ) துப்புத் துலக்க உதவிசெய்த 326 நபர்கள், (மோட்டார் கண்டக்டர், பிச்சைக்காரர்கள், பாங்கர்கள்) பெற்ற இனும் தொகையும், காப்பிச் செலவும்... 1036 0 3

30. (அ) மாறுவேஷச் செலவு 0 3 3

50 (ஐ) சம்பளம் 3 மாதம் 30 நாளுக்கு மாதம் 25 ரூ. வீதம் ... 99 4 3

இந்தப் 'பில்' மட்டுமே 500 பக்கத்தில் துப்பறியும் தூக்குத்தூக்கி எழுதியிருந்ததால், அதைப் பார்த்த வக்கீல்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், நியாயாதிபதிகள், சோகத்திலோ, ஆச்சரியத்திலோ செத்தார்கள். சாகாமல் என்ன செய்வார்கள்? துப்பறியும் கதைகளில் இதுபோல் விதவிதமான முடிவுகளைக் கொடுத்தால் எத்துணை மர்மமாக இருக்கும்?

ஃஃஃ

நேற்றுவரை வெளிவந்த அத்தனை நாவல்கள், சிறுகதைகளெல்லாம் ஒரு சில கதைகளில் பல்வேறு முடிவுகள் என்றே சொல்லவேண்டும். இன்னும் வெவ்வேறு முடிவுகள் தோன்றும் வரை எழுத்தாளர்கள் எழுதிக்கொண்டே போவார்கள். இருப்பினும் 'சடார்' என்று மென்னியைத் திருகிவிடும் முடிவுகளைக் கட்டுரைகளில்தான் பார்க்கிருேம். கட்டுரையாளர்கள், மோட்டார் விபத்துப் போல மோதி முடித்துவிட லைசென்ஸ் பெற்றிருக்கிருர்கள். இவர்கள் யோகசாலிகள். ஆனுல் நாவல், சிறுகதை, நாடகம் சினிமா இவைகளின் முடிவு ஒரு முடிவற்ற பிரச்னை. அபிப்பிராயபேதத்திற்கு இடம் கொடுத்துக்கொண்டே வரும் பச்சோந்தி போல.

பிறப்புக்கு முடிவு இறப்பு என நாமெல்லாம் அறிந்துவிட்டோம். இதை ஒவ்வொருவரும் பிறந்த பின்புதான் அறிகிருேம். இந்த ரஸமற்ற காரியத்தை சதா செய்துகொண்டு அலகிலா விளையாட்டு விளையாடும் ஈசன் அலுத்துப் போய் இறப்பற்ற ஒரு முடிவுக்கு வந்தால்? ஆஹா! அது மகா பயங்கரமான முடிவாக இருக்குமா. இல்லை. அதி ஆச்சரியமான முடிவாக இருக்குமா? நான் நாவலுக்கு கொடுத்த முடிவைப் போல கடவுள் நம்முடைய பிறப்புக்கு முடிவைக் கொடுக்க ஆரம்பித்தால்? அடடா... எவ்வளவு வேடிக்கையாக இருக்கும். பிறப்புக்கு முடிவு சாவு என அலுக்காதபடி—கடவுள் செய்துவருவதால் அவனை நாம் ரஸனையற்ற—பேர்வழியென சிறு கதையில் கண்ணீர் சிந்திய கதையாக-வரவேறகிருேம்!

ஆயுளின் முடிவாக, சாவு இருப்பதை அறிந்தாலும் அந்த பிரச்னையைத் தீர்க்க மனுஷன் போடுகிற வேஷங்களும், ஜாலங்களும் விதவிதமானவை. கண்ணீரை முற்றுப் புள்ளியாக வைக்கு முன்பு எத்தனை எத்தனையோ இதயத் துடிப்புகளை, யோக சித்திரங்களை இதயச் சிதறல்களை எழுப்பிவிடுவது போல் வாழ்க்கையில் ரம்மியமும் ரணகளமும்... போருக்குப் பின் ஒப்பந்தம் போல முக்கியத்துவம் அடைகின்றன.

கையெழுத்திட்ட ஒப்பந்தங்களை மீறுவதே ராஜதந்திரம். அரசியல் அறிவுடைமையென ராஜ தந்திரிகள் செய்வதைப் போன்று, முடிவுகளை மாற்றுவதே, மீறுவதே எழுத்தாளர் கடமையென ஒப்புக்கொள்ளுகிற காலம் வந்தால்தான், எனது துப்பறியும் நாவல்களை வெளியிட முடியும்... நிற்க. (இன்னும் ஒரு வார்த்தையில் முடித்துவிடுகிறேன்.)

சரி. இக்கட்டுரைபற்றி உங்கள் முடிவு என்ன? இதுதான் சரியான முடிவா? இல்லை. இம்முடிவு நாவலுக்குப் போடுகின்ற 'தொடரும்' போன்ற முடிவுதானு?

முற்றும் முற்றிற்று!

ரூ. 100 இனும்

சித்த வசீகரண யந்திரம்:—நீ விரும்பும் ஒருவன், எத்தனை கல்நெஞ்சனுபினும் உனக்குக் கீழ்ப்படிவான். விலை: வெள்ளி கேஸ் ரூ. 3. செப்பு ரூ. 2. பொன் ரூ. 15.

லக்ஷ்மீ யந்திரம்:—இது வியாபாரம் உத்தியோகம், லாட்டரி, பரீக்ஷை, குஸ்தி, கடன் இவற்றில் வெற்றி தரும். அதிர்ஷ்டத்தைத் தரவல்லது. விலை: வெள்ளி கேஸ் ரூ. 3. செப்பு ரூ. 2. பொன் ரூ. 15. மந்திர யந்திரங்களில் நம்பிக்கையற்றேரும இதைப் பரீக்ஷிக்கலாம். வெற்றி இல்லையென்று ரூபித்தால் இனும் அளிக்கப்படும்.

SHRI GITA GOVIND KARYALAYA
23, P. O. RAJDHANWAR (HAZARIBAGH)

நவீன
பட்டு நூல்
ஜவுளி
ரகங்களுக்கு
மாருதி கிளாத்மார்ட்
22/6 ராஜவீதி ★ கோயமுத்தூர்

கட்டழகி தவமணி தேவி தன்
மேனியை மிருதுவாகவும் மென்மையாகவும்
வைத்திருக்க லக்ஸ் டாய்லட்
சோப்பைத்தான் நம்புகிருர்

அதிருபவதியான இந்த சினிமா நட்சத்திரத்தின் அழகு படுத்திக்கொள்ளும் முறை லக்ஸ் டாய்லட் சோப் தான். சருமத்தை சுத்தம் செய்து மிருதுவாக்க இச்சோப்பின் வெண்ணிறம் கொண்ட சுகந்த நுரை போல் வேறெதுவுமில்லை என்பது அவருக்குத் தெரியும். மென்மைவாய்ந்த பூரணப் பொலிவுள்ள மேனியை விரும்பும் எல்லோரையும் அவர் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து தவருமல் சுத்தம் செய்து கொள்ளும்படி உபதேசிக்கிருர்.

லக்ஸ் டாய்லட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!

LTS. 174-172 TM

ஓரே வெறி; வெறிக் கொள்ளை; வெறிப் புயல்.— வெறி கொண்ட நடுக்கடலின் படகு போல் அந்த ஊர் அமளி துமளிப் பட்டது.

புகைப்படலம் ஊரை வளைத்தது. அதனூடே அங்கங்கே தீ நாக்குகள் கொழுந்துவிட்டலைந்தன. மனிதர்கள் கூட்டங் கூட்டமாய் ஓடினார்கள்; ஒருவரை ஒருவர் அடித்தார்கள்; மிதித்தார்கள்; கொன்றார்கள்; இன்னும் தங்களுடைய வெறுக்கத் தக்க பயங்கரமான வெறிக்கு மற்றவர்களை உள்ளாக்கினார்கள்.

ஒரே கூச்சல்; ஒரே ஓலம்; ஒரே எக்காளமும், மரணத்தின் கடைசி ஒலிகளும்....

அங்கே மதவெறி தாண்டவமாடியது. அந்த வெறிக்குப் பலிகளமாகிய ஊர், தீயினால் சுடப்பட்டும், இரத்தத்தால் கறைபடப்பட்டும் நரகமாகிக்கொண்டு வந்தது. அந்த நரகத்தில், அகங்காரப் பேய் பிடித்தவர்கள் எமகிங்கரர்களாகத் தெருவில் அலைந்து கொண்டிருந்தனர். மற்றவர் ஓடியோ, ஒளிந்தோ, பதுங்கியோ உயிருக்கு உறைவிடம் தேடினர்.

அங்கே அப்போது இரண்டு மதங்கள்தான். கொலையாளிகளின் மதம்; கொல்லப்படுவோரின் மதம்.

வெறி கொண்டு தத்தளிக்கும் ஊரின் மத்தியில் நரேந்திரனும், ஒரு வெறியனாய்த் திரிந்தான். ஆனால் அவன் வெறியே வேறு. அதற்கும் மதத்திற்கும் கொஞ்சமும் சம்பந்தமில்லை.

✻

நரேந்திரனின் வெறி இன்றைக்கு உச்சநிலையை அடைந்துவிட்டது. ஊரில் நிகழ்ந்த காரியங்களைப் போல் ஆயிரம் மடங்கு அவன் உள்ளத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தன. அவனுடைய மதத்தைச் சேர்ந்தவர்கள், தாங்கள் செய்யும் 'புனித' காரியத்தில் தங்கள் மதத்தைக் காப்பாற்றப் பங்கெடுத்துக் கொள்ளும்படி அவனை வம்புக்கிழுத்தார்கள். அவன் கையில் ஒரு கட்டாரியை வற்புறுத்தித் திணித்தார்கள். அவன் அவர்கள் முன்பே அதை வீசி எறிந்தான். அவனுடைய சிரிப்பு மற்றவர்களுக்கு என்னவோ போல் இருந்தது. 'பையனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது' என்று விலகிச் சென்றார்கள்.

நரேந்திரன் தெருவழியே நடந்தான் வெறிகொண்ட நெஞ்சோடும், பசியெடுத்த கண்ணோடும் நடந்தான். ஆபத்துக்கள் நிறைந்திருந்த தெருக்களிலும் சந்துகளிலும் நடந்தான்.

சில சமயங்களில் ஒரு பேய்க் கூட்டமோ, அல்லது தனிப்பட்ட மனித மிருகமோ அவனை நோக்கி ஓடி வரும். சுயஉணர்வு பெற்று எப்படியோ தப்புவான். மீண்டும் அவன் நெஞ்சு வெறிகொண்ட நினைவுகளுடன் விளையாடத் தொடங்கும்.—இப்படியே அவன் அலைந்து திரிந்தான். பயங்கரமான பெருந்துன்பங்கள் அவனிடம் கண்ணாமூச்சி காட்டின.

முன்பே கூறினேன் அவன் வெறியன் என்று. ஆனால் அவன் வெறி வேறே! அப்போது அவன் ஹிந்துவுமல்ல; முஸ்லிமுமல்ல. மனிதன்! மனிதனிலும் இளைஞன்! காதல் நினைவுச் சுமையேறி, வெறியாய் மாறி, அவனை அலைக்கழித்த நிலைமையில் உள்ளவன். காதல் வெறியன்!

பசி கொண்ட கண்களால் எங்கும் பார்த்தான். எல்லாவிடங்களிலும் அலைந்தான். ஒரு வீட்டைத் தேடிப் பிடித்து அதற்குள் எதையோ தேடினான். வீடு குட்டிச் சுவராய்க் கிடந்தது. அச்சுவர்களின் அருகிலும் ஒருவரும் இல்லை. உயிருடன் இல்லாவிட்டாலும், உயிரற்ற உடல்களாவது இருக்கின்றனவா என்று கவனித்தான். பிணவாடை இல்லை. முனகலும், ஓலமும் இல்லை. அங்கு உயிருடனோ, உயிர் இல்லாமலோ ஒருவரும் இல்லை.

பின்பு புதிய புதிய பாதைகள் வழியாக நடந்து, ஒரு கல்லூரியின் முன்பு வந்து நின்றான். அது ஒரு பெண்கள் பள்ளிக்கூடம். பள்ளிக்கூடத்தை அடுத்த சிறிய பாதையில் ஒரு திருப்பம். அந்தத் திருப்பத்தில் நின்று சற்றுப் பெருமூச்சு விட்டான். "கதிஜா" என்று வாய் விட்டுக் கத்தினான். தலையில் கையை வைத்துக்கொண்டு அவ்விடத்திலேயே உட்கார்ந்துவிட்டான்.

✻

பள்ளிக்கூடத்தை அடுத்த அந்தத் திருப்பத்தின் மரத்தடிதான் அவன் காதல் பிறந்தவிடம்; அது வளர்ந்த இடம்; நேற்று வரை அது வாழ்ந்த இடம்.

நரேந்திரனுக்கு ஏதோ ஒரு ஆபீஸில் உத்தியோகம். அந்த ஆபீஸை விட்டு வேறு எங்கும் அதிகச் சம்பளம் கொடுத்தாலும், அவன் போகத் தயாரில்லை. மாலை நேரத்தில், பள்ளிக்கூடம் விடும் முன்பே அவனுடைய ஆபீஸ் மூடிவிடுவார்கள். அது ஒன்றுதான் அவனுக்குத் தேவையானது.— நேரே ஆபீஸ் மூடியவுடன், அறைக்கு வந்து வேற்றுடை தரித்துக்கொள்வான். சீவிய தலை கலையாமல், கையில் டென்னிஸ் 'பாட்'டுடன் புறப்பட்டுவிடுவான்.

அந்தப்பெண் கதீஜாவை, அவன் முதல் முறை பார்த்த போதே, உடனே மறந்துவிடவேண்டும் என்று தீர்மானம்செய்தான். மறந்து விடுமுன்பு இன்னும் ஒரு முறையாவது அவள் முகத்தைப் பார்க்கவேண்டுமென்று தோன்றியது! ஆனால் அந்த முகம் அவனால் மறக்கக்கூடியதாக இல்லை. பார்க்கப் பார்க்க அதன் இன்ப ரகசியங்கள் அவனை அதிகமாக மயக்கிக்கொண்டே வந்தன. ஆரம்பத்தில் கதிஜா, நரேனைக் கவனிக்கவில்லை. நாளடைவில் மரத்தோடு மரமாய் தினந்தோறும் நிற்கும் அந்த நாகரிக வாலிபன், அவள் கண்களில் படலானான். அதை அவள் சட்டைசெய்யவில்லை. இப்படியே ஒரு மாதம் சென்றது. அவளுக்கு அவன் போக்கு விசித்திரமாகவும் வெறுப்பாகவும் இருந்தது. முகத்தைச் சுளித்துக் கொண்டு வேறு பக்கம் திரும்பிப் போவாள். அவன் அப்போதும் அங்கு வரத் தவறுவதில்லை!

லீவு நாட்களில், அவள் வீட்டெதிரே அவனுடைய நடமாட்டம் தெரிந்தது. அடிக்கடி ஏதோ சுறுசுறுப்பாகப் போய்வருவது போல் பாவனை செய்தான். அவளுக்குக்கோபம் தாங்கவில்லை.

ஒருநாள் துணிவோடு மரத்தடியில் நிற்பவனைப் பார்த்து, "உங்களுக்கு தினம் இங்கென்ன வேலையாம்? யாரைப் பார்க்க வருகிறீர்கள்?" என்றாள் சிடுசிடுப்புடன்.

எங்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்

ராதா ஸில்க் எம்போரியம்
ஸன்னதி தெரு, மயிலாப்பூர்

ருக்மணி ஸில்க் எம்போரியம்

48-49, பெரிய தெரு, கும்பகோணம்

அசல் கொள்ளேகாலம் பட்டுச் சேலைகளுக்கும் சகல விதமான நூல் பட்டு ஜவுளிகளுக்கும் உத்திரவாதமான இடம்.

PROPRIETORS:
R. K. ராதாகிருஷ்ண செட்டியார் & பிரதர்

அவன், அவள் முகத்தை நன்ருக ஏறிட்டுப் பார்த்தான். அவன் கண்கள் சிரித்தன. "நான் யாருக்காகவோ வருகிறேன்! நீங்கள் வேண்டாம் என்ருல் வரவில்லை. உங்களுக்கு என்ஞல் எதாவது இடைஞ்சல் இருக்கிறதா? —என்ன இருந்தாலும் உங்கள் உத்தரவுக்கு நான் மகிழ்வோடு பணிகிறேன். சொல்லுங்கள்: நான் இனி இங்கு வரக்கூடாதா?"

"நான் அப்படிச் சொல்லவில்லை. நன்ருக வாருங்கள். ஆனல், நீங்கள் நினைப்பது நடவாத காரியம்."

"எனக்கும் தெரிகிறது; தெரிந்தும் ஏனே இந்தப் பைத்தியம்."

அவள் மௌனமாகச் சென்ருள். அதன் பிறகு, நாலைந்து தினங்களுக்கு அவனை, அந்தப் பக்கம் காணேம். இப்போதெல்லாம் அவள் கண்கள், அந்த மரத்தடியைப் பார்க்கத் தவறுவதில்லை. ஏனே அந்தப் பார்வையில் ஒரு ஏமாற்றம்!

லீவு நாள் ஒன்றில் மாடிச் சன்னலருகில் வெகு நேரம் பார்த்து உட்கார்ந்திருந்தாள். அவன் அந்தத் தெருவழியே போனன். அவனையும் மீறிக் கண்கள் மேலே நோக்கின.— இம்முறை ஏன் அப்படி அவள் விழுங்கிவிடுவது போல் நோக்குகிருள்? ஏன் அந்த வேதனைச் சிரிப்புச் சிரிக்கிருள்?

மறுநாள் மாலையிலிருந்து மறுபடியும் நரேந்திரன், மரத்தடி ஜவான் ஆனன்! இப்போது கதிஜாவின் தயங்கிய நடையும், புன்னகையும் அவனுக்கு தெவிட்டா விருந்தாக இருந்தன.

❁

நாட்கள் சென்றன.

ஒருநாள் தயக்கத்தோடு, "கதிஜா!" என்ருன். பெயர் எவ்விதமோ தெரிந்துவிட்டது அவனுக்கு. அவன் கண்கள் எதையோ அவனிடம் கெஞ்சின.

அவள் நின்ருள். கடுகடுத்த குரலில், "நீங்கள் இங்கு வருவதை நிறுத்தமாட்டீர்களா?" என்ருள்.

"முடியவில்லையே!"

"நினைக்கவே நினைக்காதீர்கள். நடக்காத ஒன்றும். வீண் பிரயத்தனம் இதெல்லாம்!"

"ஏன்?"

"நீங்கள் ஹிந்து; நான்....நான் வந்து முஸ்லிம்...."

"அதைத் தவிர, உன் நினைவில் ஏதும் வேறுபாடு உண்டா?"

"ஹ¬ம்!....பலனில்லாத பேச்சு! என் மனசை அறிந்து நடக்கப் போகிற காரியமா?"

"அதுதான் கதிஜா, எனக்கு வேண்டும். நான் ஹிந்துவுமல்ல; நீ முஸ்லிமுமல்ல....நான் இளைஞன், நீ யுவதி....இதுதான் என்னளவில் உண்மை!"

"ஊஹ¬ம்! நான் போகிறேன்; தயவு செய்து இனி இங்கே வராதீர்கள்—" அவள் கண்கள் கலங்கின.

"இதற்கு எதுவும் வழியே இல்லையா?"

கதிஜா தீர்மானமாக நரேனின் கண்களின் ஆழத்தை அளந்தாள்.

"வழியா? வழி.... நீங்கள் வந்து என் மதத்தவராக ஆனல்... ஒருவேளை உங்கள் நினைவு நிறைவேறலாம்."

அவன் மரத்தோடு மரமாய் நின்ருன். அவள் நடந்தாள்.

அதற்கடுத்த நாள்தான் அந்த ஊர், படுகளமாக மாறியது.

❁

நரேந்திரன் தலையில் வைத்த கையை எடுக்காமல், அந்த மரத்தடியிலேயே உட்கார்ந்திருந்தான். ஊர் இன்னும் புகைந்தது; இன்னும் அழுதது; இன்னும் ஓலமிட்டு அலறியது.

அவன் கால்களில், உடையில், கரங்களில் இரத்தக் கரை. பிணங்களைக் கண்டவிடமெல்லாம் நின்று நோக்கிவிட்டு வந்திருந்தான். குப்புறக் கிடந்தவைகளையும், குவியலாய் இருந்தவற்றையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். அவன் உடல் இப்போது நாற்றமெடுத்தது. இரத்த வாடை.

தலையைக் கவிழ்ந்தவன், தூரத்தில் குரல் கேட்டுத் தலைநிமிர்ந்

தான். இருந்த இடத்தை விட்டு எழுந்தான். உற்று நோக்கினன். சிறு கூட்டமொன்று, தனிப் பெண்ணெருத்தியைத் துரத்திக் கொண்டு வந்தது.

"சே! பெண்ணுக்குக் கொடுமையா? யாராயிருந்தாலும் சரி; அவளுக்கு உதவி செய்து உயிரை விடுவோம்!" என்று தயாராஞன்.

பெண் தீனக்குரல் கொடுத்துக் கொண்டே ஓடி வந்தாள். கூட்டம் ஹிந்துக்களுடையது. அவர்களில் சிலர், நரேனை அடையாளம் கண்டுகொண்டனர்.

"டேய், நரேன்! அவளைப் பிடி! விடாதே" என்று கத்தினர்.

அவர்கள் சொல்லுமுன்பே நரேன், அந்தப் பெண்ணின் கரத்தைப் பற்றிக்கொண்டான். ஆனல் அவளை அவர்களிடம் ஒப்புவிக்கவில்லை.

"உங்களுக்கு வெட்கமில்லை? தனிப் பெண்ணுக்கு இத்தனை பேர் யமனு? தங்கை, தாயார் உங்களுக்குக் கிடையாதா?— இவளை நான் விடமுடியாது!" என்று சீறினன் நரேன்.

கூட்டம் கர்ஜித்தது. எனினும் நரேன் பணியவில்லை. "இவளுக்காக நான் உங்களை எதிர்ப்பேன்; என்னை முதலில் பலி கொள்ளுங்கள்!" என்ருன்.

வந்தவர்கள் திரும்பினர்கள். இரக்கத்தோடு அந்த அபலைப் பெண்ணின் பக்கம் திரும்பினன் நரேன்.—என்ன! அவன் சித்தம் சுவாதீனமிழந்துவிடவில்லையே! அங்கே நடுங்கிக்கொண்டே நின்றது கதிஜாவா? ஆம். அவளே தான். அவள் கண்கள் எல்லையற்ற நன்றியின் இருப்பிடமாய் ஒளி செய்தன.

திடீரென்று என்ன நினைத்தானே நரேன், என்ன அதிசய மாறுதல் அவனிடம் ஏற்பட்டதோ, "எங்காயினும் ஓடி ஒளிந்து கொள். எங்கே போக வேண்டும் சொல்; நான் கொண்டு போய் விடுகிறேன்" என்ருன்.

"எங்கும் நான் போகவில்லை; இங்கே இந்த மரத்தடியில் உங்களுடன் இருக்கிறேன்."

இந்த வார்த்தைகளைக் கேட்டு, அவன் நிதானத்திற்கு வருவதற்குள், "ஓடுங்கள்;— போங்கள் ....உம், நிற்காதீர்கள்!" என அவன் தோளைப் பிடித்துத் தள்ளினள் கதிஜா.

புரியாமல் நரேன் விழித்தான். கதிஜா, தன் கல்லூரிப் பக்கம் கையைக் காட்டினள். முஸ்லிம்களின் கூட்டம் ஒன்று வெகு வேகமாய் நெருங்கிக்கொண்டிருந்தது.

நரேன் நிலை பெயரவில்லை; நிலைபெயர நேரமும் இல்லை. கதிஜாவின் சொற்கள் முடியும் நேரத்திற்குள் கூட்டம் நரேனை வளைத்துக்கொண்டது.

"நம்முடைய பெண்ணைத் தீண்டிவிட்டான் அயோக்கியன்!" என்று கத்தியை ஓங்கினன் ஒருவன். ஓங்கிய கத்தி, நரேனை நோக்கிப் பாய்ந்தது. ஆனல் நரேன், அதற்கு இலக்காகவில்லை. மின்னலெனக் கதிஜா குறுக்கே விரைந்து அதைத் தன் மார்பில் ஏற்றுக்கொண்டாள். இதனல் அவர்கள் சினம் கட்டுக்கடங்காமல் பொங்கியது. மறுகணத்துக் கத்தி வீச்சுக்கு நரேனும் பலியாஞன்.

கதிஜாவின் உடலும், நரேனின் உடலும் அவர்களுடைய காதல் பிறந்து வளர்ந்து, தழைத்த அந்த மரத்தடியில் ஒன்ருய்க் கிடந்தன. அவர்கள் இரத்தம் ஒன்று கலந்தது. ஹிந்துவின் ரத்தமும், முஸ்லிமின் ரத்தமும்! அந்தக் கலப்பிலே ஒரே சிவப்புதான் தெரிந்தது.

பையன்கள் விஷயம்

கழித்தல் கணக்கைப்பற்றி விவரமாகச் சொல்லிய பின்னர் உபாத்தியாயர் கிட்டுவைப் பார்த்து, "கிட்டு பனிரெண்டு பையன்கள் ஒரு பங்களாவிலுள்ள மாமரத்திலிருந்து மாங்காயைப் பறித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தனர். அப்போது தோட்டக்காரன் அவர்களைப் பார்த்துவிட்டான். உடனே பையன்களில் ஐந்து பேர்கள் மதில் மீதேறி எட்டிக் குதித்துப் போய் விட்டார்கள் ஒரே நிமிஷத்தில். அப்படியானல் தோட்டக்காரனிடம் அகப்பட்டுக் கொண்ட பையன்கள் எவ்வளவு பேர்?" என்று கேட்டார்.

"யாருமே அகப்பட்டிருக்க மாட்டார்கள் சார்" என்ருன் கிட்டு.

"போடா மண்டு களிமண். உனக்குக் கணக்கே தெரியவில்லை" என்ருர் கடிந்தவாறே.

"உங்களுக்குப் பையன்கள் விஷயம் தெரியாது சார்" என்ருன் கிட்டு.

பிரபலஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஆருடம் மூன்று கேள்விகளுக்கு ரூ. 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாசாச்சாரியார், தபோநிதி, தியாகராயநகர், மதருஸ், 17.

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி"

(Regd.)

இது ஒன்றுதான் அசல் விஜயநகரம் மருந்து. குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து. போலிகளைக் கண்டு ஏமாருதீர்கள்.

Dr பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதருஸ்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில், கீழ வீதி.

திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பகுளம் போஸ்டு.



÷ மாயாவி ÷

வாசலில் கார் வந்து நின்ற சப்தத்தைக் கேட்டு, சீதை பரபரப்புடன் வெளியே ஓடிவந்தாள். அவள் எதிர்பார்த்தபடி டவுன் ஆஸ்பத்திரி பெரிய டாக்டர்தான் எதிர்வீட்டுக்குள் நுழைந்துகொண்டிருந்தார்.

ஜன்னல் கம்பிகளில் முகத்தைப் புதைத்தவாறு, பித்துப் பிடித்து எதிர் வீட்டைப் பார்த்துக்கொண்டு நின்றாள், அவள். அவள் கண்களில் முத்துப் போன்று கண்ணீர் துளிர்த்திருந்தது.

“பெரிய டாக்டர் வந்துட்டார்; கை ராசியுள்ளவர். இனிமே புள்ளை பொழச்சுண்டுடும்” என்று கூறிக்கொண்டு பக்கத்துத் தெரு எச்சுமுப் பாட்டி, பண்ணையார் வீட்டிலிருந்து வெளியே வந்தாள்.

“பாட்டி பாட்டி” என்று மெதுவான குரலில் கூப்பிட்டாள், சீதை. அவள் உள்ளே வந்ததும், “எப்படியிருக்கு பாட்டி சீனுவுக்கு?” என்று கேட்டாள்.

“என்னவோ அம்மா, பொறுமைக்காரிகள் கண்ணை வச்சு வச்சு பெரிசாத்தான் வந்திருக்கு புள்ளைக்கு; பொழைக்கணம். டாக்டர் கைராசிக்காரராச்சே? அவர் புண்ணியத்திலேதான் அவன் பொழச்சு எழுந்திருந்து, பாவம், பார்வதியின் வயத்திலே பால் வார்க்கணம்” என்றாள் பாட்டி.

“பார்வதியின் வயத்திலே மாத்திரமா? என் வயத்திலேகூட பாட்டி” என்று சொல்ல வேண்டும் போல இருந்தது சீதைக்கு. ஆனால் நா எழவில்லை. பேசாமல் விம்மினாள், அவள்.

பாட்டி சென்றதும், அவள் நேரே வீட்டுக்குள்ளிருந்த துர்க்கையின் படத்தின் முன் போய் கை கூப்பினாள். “ஏ தேவி, என் சீனுவைக் காப்பாத்து. அவன் பொழச்சு எழுந்திருந்ததும், ஒனக்கு ஓடம்பு குளிர ‘மாக்காப்பு’ச் சாத்தரேன்” என்று மனமுருகி வேண்டிக்கொண்டாள்.

○

உலகத்தில் எல்லோரும் தான் பிழை செய்கிறார்கள். ஆனால் சீதை செய்து விட்ட பிழையைப் போல எவருமே செய்திருக்கமாட்டார்கள். ஏழு வருஷங்களுக்கு முன், அவள் விளையாட்டுப் போல—ஏன்? காரியமாக என்று சொன்னாலும் தவறில்லை—செய்துவிட்ட பிழைதான், இன்று பத்து மாதம் சுமந்து பெற்ற மகன் நோயுற்று ‘ஆச்சு-போச்சு’ என்று கிடக்கும்போது, உரிமையுடன் அவனைப் போய்ப் பார்க்கக்கூட முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு அவளை விரட்டியிருந்தது.

பார்வதியும், சீதையும் ஒரே ஊரில் பிறந்தார்கள். பிறந்த இடத்தில் அடுத்து அடுத்து வீட்டுக்காரிகளாயிருந்தது போலவே, புகுந்த இடத்திலும் எதிர் எதிர் வீட்டுக்காரிகளாயிருக்கும் ஒற்றுமையையும் பெற்றார்கள். அது மாத்திரந்தானா? வாழ்க்கைப் பாதையில், வருஷா வருஷம் நிகழ்ந்த வேறொரு துயர நிகழ்ச்சிகூட அவர்களின் ஒற்றுமையைப் பிரதிபலித்தது. ஆண்டு தோறும், ஆணோ, பெண்ணோ, ஏதாவது ஒன்றை அவர்கள் பெற்று எடுப்பதும், பிரசவ அறையை விட்டு வருவதற்குள் அதைப் போக்கடித்து விட்டு வெறுங் கையுடன் வருவதுமாக இருந்தனர்.

ஒன்றா? இரண்டா? அடுக்கடுக்காக, ஆணும் பெண்ணுமாக, ஏழு குழந்தைகளைப் பெற்றுப் பறிகொடுத்து விட்டார்கள். இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், அவர்களின் கருத்தரிப்பும், பேர்காலமும்கூட கிட்டத்தட்ட ஒன்றாகவே வந்து சேரும். சில நாட்கள், அல்லது சில மணி நேரங்கள் முன் பின்னாக இருவரும் பெற்று, பெற்றதை, மண்ணுக்கு இட்டுவிட்டு, மற்றொன்றுக்குத் தயாராகி விடுவார்கள்.

ஊரே இதைக் கண்டு அதிசயித்தது. “இதென்னடீ ஒற்றுமை அம்மா? பூமியில் இல்லாத அபூர்வ ஒற்றுமையாயிருக்கிறதே? ஒரே ஊரில் பிறந்து, ஒரே ஊரில் வாழ்க்கைப்பட்டார்கள் என்றால், இப்படிப் பெற்றுத் தொலைப்பதில்கூட ஒன்றாக இருக்கவேண்டுமா?” என்று பெண்கள் கும்பலில் வருஷந்தோறும் ஒரு தடவை பேச்சு நடக்கும்.

அவர்கள் கணவன்மார்கள்கூட கிட்டத்தட்ட சம அந்தஸ்துடையவர்கள்தாம். பார்வதியின் அகத்துக்காரர் பிரகதீசய்யர் வம்ச பரம்பரையாக வழங்கிவந்த ‘பண்ணையார்’ என்ற பட்டத்தைப் பெற்றிருந்தாலும் சொத்திலும், சொம்பிலும், சீதையின் கணவர் நாராயணய்யரைப் போன்றவரே. தவிர, அவ்விருவரும் குழந்தையிலிருந்து ஒன்றாய்ப் படித்து, ஒன்றாய் ஓடி ஆடி விளையாடி வளர்ந்தவர்களாதலால், தங்கள் மனைவியரிடையே நிலவிய அந்நியோன்னியத்துக்கு ஒரு சிறிதும் குறையாத நட்புரிமை அவர்களிடையிலும் நிலவி வந்தது.

பெண்டுகளைப் போலவே, அவர்களும் தங்களுக்கு குழந்தை ஒன்றுகூடத் தங்காதிருப்பது கண்டு விசனமுற்றிருந்தனர். எவ்வளவோ பாவ பரிகாரங்களெல்லாம் செய்துகொண்டுதானிருந்தார்கள். நிறைய தான தருமங்கள் செய்தார்கள்; நாகப் பிரதிஷ்டை செய்து பார்த்தார்கள். இருவரும் ஜோடியாக ராமேச்வரத்துக்குப் போய், பிதிர்களின் குறைகளைப் போக்கி, அவர்கள் ஆசியையும் பெற்று வந்தார்கள். ஆயினும், இவை ஒன்றும் அவர்களுக்குக் குழந்தையைத் தங்கச் செய்யவில்லை.

○

இதுபோன்ற நிலையில் ‘எதைத் தின்றால் பித்தம் தெளியும்?’ என்று எவருக்கும் தோன்றுவது இயற்கைதானே? அவ்வாறுதான் ஒருமுறை அப்பெண்கள் கருவுற்றிருக்கையில், வேடிக்கையாக ஒரு பேச்சைத் தூக்கிப் போட்டாள் சீதை.

“ஏண்டீ பார்வதி? நாமும்தான் எத்தனையோ தெய்வங்களை வேண்டிக்கொண்டு பார்த்தாச்சு. தானம், தருமம் இன்னும் எவ்வளவோ பணத்தை வாரி இறைச்சும் பார்த்தாச்சு. ஒண்ணுமே பலன் தரலை. இப்போ செய்து பார்த்தா என்ன? எப்போதும் போலே இந்தத் தடவையும் நமக்கு ஒன்னு போலதான் வயத்திலே வந்திருக்கு. கொழந்தைகள் பொறந்ததும் பொழச்சாலும் சரி, செத்தாலும் சரியின்னு அதுகளை மாத்திண்டுடறது. பால் மாறிக் குடிச்சாவது அந்த அல்பாயுசுகள் தங்கறதான்னு பார்த்துடறது. என்ன சொல்றே நீ?” என்று கேட்டாள்.

பார்வதி இதைக் கேட்டதும் குபீரென்று சிரித்துவிட்டாள். “இது என்னடீ வேடிக்கைப் பேச்சு சீதை? கொழந்தைகளை மாத்திக்கறதாவது? யாராவது கேட்டாச் சிரிக்கப் போறா?

“சிரிக்கறதுக்கு என்ன இருக்கு? அப்படி சிரிக்கும்படியா நம்ப விஷயத்தை பகிரங்கப்படுத்த வேண்டாம். எப்படியாவது நமக்கூன்னு ஒன்ணொண்ணுவது தங்காதான்னு பாக்கற இந்த சங்கதியை ஒருத்தருக்கும் வெளிப்படுத்தாம இருந்துட்டா யார் என்ன சிரிக்கக் கெடக்கு?”

பார்வதிக்கும் அப்படிச் செய்து பார்த்தாலென்ன என்று உள்ளூர ஆசைதான். இருந்தாலும் அவள் சொன்னாள். “எனக்கென்னவோ அம்மா, இது நடக்கற காரியமாத் தோணலை. எதுக்கும் நம்ப ஆத்திலே அவாளோடு இதைக் கலந்துண்டு, அவாளுக்கு சரீன்னு பட்டுதானா பார்ப்போம்.”

கடைசியில் சீதையின் பிரேரணை பிரகதீசய்யர், நாராயணய்யர் இவர்கள் முன் தீர்மானத்துக்காக வந்தது. அவர்களும் முதலில் இதைக் கேட்டபோது சிரிக்கத்தான் சிரித்தனர். ஆயினும், அந்த நால்வர் உள்ளத்திலும் அது தங்கி நின்று வேலை செய்தது. ‘அப்படிச் செய்தாலாவது ஒருகால் குழந்தைகள் பிழைத்துவிடாதா?’ என்ற அற்ப நம்பிக்கையில் ஆரம்பித்து நிச்சயமாக வளர்ந்துவிட்டது அது.

முடிவில் ஒருநாள் இரு தம்பதிகளும் பிரகதீசய்யர் வீட்டில் கூடி ஸ்வாமி படத்தின் முன்னால் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ‘பேர்காலம் முன் பின்னாக வந்தாலும் சரி; பிறப்பது உயிருடனோ, செத்தோ பிறந்தாலும் சரி; அவை ஆணாகவோ, பெண்ணாகவோ இருந்தாலும் சரி; ஒரு தம்பதிகளின் பிறப்பை மற்றொரு தம்பதிகளுக்கு அளித்துவிடுவது; பிறகும் அவை இருந்தாலும், செத்தாலும் மாற்றிக் கொள்ளுவதில்லை. தவிர இந்தப் பரிவர்த்தனை தங்கள் நால்வரைத் தவிர வேறு எவருக்கும் தெரியக்கூடாது’ என்று பேசித் தீர்மானித்துக் கொண்டார்கள்.

○

ஒப்பந்தப்படி காரியங்கள் ஒழுங்காகவே நடைபெற்றன. ஒரே நாள், ஒரே இரவில் சற்று முன்பின்னாக, சீதை ஓர் ஆண் குழந்தையையும், பார்வதி ஓர் பெண் குழந்தையையும் பிரசவித்தனர். இரண்டாம் பேர் அறியாமல் பிரகதீசய்யரும், நாராயணய்யரும் குழந்தைகளை உடனே பரிவர்த்தனை செய்துகொண்டனர்.

பேதை சீதை எந்த நம்பிக்கையுடன் அப் பரிவர்த்தனைப் பிரேரணையைக் கொண்டுவந்தாளோ, அது அவளை நன்றாக ஏமாற்றிவிட்டது. பார்வதியிடமிருந்து பெற்றுக்கொண்ட பெண் குழந்தை, வழக்கம்போல அவள் பிரசவ அறையை விட்டு வெளிவருமுன்பே, தான் வந்த வழி சென்றுவிட்டது.

சீதைக்கு இது பெரிய ஏமாற்றமும் தண்டனையும்தான். இருந்தாலும் அவள் உள்ளம் ஒரு விதத்தில் ஆறுதலே அடைந்திருந்தது. தான் அணைத்துப் பாலூட்டும் எந்தக் குழந்தையும் தங்குவதில்லையென்றாகி விட்டாலும், தன் வயிற்றில் பிறந்த ஒருவன், கண் முன்னே வளர்ந்து வருவதைப் பார்த்து அனுபவிக்கவாவது இந்தப் பரிவர்த்தனை இடம் அளித்ததே என்று அவள் நிம்மதிகொண்டாள்.

பார்வதியும், உண்மையில் சீதையின் அதிர்ஷ்டமற்ற தன்மைக்குப் பச்சாத்தாபப் பட்டாள். இந்தப் பரிவர்த்தனை நடக்காதிருந்தால், இன்று தனது என்று கொண்டாடும் ஆண் சிங்கம், சீதையின் உடமையாகவல்லவா இருந்திருப்பான்? அவள் கொண்டுவந்த பிரேரணை, அவளைத் தண்டித்துவிட்டாலும் தனக்கு நன்மையே பயத்திருப்பதால், குழந்தையை வளர்ப்பதிலும், சீராட்டிப் பராமரிப்பதிலும், சீதைக்கு அதிக சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று எண்ணி, அவ்வாறே செய்துவந்தாள்.

ஆகவே சீதையின் பண்டமாற்று ஒப்பந்தம், பெற்ற பிள்ளையை அவளுக்கு இல்லையென்று ஆக்கிவிட்டாலும், அவனைக் கொஞ்சிக் குலாவி வளர்க்கும் பேரின்பத்தையாவது அளித்துத்தானிருந்தது. குழந்தை சீனு, சீதையின் அணைப்பிலும், பார்வதியின் பாலிலும் திடகாத்திரனாக வளர்ந்து வந்தான்.

○

ஆனால், அசூயையும் பொறாமையும் நிறைந்த இந்த உலகம், இப்படி இரு குடும்பத்தார்கள் அந்நியோன்னியமாக இருப்பதைப் பார்க்கப் பொறுக்குமா? அதிலும் கைபட்ட சிசுக்கள் அனைத்தும் கருகிப் போகும் துரதிர்ஷ்டம் படைத்த சீதை, ஏழுக்குப் பின் எட்டாவதாகப் பிறந்து தங்கியிருக்கும்பார்வதியின்குழந்தையைப்பேணிப் பராமரித்து வருவதைத்தான் எங்ஙனம் பார்த்துச் சகிக்கும்? அந்தக் குரோதம் நிறைந்த உலகத்தின் பிரதிநிதிகள் ஒவ்வோர் ஊரிலும் இருக்கத்தான் இருந்தனர். தங்கள் வேற்றுமைத் தொழிலையும் செவ்வனே செய்துதான் வந்தனர். அந்தப் பணியைத்தான் சீதையின் ஊரில் ஏற்று நடத்திவந்தாள் எச்சுமுப் பாட்டி.

எச்சுமுப் பாட்டிக்கு நல்லவர்கள்-கெட்டவர்கள் அறிய வேண்டாம்; நன்மை-தீமை அறிய வேண்டாம்; எச்சும்-பேச்சும் அறியவேண்டாம்; சதா யாராவது இருவருக்குள் கலகம் மூட்டிக்கொண்டே இருக்கவேண்டும் என்பது ஒன்றுதான் அவள் லட்சியம்.

அந்த லட்சியத்தைப் பார்வதி-சீதைக்

அவள் சில நாட்களாக முனைந்து வந்தாள். நாள்தோறும் பார்வதியிடம் வந்து உட்கார்ந்துகொண்டு, "ஏண்டி பார்வதி, இப்படி புத்தி கெட்டுப் போச்சு ஒனக்கு? அவ தொட்டதெல்லாம் கரியாய்ப் போயுண்டிருக்கறது தெரிஞ்சிருந்தும், இத்தனை வருஷத்துக்கப்புறம் உன் ஆத்துக்காரர் பெயர் சொல்ல ஒன்னே ஒன்னு எப்படியோ தங்கியிருக்கு, அதையும் அந்த அதிர்ஷ்டம் கெட்டவ கிட்டே விட்டு வளக்கச் சொல்றியே? ஒனக்கு என்ன புத்தியில்லேன்னு பேரா? இல்லே, இந்தக் குழந்தையையும் போனாப் போறதுன்னு விட்டுட்டியா?' என்று பலவாறு உறையேற்றி வந்தாள்.

முதலில் பார்வதி இதைக் கேட்டு கோபம் அடைந்தாள். பிறகு வேடிக்கையாக எண்ணிப் பேசாதிருந்துவிட்டாள். ஆயினும், அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகர்ந்துதானே ஆகவேண்டும்? பார்வதியின் மனமும் ஒருநாள் களங்கப்பட்டது.

சீனுவுக்கு அப்பொழுது கிட்டத்தட்ட இரண்டு வயதாகிவிட்டது. உலகத்துப் பொருள்கள் ஒவ்வொன்றையும் பார்த்து ரஸித்து, அறிந்துகொள்ளும் பிராயம் ஆதலால், அவன் எப்பொழுதும் வெளியே சுற்றுவதையே விரும்பினான். ஆனால் சின்னஞ் சிறு கிராமத்தில் எங்கேயென்று சுற்றுவது? சீதை அவனைத் தெருத் திண்ணையில் கொண்டுவந்து வைத்துக்கொண்டு வேடிக்கை காட்டுவாள். மாலையானதும் அக்கிரகாரத்துக்குச் சற்று தூரத்திலிருந்த சிவன் கோவிலுக்கும் தினமும் கூட்டிப் போய்வருவாள்.

அன்று மாலை வானம் மப்பும் மந்தாரமுமாயிருந்தது. மேகங்கள் கூடிக் கவிந்திருந்தன. கோடைகாலம்தான்; எனினும் அப்பொழுது மழை பெய்யும் போலவே தோன்றிற்று. ஆகவே அன்று கோவிலுக்குப் போகவேண்டாமென்று நிச்சயித்திருந்தாள் சீதை. ஆனால் குழந்தை, மழையையும் மற்றொன்றையும் கண்டானா? கோவிலுக்குப் புறப்படும் நேரம் ஆனதும், அவன் வீட்டிலிருந்து குடுகுடுவென்று ஓடிவந்து, 'அம்மா, உம்மாச்சி-சாமிவா' என்று தனது மழலை மொழிகளால் சீதையைக் கோவிலுக்குப் புறப்படும்படி கட்டளையிட்டான்.

"மழை வரும் போலிருக்கிறதடா ராஜா. இன்னிக்கு அங்கே போக வேண்டாம்" என்றாள் சீதை.

செல்லமாக வளர்க்கப்பட்ட குழந்தையாதலால் சீனுவுக்கு எப்பொழுதுமே நினைத்ததைச் சாதிக்க வேண்டுமென்று முரண்டும் சுபாவம் உண்டு. அன்றும் அப்படித்தான் முரண்டடித்து அழ ஆரம்பித்தான். வேறுவழியில் அவனைச் சமாதானம் செய்ய முடியாத சீதை, கடைசியில் குடை ஒன்றை எடுத்துக்கொண்டு அவனுடன் கோவிலுக்குப் புறப்பட்டுச் சென்றாள்.

அங்கு சீனுவுக்கு வழக்கமாகக் காட்டும் வேடிக்கைகளையெல்லாம் காட்டிவிட்டு, ஸ்வாமி தரிசனத்தையும் முடித்துக் கொண்டு அவள் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, வெளியே 'ஜில்'லென்று ஊதல் காற்று வேகமாகச் சுழன்று அடித்தது. ஏற்கனவே இருட்டும் வேளை. அதோடு தொங்கிக்கொண்டிருந்த மழை மேகங்களும் சேர்ந்து வழியில் நட்சத்திர வெளிச்சம்கூட இல்லாது செய்திருந்தன. வானம் குமுறிக் கொண்டிருந்தது. மழை உடனே பெய்துவிடும் போலவே இருந்தது.

மழைக்கு முன்பு வீட்டை அடைந்துவிட வேண்டுமென்று குழந்தையை அணைத்தவாறு ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தாள் சீதை. ஆயினும் பாதி வழி வந்துகொண்டிருந்தபோது, 'சோ' வென்று பெருமழை வருஷிக்க ஆரம்பித்துவிட்டது. பக்கத்தில் ஒதுங்கிக்கொள்ள கட்டிடங்கள் எதுவும் கிடையாது. ஆகவே சீதை, குடையை ஒரு கையால் விரித்துப் பிடித்தவாறு, குழந்தையின் மீது மழை அடியாதபடி பாதுகாக்க முயன்றாள். ஆனால் சுழன்று சுழன்று அடித்த சூறைக்காற்று குடையை விரித்துப் பிடிக்கவிடவில்லை. கடைசியில் வீடு வந்து சேர்ந்தபோது, அவளும் குழந்தையும் தெப்பமாக நனைந்துவிட்டார்கள்.

வீட்டுவாசலில் அவர்களை எதிர்பார்த்து நிற்பது போல நின்றுகொண்டிருந்தாள் பார்வதி. தன் மகனை சொட்டச் சொட்ட நனைத்துக்கொண்டு சீதை வருவதைப் பார்த்ததும், அவள் ஓடோடியும் சென்று அவனை வாங்கிக்கொண்டு, "ஏண்டி? இப்போ என்ன அவசரம் தலை போறதுன்னு இப்படிப் பச்சைக்கொழந்தையை நனைச்சுக் கொண்டு வரே?" என்று சற்று முக மாறுதலுடனே கூறிவிட்டு, சீதையின் பதிலை எதிர்பாராமலே 'விடு விடு' என்று வீட்டினுள் சென்றுவிட்டாள்.

சீதைக்கு, 'ஏண்டா கோயிலுக்குப் போனோம்?' என்றாகிவிட்டது. அவன்மீது காற்றுப்படாது, கவனமாக வளர்த்து வந்திருந்ததால், இன்று இப்படி மழையில் நனைந்துவிட்டது உடம்புக்கு வந்துவிடக்கூடாதே யென்ற விசாரம் வேறு அவளை வாட்டிற்று.



அவள் பயந்தபடியே சீனுவுக்கு அன்று ராத்திரி கடுமையான ஜுரம் வந்துவிட்டது. இதற்கு முன்பு அவன் சிறிது சிணுங்கினாலும், பார்வதி உடனே சீதையைத்தான் கூப்பிடுவாள். ஆனால் இன்று அப்படிச் செய்யவில்லை; ஆம்! அவள் உள்ளத்தில் புகை மூண்டுவிட்டது!

அந்தப் புகைக்கு இன்னும் அதிக மூட்டம் அளிக்க, மறுநாள் பொழுது விடிவதற்குள் சரியாக வந்துவிட்டாள் எச்சுமுப்பாட்டி. குழந்தைக்கு ஜுரம் என்பதையும், அதுவரக் காரணமாயிருந்த சம்பவத்தையும் கேட்டதும், அவள் தன் தொழிலைப் பிரமாதமாகச் சாதித்துவிட்டாள். "அடி பாவி; இதுக்குத்தானே நான் இவ்வளவு நாளா ஒன்னண்டை முட்டிண்டேன். அவ இரக்கமில்லாத சண்டாளீடீ. அவளுக்கு கொழந்தை தங்காம ஒனக்கு மாத்திரம் தங்கியிருக்கிறதினாலே, வயிறு எரிஞ்சு ஒன் கொழந்தையைக் கொல்ல வழி பாத்துட்டாடீ பாத்துட்டா" என்று நன்றாக மூட்டிவிட்டு விட்டுத் தன் வழி சென்றாள்.

○

மூட்டம் வேலை செய்தது.

பார்வதி நினைத்தாள்: "ஆமாம்; பாட்டி சொல்றது நெசமாத்தான் இருக்கணம். இல்லாட்டா கையிலிருந்த கொடையை விரிச்சுப் புடிச்சுக்காம என்ன அவசரம் பாழாய்ப் போறதுன்னு, என் கொழந்தையை நனைச்சுக்கொண்டு வரணம்? இப்படி ஏதாவது பண்ணி, அவனுக்கு ஒடம்புக்கு வந்து அவன் போயுட்டானான்னு, நானும் அவள் மாதிரி 'பழைய குருடி'ன்னு ஆயுடுவேனின்னுதான், அவ இந்த வேலையைச் செய்திருக்கணம். அட பாவி, எவ்வளவு வயத்தெரிச்சலடி ஒனக்கு? நீ பெத்த கொழந்தையின்னுகூட நெனையாமெ கொன்னுடணமின்னு துணிஞ்ச ஒன் கொடுமை எண்ணம் பலிக்காம கடவுள்தான் என் கொழந்தையைக் காப்பாத்தணம்!" என்றிவ்வாறு ஓடின அவள் புகை மூண்ட உள்ளத்துச் சிந்தனைகள்.

வழக்கமாக தான் எழுந்திருக்கு முன்பே 'அம்மா' என்று கதவிடிக்க வரும் சீனுவை அன்று காலை எட்டு மணி ஆகியும் காணாமல் இருக்கவே சீதை அவசரம் அவசரமாக பார்வதியின் வீட்டுக்கு வந்தாள். குழந்தை தொட்டிலில் படுத்திருந்தான். இரவு அடித்த கடும் ஜுரத்தின் வேகம் அவனை அப்பொழுது சற்றுக் கண்ணயர வைத்திருந்தது. "குழந்தை எங்கேடி காணோம் பார்வதி?" என்று கேட்டுக் கொண்டு தொட்டிலை நோக்கி வந்துகொண்டிருந்த சீதையை, அருகில் நெருங்கவிடாதபடி அடுக்களையிலிருந்து ஓடிவந்து தடுத்து நிறுத்தினாள், பார்வதி.

"அவன் தூங்கட்டும்; அவனை எழுப்பாதே" என்ற அவள் சொற்களில் விசேஷ கண்டிப்பு தொனித்ததைக் கண்டு, சீதை ஸ்தம்பித்துப் போனாள். "ஏன்?" என்ற வார்த்தை அவளை அறியாமலே உதட்டிலிருந்து நழுவிற்று.

"ஏனா? எனக்கு இருக்கிறது ஒன்னே ஒன்னு அம்மா. அதைப் பொறாமைக்காரிகள், மழையிலேயும் தண்ணிலேயும் நனைச்சு சாகடிக்கறத்துக்கு இனிமே எடம் கொடுக்க மாட்டேன்."

பொறாமைக்காரி!

○

இந்த வார்த்தை சீதையின் நெஞ்சை வஜ்ராயுதம் போல் துளைத்தது. அவள் கண்களில் மளமளவென்று கண்ணீர் பொங்கி வழிந்தது. "என்னையா பொறாமைக்காரி என்கிறாய்?" என்று தட்டுத்தடுமாறிக் கேட்டபோது, அவள் 'ஹோ' வென்று கதறி அழுதுவிட்டாள்.

பார்வதியின் தெளிந்த இதயத்தில் புகை நன்றாகக் கரியிட்டு விட்டது. அவள் கோபாவேசத்தின் எல்லையிலிருந்தாள். "ஆமாம்; ஒனக்கு கொழந்தை தங்கலையின்னு, தங்கியிருக்கிற இவனையும் போக்கடிச்சுட வேணுமென்கிறதுதான் ஒன் மனசிலிருக்கிறது. அதை இத்தனை நாளா தெரிஞ்சுக்காம இருந்துட்டேன். நேத்திக்குத்தான் நல்லவேளையா சுவாமி அதை எனக்குக் காட்டிக் கொடுத்துட்டார்" என்று அவள் ஆத்திரத்தில் தன்னை மறந்து பொறிந்து தள்ளினாள்.

சீதையின் உள்ளம் சுக்கல் சுக்கலாக வெடித்துப் போயிற்று. அவள் தேம்பியவாறு சொன்னாள்: "பார்வதி, ஒன் மனசிலே யாரோ குரோதம் மூட்டிவிட்டிருக்கா. அடியே, அவனைப் பெத்தவள் நான் என்பதைக்கூட நெனச்சுப் பார்க்காம, கொல்லப் பார்க்கிறேனின்னு கேட்பார் பேச்சைக் கேட்டுண்டு அநியாயப் பழி சொமத்தறேயே? இது ஒனக்கு அடுக்குமா?"

"பெற்றவள் நான்" என்ற வார்த்தைகளை குழந்தையின்மீது தனக்கு ஏற்பட்டிருக்கும் வாஞ்சையை [illegible]யிடவே சீதை சொன்னாள். அ[illegible] வார்த்தைகளை அன்று விடிந்ததும் பார்வதியே தனக்குள் ஒருமுறை சொல்லிக்கொண்டிருந்தாள். ஆயினும் இப்பொழுது அவை சீதையின் வாயிலிருந்து வந்ததும், அதை முற்றிலும் புதிய வழியில்தான் அர்த்தம் செய்துகொண்டாள் அவள். ஏற்கெனவே குழந்தையைப் பார்த்துவிட்டு ஊர்க்காரர்கள், 'உங்கள் ஒற்றுமைக்கு அடையாளமாடி இது, பார்வதி? உன் பிள்ளை உன்னையோ, உன் ஆத்துக்காரரையோ கொள்ளாமல் உன் சிநேகிதியை உரித்துக்கொண்டு பிறந்திருக்கிறதே' என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்கும்போது இவள் இன்று என்னிடம் சொன்னது போல, வேறு யாரிடமாவது உண்மையைச் சொல்லிவிட்டால்......? நிச்சயமாக ஊர்க்காரர்கள் அதை நம்பத்தான் நம்புவார்கள். பிறகு அவள் கட்சி பலமடைந்துவிடும். அப்புறம் என் குழந்தையை என்னிடம் தந்துவிடு என்று கிளம்பிவிட்டாலோ? சீ! இது ஒன்றையும் நான் இதுவரை நினைத்துப் பாராமல், குழந்தையிடம் அவளை அவ்வளவு ஒட்டிக்கொள்ள விட்டுவிட்டது, எவ்வளவு பெரிய தப்பு? நல்ல வேளை; எச்சுமுப் பாட்டி சரியான சமயத்தில் வந்து என்னை எச்சரித்தாள். இனிமேல் இன்றையச் சண்டையையே காரணமாக்கிக்கொண்டு, குழந்தையை இவள் நெருங்காமல் செய்துவிட வேண்டும்.

இந்தத் தீர்மானத்துடன் பார்வதி கோபக்கனல் கக்க, சீதையை நோக்கிக் கூறினாள்: "பேஷ்! இவ்வளவு தூரத்துக்குப் பேசத் துணிஞ்சுட்டியா நீ? ஏண்டீ அன்னிக்கு ஆத்துக்காரர் கையைப் புடிச்சுண்டு, பேசின பேச்செல்லாம் மறந்து போச்சோடீ ஒனக்கு? நான் சொல்றேன். தெய்வத்து முன்னாலே செய்த சத்தியத்தை தூரத் தள்ளிடாதே? நீ தாலி கட்டிண்டிருக்கே. அதை அந்த தெய்வம்தான் பலமா வச்சிருக்கணம். இப்போ சொன்னியே இந்த வார்த்தையை இனிமே ஒன் ஆத்துக்காரர் ஆணையா திரும்பச் சொல்லாதே. இனிமே என் கொழந்தையின் வழிக்கும் வராதே."

இடி விழுந்தவள் போல சுருண்டுவிட்ட சீதை, மௌனமாக அங்கிருந்து வெளியேறினாள்.

○

உலகத்துக்கே புதுமையான ஒரு பிரேரணையைக் கொண்டுவந்து, சீதை அடைந்த புதுமை இதுதான். அவள் முன்னால், அவள் பெற்ற பாலகன் ஓடியாடினான். ஆனால் அவனைத் தொடக்கூட அவள் அருகதையற்றுவிட்டாள். இதைவிட ஒரு தாய்க்குக் கொடிய தண்டனை வேறென்ன வேண்டும்?

ஒற்றுமையாக - ஊர் அதிசயிக்கு மாறு-வாழ்ந்து வந்த அவ்விரு குடும்

பங்களுக்குள் பேச்சுவார்த்தை நின்று போய் பல நாட்களாகிவிட்டன. எதிர் எதிர் வீட்டிலிருந்தும் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. 'அம்மா-அம்மா' என்று சீதையைச் சுற்றிக்கொண்டிருந்த சீனுவுக்குக்கூட இவ்வேற்றுமை பிடிபட்டுவிட்டது.

உண்மை நிகழ்ச்சிகளை அறியாத ஊர் வாயிடம் சீதையும், நாராயணய்யரும் வெகு நாட்கள் அகப்பட்டுக்கொண்டு அவதிப்பட்டனர். 'பொறாமைக்காரர்கள்' என்றும், 'பிறர் வாழ சகிக்காத பாவிகள்' என்றும் அவர்களைத் தூற்றிவிட்டு அதுகூட ஓய்ந்துவிட்டது.

ஆனால் சீதையின் உள்ளத்தில் மாத்திரம் 'அவன் தன் பிள்ளை'யென்ற உணர்ச்சி மங்கிவிடவில்லை.

சீனு இப்பொழுது பெரியவனாகிவிட்டான்; அவன் பள்ளிக்குப் போய் வந்தான்; வீட்டிலும் வெளியிலும் ஆயிரம் விளையாட்டுக்கள் விளையாடினான்; விஷமங்கள் பல செய்தான்; இன்னும் தாயின் மனத்தைக் கவர்ந்திழுக்கும் எல்லா லீலைகளையும் புரிந்தான். அவற்றை மறைந்திருந்து பார்த்து ஆறுதலடைந்து வந்தாள் அவனைப் பெற்றவள்.

அவனுக்குப் பெற்றோராகிவிட்டவர்களும், சுற்றியிருப்பவர்களும் அவளைக் கொலைகாரியென்று பழித்தாலும் அவள் அந்தராத்மா, அவன் நல்வாழ்வு வாழவேண்டுமென்று தினந்தோறும் பற்பல தெய்வங்களையும் வேண்டிக்கொண்டிருந்தது.

வீட்டை விட்டு வெளியே வராது, சதா அந்தத் திண்ணை ஜன்னலே கதியென்று காத்துக்கிடந்து, அவன் முகம் எப்பொழுதாவது தென்படும்போது பார்த்து, சாந்தியடைந்து வந்த சீதைக்கு அந்த பாக்கியத்தைக்கூட தரக்கூடாது என்று தெய்வம் தீர்மானித்து விட்டது போலும். இல்லாவிட்டால், அவனை இப்படி ஒரு மாதமாக சாவுப்படுக்கையில் கிடத்துவானேன்?

○

போன மாதத்தில் சேர்ந்தாற்போல் நான்கு நாட்களாக அவனைக் காணாது தவித்தாள் சீதை 'ஏன்? அவனுக்கு உடம்புக்கு ஏதாவது வந்துவிட்டதோ?' என்று அவள் கலக்கமடைந்ததற்கும், அதற்கேற்றாற்போல கிராமத்து நாட்டுவைத்தியன் அன்று மாலை பண்ணையார் வீட்டிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்ததற்கும் சரியாக இருந்தது.

கவலையால் தூண்டப்பட்டு அவள் வைத்தியனைக் கூப்பிட்டாள். "யாருக்கு என்ன ஒடம்பு எதுத்தாத்திலே?" என்று கேட்டாள் அவனிடம்.

"அந்த சின்னப் புள்ளைக்கு ஒடம்பு சாயலாயிருக்குது அம்மா" என்றான் வைத்தியன்.

"யாருக்கு? சீனுவுக்கா? என்ன காய்ச்சல் வைத்தியரே?" சீதையின் உடம்பு நடுங்கிற்று.

"பயப்படும்படியா ஒன்னுமில்லையம்மா. லேசாத் 'தடிமம்' புடிச்சிக்கிட்டு சொரத்திலே கொண்டு விட்டுடிச்சு. எதுவானா என்ன? இந்த வேலாயுதத்தின் ரெண்டு வேளை சூர்ணத்திலே 'ஐயோ' ன்னு ஓடிப்போயுடாதா?"

அன்று சீதையைப் பிடித்துக்கொண்ட கவலைச் சுழல், இந்த ஒரு மாதமாக நாளுக்குநாள் பெருகிற்றேயன்றி குறையவில்லை. சீனுவின் ஜல தோஷக் காய்ச்சல் 'நிமோனி'யாவாக மாறி குழந்தையை வாட்டி எடுத்துக்கொண்டிருந்தது.

அவனைப் பார்க்க வேண்டுமென்று அவள் மனசு ஒவ்வொரு நிமிஷமும் சுயமரியாதை அதற்கு தடையிட்டு வந்தது. 'இன்றைக்கு நல்ல செய்தி வரும்; நாளைக்கு வரும்'என்று அவள் காத்திருந்துபார்த்தாள். ஆனால்டாக்டர் மாறி டாக்டராக வந்து போய்க்கொண்டிருந்தார்களேயன்றி, 'நேற்றைக்கு இன்று தேவலை' யென்ற சொல் சீதையின் செவிக்கு எட்டவில்லை.

தாயுள்ளம் அடைந்த தவிப்பு, அவனைப் பார்க்கப் போக கணவனின் அனுமதியை நாட வைத்தது ஒருநாள். "சீனு ஒரு மாசமா கண்ணே முழிக்காம கெடக்கறானே? நான் போய்ப் பாத்துட்டு வரட்டுமா?" என்று தயங்கியவாறே நாராயணய்யரைக் கேட்டாள் அவள்.

"யாரடீ அது சீனு?" என்று வெருண்டார் நாராயணய்யர்.

"என் கொழந்தை" என்று சொன்னபோது, சீதையின் நெஞ்சிலே துக்கம் பொங்கி வந்து அடைத்தது.

"ஒன் கொழந்தை செத்துப்போய் எழு வருஷமாயுடுத்து; போ போ; வேலை கெட்டவளே. பட்ட அவமானமெல்லாம் போறாதுன்னு, அவனைப் பார்க்கப் போகட்டுமான்னு கேக்க வந்துட்டா மானங்கெட்டவள். இதோ பாரு இப்பொ சொல்லறேன்: தப்பித் தவறி எப்போதாவது அவா வீட்டிலே காலே வெச்சே, ஒன்னை நாயை அடிக்கறாப் போலே அடிச்சுப் போட்டுடுவேன். ஆமாம், ஞாபகம் வச்சுக்கோ" என்று வேறு எச்சரித்தார், அவர்.

சீதை என்ன செய்வாள் பாவம்! எப்பொழுதும் கண்ணீரும் கம்பலையுமாக "ஸ்வாமி, என் கொழந்தையைக் காப்பாத்தும். என் கொழந்தையைக் காப்பாத்தும்" என்று ஒவ்வொரு தெய்வத்திடமும் புலம்பிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள் அந்த துர்ப்பாக்கியவதி.

ஆனால் அவள் பிரார்த்தனை எந்த தெய்வத்தின் காதுகளுக்கும் எட்டவே இல்லை. இன்று காலையில் எழுந்ததும், "குழந்தைக்கு ஒடம்பு அதிகமாயுடுத்து. டவுனிலேயிருந்து பெரிய டாக்டரைக் கூட்டிண்டு வர, சைக்கிளிலே ஆள் போயிருக்கு" என்ற திகிலான செய்திதான் அவளுக்காகக் காத்திருந்தது.

சீதை அன்று ஒரே சோகப் பித்தாகிவிட்டாள். அவள் தோற்றத்தைக் கண்டு, நாராயணய்யர்கூட மனம் கலங்கிவிட்டார். "யாராத்துக் கொழந்தையோ வியாதியாக் கெடக்கூன்னு ஒனக்கென்ன எப்பொப் பார்த்தாலும் அழுகை?" என்று அவளை இந்த ஒரு மாதயாக விரட்டிக்கொண்டிருந்த அவரே, அன்று அவளை நெருங்க அஞ்சினார். பெற்ற மனத்தின் பித்து, அந்த வைராக்கியம் நிறைந்த மனிதருக்குக்கூடப் புரிந்துவிட்டது.

அன்று அவர்கள் வீட்டு அடுப்பில் பூனை தூங்கிற்று.

பெரிய டாக்டர்—கைராசியுள்ள டாக்டர்—வந்தார்; குழந்தையைப் பார்த்தார். "ரொம்பவும் முற்றிப் போய்விட்டது. உடம்பில் சொட்டு நல்ல ரத்தம்கூட இல்லை. ஏதாவது 'டிரீட்மெண்ட்' செய்வதற்கு முன்பு உடலுக்குள் ரத்தம் செலுத்தியாக வேண்டும். குழந்தைக்குத் தாயார் இருக்கிறாளா ஐயா?" என்று கேட்டார்.

"இருக்கிறாள். ஏன்?" என்றார் பிரகதீசய்யர் கவலையுடன் வியப்புச் சூழ்ந்தவராய்.

"தாயின் ரத்தத்தைச் செலுத்தினால் உடனே பையன் உடலில் வலுவுண்டாகிவிடும். பிறகு இந்த ஜுரத்தைப் போக்க இரண்டே இஞ்சக்ஷன்கள் போதும்" என்றார் டாக்டர்.

'தாய் ரத்தம்' என்றதும் பிரகதீருக்கு பதில் சொல்லாது பக்கத்தில் நின்ற பார்வதியை நோக்கினார்.

"ஏனய்யா? குழந்தையின் தாயார் இந்த ஊரில்தானே இருக்கிறாள்?"

"ஆமாம்; ஆனால்......" பிரகதீசய்யர் மறுபடியும் தயங்கினார்.

"சரி. நீர் ஆனால் போட்டுக்கொண்டிரும். எனக்குக் காத்திருக்க நேரமில்லை. இன்னும் நான்கு மணி நேரத்துக்குள் குழந்தையின் உடலுக்குள் தாய் ரத்தத்தைப் புகுத்தினால், அவன் பிழைத்துக்கொள்வான். அவள் சம்மதித்தால் எனக்கு மறுபடி ஆள் அனுப்பும். இல்லாவிட்டால்......?" டாக்டர் முடிக்காமலே ஸ்டெதாஸ்கோப்பை மடித்து கோட் பைக்குள் திணித்துக்கொண்டு, தனது தோல் பெட்டியுடன் கிளம்பிவிட்டார்.

சுற்றியிருந்த ஊரார் ஆச்சரியத்துடன் அந்தத் தம்பதிகளைப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

நிமிஷத்தில் ஊர் முழுவதும் ஓர் 'வதந்தி காட்டுத் தீப்போல பரவிவிட்டது—'பார்வதி தன் பிள்ளைக்கு ரத்தம் கொடுக்க மறுத்துவிட்டாளாம்.'

இந்தச் செய்தி சீதையின் காதுக்கு எட்டியபோது, அவள் அத் தம்பதிகளின் தயக்கத்துக்கும் மௌனத்துக்கும் காரணத்தை உடனே தெரிந்துகொண்டு விட்டாள்.

தாயுள்ளம் தீவிரமாக வேலை செய்தது. கணவனின் கோபத்துக்குப் பாத்திரமானாலும் பரவாயில்லை; தான் பெற்ற மகனைக் காத்துவிடவேண்டுமென்று அவள் துணிந்துவிட்டாள்.

நாராயணய்யர் ரேழியில் படுத்துக் கொண்டிருந்தார். காலையிலிருந்து வயிறு காய்ந்ததால் ஏற்பட்ட களைப்பு, அவரை அயரச் செய்திருந்தது. சீதை 'விடு விடு' என்று அவர் முன்வந்து நின்றாள். ஆவேசம் வந்தவளைப்போல, "நீங்கள் என்னைக் கொன்றா போட்டாலும் போட்டுக்கொள்ளுங்கள். ஆனால் என் கண் முன்னால் என் வயிற்றில் பிறந்தவன், என் நிர்த்தாட்சண்யத்தின் காரணமாக சாவதைப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டேன்" என்று கூறிவிட்டு, அவர் அனுமதிக்காகக்கூடக் காத்திராமல் எதிர்வீட்டை நோக்கி ஓடினாள்.

"என் கண்ணே சீனு" என்று அலறிக்கொண்டு ஓடிவந்த அவளுக்கு, அவனருகில் செல்ல இடம் விடுத்து, பார்வதியும் பிரகதீசய்பரும் ஒதுங்கிக் கொண்டனர்.

"உனக்குப் பால் தரும் பாக்கியத்தை இழந்தேண்டா பாவி. இப்போ என் ரத்தத்தைக் கொடுத்தாவது பெற்ற கடனைத் தீர்த்துக் கொள்ளுகிறேன்" என்று நினைவற்றுக் கிடந்த சீனுவை அணைத்துக்கொண்டு அழுதாள்.

பார்வதியும் பிரகதீசய்யரும் கண்களில் நீர்வழிய அவளைப் பரிதாபமாக நோக்கினர்.

"ஏண்டி நிற்கிறாய் பார்வதி? டாக்டரைக் கூட்டிண்டுவர ஆள் அனுப்பு சீக்கிரம்" என்று அவளை நோக்கிக் கூறினாள், சீதை.

டாக்டர் இரண்டாந்தடவை வந்தார்.

"ஏனையா? இந்த அம்மாள்தான் உம் மனைவியா? இப்படிக் கிடக்கிற பிள்ளையை விட்டுட்டு எந்த ஊருக்குப் போயிருந்தாள் இந்த அம்மாள்" என்று கேட்டார், சீதையிடமிருந்து ரத்தத்தை எடுக்கும்போது.

"இல்லை; இவள் என் மனைவியில்லை. ஆனால் இவள்தான் அக்குழந்தையின் தாய். சீனு, அவள் எங்களுக்குத் தந்த பிச்சை."

டாக்டர் சிரித்தார்; பிறகு "ஓஹோ, ஸ்வீகாரப் பிள்ளையா? அப்படிச் சொல்லுமே" என்றார், எல்லாவற்றையும் புரிந்துகொண்டவர்போல.

பிரகதீசய்யர், கண்களில் நீரோட குழந்தையின் கதையைச் சொன்னார். இறுதியில் கூறினார்: "பெற்றவளின் உள்ளத்தை அறியாது பொறாமைக்கு ஆளாகி, அவளையும் குழந்தையையும் பிரித்து வைத்தோம். ஆயினும் இன்று அவனுக்கு உயிர் அளிக்க உண்மைத் தாய்தான் முன் வரவேண்டியிருந்தது. அவள் அவனுக்குப் புத்துயிர் அளித்துவிட்டாள். ஆகவே இனி அவன் எங்கள் குழந்தையல்ல; அவள் குழந்தை.

○

சீனு பிழைத்தெழுந்தான்.

உடம்பு நன்றாகத் தேறியதும், அவனைக் கூட்டிக் கொண்டு துர்க்கையின் கோவிலுக்கு 'மாக்காப்பு' நேர்ச்சை செலுத்தச் சென்ற சீதையைப் பார்த்து, அன்று ஆயிரம் பேசிய ஊர் கூறிற்று:— இதோ போகிறாள், ஓர் உத்தமமான அன்னை" யென்று.

சே! என்ன வியவஸ்தையற்ற உலகம் இது?



ஆஸ்த்மாவை

குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

(புது வருஷ காலண்டர் பத்து ரூபாய்க்குக் குறையாது புத்தகங்கள் வாங்குவோர்க்கு இனாம்.)

இரு துருவங்கள்

வி. எஸ். காண்டேகர் நாவல்களுள் தலைமை வகிப்பது

கா. ஸ்ரீ. ஸ்ரீ. அவர்களின் இனிய நடையில் மொழிபெயர்ப்பு ரூ. 6

திருப்பாவை — உரையுடன் — பி. ஸ்ரீ. இயற்றியது. ரூ. 1—8—0

அல்லயன்ஸ் கம்பெனி, (ஹ) சென்னை - 4

புல்லினில் வயிரப்படை

கவி சுப்பிரமணிய பாரதியார் இயற்கையை வர்ணிப்பதில் நிகரற்றவர். அவர் ஆங்கில கவிகளைக் காட்டிலும், இயற்கைக் காட்சிகளை அதிகமாக அனுபவித்துப் பாடியிருக்கிறார்.

ஆர். கே. விசுவநாதன்.

இயற்கை காட்சிகள் அளிக்கும் ஆனந்தத்தில், அவர் ஈடுபடுவது போல விஞ்ஞானிகள் ஈடுபடாவிட்டாலும் அவற்றின் மர்மங்களை அறியப் பின் வாங்குவதில்லை. இயற்கைக்காட்சிகள் ஒவ்வொன்றுக்கும் காரணங்களை கண்டறிந்திருக்கிறார்கள். "புல்லினில் வயிரப்படை" என்று அவர் ஓர் இடத்தில் பாடியிருப்பதின் மர்மத்தை இக்கட்டுரையில் ஆராய்வோம்.

பிரபஞ்சத்தைப் பற்றிய நமது அறிவுக்கு மூலகாரணம் ஒளி. சூரியனும் மற்றநக்ஷத்திரங்களும், நமக்கு ஒளியைத் தருகின்றன. இவ்வொளியைக் கொண்டுதான் அவைஇருக்கும் தூரங்கள், அவற்றின் தன்மை, அவற்றின் இயக்கம் முதலிய விவரங்கள் அறியப்படுகின்றன. சூரியனை விட்டு கிளம்பிய ஒளி நம் கண்ணுக்குள் புகுவதற்கு முன், அனேக மாறுதல்கள் அடைகின்றது. சூரியன் ஓர் பிழம்பு மண்டலம். இதை சூழ்ந்து பல்லாயிரம் மைல்கள் வரை தழல் நிலையில் அனேக வாயுக்களும் ஆவிகளும் இருக்கின்றன. ஒளி இதைத் தாண்டி வரும்போது அதற்கு சில மாறுதல்கள் உண்டாகின்றன. அப்புறம் அது கோடிக்கணக்கான மைல் தூரம் வெற்றிடத்தில் வருகிறது. இங்கு அதற்கு ஒரு மாறுதலும் ஏற்படுகிறதில்லை. பூமியை நெருங்கியவுடன் அதை சூழ்ந்துள்ள காற்று மண்டலத்தைத் தாண்டி வருகிறது. பூமியைச் சூழ்ந்துள்ள காற்று மண்டலம் சில மைல்கள் உயரம் வரை தான் வியாபித்திருக்கிறது. இதில் தூசி, நீர் இவற்றின் துகள்கள் எப்பொழுதும் மிதந்து கொண்டிருக்கின்றன. இவற்றைத் தாண்டி வரும்போது ஒளிக்கு இன்னும் பல மாறுதல்கள் உண்டாகின்றன. முடிவாக பூமியின் மேற்பரப்பிலுள்ள பொருள்களின் மீது விழுந்து அவற்றிலிருந்து நம் கண்ணுக்குள் நுழைகிறது. இப்பொருள்களும் ஒளியின் தன்மையை மாற்றுகின்றன. சில பொருள்கள், சூரிய ஒளியில் உள்ள நிறங்களில் பலவற்றை நீக்கிவிடுகின்றன. உதாரணமாக சிவப்புக் கண்ணடி, சிவப்பு நிற ஒளியைத் தவிர மற்ற நிறங்களை உறிஞ்சிவிடுகிறது. அதனால் தான் அது சிவப்பாக நமக்கு தென்படுகிறது. நீலக் கண்ணடி, நீல நிறமாகத் தோன்றுவதற்கு காரணம் அது மற்ற நிறங்களை உறிஞ்சிவிடுவதுதான். புல், பூண்டு மரம், செடிகள் முதலியன பச்சையாக தோன்றுவதற்கு காரணம், அவற்றில் உள்ள

இது சூரிய ஒளியிலிருந்து பச்சை நிறம் நீங்கலாக, மற்ற நிறங்களை நீக்கிவிடுகின்றது. இதைக் கண்டு "பார்க்கு மரங்களெல்லாம் நின் பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா" என்று பாடுகிறார் பாரதியார். இவ்வாறக ஒளிக்கு ஏற்படும் மாறுதல்கள்தான் எல்லா இயற்கை விநோதங்களுக்கும் காரணமாகின்றன.

●

பனிக்காலங்களில் பசும் புல்லில் சிறிய நீர்த்துளிகள் இருப்பதை அனைவரும் பார்த்திருக்கலாம். இச்சிறிய நீர்த்துளிகளை தான் வயிரப்படை என்று கூறுகிறார் பாரதியார். பசும் புல்லில் நீர்த்துளிகளாக படிவதின் மர்மத்தை முதலில் விளக்குவோம். நீர்த்துளிகள் எல்லாம் கோள வடிவமாக இருப்பதை கவனிக்கலாம். சாதாரணமாக நீருக்கு, தனக்கென்று ஓர் உருவம் கிடையாது. எந்தப் பாத்திரத்தில் அதை வைக்கிறோமோ அதன் வடிவத்தை அது மேற்கொள்ளும். அப்படி இருக்கும்போது புல்லின் மேல் கோள வடிவமாக நீர் எப்படி படிந்தது என்று நினைக்கலாம் அல்லவா? நீரின் மேற்பரப்பில் ஓர் சக்தி உண்டு. இதற்கு பரப்பு விகுவு என்று பெயர். இது நீர்ப்பரப்பை ரப்பர்த் தோலைப் போல இருக்கச் செய்து, அதற்கு சுருங்கும் தன்மையையும் அளிக்கிறது. ஒரு சோதனையினால் இதைப் பார்க்கலாம். நம் வீடுகளில் உள்ள குழாயைத் திருகி, நீர் சொட்டுச் சொட்டாக விழும்படி செய்து கவனியுங்கள். குழாயின் வாயினடியில் ஒவ்வொரு சொட்டும் முதலில் சிறிய அளவில் ஏற்பட்டு, வர வர பருமன் அதிகரித்துக்கொண்டே வந்து ஓர் அளவு பருமன் வந்தவுடன் கீழே விழுவதைப் பார்க்கலாம். இதன் காரணம் என்னவெனில்: நீர்ச் சொட்டின் மேற்பரப்பு ரப்பர்த் தோலைப் போல பெருத்துக் கொண்டு வந்து, ஒரு நிலையில் உள்ளிருக்கும் திரவத்தின் கனம் தாங்கமாட்டாமல் கீழே விழுந்து விடுகிறது. பாதரசத்தை அனைவரும் பார்த்திருக்கலாம். இதை தரையில் சிறிது சிந்தினால், அது மிகச் சிறிய உருண்டைகளாக ஓடுவதை பார்க்கலாம். இவ்வுருண்டைகள் எல்லாம் கோள வடிவமாக இருக்கும். எல்லா உருண்டைகளையும் ஒன்றுசேர்த்து பெரிய உருண்டையாக செய்தால் அதன் கோள வடிவம் மாறி தட்டையாக போவதை காணலாம். இதற்கு காரணம் என்னவெனில்: பாத[ரசம் சிறிய உருண்டைகளாக இருக்]

கும்போது, அவற்றின் எடை மிகக் குறைவாக இருக்கும். அவற்றின் பரப்பு மிகச் சுருங்கி பாதரசத்தை கோள வடிவத்துடன் இருக்குமாறு செய்கிறது. துளிகளை ஒன்றுசேர்த்துப் பெரியதாக செய்தவுடன் பாதரசத்தின் எடை அதிகரித்துவிடுகிறது. எடை சக்திக்கும், பரப்பு சக்திக்கும் போராட்டம் ஏற்படுகிறது. எடை சக்தி அதிக வலிமையுடன் இருப்பதினால், அது பாதரசத்தின் கோளவடிவத்தை மாற்றி சப்பட்டையாக இருக்கும்படி செய்து விடுகிறது. இதைப்போலவே புல்லினில் படிந்த நீர்த்துளிகள் மிகச் சிறியனவாக இருப்பதனால், அவற்றின் பரப்பு விகு துளிகள் கோள வடிவத்தை ஏற்குமாறு செய்கிறது.

இனி ஒளியைப் பற்றிய சில விவரங்களைக் கூறுவோம். ஒளி நன்றாக மெருகிடப்பட்ட கண்ணடியில் விழும்போது செவ்வையாக பிரதிபலிக்கப்படும். கண்ணடியைபோல மிருதுவாக இல்லாத பொருள்களில் பிரதிபலனம் ஒரு குறிப்பிட்ட திசையில் ஏற்படாமல் பல திசைகளில் உண்டாகும். இந்நிகழ்ச்சியை ஒளிப் பிரதிபலனம் என்று கூறாமல் ஒளிச் சிதறல்' என்று கூறுவார்கள். காற்று மண்டலத்திலுள்ள துகள்கள் இத்தகைய ஒளிச் சிதறலை உண்டுபண்ணுகின்றன. மற்றும் ஒளி ஒரு பொருளை தாக்கும்போது அதில் ஒரு பகுதி அதனுட் புகுந்து செல்லும்; காற்றில் செல்லும் வேகத்தைவிட குறைவான வேகத்துடன் ஒளி, மற்ற பொருள்களின் மூலம் செல்லுகிறது. காற்றிலிருந்து ஒரு பொருளுக்கு ஒளி போகும் போது காற்றும் பொருளும் கூடும் பரப்பில் ஒளிக்கு திசை மாற்றம் ஏற்படுகிறது. இத்திசை வேறுபாட்டை ஒளிக்கோட்டம் என்று கூறுவார்கள். பாலைவனங்களில் அவற்றைக் கடந்து செல்லுபவர்களுக்கு நெடுந்தூரத்தில் பெரிய நீர்நிலைகள் இருப்பது போலத் தோன்றும். இதை பின்னும் பலப்படுத்த அங்குள்ள ஈச்சமரங்களின் பிரதிபிம்பங்கள் அவற்றினடியிலே நீரில் தோன்றுவது போல தலை கீழாக தெரியும். இதைக் கண்டு, வழிப்போக்கர்கள் ஏமாறுவார்கள். இந்த நிகழ்ச்சியைத்தான் கானல்நீர் என்று சொல்லுவது. இதன் காரணம், பூரணபிரதிபலனம்தான். சூடான காற்றில் செல்லுவதை விட குறைவான வேகத்துடன் ஒளி, குளிர்ந்த காற்றில் செல்லுகிறது. பாலைவனத்தில் மணலின் வெப்பத்தினால் தரைக்குச் சமீபத்தி[ல் உள்ள காற்று]

உயர்ந்துவிடுகிறது. ஆனல் அவற்றுக்கு மேலுள்ள காற்று படலங்களின் சூடு அவ்வளவாக உயருவதில்லை. இதனல் ஈச்சமரங்களிலிருந்து கீழ்நோக்கி வரும் ஒளிக் கிரணங்களின் சாய்வு அதிகமானபோது, அவை மணலுக்கு அருகேயுள்ள காற்றுப் படலங்களுக்குள்ளே புக முடியாமல் பூரணமாகப் பிரதிபலிக்கப்பட்டு மேலெழுந்து காண்போன் கண்ணில் படுகின்றன. இது தான் கானல் தோற்றத்துக்கு காரணம்.

●

இனி புல்லின் மீது படிந்துள்ள நீர்த்துளிகள் ஒளியில் செய்யும் மாறுதல்களை கவனிப்போம். ஒவ்வொரு நீர்த்துளியும், ஓர் வைரக்கல்லை போல ஜொலித்துக் கொண்டு இருக்கிறது. வைரம், சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கும்போது அதற்கு அதிக ஜொலிப்பு இராது. சுரங்கங்களில், அது கூழாங்கற்களைப் போல மண்ணுடன் பதிந்து அகப்படுகிறது. அந்த மண்ணை இயந்திரத்தின் உதவியால் வெட்டி எடுத்து சுத்தி செய்வார்கள். மற்ற பொருள்களுக்கும், வைரத்துக்கும் ஓர் வித்தியாசம் உண்டு. வைரத்தில் வெகு சுலபமாக அனேக பூரண பிரதிபலனங்கள் ஏற்படுமாறு செய்யலாம். ஏனெனில், இதில் ஒளியின் வேகம், மற்ற பொருளில் இருப்பதை விட மிகக் குறைவு. அதனுள் புகும் ஒளிக்குப் பல பூரண பிரதிபலனங்கள் உண்டாகும்படி, அதை பலபடியாக பட்டை தீட்டுவது சாத்தியமாகிறது. ஒளிக் கிரணங்கள் ஏதேனும் ஒன்றிரண்டு முகங்களின் வழியாக மட்டும் வெளியே வருமாறு செய்யப்படும். இதைப்போலவே நீர்த் துளிகளினுள்ளேயும் சூரியனின் ஒளிக்கு பல முறை பிரதிபலனம் ஏற்படுகிறது. இதனல் ஒவ்வொரு துளியும் அதிகமான அளவுக்கு சூரியனின் ஒளியை தன்னுள் அடக்கி வைத்து கொள்ளுகிறது. ஒவ்வொன்றும் வைரத்தைப் போல ஜொலிக்கத் தொடங்குகிறது. மற்றும் வானவில்லில் உள்ளது போல நிறங்களும் அடிக்கடி ஜொலிக்கும். வானவில் உண்டாவதற்கும் நீர்த்துளிகள்தான் காரணம். வானத்தில் உள்ள நீர்த்துளிகள் ஒவ்வொன்றிலும் சூரிய வெளிச்சம் பல முறை பிரதிபலனம் அடையும்போது அது பல நிறங்களாக சிதறி வெளிப்படுகின்றது. சில சமயம் வானத்தில் இரண்டு, மூன்று வில்கள் ஒரேசமயத்தில் தோன்றும். நீர்த்துளிகளுக்குள் ஏற்படும் பிரதிபலன்ங்களைப் பொறுத்து இவ்வாறு பலவான வில்கள் தோன்றுகின்றன. எனவே, புல்லினில் வயிரப் படைக்குண்டான காரணங்களை

வித்வத் மண்டலம்

'கானதாஸன்'

ஸ்ரீ அரியக்குடி

"அண்ணா! நமஸ்காரம். வண்டி கொஞ்சம் லேட்டாகிவிட்டது போலிருக்கு. கொஞ்சம் சிரமபரிகாரம் பண்ணிண்டுபோவோமா? கச்சேரி கொஞ்சம் லேட்டா ஆரம்பிச்சா போச்சு."

"ஊஹூம். அதெல்லாம் ஒண்ணும் சிரமமும் வேண்டாம். பரிகாரமும் வேண்டாம். நேர கச்சேரிக்குப் போலாம். இப்பவே நாழியாயிடுத்து." இப்படிப் பதில் சொல்லக்கூடிய ஒரு வித்வான் உண்டென்றால், அது சாக்ஷாத் அரியக்குடியாகத்தானிருக்க முடியும்.

சென்ற சுமார் முப்பத்தி ஐந்து வருஷங்களாகச் சங்கீதக் கலைக்குச் சிறந்தசேவைசெய்துவரும் மேதை. தியாகப்ரம்மத்தினிடத்தில் அபார பக்தி கொண்டவர். கச்சேரிக்கு முன் சிரமபரிகாரமோ, சூடாக வெந்நீர், காபி இவைகளோ தேவை இல்லை. பஸ்ஸிலோ, ரயிலிலோ, வண்டியிலோ, நடந்தோ, மழையிலோ, பனியிலோ எப்பொழுதானாலும் அவர் வந்து கச்சேரி செய்ய உட்கார்ந்தவுடனேயே சரீரம், சாரீரம் இரண்டும் அவருக்கு அடிபணிந்து தயாராய் நிற்கும்.

மேடையில் உட்கார்ந்தவுடனேயே சபையை நோக்கி ஒருபார்வை. அவ்வளவுதான். சபையினரை அப்பார்வை அளந்து விடும். அந்தச் சபையினரைக் கவரும் வகையில் பாடிப் பிரமாத பெயருடன் கிளம்பிவிடுவார். ஸ்ரீ அரியக்குடியிடம் ஒரு குறிப்பிடத்தக்க விசேஷமுண்டு. 'பெயர்' என்பதற்காக பெரிய கைகளைப் பக்கவாத்தியமாகக் கொள்ளாமல் இளம் பக்கவாத்திய வித்வான்களில் அனேகருடன் பாடி, அவர்களை முன்னணிக்குக் கொண்டுவந்தவர். அவர் தமிழ்க் கீர்த்தனைகளை ஸ்வரப்படுத்தி வெளியிடுவதின் மூலம் தமிழிசையின் வளர்ச்சிக்குச் செய்யும் தொண்டை, யாரும் மறக்கவே முடியாது. அவருக்கு ஐம்பத்தியெட்டு வயதாகிறது.

சங்கீதபூபதி மஹாராஜபுரம்

சங்கீத வித்வான்களில் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் கிண்டலாகப் பேசிக்கொண்டிருக்கும் ஒருவர் உண்டென்றால், அது நமது மஹாராஜபுரம்தான் என்பது யாவருமறிந்த விஷயம். வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு கிண்டலாகவே பேசி நண்பர்களுடன் உல்லாசப் பொழுதுபோக்குபவர் இவர். எதையும் லட்சியம் செய்யமாட்டார். இவரது முகத்தில் வித்வத் வளர்ச்சியடைந்த தேஜஸை எப்பொழுதும் காணலாம். "கற்பனை" — இவரது சங்கீதத்தின் ஜீவநாடி. அந்தக் கால மஹாவித்வான்களிருக்கும் போதே தமது விறுவிறுப்பான பாணியின் மூலம் பிராபல்யமடைந்துவிட்டவர். மஹாராஜபுரத்தின் பாட்டு அவ்வளவு இலகுவில் பின்பற்றிப் பாடிவிடக் கூடியதல்ல. அவரது கற்பனை ஊற்றெடுத்தோடும்போதெல்லாம், நாமும் அப்படிப் பாடிவிடலாம் என்றே தோன்றும். ஆனால் மறுநாள், அதே குறிப்பிட்ட கற்பனைச் சங்கதிகளின் போக்கு வேறு மாதிரியாக இருக்கும். தனக்குச் சரியான வார்ஸாக ஸ்ரீ செம்மங்குடியைத் தயாரித்திருக்கிறார். தர்பார், மோஹனம், ஆரபி, ஆபேரி போன்றவைகளை மஹாராஜபுரம் பாடித்தான் கேட்கவேண்டும். 1945-ல் வித்வத் சபை மகாநாட்டில் 'சங்கீத கலாநிதி' பட்டம் பெற்றார். ஸங்கீத பூபதி, சங்கீத கலாநிதி மாஹாராஜபுரம் ஸ்ரீ விஸ்வநாதய்யர் அவர்களுக்குச் சென்ற செப்டம்பருடன் 52 வயது பூர்த்தியாகிவிட்டது.

★

கானகலாதர மணி ஐயர்

சங்கீத உலகில் இன்று ஒரு பாணிக்கு ஏக கிராக்கி இருக்கிறதென்றால், அது கானகலாதர மதுரை ஸ்ரீ மணி ஐயரவர்களது பாணிதான். ஸ்ரீ ஜி. என். பி. அவர்களைப்போன்று இவரும் ஒரு விதத்தில் சங்கீத மறுமலர்ச்சி வித்வான் என்றே சொல்ல வேண்டும். ஸ்ரீ ராஜம் பாகவதர், காயக சிகாமணி எல். முத்தையா பாகவதர், தந்தை ஸ்ரீ ராமஸ்வாமி ஐயர் போன்ற மேதைகளிடம் சிக்ஷை பெற்றவர். மணி ஐயர் வந்துவிட்டாரென்றால், ரசிகர் கூட்டம் மொய்த்துக் கொண்டுவிடும். அவர்களுக்கு ரொம்பவும் கட்டுப்பட்டு நடப்பவர் அவர். ரஸிகர்கள் வந்துவிட்டார்களென்றால், தான் பாடியாக வேண்டும் என்று அவருக்குத் தெரியும்! சுருதிகூடத் தேவையில்லை. ஆத்மார்த்தமாக யார் எதைக் கேட்டாலும் அதைப் பாடுவார் மிகுந்த உற்சாகத்துடன். பத்திரிகைகள் படிப்பதில் அவருக்கு மிகவும் உற்சாகம். அவைகளைப்பற்றி விமர்சனமும் செய்வார். சிறந்த ஹாஸ்யப்ப்ரியர். சுத்த சாவேரி, லதாங்கி, காம்போதி, சித்தரஞ்சனி, சங்கராபரணம் முதலியவைகள் இவரிடம் விசேஷமாயிருக்கும். கீர்த்தனைகளில் நிரவல் செய்வது என்பதை அதிகமாகப் புகுத்தியவர் ஸ்ரீ மணி ஐயர். "எத்தனையோ பிறவி", "தமிழ்நாடு செய்தவப் பயனாய் வந்து", "காலினில் சிலம்பு" முதலிய அடிகளை இப்பொழுது எல்லோருமே அனேகமாக நிரவல் செய்கிறார்களென்றால் அது ஐயரவர்களால்தான். இவர் சிஷ்யர்களைத் தயார் செய்யவேண்டிய அவசியமேற்படவில்லை. இன்றுள்ள இளம் வித்வான்களில் நூற்றுக்கு 75 பேர் ஸ்ரீ மணி ஐயரைப் பின்பற்றிப் பாடுகிறார்கள். கல்யாணக் கச்சேரியிலிருந்து உற்சவக் கச்சேரிவரை எதிலும் 5 மணி நேரத்திற்குக் குறைந்து கச்சேரி செய்யும் வழக்கம் இவரிடம் கிடையாது. கானகலாதர மதுரை ஸ்ரீ மணி ஐயரவர்களுக்கு நேற்றைய 25-ந் தேதியுடன் 36 வயது பூர்த்தியாகி விட்டது.

★

ஸ்ரீ ஜி. என். பி.

1939-ம் வருஷம். 40 என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்களேன். வருஷம் தவறோ இல்லையோ நான் சொல்வது ஸ்ரீ ஜி.என்.பி. குடுமி வைத்துக் கொண்டிருந்த (கடைசி) காலம். சென்னையில் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாடகர்தமது ஆள் காட்டி விரலையும்நடு விரலையும் சங்கதிபோடவேண்டிய இடத்தில் உருட்டிக் காண்பித்தாரே ஒழிய சாரீரத்திலிருந்து சங்கதிகள் வெளிப்படவில்லை. அவரது அரிய கற்பனையை இந்தச் சாரீரம் தடை செய்கிறதே என்றுவருத்தப்பட்டோம். அடுத்த ராகம், அதில் பாடகர் கையாட்டிய போதெல்லாம் சாரீரமும்வளைந்து கொடுத்தது. ஸ்ரீ ஜி. என். பி. யின் சாரீரம் அப்போதெல்லாம் ஒரு நிமிஷம் போல் மறுநிமிஷமில்லாமல் அவரைச் சிரமப்படுத்திற்று. அவர், 'அசுர சாதகம்' என்று சொல்லுவார்களே, அதைத்தான் செய்திருக்கவேண்டும்.

இல்லாவிடில் அன்று அவரை எவ்வழியிலும் போக விடாது தடுத்த சாரீரம் இன்று அவர் இஷ்டப்படியெல்லாம் ஆடுமா? தமது கல்வியை பி. ஏ. (ஹானர்ஸ்) வுடன் முடித்துக் கொண்டபின் ஜி. என். பி. ஸங்கீதத்தில் வெகுவாக ஈடுபட்டு அதைத் தொழிலாகக் கொண்டார் என்றால் ஸங்கீதக் கலையின் உயர்வும் அதில் அவருக்குள்ள பக்தியும் வெளிப்படுகிறதல்லவா?

"சங்கீத கலைஞர்களுக்குச் சன்மானத் தொகையை உயர்த்திய பெருமை ஸ்ரீ ஜி. என். பி. ஒருவரையே சேரும். தெய்வீகக் கலையை அப்பியசித்தவர்களுக்குரிய மரியாதைகள் செய்யப்பட வேண்டுமென்பதற்காக உழைத்தவர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர். ஸங்கீதத்துடன் சிறந்த கல்வியறிவும் கொண்டவராதலின், அவ்விஷயத்தில் ஒரு மறுமலர்ச்சியாளராக இருந்து வெற்றி கண்டவர். சங்கீத சம்பந்தமாக ஏராளமாக ஆராய்ச்சி செய்திருக்கிறார். சொந்தத்திலும் ஸாஹித்தியங்கள் கவனம் செய்திருக்கிறார். கல்யாணி, தோடி, வஸந்த பைரவி, காம்போதி, ஜோதிஸ்வரூபிணி இவை ஜி. என். பி. யிடம் விசேஷச் சிறப்புடன் விளங்கும். ஸ்ரீ ஜி. என். பி. சிறந்த ஆராய்ச்சியாளர் என்பதற்கு 'ஸ்ருதிபேத'த்தை அவர் அமலுக்குக் கொண்டுவந்ததைக் குறிப்பிட்டால் போதும்.

அரியக்குடி



மஹாராஜபுரம்



மதுரை மணி

ஜி. என். பி. →



இசையரசர் தேசிகர்

இன்றைய தமிழிசைக்கு உயிர் கொடுத்தவர்களில் ஸ்ரீ எம். எம். தண்டபாணி தேசிகர் முக்கியமானவர். சாஹித்தியத்திற்கும், பாவத்திற்கும் பிரதான்யம் கொடுத்து அவர் உணர்ச்சி வசப்பட்டவராய் கானாமுதம் பொழிவதை ரஸிக்காதவர் இருக்கமுடியாது. தமிழிசை தீவிரமாக இருந்த சமயம் தேசிகரின் தமிழ்ப் பாடல்கள் யாவரையும் தட்டி எழுப்புவதாயிருந்தது. தமக்குப் புகழ் வந்ததைக் காப்பாற்றிக் கொள்ள ரொம்பவும் சிரத்தையுடன் அப்பியாசம் செய்து வெற்றி கண்டவர். யாவரையும் கவரக்கூடிய பாட்டு தேசிகருடையது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, வேதநாயகம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார் முதலியோரின் தமிழ்ப் பாடல்களை தேசிகரிடம் கேட்க வேண்டும். இவரது பட்டப் பெயர் 'இசையரசர்' பொருத்தமாக அளிக்கப்பட்ட பெயராகும். தமிழிசையின் வளர்ச்சியில் உண்மையில் ஆர்வமும், உற்சாகமும் கொண்டு அல்லும்பகலும் உழைக்கும் தேசிகர், சொந்தமாகவே சில பாடல்களை இயற்றியிருக்கிறார். சிறந்த பக்திமான். சிநேகத்திற்கு ரொம்பவும் பாத்திரமானவர்.

★

ஸ்ரீ. வி. வி. எஸ். பி. ஏ.

ஒருசமயம் ஸ்ரீ வி. வி. எஸ். வீட்டிற்குப் போயிருந்தேன். அப்பொழுது தான் அவர் முகம் கழுவிக்கொண்டு அலங்காரங்கள் செய்வதில் முனைந்தார். இடையிடையே என்னுடன் பேசிக்கொண்டிருந்தார். பார்த்தஸாரதி ஸ்வாமி சபாவில் அன்று ஸ்ரீ பாபா பிடிலுடனும், ராமநாதபுரம் ஸ்ரீ ஈஸ்வரன் மிருதங்கத்துடனும் கச்சேரி. அலங்காரம் முடிந்ததும் தாய் தந்தையரை அழைத்தார். அவர்களிருவரும் வந்து சேர்ந்தாற் போல் நின்றனர். ஸ்ரீ வி. வி. எஸ். அவர்களிருவரையும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விட்டு எழுந்து கச்சேரிக்குக் கிளம்பினர். இக்காட்சி, அவரது சங்கீதத்தைப் போலவே என்னை மெய்சிலிர்க்க வைத்தது. 1947-ம் ஆண்டில் பி. ஏ. படித்த ஒருவர், தனது தாய் தந்தையரை வணங்குகிறார் என்பதை நம்புவதுகூட எனக்குக் கஷ்டமாக இருந்தது. மஹாவித்வான் நாமக்கல் சேஷய்யங்காரிடம் குருகுலவாஸம் செய்தவர். சாக்ஷாத் அரியக்குடியின் பாணியைச் சேர்ந்தது இவரது பாணியும் காம்போஜி. சரஸ்வதிமனோஹரி போன்றவை களைப் பாடுவதில் அலாதி பிரியமும் உற்சாகமும் கொண்டவர். சாஹித்தியங்களைச் சுத்தமாகவும் பாவ பூர்வமாகவும், பாடுவதில் சிரத்தை கொண்டுள்ளவர். ஸ்ரீ வி. வி. எஸ்.ஸுக்குக் 'கானரத்ன' என்ற பட்டமளிக்கப்பட்டது பாராட்டத்தக்கது. 'உள்ளூர் மாடு விலை போகாது' என்ற பழமொழியைப் பொய்யாக்கி திருநெல்வேலிவாசிகளே, இவரை அங்கேயே அழைத்துப்பட்டமளித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கானரத்ன ஸ்ரீ வி. வி. சடகோபனுக்குச் சென்ற பிப்ரவரி 4-ந் தேதியுடன் 33 வயது முடிவடைந்து 34-ம் வயது நடைபெறுகிறது.

★

ஸ்ரீ எஸ். வி. பி.

இளம் கலைஞர்களில் சகஜமாக எல்லோருடனும் பேசிப் பொழுது போக்கும் குஷிப்பேர்வழி ஸ்ரீ பாச்சா, எப்பொழுதும் கலகலவென்று பேசிக் கொண்டிருக்கவேண்டும் அவருக்கு. ரொம்பவும் தங்கமான குணம். மேடைகளில் இவர் உட்காரும்போது 'இவர் என்ன செய்துவிடப் போகிறார்' என்று தோன்றும். ஆனால் கச்சேரியில் பக்கவாத்தியக்காரர்கள், இவரது விருவிருப்புக்கு ஈடுகொடுப்பதற்காக வியர்வை விடும்பொழுதுதான், இவரது சக்தி வெளியாருக்கு நன்கு தெரியும். சிறந்த ஹாஸ்ய எழுத்தாளர்களில் ஒருவரான ஸ்ரீ. எஸ். வி. வி. யின் இரண்டாவது குமாரர். பாடுவதைக் கடமையாகக் கொண்டவர். தியாகப்ரம்மத்தினிடமும், ஐயங்காரிடமும் அலாதி பக்தியும் பிரீதியும் கொண்டவர். தர்பார், காம்போதி, சங்கராபரணம், பைரவி, ஹிம்மேந்த்ர மத்யமம் இவைகளை ரொம்பவும் அழகாகப் பாடுவார்.

★

ஸங்கீதபூஷணம் சாத்தூர்

தூக்கிவாரிப் போடுகிறதல்லவா? ஸ்ரீ சாத்தூர் 'ஸங்கீதபூஷணம்' என்று எனக்கு எழுதியபோதுகூடத் தூக்கி வாரிப் போடத்தான் செய்தது. அதுவும் 'சங்கீதம் வீசை என்ன விலை' என்று கேட்கக்கூடிய குடும்பத்தில் பிறந்த சாத்தூர், ஒரு சங்கீதவித்வானாக வந்து புகழும் பெற்றிருக்கிறார் என்றால், அவருக்குச் சங்கீதத்திலுள்ள பக்தி நன்கு விளங்கும். என் சம்பந்தப்பட்டவரையில் 'தமிழ்நாடு செய்தவப் பயனாய்' வந்தவர்களில் அவரும் ஒருவர் என்பதே அபிப்பிராயம். அவரைப் போன்ற தன்னடக்கமும், பக்தியும் கொண்டவர்கள் ஒரு சிலர்தான். ஒருவரது பாணியைப் பின்பற்றாமல் தங்களுக்கென தனி வழியைச் சிருஷ்டித்து கொண்டு முன்னேறியவர்களில் சாத்தூர், ஸ்ரீ எஸ். வி. பார்த்தஸாரதி இவர்களுக்கு முக்கிய ஸ்தானமுண்டு. சாத்தூரின் முதல் முக்கிய கச்சேரி ஐயர்வாள் உற்சவத்தில்தான் நடைபெற்றது. கணீரென்ற வெண்கல நாத சாரீரமும் அவரது ஞான வளத்தை முரசுகொட்டி அறிவிக்கிறது. 'சங்கராபரணனை அழைத்தோடி வாடி கல்யாணி தர்பாருக்கு' என்ற பல்லவியை ஐயங்காருக்கு அடுத்தபடி சாத்தூரிடம்தான் கேட்கவேண்டும். அவருக்கு 32 வயது பூர்த்தியாகிவிட்டது.

★

ஸ்ரீ டி. ஆர். பி.

இந்த மூன்று எழுத்துக்களுக்குச் சங்கீத உலகில் வெகு விரைவில் நல்ல கிராக்கி இருக்குமானால், அதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமேயில்லை. ஸ்ரீ ஜி. என். பி. யின் மனப்பூர்வமான ஆசியுடன் சிக்ஷைபெறும் இளம் கலைஞர். குருவின் பெயரை முன்னுக்குக் கொண்டுவரும் நிலையிலுள்ள ஒரு சில சிஷ்யர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர். ஸ்ரீ ஜி. என். பி. இயற்றிய கீர்த்தனைகளைப் பாலு பாடிக் கேட்கவேண்டும். மிகவும் அடக்கமான சுபாவம். இனிய பேச்சு. இவைதான் பாலுவை நமக்கு நன்கு அறிவிக்கின்றன.

★

கானசரஸ்வதி. ஸ்ரீமதி டி. கே. பி.

பெரும்பாலும் கேள்வி ஞானத்தாலும், கலைத் தேவியின் கடைக்கண் பார்வையினாலும் சங்கீதக் கலையின் சிகரத்திற்கு வந்த விதூஷி ஸ்ரீமதி டி. கே. பி. எங்கு கச்சேரி நடைபெற்றாலும் 'பட்டா'வைக் கையோடு பிடித்துக்கொண்டுவந்து சங்கீதத்தாத்தா அவரை 'அதைக் கவனி. இதைக்கவனி' என்று சொல்லியபோது, அவருக்கு விருப்பிருந்ததோ வெறுப்பிருந்ததோ, எதுவானாலும் அவரை அதுதான் முன்னுக்குக் கொண்டுவந்தது. குடும்ப ஸ்திரீகள் கச்சேரி செய்வது தவறு என்ற கொள்கை அதி தீவிரமாக இருந்தகாலத்தில் துணிந்து பட்டம்மாள் மேடையேறியதனாலேயே பல குடும்பப் பெண்மணிகள் கச்சேரி செய்யக் கிளம்பினார்கள். விவகாரத்தில் அவரை மிஞ்சக்கூடிய வித்வாம்சினி யாரும் கிடையாது என்பதைத் தீர்மானமாகக்கூறலாம். பாரதி பாடலுக்கு ஏற்கெனவே இருந்த மதிப்பை அதிகப்படுத்தியவர் டி. கே. பி.

ஆரம்ப காலத்தில் அவருக்கு முன்னேற்றத்தைக் கொடுத்தது ரிகார்டுகளே. அவருக்கு இப்பொழுது அளிக்கப் பட்டுள்ள 'கான சரஸ்வதி" என்ற பட்டத்தை விட பொருத்தமாகவோ உயர்வாகவோ வேறு பட்டமளிக்க முடியாது. கானசரஸ்வதி இன்றுள்ள அனேக மஹாவித்வான்களும் ஒப்புக்கொண்டு பாராட்டும் விதத்தில் சம்பிரதாய பத்ததி தவறாமல் பாடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

★

ஸ்ரீமதி எம். எஸ். எஸ்.

அகில இந்திய புகழ்பெற்றபாடகி. அவரதுசாரீரத்திலிருந்த இனிமையைக் கண்டு இந்தியா பூராவுமே அதிசயித்தது. யாழ், குழல், மக்கள் மழலை எல்லாவற்றையும் விட இனிதாயிருந்தது அவரது சாரீரம். அவரது பாட்டில் பாவமும் உணர்ச்சியும் பிரதானம் வகிக்கும். கீர்த்தனைகளில் நிரவல் என்ற அம்சத்திற்குப் புது மணம் கொடுத்தவர். 'பல பல என்னும் காலைப் பாடும் புள்ளோசை'யையும், 'பருத்தவில் இவன் கைக்குப் போதுமோ போதாதோ' என்பதையும் அவர் வர்ணித்துத்தான் கேட்கவேண்டும். ஹிந்தி கற்று ஒரு அரசியல் பாடகியாகவும் மாறிவிட்டார். அண்ணல் நினைவு கீதங்களை இசைப்பதன் மூலம் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் சங்கீதத் தொண்டு புனிதமானது. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சங்கீத ரஸிகளின் உள்ளத்திலும் இடம் பெற்றுவிட்டவர் ஸ்ரீமதி எம்.எஸ்.எஸ்.

★

ஸ்ரீமதி என். ஸி. வி.

ஸ்ரீமதி. எம். எஸ். ஸின் 'ட்யூப்ளிகேட்' என்று சொல்லப்பட்டவர். நல்ல ஞானஸ்தர். கானம் மெய்சிலிர்க்க வைக்கும். பாணி அழகானது சுத்தானந்தரின் பாடல்களை இவரைவிட அழகாகப்பாடுவதில்லை என்பது அனேகரது அபிப்பிராயம்.

★

ஸ்ரீமதி வைக்கம்

'ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே' என்று ஆரம்பித்துக் கதாகாலக்ஷேபம் செய்துகொண்டே சங்கீத உலகில் பிரவேசித்த இவரை, "மேடையேறிக் கச்சேரி செய்' என்றார் ஸ்ரீ ஜி. என் பி. அதை அப்பொழுதே ஒப்புக்கொண்டு 'நீரே நாலு கீர்த்தனம் சொல்லி வையுமேன்' என்றார் சரஸ்வதி. இப்படி ஆரம்பமான சிக்ஷையின் மூலம் முன்னுக்கு வந்துவிட்டவர்ஸரஸ்வதி. அவரைப்போன்ற கள்ளங் கபடமற்ற, குழந்தையுள்ளம் படைத்தவர்கள் யாருமே இருக்கமுடியாது.

யாவருடனும் இன்முகத்துடன் சகஜமாகப் பேசும் சுபாவம் உள்ளவர். பூனைக்குட்டியைச் சதாகாலமும்கொஞ்சுவதும் என்னைப் போல விதியே என்றுரேடியோபெட்டியருகில் நின்று தவம் கிடப்பதும், இவரது பொழுது போக்குகள். டாம்பீகம் இவர்பக்கம்தலை காட்டக்கூடாது. ஐந்து மணி நேரத்திற்குக் குறைந்து கச்சேரி செய்யும் வழக்கம் இவரிடம் கிடையாது. நிறைய கற்கவேண்டுமென்ற ஆர்வம். காலக்ஷேபதிலகம் கவாய் விஸ்வநாத பாகவதரின் பெண்தான் ஸ்ரீமதி வைக்கம் சரஸ்வதி.

★

ஸ்ரீமதி எம். எல். வி.

லலிதாங்கி—வஸந்தகுமாரி என்ற இருவரது பாட்டையும் கேட்டவர்கள் அவர்களிடம் ஓரளவுக்கு நம்பிக்கை வைத்திருந்தார்கள். அதில் லலிதாங்கியின் குமாரியான வஸந்தகுமாரி தன்னுடைய பாணியை ஏற்கெனவே இருந்த பாணியிலிருந்து மாற்றிக் கொண்டார். ரஸிகர்கள் பிரமித்தார்கள். இப்படி அற்புதமாகப் பாடக்கூடிய பாடகி எங்கிருந்து திடீரென்று முளைத்தார் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீ ஜி. என். பி. யின் பாணியைப் பின்பற்றிய அவரது சங்கீதம் விரைவில் அவருக்குக் கியாதியைக் கொண்டுவந்து கொடுத்தது. ஸ்ரீ ஜி. என். பி. யிடம் சிக்ஷை பலமாக நடைபெற்றது. சாரீரமும் ரவை சாரீரமாக மாறிற்று.

★

ஸி. பி. ராதா—ஆர். ஜெயலக்ஷ்மி

சில மாதங்களுக்கு முன்பு நண்பரொருவரைச் சந்தித்தேன். அவர் சிறந்த ரஸிகர். யாரையும் பற்றி உயர்வாகவோ தாழ்வாகவோ சொல்ல மாட்டார். ஒருவரை சிபார்சு செய்யும் வழக்கமும் அவரிடம் கிடையாது. அப்படிப்பட்டவர் என்னைப் பார்த்து, "ஸார்! இன்னிக்கு ஒரு கச்சேரிக்கு அழைச்சுண்டு போறேன். அந்தக் கச்சேரியைப்பற்றி நீங்க அவசியம் எழுதணும்," என்றபோது எனக்கு வேடிக்கையாகக் கூட இருந்தது. ஆனால் கச்சேரியைக் கேட்ட பின்பு, அவர் சிபார்சு செய்யவேண்டியது அவசியம்தானென்றே தோன்றியது. மிக்க இளம் வயது. கணீரென்ற மதுர சாரீரம். பிராசீன சிறப்பு வெளிப்படும்படியாகப் பாடும் பாணி. மெருகடைந்த ஞானம். தன்னம்பிக்கையுடன் தைரியமாக அடித்துப் பாடும் ஸ்வர வரிசைகள்; இப்படிப்பட்ட உயர்ந்த சங்கீதத்திற்கு நண்பரைப் போன்றவர்களது சிபார்சு அவசியமே. ஸ்ரீ. ஜி. என். பி. யின் சிஷ்ய சிகாமணியான ஸ்ரீ டி. ஆர். பாலசுப்ரமணியத்திடம் சிக்ஷை பெற்று வருகிறார்கள். பாடும்போதே இவர்கள் ஜி. என். பி. வகையைச் சேர்ந்தவர்களென்ற தீர்மானம் ஒவ்வொருவருக்கும் ஏற்படும். புகழேணியை நோக்கிச் செல்லும் சகோதரியர் - இந்த ராதாவும், ஜெயலக்ஷ்மியும்.

இப்பக்கங்களில் குறிப்பிடப்பட்ட வித்வான்கள், வித்வாம்ஸினிகளைத் தவிர இன்னும் பலவித்வத்மணிகள் இருக்கின்றனர் என்பது தெரிந்த விஷயமே. வாத்திய வித்வான்கள் யாரையும்பற்றி இங்கே குறிப்பிடவில்லை. வேறொரு சமயத்தில் தனிக் கட்டுரையொன்றுக்கு அவர்கள் உதவுவார்களல்லவா? அன்றியும் இடவசதி, இதர வசதிகள் இப்படிப் பல இருக்கின்றனவே. இந்த வித்வத்மண்டல வரிசைக்கும், வித்வான்களின் மேதைக் கிரமத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

—ஆ-ர்.

என். வி. வி.

டி. கே. பி.



எம். எஸ். எஸ்.

வஸந்தகுமாரி.

செம்மங்குடி.

வைக்கம் சரஸ்வதி.



சித்தூர்.

டி. ஆர். பி.

ஸ்ரீ செம்மங்குடி

சங்கீதத்தை நாதோபாஸனையின் மூலம் பெற்ற பக்திமான். பக்தர்கள் பகவானுடன் ஐக்கியமானது போல் சங்கீதத்துடன் ஐக்கியமாகிவிட்டவர் இவர். பாவத்திற்குப் பிரதான்யம் கொடுத்துப் பாடுபவர். இரட்டைத் தம்புரா நாத சாரீரத்தில் சுருதியுடன் ஐக்கியமாகிப் பாட ஆரம்பித்துவிட்டால், ரஸிகர்கள் மெய்மறந்து அந்தக் கானவெள்ளத்தில் மூழ்கவேண்டியதுதான். ரஸிகர்களின் கற்பனைக் கெட்டாத வேகத்தில் ரவை பொழியும் சாரீரம்.

மஹாராஜபுரம் ஸ்ரீ விஸ்வநாதய்யர், அவரது குரு உமையாள்புரம் சுவாமிநாதய்யர் இவர்களிடமும் சிக்ஷை பெற்றவர். தம் குரு சங்கீத பூபதியின் காலத்திலேயே புகழைப் பெற்று, அதன்மூலம் அவருக்கு மதிப்பையளித்தவர். ஏட்டோடு ஏடாகக் கிடந்திருக்கவேண்டிய மஹாராஜா ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் அவர்களது சாஹித்தியங்களை ஸ்வரப்படுத்தி அவைகளுக்கு உயிருண்டாக்கியவர். கரஹரப்ரியா, ஆரபி, ஸ்ரீரஞ்சனி, ஷண்முகப்ரியா, நாதநாமக்ரியா, மஞ்சரி இவைகளைச் செம்மங்குடியிடம்தான் கேட்கவேண்டும். விருவிருப்பினால் பாவம் கெடாது என்ற உண்மையை வெளிப்படுத்துவது போல் அவர் பாடிய பின்னரே அவைகளை யாவரும் கையாளத் தொடங்கினர். சங்கீதம் தவிர மற்ற உலகிலும் நன்கு பழகியவர் ஸ்ரீ செம்மங்குடி. எப்பொழுதும் கட்டுக் கட்டாக விபூதியுடன் விளங்குவார். பாரதியாரிடம் சிறந்த பக்தி கொண்டவர். ‘தீராத விளையாட்டுப்பிள்ளை’ வாயில் ஆறேழு கட்டெறும்பை விட்டு விளையாடும் அழகையும், ஆசைமுகம் மறந்துபோய்விட்டதையும், அவர் வர்ணிக்கும்போதுதான் கேட்கவேண்டும். சென்ற வருடம் ‘சங்கீத கலாநிதி’யான ராஜ்யஸேவாநிரதருக்கு சென்ற ஜுலை 25-ந் தேதியுடன் 40 வயது பூர்த்தியாகிவிட்டது.

இசைமன்னர் ஸ்ரீ சித்தூர்

குருவின் பரம்பரை சொத்தைப் பாதுகாப்பதற்கென்றே பிறந்தவர் ஸ்ரீ சித்தூர்.

ஸ்ரீ சித்தூர் பெரிய சீர்திருத்தவாதி. ஜாதிக் கட்டுபாடுகளும், சமூகச் சட்ட திட்டங்களும் வெகு தீவிரமாயிருந்த அந்தக் காலத்தில், கடுமையான அவைகளை மீறி நாயுடு வகுப்பில் பிறந்த அவர் பிள்ளையாக மாறுவாரா?

இது அவருக்குக் குருவிடமிருந்த பக்தியையும் அடக்கத்தையும் கூடக் காண்பிக்கிறது. சங்கீத சிம்மம் என்று அழைக்கப்பட்ட காஞ்சீபுரம் நாயனாப் பிள்ளையவர்களின் பெயரை நிலைநாட்டிவிட்டார் ஸ்ரீமான் சுப்ரமணியப் பிள்ளை, ஸ்ரீ சித்தூர் அவர்களிடம் அபூர்வ ராகங்கள் நேர்த்தியாக இருக்கும். அவருக்கு இவ்வளவு புகழைக் கொடுத்தது அவரது விருப்பத்திற்கிசைந்த மதுரா நகரிலோ’ என்ற ஆனந்தபைரவி உருப்படிதான். தன்னடக்கமும், யாவரிடமும் அன்பும், மிகுந்த தெய்வபக்தியும் கொண்டவர் ஸ்ரீ சித்தூர்.

இவருக்கு விளையாட்டுகளிலும் முக்கியமாக கிரிக்கெட்டிலும் ரொம்பவும் ஆர்வமுண்டு. விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல் அண்ணாமலைச் சங்கீதப் பள்ளியின் பிரின்ஸிபாலாக வேலை பார்த்து வருகிறார்.

எத்தனை பக்கவாத்தியங்களை ஏற்பாடு செய்தாலும், அவ்வளவுக்கும் சரியான வேலை கொடுக்கக்கூடிய லயஞான மேதை இவர். சாரீரமும் அதற்கேற்றுப்போல் எடுப்பாக அமைந்திருக்கிறது. இசைமன்னர் சித்தூர் ஸ்ரீ சுப்ரமணியப் பிள்ளைக்கு சென்ற ஜூன் மாதத்துடன் 50 வயது பூர்த்தியாகிவிட்டது.



தேசிகர்.



வி. வி. எஸ்.

சாத்தூர்.

எஸ். வி. பி.

முன்னணிக்கு வரும் வழிகள்

தற்காலம் உள்ள சங்கீத உலகத்தில், எண்ணிறந்த இளம் பாடகர்கள் உலாவி வருகிறார்கள். அவர்களில் குருகுலவாசத்தின் மூலம் சங்கீதம் அப்யசித்தவர்களும், கலாசாலைகளின் மூலம் சங்கீதம் படித்தவர்களும், ரேடியோ, இசைத்தட்டுகள், சங்கீத சபைகள் ஆகியவற்றின் உதவியால் சங்கீதம் கேட்டுத் தெரிந்துகொண்டவர்களுமாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கச்சேரி செய்தும் வருகிறார்கள். இவர்கள் எல்லோரும் சங்கீத உலகத்தில் முன்னணிக்கு வந்து புகழுக்குப் பாத்திரமாவார்களா என்றால் அதற்குச் சரியான பதில் முடியாது என்றுதான் சொல்ல முடியும். ஏனென்றால், சங்கீதத்தில் முன்னுக்கு வருவதற்கு வேண்டிய அம்சங்களில் முக்கியமாக குரு பக்தி, பொறுமை, தைரியம் விடா முயற்சி இவைகள் அவசியம். இவைகளில் முதலாவதாக குரு பக்தி என்றால், நாம் அப்யஸிக்கப்போகும் குருவினிடத்தில், அவர் சங்கீதத்தில் விசேஷமான பாண்டித்யம் உள்ளவராக இருந்தாலும் சரி, சாதாரணமான பாண்டித்யம் உள்ளவராக இருந்தாலும் சரி, நாம் சங்கீதம் என்ற கலையை அவரிடமிருந்து தெரிந்து கொள்வதால், அவரிடம் உண்மையான பக்தியோடும் மரியாதையோடும் நடந்துகொள்ளுதல் என்பது, பிறகு பொறுமை; சங்கீதத்தை நாம் தெரிந்துகொள்ளும் போது நம்மை பறியாமலேயே நமக்குப் பொறுமை ஏற்பட்டுவிடும். ஏனென்றால் இக் கலையில் பொறுமையைச் சோதிக்கும்படியான சம்பவங்கள் அப்யஸிக்கும் காலத்தில் சகஜமாக நேரக்கூடியவை. உதாரணமாக சங்கீதம் பயிலும்போது, குரு நமக்குச் சொல்லிக் கொடுக்கும் சமயத்தில், அவர் பிடிக்கும் ஒரு சங்கதி நமக்கு வராமலிருக்கும். அதைக் கேட்கும்போது அது நமக்கு சுலபமாக இருக்கும். ஆனால் அதை நாம் கையாளும் போது நமது பொறுமைக்குச் சோதனை ஏற்படுவதும் இயல்பே.

●

இந்த இடத்தில் எனக்கொரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. எனது பன்னிரண்டாவது வயதில் நான் எனது குருநாதரான ஸ்ரீ உமையாள்புரம் சுவாமிநாதய்யர் அவர்களிடம் பாடம் கேட்டேன். குருகுலவாசத்தின் போது ஒரு நாள், என் குருநாதர் என்னோடு சேர்ந்து இன்னும் மூன்று பேர்களுக்குச் சங்கீதம் சொல்லிக் கொடுத்து வரும்போது, என்னை ஒரு அபூர்வ ராகக் கீர்த்தனைக்கு ஸ்வரம் பாடும்படி கேட்டார். எனக்குத் தெரியாது என்று சொன்னேன். பிறகு மற்றொரு பையனை அதே கீர்த்தனைக்கு ஸ்வரம் பாடும்படி சொன்னார். உடனே அவன், மேற்படி கீர்த்தனைக்கு நான்கு ஆவர்த்தனங்கள் ஸ்வரம் பாடினான். உடனே என் குருநாதன் என்னைப் பார்த்து, "விசுவநாதா, பார்த்தாயா, அவன் ஸ்வரம் பாடுகிறதை. நீயும் பாடவேண்டாமா? தெரியாது என்று சொல்கிறாயே" என்று என்னை இடித்துக் காண்பித்தார். உடனே எனக்கு ரோஷம் ஏற்பட்டு விட்டது. ஸ்வரம் பாடின பையன் மேல் பொறாமை ஏற்பட்டது. உடனே வீட்டிற்குப் போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டு கிளம்பிவிட்டேன். பின்னர் இரண்டு வாரங்கள் வரை குருநாதன் வீட்டுப் பக்கம் போகவே யில்லை. அந்தக் கீர்த்தனைக்கு ஓயாமல் ஸ்வரம் பாடி சாதகம் செய்துகொண்டு பிறகுதான் என் குருநாதரிடம் சென்றேன். "கீர்த்தனைக்கு ஸ்வரம் பாடுகிறேன், தாங்கள் கேட்க வேண்டும்" என்று சொல்லி சுமார் இருபது ஆவர்த்தனங்கள் ஸ்வரம் பாடினேன்; என் குருநாதரின் மதிப்பையும் பெற்றேன். ஆகையால், சங்கீதம் கற்பதில் பொறுமை மிகவும் அவசியம்.

அடுத்தபடியாக விடாமுயற்சி சங்கீதத்திற்கு இன்றியமையாததாகும் என்பதைக் காட்ட மேலே கூறப்பட்ட என் குருகுலவாச சம்பவத்தையே எடுத்துக் கொள்ளலாம்.

●

கீர்த்தனங்கள் பாடும் மாதிரியோ, ஸ்வரம் நிரவல் முதலியவைகள் பாடும் மாதிரியோ நமக்கு எளிதில் வராமற் போனால், விடா முயற்சியோடு சாதகம் செய்து, அதை நம் வசத்திற்கு கொண்டுவர முயலவேண்டும். அதைத்தான் நாம் பாடிப் பார்த்தோமே, அது தான் நமக்கு வரவில்லையே என்று எண்ணி விட்டுவிட்டால், பிறகு அது நமக்கு வராமலேதான் போய்விடும். 'முயற்சி மெய் வருந்தக் கூலி தரும்' என்ற சொல்லுக்கு இணங்க, முயற்சியோடு உழைத்தால் முன்னணிக்கு வர இடமுண்டு.

●

குருமுகமாக சங்கீதத்தை அப்யாசித்தாலும், கலாசாலைகளின் மூலம் சங்கீதக் கலையைப் படித்தாலும் அனுசரிக்க வேண்டிய வழிகள் மேற்கூறப்பட்டவையே. இன்னும் சங்கீதத்திற்கு வேண்டிய அம்சங்கள் அநேகம் இருக்கின்றன. அநேகமாக எல்லாக் கீர்த்தனங்களும் பாடமிருத்தல் அவசியம். ஒரே ராகத்தில் பல கீர்த்தனங்கள் இருந்தாலும், அவை எல்லாவற்றையும் சலிப்பில்லாமல் பாடாந்தர சுத்தமாக இருக்குமிடத்தில் பாடம் செய்ய வேண்டும். எத்தனைக்கு எத்தனை கீர்த்தனங்கள் பாடாந்தரம் அதிகமாக இருக்கிறதோ அத்தனைக்கு அத்தனை ராகம் பாடும்போது கற்பனைகள் அதிகம் தோன்றும், வந்த சங்கதிகள் வராமல் கற்பனையோடு ஒரே ராகத்தை வெகு நேரம் வளர்த்திப் பாட இவைகள் இடமளிக்கின்றன. உதாரணமாக ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் கீர்த்தனைகளாகிய ஏலநீ தயாரது, ஏபாபமு, நாரத கான லோல, இலலோ ப்ராணதார்த்தி முதலிய அடாணா ராகத்திலுள்ள கீர்த்தனைகளை எடுத்துக்கொள்ளலாம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான எடுப்பு; வித விதமான கற்பனைகள், ஸ்வர ப்ரஸ்தாரங்களின் அமைப்பில் வித்தியாசங்கள் முதலியன இம்மாதிரியான ஒரே ராகத்திலுள்ள பல கீர்த்தனைகளில் அடங்கியிருக்கின்றன. மேலும் ராகங்கள் பாடும் வழிகள் 'கன்னா பின்னா' என்றிராமல் பெரியவர்களின் கீர்த்தனங்களின் நடையைப் பின்பற்றி சம்பிரதாய சுத்தமாக அமைய வேண்டும். கீர்த்தனங்கள் பாடும் வழிகள் கேட்பதற்கு சுத்தமாகவும் கௌரவமாகவும் இருக்குமாறு உழைக்க வேண்டும். உழைப்புக்கு தகுந்த பலன் என்றும் கிடைக்கும். மேற்கூறப்பட்ட வழிகளில் சங்கீதத்தில் இளம் பாடகர்களுக்கு உழைப்பு இருந்தால்தான் முன்னணிக்கு வரமுடியும். இவைகள் பல பேர்களிடத்தில் இல்லாமலிருப்பதால்தான் எல்லோரும் முன்னணிக்கு வரமுடியாமல் இருக்கிறது.

●

மேலும் சங்கீதம் என்பது சாதாரணமான கலையல்ல. தெய்வீகக் கலை. அது ஒருவருக்குப் பரிபூர்ணமாக ஏற்பட்டிருந்தால், அது அவர்கள் பூர்வஜன்மத்தில் செய்த புண்ணியத்தால் ஏற்பட்டுள்ளது; அது அவர்களை அடையவேண்டும் என்கிற பிராப்தம் அவர்களுக்கு இருக்கிறது என்கிற உண்மையை ஸத்குரு ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் தேவகாந்தாரி ராகத்தில் உள்ள 'ஸீதாவா ஸங்கீத' என்ற கிருதியில் அழகாக வர்ணித்திருக்கிறார். குருகுலவாசம் செய்யாமலும், சங்கீத கலாசாலைகளில் சங்கீதம் முறைப்படி பயிலாமலும், கேள்வி மூலம் சங்கீதம் தெரிந்துகொண்டு கச்சேரிகள் செய்து பெயருடன் விளங்குகிறார்களே என்று கேட்கலாம். ஒரு மனிதனுக்குத் தன் ஆயுளில் எப்போதாவது உயர்ந்த காலம் என்பது ஒன்று உண்டு. அது எந்த மனிதனுக்கும் உண்டு. அப்படி வரும் கால அளவில் இயற்கையில் சங்கீத ஞானம் இருப்பதாலும், அதிர்ஷ்டம் என்ற புகழ்காலம் வரும்போதும், தனக்குத் தெரிந்த சங்கீதத்தின் உதவியால் புகழடைகிறார்கள். அஸ்திவாரமில்லாமலும், உழைப்பு இல்லாமலும் எளிதில் கிடைக்கும் மேற்கண்ட புகழ் நீடிக்காது. குருகுலவாசத்தின் மூலமாகவும், தனது அசுர சாதக பலத்தினாலும் சிறந்தது. அது தான் ஆயுள்பூராவும் தாக்குப்பிடிக்கக்கூடிய ஒரு சொத்து.

●

மேற்கூறப்பட்ட சிறந்த குருகுலவாசம், சலியாத உழைப்பு முதலிய அம்சங்களில் பூரண வெற்றி பெற்றும், முன்னுக்கு அதாவது பாமரர் முதல் பண்டிதர் வரை போற்றும்படியாக புகழுக்குப் பாத்திரமாகாமல் தங்கள் உழைப்புக்குத் தகுந்த பிரதி பலனை அடையாது அநேகம் பேர்கள் சங்கீத உலகத்தில் இருந்து வருகிறார்கள். அது அவர்களின் துர்அதிருஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் அவர்களின் உழைப்பைப் பண்டிதர்கள் ஒப்புக்கொண்டு சந்தோஷப்படுவார்கள். அதற்குத் தகுந்த பலனும் கிடைக்கும். ஆகையால், மேற்கூறப்பட்ட முன்னணிக்கு வேண்டிய வழிகளை நாம் கடைப்பிடித்தால், எந்தவிதமாகவாவது ஓர் முடிவுக்கு வரலாம்.

மஹாராஜபுரம் விஸ்வநாத ஐயர்

யாருக்கு விருந்து அழைப்பு?

புதிதாகப் புக்ககம் போய்ச் சேர்ந்த பெண் ஆறுமாதத்திற்குப் பிறகு தானிருக்குமிடமாகிய மாம்பலத்திலிருந்து மைலாப்பூரிலிருக்கும் தன் தாயாரை டெலிபோன் மூலம் கூப்பிட்டு "அம்மா, அடுத்தவாரம் ஞாயிற்றுக் கிழமையன்று அப்பா, அண்ணன், நீ எல்லோரும் இங்கே விருந்து சாப்பிட வந்துவிடுங்கள். வரும்போது ஒரு ஐம்பது மைசூர் பாகுத் துண்டுகளைச் செய்து கொண்டு கொஞ்சம் வடைகளையும் தட்டி எடுத்துக் கொண்டுவா. முடியுமானால் மாங்காய் ஊறுகாயும், கொஞ்சம் கொத்தமல்லித் தொக்கும் கொண்டுவந்து விடு. அப்படியே வீட்டில் கறந்த பாலாக இரண்டு படியும்...." என்றாள்.

மாணிக்க விலாஸ் விகடன் பரிமள பாக்குத்தூள்

நறுமணம் வீசும் விகடன் பரிமளப்பாக்குத்தூளை உபயோகியுங்கள். 50 - காலணா பொட்டலம் அணா 6. மாதம் ரூ. 25—6—0 100 சம்பளம். விற்பனையாளர் தேவை மாணிக்க விலாஸ் 11 பீட், மதராஸ்-1

நோயும் நோயாளியும்

காப்டன். என். சேஷாத்திரிநாதன்.

ஆன்மாவும் சரீரமும் ஒன்ரு? வேரு? ஆன்மாவென்பது உடலின் ஊழியஞ? உடல் ஆன்மாவுக்கு அடிமையா? உடலின் ஒளியே ஆன்மாவா? இத்தகைய பிரச்னைகளைவேதாந்திகளும், தத்துவ ஞானிகளும் முடிவுக்கு வராமல் ஆராய்ந்து கொண்டே இருக்கிருர்கள். ஒன்ருேடு ஒன்று தொடர்புள்ளது, உடலில்லாமல் ஆன்மா பிரகாசிக்காது, உடலுக்கு நிகழும் துன்பங்களும், இன்பங்களும் ஆன்மாவை பாதிக்கக் கூடியவை என்ற விஷயம் உயிர் நிலை விஞ்ஞான ஆராய்ச்சியால் விளங்குகிறது.

பிறப்புக்கு முன்னும், பிறப்பு முதல், இறப்புவரை மனிதன் நோய்க்கு ஆளாகிருன். நோய் என்பது ஒருவகை உணர்ச்சி நிலையே. பிறப்புக்கு முன் சிசுவுக்கு வரும் நோயைத் தாய் உணர்கிருள். பிறந்த பிறகு, பிள்ளைக்குத் தனி வாழ்வு உண்டாகிறது, சூழ்நிலை அனுபவங்களினுலே பிள்ளையின் ஆன்மா மலருகிறது. இந்திரியங்கள்மூலமாக உணர்ச்சி உண்டாகிறது. துன்பம், இன்பம் எனவெல்லாம் அறிவுமுண்டாகிறது. இத்தகைய அறிவை உணர்வது எது? உடலா? ஆன்மாவா? உடல் மூலமாக ஆன்மா உணர்ந்துகொள்ளுகிறது—என்று சொல்லலாம். இந்த உணர்ச்சி, இன்ப உணர்ச்சியாகத் தோன்ருது போனுல் அது நோயாய் விடும்.

***

முதன்முதல் வைத்தியம் ஏற்படும்போது, துன்பத்திற்காளாவோனை இன்ப மனநிலையை அடையச் செய்யவேண்டுமென்ற எண்ணமே வைத்தியனுடைய நோக்கமாயிருந்தது. நோய் என்பதுஎவ்விதம் தோன்றுகிறது அதன் காரணமென்ன? என்ற விஷயங்கள் தெளிய வசதி இல்லாமையால், நோயாளி வாய் திறந்து சொல்வதையெல்லாம் கேட்ட வைத்தியனுக்கு, அவன் படும் துயரத்தை நீக்க மருந்தும் மந்திரமும் கருவிகளாயிருந்தன. நோயைப் பற்றி ஒன்றும் தெளிவாகாததனுல் நோயாளியையே சிந்தித்து வைத்திய முறைகள் கையாளப் பெற்றன. வேதனையை நீக்குவதிலும், அறிவீனத்தினுல் காரணமின்றி விளையும் பயத்தைத் தெளிவிப்பதிலும் வைத்திய முயற்சி சென்றது. நோயாளிக்கு இதமான உணவைக் கொடுப்பது, பிறவழியிலும் ஆசுவாசப்படுத்துவது இவை போன்ற முறைகளை வைத்தியர்கள் கையாண்டார்கள். நோயாளியினுடைய அதிருஷ்டம், உடல் வலிமை, மனேதிடம் எல்லாம் கூடி அவனை சுகநிலைக்கு வரச் செய்தன.

நோய்க்கூறுகள் பலவாறு தோன்றுவதையெல்லாம் குறிப்புகளாகக் குறிக்க நேர்ந்து, அவற்றை வைத்தியர்கள் வகுத்து விரிவாக்கத் தொடங்கினுர்கள். நோய்களைப் பெயரிட்டுக் குறிப்பிடவும் முடிந்தது. இப்படிப் பட்ட நோய்களுக்கு ஆளாகும் நோயாளி இறந்தபொழுது, அவனது உடலில் நோயினுல் விளைந்த மாறுபாடுகளை அறிய ஆவல் கொண்ட வைத்தியர்கள் பலர். இவர்களுள் தீரர்கள் சிலர். புதைத்திருந்த பிணங்களை தோண்டி எடுத்து ஆராயத் தொடங்கினர். இந்த வீர முயற்சியின் வரலாறு வைத்திய சரித்திரத்தில் ரசமான ஒரு பகுதியாகும். இத்தகைய பிண வேட்டையில் ஆர்வத்துடன் முயன்று, நோயுற்று மாறுபாடு அடைந்த அவயவங்களைச் சேகரித்து வைத்திய விஞ்ஞானம் உதயமாக உதவிபுரிந்தவர்களில் ஜான்ஹன்டர்என்னும்ஆங்கிலவிஞ்ஞானி அழியாப் புகழ் பெற்ருர். இதற்குப் பிறகு, இத்துறையில் சில வருஷங்களுக்குள்ளே ஆராய்ச்சி முறைகள் விரிவடைந்து, உடலில் அவயவங்கள் அடைந்த சீர்கேடுகளை அனுசரித்து நோய்கள் வகுக்கப் பெற்றன. இவை நிகழ்ந்த காலம் பதினெட்டாம் நூற்ருண்டு.

விஞ்ஞானம் பல துறைகளில் ஆராய்ச்சிக்கு ஈடுபட்டுப் புதிய விஷயங்களைத் துலக்கி முன்னேற்றம் அடைந்தது. நீரிலும், நிலத்திலும், வாயுமண்டலத்திலும் அணுப் பிரமாணமான நுண்ணுயிர் நிலைகள் எண்ணற வாழ்கின்றன என்பதை விஞ்ஞானிகள் அறிந்தனர். இவற்றுள் பலவகை மனிதனைத் தாக்குவனவென்றும் விளங்கியது. ஆராய்ச்சியாளர்கள் ஆர்வத்தோடு ஆராய்ச்சியைத்தொடர்ந்து புதிய அணுவுயிர்களைக் கண்டு பிடித்துப் பல நோய்களுக்குக் காரணமாகத் தனித்தனி அணுவுயிர்கள் இருப்பதையும் நிரூபித்தனர்.

வைத்திய சாலைகளை ஒட்டி ஆராய்ச்சி நிலையங்கள் நியமமாயின. வைத்திய இளைஞர்கள், இத்தகைய நிலையங்களில் வேலை செய்ய முற்பட்டார்கள். நோயாளி படும் துன்பங்களையும், நோயினுல் அவனது உடலில் தோன்றும் அடையாளங்களையும் கவனிப்பதில் கருத்து குன்றியது. இத்தகைய வைத்திய விஞ்ஞானிகள் நோயாளிக்கு ஆன்மா இருப்பதை மறந்து, நோயாளியினுடைய உடலில் புகுந்து நோய் விளைவிக்கும் அணுவுயிர்களைத் தாக்குவதில் ஊக்கம் செலுத்திஞர்கள். எத்தகைய நோய்களும் அணுவுயிர்களால் விளைந்தவை. அதனுலே அணுவுயிர்களைத் தாக்கும் மருந்துகளைக் கண்டுபிடித்துப் பயன்படுத்திஞல், எத்தகைய நோயும் குணமாய்விடலாம் என்ற நம்பிக்கை எழுந்தது. இதுகாறும் ரசாயன ஆராய்ச்சிகள் விரைவாக நிகழ்ந்தன. இதுவரை காரணம் கண்டுபிடிக்காத நோய்களுக்காக அணுவுயிர் வேட்டை நடைபெற்றது. இயற்கையின் சூக்ஷ்மங்களைத் தேடித் தொடரத் தொடரப் புதிய பிரச்னைகள் எழுவது இயற்கையின் இயல்பே. அணுதர்சினியின் உதவியையும், அணுவிஞராய்ச்சிக்காகவென்று அமைக்கப் பெற்றஆராய்ச்சிக் கருவிகளையும், ஆராய்ச்சி முறைகளையும் சன்னத்தம் செய்து ஆராய்ந்தும், சில நோய்களுக்குக் காரணம் துலங்கவில்லை. இதன்பின், வைட்டமின் குறை நோய்களும் ஆராய்ச்சியாளர்களுடைய மூளைக்கு வேலை கொடுத்தன.

இத்தகைய ஆராய்ச்சிப் போக்கின் பயஞக நோயாளியோடு பாடுபட்டு உழைக்கும் சாதாரண வைத்தியன் கீழ்த்தர ஊழியஞக மதிக்கப் பெற்ற நிலை வந்துவிட்டது. இவனும் உருமறைந்து ஆராய்ச்சிச் சுழலில் அகப்பட்டுக் கொண்டான். நோயாளியைக் கண்ட உடனே, "நீ இங்கிரு. நான் எக்ஸ்ரே, இரத்த சோதனை, மல சோதனை நீர் சோதனை, கண் சோதனை முதலியவற்றை உனக்குச்செய்து வருகிறேன். அதன் பின், உனக்குச் சிகிச்சை செய்கிறேன்" என்று சொல்லிச் சில தினங்களுக்கு இத்தகைய வைத்தியர் நோயாளியையே மறந்துவிடுவார். இது பெரிய வைத்திய சாலைகளில் சாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சி.

நவீன வைத்தியமே பல வகுப்புக்களாகப் பிரிவுபடுகின்றது. கண்ணுக்கு ஒரு வைத்தியர், பல்லுக்கொருவர், காதுக்கொருவர், நரம்பு வைத்தியத்திற்கொருவர், இருதய நோயில் மாத்திரம் பயிற்சி பெற்றவரொருவர் என இப்படியே பலவகை நோய் வகுப்புக்களில் நிபுணர்களாக வைத்தியர்கள் பிரிந்துவிட்டனர். இவர்கள் யாரும் நோயாளியைப் பாரப்பவரல்லர். நோயையும். அது தோன்றும் அவயவத்தையும் மாத்திரமே கூர்ந்து கவனிப்பவர், இத்தகைய நிபுணர்கள் கையில் சிக்கிக்கொண்ட நோயாளியின் நிலை பரிதாபமானது. அவனுடைய மனப்பான்மையையறிய இந்த நிபுணர்களால் இயலாது; இவர்களுக்கு நோக்கமும் இல்லை நேரமும் இல்லை.

எந்த நோய்க்காக நோயாளி வைத்தியம் செய்துகொள்ள வந்தானே அது வைத்திய நிபுணர்களின் ஆராய்ச்சிக்குப் பிறகு சிகிச்சை அடையாமலே முன்னிருந்த நிலையிலேயே இருந்துவிடலாம்.

***

ஒரு அவயவத்தில் தோன்றிய நோய் உடலெங்கும் அவயவங்களையும், அங்கங்களையும் பல அளவில் இயக்கக்கூடியது. ஒவ்வொரு நோயாளியும் ஒவ்வொரு விதமான அமைப்புடையவனுகையால், நோயின் துன்பங்களைப் பொறுப்பதிலும், பாராட்டுவதிலும் நோயாளிகள் எல்லோரும் ஒன்று போலிருக்க மாட்டார்கள். மனநிலை என்பது பகிரங்கமாகவும், சூக்ஷ்மமாகவும் இயங்கும் ஆற்றலுடையது. உடலுக்குத் துன்பங்கள் நேரும்பொழுது சூக்ஷ்ம மனநிலை நோயாளியை எப்படி இயக்குமென்பதை தெளிவாக அறிய நம்மால் இயலாது. ஆகையால் நோயாளியினுடைய மனநிலையை முதலில் சீராக்குவதே வைத்தியனுடைய முதல் பொறுப்பாகவேண்டும். நோய் அற்பமாயிருக்கலாம், அதனுல் விளையும் துன்பமும் அற்பமாய்த் தோன்றலாம்; ஆனுல், நோயாளியினுடைய மனநிலையினுல் அவன் அதை அதிக அளவில் பாராட்டுபவனுயிருந்தால் அந்த நோய்க்குச் சிகிச்சை செய்வது கடினமான காரியமாகும். அற்ப நோயாயிருந்தாலும் இத்தகைய நோயாளி அதிகமாகச் சோர்வை அடைந்துவிடுவான்.

இதுபோன்ற விஷயங்களைக் கூர்ந்து கவனிக்கும்போது நோயாளிக்கு ஆன்மாவென்பதொன்று இருக்கிறது. ஆன்மாவே முக்கியமானது. ஆன்மா சுக நிலையை அடையவேண்டுமென்றும் உடலுக்கு சேர்ந்திருக்கும் பாதையை நீக்க முயலவேண்டுமென்கிற கருத்தை நாம் உணர்வோம்.

இரகசியம் வசியப்படுத்திக்கொள்ளும் வழி.

ஆண், பெண் யாராயிருந்தாலும் சரி சுலபமாக வசியப்படுத்தப்பட்டு சீக்கிரம் வசப்பட்டுவிடுவார்கள். நீங்கள் நினைத்தபடியெல்லாம் அவர்களை ஆட்டிவைக்க முடியும் விவரங்களுக்கு பனிரெண்டணு ஸ்டாம்புடன் கடிதம் எழுதவும்.

A. K. GUPTA. (D. 5)

P. O B 7874 CALCUTTA - 12 (INDIA)

ஜவுளி மாளிகை

பட்டு & நூல்

ஜவுளி ரகங்களுக்கு

பிரபலமான இடம்

ராம விலாஸ்

கடைவீதி, சேலம்

-ராஜம்-

........சி. சரஸ்வதி......

[சிதம்பரம் வாசலில் கயிற்றுக் கட்டிலில் படுத்தபடியே வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். மனைவி சிவகாமி வெற்றிலைச் செல்லத்துடன் வந்து உட்காருகிறாள்]

சிவகாமி: என்ன ரோசனே பலமா இருக்கே. எந்தக் கோட்டேயே புடிக்க இந்த ரோசனே?

சிதம்பரம்: (ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டு) உனக்கென்ன மவராசி... சமைக்கணும் சாப்பிடணும். அக்கடாண்ணு கூடத்திலே தலையே சாய்க்கணும் அவ்வளவுதான். ஆணு பொறந்தவனுகளுக்கில்லா தெரியும் கஷ்ட நஷ்டம்?

சிவகாமி: (பாக்கை எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டு) இந்தா பாருங்க. வீணு பேசிக்கிட்டிருக்காதீக. அப்படி இப்போ தலைபோற காரியம் என்ன வந்துட்டுது?

சிதம்பரம்: (எழுந்து உட்கார்ந்து) என்ன வந்திருக்கா? தீவாளிதான் வேறே ஒண்ணுமில்லே.

சிவகாமி: (கேலியாக சிரித்தபடி வெற்றிலையில் சுண்ணும்பு தடவிக்கொண்டு) தீவாளிக்கா இப்படி கவலே படுறீக? அது தான் வருசா வருசம் வந்துட்டு போவுதே. இந்த வருசம் மட்டும் அதுக்கு அதிசயமா என்ன வந்துட்டுது?

சிதம்பரம்: (வெற்றிலைச் சுருளை வாங்கி வாயில் போட்டுக்கொண்டு) இந்த வருசம் தீவாளி தீவாளிதான் போ. கையிலே சல்லிக் காசுகூட இல்லே; நீயும் நானும் தீவாளி குளிச்சாப்பிலேதான்.

சிவகாமி: நல்லா இருக்கு போங்க: வருசத்துக்கு ஒரு நாளு. நல்ல நாளும் கிழமையுமா இல்லே, பாட்டு பாடாதீக.

சிதம்பரம்: பாடாமே என்ன செய்யட்டும்? நீயே, சின்ன மவளையும் மாப்பிள்ளையையும் தீவாளிக்கு வரச் சொல்லி கடுதாசி போட்டுட்டே. அதுக வேறே வந்து நிக்கப் போவுது. அவுகளுக்கு ஜவுளி, உனக்கு சேலே, எனக்கு வேட்டி, இதுக்கெல்லாம் எங்கே போக?

சிவகாமி: அதெல்லாம் பாத்தா முடியுமா? காச்ச மரம் கல்லடி படத்தான் செய்யும். எப்படியோ நாலு பணம் சேத்து வைக்கணுமிண்ணுட்டு நானும் உங்க கிட்டே குட்டிக்கரணம் போட்டுப் பாத்தாச்சு. நீங்க விட்டாத்தானே.

சிதம்பரம்: விடாமே உன்னே கட்டியா போட்டுட்டேன்.

சிவகாமி: பின்னே கட்டிக்கிட்டு வராமே கூட்டிக்கிட்டா வந்தீக. சும்மா பேசாதீக. இரண்டு பணம் பொட்டியிலே கிடந்தா, அதெகொண்டு போயி கடேலே தொலச்சிட்டு வந்தாத்தானே உங்க கண்ணடைக்கும்.

சிதம்பரம்: உம் மனசு போல அந்த மூலக்கடை மேலே மண்ணு விளுந்தாச்சே. இனியும் எதுக்கு அந்த பேச்சே எடுத்து என் மண்டையே குளப்புறே.



சிவகாமி: நாமட்டுமா? போன வருசம் தீவாளிக்கு உங்க தங்கச்சி புருசன் செஞ்ச வேலெயே நினைச்சுக்கிட்டா, அந்த மதனி இன்னைக்கும் கண்ணீரு விடுறாக. சின்னக்குட்டிக்கு ஒரு சுங்கடி சேலே எடுக்கக் குடுத்த பணத்தையும் கொண்டு போயி அந்த கடைக்காரப் பாவிகிட்டே குடுத்துட்டு வீட்டுக்கு வந்து ஆடுன ஆட்டத்திலே அரிவாமணை பட்டு அவுக விரலே அறுந்து போவலையா? எங்க வயித்தெரிச்சல்லாம் எங்கே போவும். சர்க்காருகாரன் சட்டம் போட்டு உங்களே யெல்லாம் மட்டம் தட்டாட்டா எங்க கழுத்திலே என்னதான் மிஞ்சும்

சிதம்பரம்: ஆரம்பிச்சிட்டயா உன் ராமாயணத்தே. இனி இன்னைக்கு சிவாத்திரிதான்.

சிவகாமி: உள்ளதே சொன்னு கோவப் படுறீகளே. குடி ஒழியப் போவுது. குடி முழுகிப் போவுது இன்னுட்டு இருந்த காசேயும் தொலச்சிட்டு பாப்பாத்தியே தீவாளிக்கு கூப்பிட முடியாதுன்னு கையே விரிச்சிட்டா நல்லா இருக்குது பாருங்க.

சிதம்பரம்: உம். படு எப்படியேன் போங்க. நீ தீவாளி குளிச்சாலும் சரி. குளிக்காட்டாலுஞ் சரி. எங்கிட்டே காசுன்னு பேசப் படாது. ஆமாம்.

சிவகாமி: அடியம்மாடி! எம்புட்டு கணிசமா பேசுறீக? சரி. போவுது போங்க. நான் தாரேன் பணம் நாளைக்கு சந்தைக்கு போயிட்டு வாங்க.

சிதம்பரம்: ஏது பணம் உக்கிட்டே?

சிவகாமி: நம்ம பனையெல்லாம் பதனிக்கு விட்டுட்டேனே. அதிலே காச்சின கருப்பட்டியே வித்து தீவாளி செலவுக்கு இண்ணுட்டு உங்களுக்குத் தெரியாமே கலயத்திலே போட்டு பத்தயத்து மூலையிலே வெச்சிருந்தேன்.

சிதம்பரம்: உம். இப்போ மூலக்கடை இல்லையிண்ணுட்டு இம்புட்டு தைரியமா சொல்லுறே இல்லியா? சரி, சரி. நாளைக்கு சந்தைக்குப் போயி ஜவுளியெல்லாம் எடுத்துக்கிட்டு வரேன். இந்த வருசம் தீவாளியே ஜமாய்சிடலாம். போ.

[சிதம்பரம் தலையில் மூட்டையுடன் வர, எதிரே வந்த மருமகன் முருகேசன் இருட்டில் தெரியாமல் மாமனுரை முட்டிக்கொள்ளுகிறான்.]

சிதம்பரம்: யார்டா அது?

முருகேசன்: ஆளுதான்.

சிதம்பரம்: ஆளு இல்லாமே தேளா இப்படி வந்து மாடாட்டமா முட்டும்.

முருகேசன்: ஓய்! வாயே அடக்கிகிற பேசும்.

சிதம்பரம்: அதாரடா அவன்? அம்புட்டு தைரியமாடா எங்கிட்டே பேசுகதுக்கு?

முருகேசன்: நீயும் மனுசன்தானே.

சிதம்பரம்: பல்லே உதித்திடுவேன்.

முருகேசன்: கன்னம் வீங்கிப்புடும். வீங்கி....

சிதம்பரம்: கண்ணே மூடிக்கிட்டு வந்ததுமில்லாமே வாய் வேறேயாடா?

முருகேசன்: யாருவோய் கண்ணே மூடிக்கிட்டு வந்தா? நீயா நானு?

சிதம்பரம்: ஓய் கீய் இன்னையோ தெரியுஞ் சேதி.

முருகேசன்: பாத்துக்கிடலாம்.

சிதம்பரம்: நீயென்னடா என்னே பாத்துக்கிடுவே?

முருகேசன்: கிழடுகள்ளாம் வீட்டுலே கிடந்து தொலையாமே இருட்டுலே வந்து திண்டாடிக்கிட்டு நம்மையுமில்லா வம்புக்கு இழுக்குது?

சிதம்பரம்: யாருடா கிழவன்?

முருகேசன்: ஓய்! மருவாதையா பேசு அட புடா இன்னியோ இங்கேயே சமாதி வெச்சிடுவேன்.

சிதம்பரம்: அசகாய சூரன் போலிருக்கு. வாய் வீச்சே பாருடா.

முருகேசன்: பேசாமே போறியா இல்லியா?

சிதம்பரம்: உன்னே பாத்தா ஊருக்கு புதுசு போலிருக்குது.

முருகேசன்: புதுசுமில்லே பழசுமில்லே. போ வாயே மூடிக்கிட்டு.

சிதம்பரம்: கண்ணுதெரியலே. இல்லாட்டா உன்னே என்ன செய்வேன் தெரியுமாடா?

முருகே: தெரியும் ஓய். மத்தவன் கையும் புளியங்கா பறிக்கவா போயிருக்கு. போன்னு போமேன்.

சிதம்பரம்: (நடையைக் கட்டிக்கொண்டே) இந்தக் காலத்து மொட்ட பையனுகளுக்கே மருவாதே தெரியாது. கலிகாலம்.

முருகே: ஓய்! மொட்டகிட்டே இண்ணு பேசினியோ நாக்கே ஒட்ட அறுத்துடுவேன் ஆமாம்.

சிதம்பரம்: (தூரத்தில் போய்) போடா போ. இளங்கண்ணு பயமறியாமே துள்ளுது. ஒழிஞ்சு போ (போகிறான்)

முருகே: உம் முதுகு தோலியே உரிக்காமே விட்டது தப்புதான் தொலைஞ்சு போ. (போகிறான்)

சிவகாமி: (வாசலில் வந்து எட்டிப் பார்த்துவிட்டு) சந்தைக்குப் போனவுக இம்புட்டு நேரமா அங்கே என்ன செய்தாகளோ தெரியலே. சந்தெ சாமான் வந்துதான் வீட்டிலே எல்லா வேலையும் ஆகணும். நல்ல ஆளு. இவுக சமயம் தெரியாமே வெட்டி போது போக்கிட்டு இருப்பாக.

[பாப்பாத்தி இடுப்பில் துணிமூட்டையுடன் வருதல்]

பாப்பாத்தி: அம்மா!

சிவகாமி: பாப்பாத்தியா? வாம்மா வா! இப்பத்தான் வரியா? மத்தியானமே வருவீக இண்ணு வடிச்சு கறிவெச்சு காத்துக்கிட்டிருந்தேன். அவுக எங்கே?

பாப்பாத்தி: (மூட்டையை அம்மாவிடம் கொடுத்து விட்டு) உம் மருமகனெதானே கேக்கே? அவுக அப்படியே குளக்கரைக்குப் போயிட்டு வரேன் இண்ணுக. இப்ப வந்திடுவாக. காத்தாலே வீட்டே விட்டு கிளம்பியாச்சு அம்மா. வண்டிதான் தப்பிப் போச்சு. மத்தியான வெயிலிலே காத்து கிடந்துட்டு இப்போதான் வந்து சேர்ந்தோம்.

சிவகாமி: அம்மட்டுக்கும் இருட்டுக்கு முன்னே வந்து சேர்ந்தீகளே! உங்கப்பா சந்தைக்குப் போனவுக இன்னும் வந்தபாடில்லே. அதிரசத்துக்கு மாவு இடிச்சு வெச்சுக்கிட்டு மணிக்கணக்கா காத்துக்கிட்டிருக்கேன். இனி எப்ப

ஜெய் ஹிந்த் புத்தக நிலையம்,

கிருஷ்ணகிரி

உங்களுக்கு வேண்டிய புத்தகங்களையும், தினசரிகளையும், ஆர்டரின் பேரில் தருவித்துக் கொடுப்போம். உங்களுடைய தேவைக்கு

"ஜெய் ஹிந்த் புத்தக நிலையம்"

கிருஷ்ணகிரி

என்ற விலாசத்திற்கு எழுதவும்.

அவுக வந்து எப்ப பாகு காச்சுதோ தெரியலே. சரி அடுப்பிலே வெந்நீ கிடக்கு, மொதல்லே குளிச்சிட்டு வாம்மா.

பாப்பாத்தி : ஆவட்டும்மா.

சிதம்பரம் : (தலையில் மூட்டையுடன் வந்து வாசல் கதவை தட்டி) சிவகாமி! சிவகாமி!! சீக்கிரம் கதவே தற. கழுத்து ஒடியுது.

சிவகாமி : வந்துட்டேன். இருங்க (கதவை திறந்து மூட்டையை வாங்கிக் கொண்டே) அம்மாடி! ஒரு மட்டுக்கும் வந்து சேந்தேளே. நல்ல ஆளுதான் போங்க.

சிதம்பரம் : (உள்ளே நுழைந்துக் கொண்டே) அந்த பயலுக விட்டா தானே. இம்புட்டு நேரமா எங்கிட்டே மல்லுக்கு நின்னுனுக பாவி பயக.

சிவகாமி : (விளக்கு வெளிச்சத்தில் சிதம்பரத்தைப் பார்த்துவிட்டு) இதென்ன இப்படி நிக்கீக?

சிதம்பரம் : பின்னே எப்படி நிக்கணு மாம்? தலைகீழா நிக்கச் சொல்லுறயா?

சிவகாமி : அப்படியும் நிக்காத புள்ளியா நீங்க? வீட்டுக்குள்ளே நின்னு என்ன பிரோசனம்? சந்தையிலே நின்னாலும் நாலு காசு சம்பாதிக்கலாம்.

சிதம்பரம் : நான் எப்படி நின்னா உனக் கென்ன? காசு மேலேதான் உனக்கு கண்ணு.

சிவகாமி : இந்தா பாருங்க. இதென்ன கோலம்? மீசை எங்கே?

சிதம்பரம் : ஓ! ஹோ! அதுக்கா இம் புட்டு வாய்வீச்சம். அது பெரிய கதே பொறவு சொல்லுறேன். வயிறு பசி உசிரு போவுது. சோறு போடு போ.

சிவகாமி :—உங்க மகளும் மருமகனும் இப்பத்தான் வந்தாக. வாருங்க சாப்பிட.

சிதம்பரம் :—வந்துட்டாகளா? எங்கே அவுக?

சிவகாமி :—பாப்பா பொறவாசல்லே குளிக்குது. அவ மாப்பிள்ளே வெளியே போயிருக்காக. (இலையே போட்டு பரிமாறிக்கொண்டே) ஐயே! உங்க மொகத்தே பார்க்க பொறுக்கலே போங்க.

சிதம்பரம் :—அந்தப் பயக விட்டாத் தானே. போன மாசம் சந்தைக்குப் போயிருக்கையிலே கள்ளுக்குடியே ஒழிக்கப் போறாகளாம் இண்ணு எல் லாரும் பேசிக்கிட்டாக. அதெப்படி முடியும்? நம்ம முப்பாட்டன் காலத் திலேருந்து பரம்பரையா இருக்க வழக்கமாச்சே அது. இதெல்லாம் வெட்டிப் பேச்சு. அப்படி அவனுக எடுத்துட்டா நான் என் மீசையே எடுத்துடுறேன் இண்ணுட்டு வீருப்பு பேசிட்டு வந்தேன். நம்ம கெட்ட காலம் அவனுக மதுவிலக்கே சட்ட மாக்கிபிட்டானுக பயலுக. நான் இம் புட்டு நாளும் அருமையா வளத்த மீசையையும் தரைமட்டமாக்கிட்டா னுக.

சிவகாமி :—நல்லாருக்கு நாயம். அட! இதென்ன நெத்தி வீங்கி இருக்கு?

சிதம்பரம் :— (சாப்பிட்டுக்கொண்டே) கீழக்குளத்துக்கிட்டே வந்துக்கிட்டிருக் கயிலே எவனோ ஒரு பய தலைகால் தெரியாமே வந்து முட்டிட்டான். இருட்டு காலமாச்சே இண்ணுட்டு அந்தப் பயலே விட்டுட்டேன். இல் லாட்டா பல்லு முப்பத்திரண்டையும் கழட்டிட்டு மறுவேலே பாத்திருப் பேன்.

சிவகாமி :—நல்ல காலம் தீவாளியும் அதுவுமா போலீசுக்கும் வீட்டுக்குமா அலைஞ்சுக்கிட்டிருக்காமே வந்து சேந் தீகளே.

[பாப்பாத்தி வருதல்]

சிதம்பரம்:—வா அம்மா. ஊர்லே எல் லாரும் சொகந்தானே.

பாப்பாத்தி :—ஆமா அப்பா.

சிதம்பரம் :—நீயும் சாப்பிடேம்மா.

பாப்பாத்தி :—இல்லே. அவுக வரட்டும்.

முருகேசன் : பாப்பா! பாப்பா!!

சிவகாமி : பாப்பா! மாப்பிள்ளே வந் துட்டாக போலிருக்கு. சீக்கிரம் போய் கதவே தொற இந்தா தண்ணி கால்கழுவ குடு.

[தண்ணீர் செம்பை கொடுத்துவிட்டு மறைந்துக் கொள்ளுகிறாள்.]

பாப்பா : (கதவை திறந்துவிட்டு) நல்லா இருக்கு. ஐபா வந்து இம் புட்டு நேரமா காத்துக்கிட்டு இருந் திட்டு இப்பத்தான் சாப்பிடுறாக. காலே கழுவிக்கிட்டு வாங்க சீக்கிரம். இலே போட்டிருக்கு.

முருகேசன் : (உள்ளே எட்டி பாத் துட்டு) என்ன பாப்பா உள்ளே யாரு சாப்பிடுறது? மாமா எங்கே காணுமே?

பாப்பா : ஐயாதான் சாப்பிடுதாக சும்மா வாங்க. ஐபாவும் உங்களே போல மீசையை எடுத்துட்டாக. அதுதான் உங்களுக்கு அடையாளம் தெரியலே போலிருக்கு.

முருகேசன் : (உள்ளே வந்து) சேவிக் கேன் மாமா.

சிதம்பரம் : (அண்ணாந்து பாத்துட்டு) இது யாரு? பாப்பா? உங்ககூட வேறே யாரு வந்திருக்கா. இதுவரே சொல்லாமே இருந்திட்டியே. வாப்பா உக்காரு.

பாப்பா : என்னய்யா? மருமகப் பிள் ளையே அடையாளமே தெரியாமே பேசுறீக.

சிதம்பரம் : அடே! மாப்பிள்ளையா? என்ன இது? ஊர்லே அப்பா அம்மா எல்லாரும் சொகம்தானே. ஏன் நிக் கிறீக இப்படி இருங்க.

முருகேசன் : (உட்க்கார்ந்து) எல்லா ரும் சொகந்தான் மாமா?

சிதம்பரம் : அப்படி இண்ணா திருப்ப திக்கு போயிட்டு வந்தீகளா?

முருகேசன் : சேச்சே. அதெல்லா மில்லே

சிதம்பரம் : நல்லா இருக்கு போங்க உங்க மொட்டைத் தலையே பாத்ததும் எனக்கு அப்படியே தூக்கிவாரி இல்லாப் போட்டுது. ஆமாம். கட்டுக் குடுமியே எடுத்துட்டு இப்படி ஆண்டி வேசம் என் போட்டீங்க?

முருகேசன் : சும்மாதான்.

பாப்பா : இல்லே ஐபா! அவுக பொய் சொல்லுறாக. எங்க வூருலே இவுக ளோடே சிநேகிதருகள்ளாம் கள்ளு குடி ஒழிஞ்சிடும் இண்ணாகளாம். அதுக்கு இவுக ரொம்பத் தெரிஞ்சவுக மாதிரி. போங்கடா. கள்ளாவது ஒழியதாவது. எல்லாம் மோசண்டா. சர்க்காருக்கு பணம் பணமா கொட்டி குடுக்கதே அதுதானே. நேருகூட மது விலக்கே சீக்கிரமா கொண்டுவர வேண்டாம். மெதுவா பாத்து செய் யுங்கோ. அவசரப்பட்டு கள்ளுக் கடையே சாத்திப்பிட்டு கையிலே காசில்லாமே முழிக்காதீக இண்ணு சொன்னாராம். அப்படி இருக்கையிலே எப்படிடா எடுத்துடுவான்? நீங்க சொன்னபடி நடந்தா என் குடுமியே எடுத்துட்டு வரேன் இண்ணு சபதம் பண்ணிட்டாகளாம். மதுவிலக்கு வந்த அண்ணைக்கே எல்லாருமா சேந்து இவுகளே புடிச்சு மொட்டை யும் அடிச்சு பட்டாமமும் சாத்தி அனுப்பிட்டாக வீட்டுக்கு.

[சிதம்பரம் கை கழுவப் போகிறார்]

பாப்பா : இதென்ன? உங்க மண்டே கொழுக்கட்டையாட்டமா வீங்கி இருக்கு.

முருகேசன் :—யாரோ ஒரு கிழம் கண்ணு தெரியாமேவந்து எந்தலையிலே முட்டிட்டுது. போனா போவட்டும் பாவம் இண்ணு விட்டுட்டு வந்தேன். இல்லாட்டா ஒரு குத்துலே மேலோ கத்துக்கு அனுப்பிட்டு வந்திருப்பேன்.

[சிதம்பரம் வந்து எதிரே இருந்து கொண்டு]

சிதம்பரம் : என்ன? நீங்களா என்னே குளக்கரையிலே முட்டுனது? அடடா தெரியாமே போச்சே.

முருகேசன் : நீங்களா அது? மாமா! கோவிச்சுக்கிடாதீக. தெரியாமே பேசிட்டேன்.

சிதம்பரம் : . விடுங்க மாப்பிளே. தெரிஞ்சா பேசினீங்க? போவுது போங்க. நானும் அம்புட்டு பட படப்பா பேசி இருக்கப்படாது.

முருகேசன் : அதுக்கென்ன மாமா? நீங்க பேசினா நான் கேட்டுக்கப் படாதா?

சிதம்பரம் : சரி சரி. சீக்கிரமா சாப்பிட் டுட்டு படுத்துக்கிடுங்க. விடிஞ்சா தீவாளி.கோழி கூவுறதுக்கு முன்னே எழுந்திரிக்க வேண்டாமா?

முருகேசன் : இதோ வந்துட்டேன் மாமா.

சித்ரகூட மலை மூலிகைகள்

ஆஸ்த்மா நிவாரணி மிகவும் சக்தி வாய்ந்ததும் உடனடியாகக் கண்டிக்கக் கூடியதுமான இந்த ஔஷதத்தை 16-11-48 பௌர்ணமியன்று உட் கொள்ள உடனடியாக ஆஸ்த்மாவைக் கண்டிக்கும்.

விவரங்களுக்கு ஆங்கிலத்தில் எழுதவும்.

SWAMI DARSHANA- NANDA
AYURVEDASHRAM
P. O. CHITRAKOT (U P.)

நங்கையர்
விரும்பும்
நாகரீகமான
பட்டு & நூல்
ஜவுளி
ரகங்களுக்கு
சிறந்த இடம்

ஸ்ரீ நாராயண
ஸ்டோர்ஸ்,
36, பைகிராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி
சென்னை.

மதுரை மில்ஸ் கம்பெனி
லிமிடெட்

மதுரை—தூத்துக்குடி—அம்பாசமுத்திரம்

★

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல் முறுக்கேற்றிய நூல்.

கதிர்கள்
5,00,000

★

கவுண்ட்
80 வரை

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லாவகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

மானேஜர்கள் :

ஏ. அண்டு எப். ஹார்வி லிமிடெட்

குழந்தைகளுக்கு
ஏற்ற
டானிக்

டோங்கரே
பாலாமருதம்

K. T. DONGRE & CO., BOMBAY-4



பணத்தை வாங்கிக்கொண்டு தான் தின்று கொழுத்துத் திரியும் சில தர்மகர்த்தர்களைப் போலவும், குடிகெடுக்கும் குண்டுணிகளாயும் என்னைப் பிறப்பிக்காதே.

ஹே தேவா....அபஸ்வரமும், அவசப்தமும், பதச் சேதமும் கூடி அருமையான சாஹித்தியங்களைப் பாடிக் கொலைசெய்யும் சில சங்கீதக்காரர்களைப் போல் என்னைப் பிறப்பிப்பதை விட ஊமையாக என்னை ச்ருஷ்டி செய்துவிடு. நான் அதை என் பாக்யமாகக் கருதுவேன்.

ப்ரம்மதேவா....எத்தகைய கொடுமைகளை எனக்குக் கொடுத்தாலும் சரி. பிடி, ஸிகரெட்டுகளைப் பிடித்துப் புகையைக் கக்கி, அதில் பேரானந்தமடையும் சில பைசாச முட்டாள்களைப் போலவும்....புகையிலையை மென்று வீதி முற்றும் ரத்த மழை பெய்திருப்பது போல் கோராமையைச் செய்துகொண்டு வழ வழ கொழவென்று பேச்சைக் கொலை செய்யும் சில அசங்கியப் பேர்களைப் போலவும்....நிமிடத்திற்கு நூறு தரம்பொடியைஉறிஞ்சிஅருவருப்பை உண்டாக்கும். மூக்குரிஞ்சி முண்டங்களைப் போலவும், என் தலையில் எழுதி, பிறர் வெறுக்கவும். நகைக்கவும். திட்டவும்,ஏசிப் பேசவும், முகத்தைச் சுளிக்கவும் செய்துவிடாதே....அதை விட என்னைக் குப்பைமேட்டைச் சுற்றியலையும் நாயாகப் பிறப்பித்துவிடு.

என்று ஆளுக்கொரு வரமாகக் கோரி வேண்டுவதைக் கண்ட கோபுவின் பாடு, அவனையறியாது ஏதோ ஒரு விதமான தாக்குதலுடன் கூடிய உணர்ச்சி இதயத்தைத் துளாவியது. மேலே தான் கேட்ட பலவித செய்கைகள், தன்னிடத்திலே தாண்டவமாடுவதை அவன் உள்ளம் அப்போதுதான் உணர்ந்தது. தான் ஒரு மனைவியைத் தள்ளிவைத்து மறு மனைவியை வர தக்ஷிணையுடன்மணந்தது மாணவனாக இருந்து உபாத்தியாயரையும் பெற்றோர்களையும் படுத்திய பாடும், வீட்டுக்காரர்களை ஏமாற்றி வாடகை கொள்ளையடிப்பதும், சினிமாக்காரர்களுடன் பழகி வாழ்வு பாழாவதும் முதலிய பல பல விஷயங்கள் அவன் செய்வது அவனையே முற்றுகையிட்டுச் சித்ரவதை செய்தன. வாயிலிருந்த ஸிகரெட்டை வீசி எறிந்து சொக்காயைக் கழட்டிவிட்டு உத்தரீயத்தை வரிந்து கட்டிக்கொண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்துப், பின் "ஹே! ப்ரம்மதேவா....! என்னை மறந்துபோய்க்கூட மறு பிறவி மனிதனாகப் பிறப்பிக்காதே....கல்லாகப் பிறப்பித்துவிடு,.......அசையாப் பொருளான மலையாகப் பிறப்பித்துவிடு. அந்த பிறவி தான் பாபத்தைச் செய்யாதிருக்க முடியும்........" என்று வேண்டினான்.

சுதந்தர இந்தியாவின் புது ராஷ்டிரபதி

டாக்டர் பட்டாபி ஸீதாராமையா



1880-ம் வருஷம் நவம்பர் மீ 24-ந் தேதி பிறந்தவர். 1898-ம் வருஷம் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் படிக்கும் காலம் முதல் காங்கிரஸில் தொண்டராகச் சேர்ந்து அரிய சேவையும் தியாகமும் செய்தன்னார். 1916-ம் வருஷம் முதல் ஒவ்வொரு வருஷமும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். சுதேச சாம்ராஜ்யங்களின் பிரஜா உரிமைகளுக்காக ஒப்பற்ற தொண்டாற்றியுள்ளார். அன்னை பாரதமாதாவின் விடுதலைப் போரில் முன்னின்று பெரும்பணி ஆற்றிய அருந்தவப் புதல்வர்.

வை. மு. கோதைநாயகி

என் தலையில் எழுதாதே

"அங்கென்னப்பா அத்தனைக் கூட்டம். சில மாதங்களுக்கு முன்பு நான் பார்த்தபோது, இந்த இடம் மைதானமாக இருந்தது. இப்போது ஏதோ பெரிய கட்டிடம் தெரிகிறது. கும்பலாக நிற்கிறார்கள். இங்கென்ன விசேஷம். சினிமாக் கொட்டகை ஏதாவது வந்துவிட்டதா என்ன?" என்று கோபு கேட்டான்.

சுப்பு: கொட்டகையுமில்லை. ஒன்றுமில்லை. சில பக்தர்கள் கூடி ஏதோ பெரிய பெரிய யோசனைகள் செய்து ஒருவிதமாக முடிவுக்கு வந்தார்கள். அதாவது "மும்மூர்த்திகள், முத்தேவிகள் என்று சொல்கிறோமேயன்றி முக்யமாக ச்சிருஷ்டிகர்த்தாவாகிய ப்ரம்மதேவனுக்கு ஆலயம் கிடையாது. பூஜைபுனஷ்காரம் கிடையாது. ஸரஸ்வதிக்கு வருஷத்திற்கு ஒருநாள் தான் பூஜை செய்கிறார்கள். மக்களின் அறிவைக் கொடுத்துக் கல்வியில் சிறக்கச் செய்யும் ஸரஸ்வதிக்கும், தலைவிதியை நிர்ணயித்து எழுதும் ப்ரம்மதேவனுக்கும் ஆலயங் கிடையாது. இதென்ன அக்ரமம்!" என்று கர்ஜித்தார்கள்.

கோபு: (இடைமறுத்து)....ஏன் சுப்பு....இவர்களுக்கு ஆலயமும் பூஜையும் கிடையாதா என்ன? எனக்குத் தெரியவே தெரியாதே ....ஏன் இவர்களுக்கு ஆலயம், பூஜை முதலியன இல்லை. முக்யமாக இவர்களுக்குத்தானே செய்யவேண்டும்.....

சுப்பு: அட ப்ரகஸ்பதி! உனக்கு சாஸ்திரமோ! மதமோ, சம்பிரதாயமோ, நீதிநெறியோ பக்தியோ ஏதாவ தொன்று தெரிந்தால் தானே இது தெரியப்போகிறது. நன்றாகச் சாப்பிடத் தெரியும். சினிமாவுக்கும், சிகரெட்டிற்கும் கடன் வாங்கியாவது செலவு செய்யத் தெரியும். மற்றபடி இந்த உலகத்தோடு உன்னையும் யாராவது தூக்கிக் கொண்டுபோனால்கூட அது உனக்குத் தெரியப்போவதில்லை. துர்வாஸ மகரிஷியினுடைய சாபத்தினால் இவர்களுக்குக் கோயில்களும், பூஜையும் இல்லாது போயிற்று.

கோபு: அடேடே...சாபத்தினாலா.. அப்படி என்றால் சாபம் கொடுத்தவர் தலையில் ப்ரம்மா எழுதியதை உடனே அழித்துத்வம்ஸம் செய்திருக்கக்கூடாதா .... சாபமாவது. பாவமாவது. இந்த காலத்தில்....

சுப்பு: போடா! போடா!....அறிவு கெட்டவனே. இந்த காலத்தில் யாராவது சாபம் கொடுப்பதற்குத் தகுதியான மனிதன் ஒருவனாவது இருந்தால்தானே சொல்வதற்கு. தப்பித் தவறி யாராவது இருப்பார்களேயானால் கொள்ளிவாய்ப் [பி]சாசு, பேய் [பிசாசு] விகரேட்களே பயந்துகொண்டு ஓடுவார்கள் பாவம்!....

கோபு: சரி! சரி. நீ மகா யோக்யன். அது கிடக்கட்டும். அதென்ன கூச்சல் கேட்கிறது. அங்கு போகலாம் வா! இதன் விவரத்தைச் சொல்லு....

சுப்பு: நீதான் வழிமறித்தான் சாமி போல் குறுக்கே விழுந்து பாய்கிறாயே....மேலே சொல்லியது போல் அவர்கள் பலர் ஒன்று கூடி யோசனைகள் செய்து வெகு சுருசுருப்புடன் த்ரவ்யம் திரட்டி ப்ரம்மாவுக்கும் ஸரஸ்வதிக்கும் ஆலயங் கட்டி பிம்பங்களை ப்ரதிஷ்டை செய்துவிட்டார்கள். பக்தர்கள் எல்லாம் திரள் திரளாக வந்து நித்ய உத்ஸவம் செய்து வேண்டுகிறார்கள். சில அதித பக்தர்கள் தவம் செய்து ப்ரார்த்தனை செய்கிறார்கள். அதுதான் கூட்டம்..... என்று முடிப்பதற்குள் கோபு. "என்ன! என்ன! தபஸ் செய்வதா....வேண்டுவதா போய் பார்க்கலாம்" என்று ஓட்டமாக ஓடிக் கூட்டத்தைக் கலைத்துக்கொண்டு முன்னே சென்று நின்றான்.

கோயிலுக்கு முன்னால் அனேகம்போர்கள் உட்கார்ந்துகண்களை மூடி ஜபம் செய்வதும், சிலர் அர்சனை செய்வதும், ப்ரம்மாவும் ஸரஸ்வதியும் திவ்ய மங்கள விக்ரக ரூபத்தில் ஸாக்ஷியளிக்கும் அழகும், தீபாலங்காரத்தின் அற்புதமும் பார்க்க மிக மிகப் ப்ரவசமுறச் செய்தது. தடை கட்டிய நாகம்போல் கோபு நின்றுவிட்டான்.

பத்தி சிரத்தையுடன் தபம் செய்யும் பக்தர்கள்...., ஓம் ப்ரம்மதேவாய நம: ஓம் ஸரஸ்வதீ தேவீ நம....ஓம் ப்ரம்மதேவாயநம: ஓம் ஸரஸ்வதி தேவீ நம:....என்று இடைவிடாது இசைபாடுவது போல் கோஷிப்பதைக் கேட்க, கோபுவின் இதயத்தில் கூட ஏதோ ஒரு மாதிரியான உணர்ச்சி உண்டாகியது. அந்த காக்ஷியை இமை இசைக்காது பார்த்துக்கொண்டே ஸிகரெட் பிடிப்பதைக்கூட மறந்து போய் நின்றான். பல குரல்கள், ப்ரார்த்தனையுடன் வரம் கேட்கத் துடங்கினார்கள்.

ஹே! ப்ரம்மதேவா, உன் சரணாரவிந்தத்தில் ஆயிரங்கோடி நமஸ்கரித்து வேண்டுகிறேன். இந்தப் பாழும் உலகத்தையும் மக்களையும் பார்த்தால், என்னிதயம் பதைபதைக்கின்றது. இப்பிறவி தட்பினால் எப்பிறவி வாய்க்குமோ! யாது வருமோ என்று பெரியார்கள் பாடியதை நினைக்க என்னுள்ளம் நடுங்குகிறது. ப்ரம்மதேவா! அடுத்த பிறவி எனக்கு எத்தகைய ம்ருகத்தின் சரீரத்தில் புகுத்திவிட்டால் கூட நான் பரம சந்தோஷடைவேன். ஆனால் மனிதப் பிறவி மட்டும் கொடுத்துவிடாதே....அப்படி கொடுத்தால் என் தலையில் ஞாக வாழும் முறையில் என் தலையெழுத்தை அமைத்து எழுது.... தம்பிடிக்கு தம்பிடி வட்டி வாங்கும் தர்ம ப்ரபுவாக என்னைப் படைக்காதே.... கடன்காரனை மோசம் செய்யும் குடி கேடனாகப் படைக்காதே....

ப்ரம்மதேவா....இள நங்கையை மனந் துணிந்து மணக்க முன்வரும் கிழப்பாவிகளாக வாழ என் தலையில் எழுதாதே.... மனம் துணிந்து பணத்திற்காகத் தம்மக்களை கிழவனுக்குத் தள்ளும் தாய் தந்தையாக என்னைப் படைக்கக்தே.

பணத்திற்காகத் தம் மானத்தையும், கற்பையும், நீதிநெறிகளையும், வாழ்க்கையின் உயர்ந்த லக்ஷ்யங்களையும் கொலை செய்து விட்டுப் பாழும் சினிமாக்களில் சேர்ந்து ஏழேழு ஜென்மத்திற்கு அழியாத நரகத்தைச் சம்பாதித்துக்கொள்ளும் நடிகையாய், நடிகனாய், அவர்களின் பெற்றோர்களாய் மட்டும் பிறக்கும்படி தப்பித் தவறி கூட என் தலையில எழுதி விடாதே. அதை விட என்னைச் சாக்கடைப் புழுகாகப் பிறப்பித்துவிடு........

ஹே ச்ருஷ்டிகர்த்தாவே!.... இல்லாத பொல்லாத....நடவாத நடக்கவும்கூடாத. 'பொய்ப் புனை சுருட்டு' முதலியவைகளை கயிறு திரித்து மக்களுக்கு எத்தகைய உபயோகமும் இல்லாத முறையில், வெள்ளைக் காகிதத்தைக் கருப்புக் காகிதமாக்கி விளம்பரத்தினால் கொள்ளையடித்து வாழும் ஒரு சில பத்திரிகாசிரியர் போல் என்னைப் பிறப்பித்துவிடாதே. பக்ஷபாதமாக எழுதவும், முக்ய விஷயங்களை எழுதாது மறைத்து மழுப்பவும், கடமையைத் தவறவும், கண்ணியத்தைக் கைவிடவும் படியான இழிகுணத்தைக் கொடுக்காதே.

ஹே மகானுபாவா....! பள்ளிக்கூடத்துப் பையன்களிடமும், கலேஜ் மாணவர்களிடமும் அகப்பட்டுக்கொண்டுவிழிக்கும்உபாத்தியாயர் தொழிலை மட்டும் எனக்குக் கொடுக்காதே. தர்பஹஸ்த உபாத்தியாயர் தொழிலைக் கொடுத்து மந்திரலோபமும், சாஸ்திரத்தை நடத்துவதாக வேஷம் பூண்டு முற்றிலும் அக்ரமத்தைச் செய்யும் சில பாவிகளைப் போல் பிறப்பிக்காதே. பணத்திற்காகப் பொய்யும் புரட்டலையும் கூறி, மக்களை ஏமாற்றி மானங்கெட்டு வாழும் சில ஜோஸியர்களைப் போல் என்னைப் பிறப்பித்துவிடாதே.

ஆழாக்குப் பாலில் அரைப்படி ஜலத்தைக் கலந்து கொள்ளை லாபமடிக்கும் சில பால் காரர்களைப் போல் என் தலையில் எழுதாதே. வ்யாதிகளையே பண்டமாக்கி விலைக்கு விற்றுத் தாம் சந்தோஷமாக வாழும் சில ஹோட்டல்காரர்கள், மிட்டாய்க் கடைக்காரர்கள், இடியாப்பம்,

ஏ! ப்ரம்மதேவா! வரதக்ஷிணை என்கிற முறையிலும் சீர்வகைகள் என்கிற வ்யாஜத்திலும் பிள்களைப் பெற்றப் புண்யாத்மாக்கள் கொள்ளையடித்தும், சிறு பெண்களை வாழவிடாது அக்ரமம் செய்தும், தம் பிள்ளைகளை வெறும் முண்டம் போலாக்கி ஏலத்திற்கு விடுவது போல், வரதக்ஷிணை வியாபாரத்தில் மானஹீனமற்று பேரம் பேசும் கேவலம் வெட்கக்கேடான புத்தியை உடைய பெற்றோர் ரகமட்டும் என்னைப் பிறப்பித்துவிடாதே. அதைவிடப் பன்றியாக என்னைப் படைத்துவிடு. நான் பரமசந்தோஷமடைவேன்.

வாணீ: காந்தா! வரதக்ஷிணையைவிட அதிகமான வேகத்தில் தற்காலம் உலகத்தில் சொந்த வீட்டைப் படைத்தவர்களும், முழு வீட்டைத் தம் ஸ்வாதீனத்தில் வாடகைக்குப் பெற்றுள்ளவர்களும், அடாடா....என்ன அக்ரமமாக வாடகையிலும் அட்வான்ஸிலும் கொள்ளையடித்து ஏழை மக்களின் ரத்தக் கண்ணீரைவடிக்கச் செய்கிறார்கள். அத்தகைய கசடர்களின் கூட்டத்தைப் போல் என்னையும் சேர்த்துவிடும்படி எழுதாதே...

என்னப்பனே .... வாணீபதே! ....குடிக்கூலிக்கு வரும் சில அயோக்யர்கள் வீட்டை நாசம் செய்துவிட்டதோடல்லாமல் அட்டைபோல் ஒட்டிக்கொண்டு வாடகையும் தராமல் அனியாயம் செய்வதோடு, தாம் 30 ரூபாயிக்குப் பெற்றுள்ள வீட்டில் 60 ரூபாயிக்கு மேல்தான் சம்பாதித்து வீட்டுக்காரர்களை ஏமாற்றும் மோசப் பேர்வழிகளைப் போல் என் தலையில் எழுதாதே.

என்னப்பனே! எனக்கு எந்த விதமான ஜென்மத்தைக் கொடுத்தாலும் கொடு. அபஸ்வரமாகப் பாடும் ஆத்மாக்களுடன் பழகவோ, பக்கவாத்தியம் வாசிக்கவோ என் தலையில் எழுதாதே; கல்யாணத் தரகனாகவோ, வீட்டுத் தரகனாகவோ, சினிமாத் தரகனாகவோ, ஊரை மோசம் செய்யும் பேயாகவோ என்னைப் பிறப்பிக்காதே. அதை விடக் குப்பை வாரும் தோட்டியாகப் பிறப்பித்துவிடு. பரமானந்த மடைவேன்.

ஏ! ஸரஸ்வதிரமணா, மக்களின் பாவத்தைப் போக்கி புனிதமான மார்க்கத்தில் அவர்களைத் திருந்தச் செய்வதற்காக ஏற்பட்டுள்ள ஆலயங்களையும் அதன் கொள்கைகளையும் நாசம் செய்து கோயிலையே நாசமாக்கி விடும் சில அர்ச்சக பரிசாரக சிப்பந்திகளைப் போல் பணத்திற்கும் தாசி வேசிக்கும் திருட்டுப் புரட்டிற்கும் அடிமையாகித், தன் கடமையை மறந்து, கடவுளை மறந்து, சத்தியத்தை வெட்டி வீழ்த்தி நிசமாக்கும் இழிவான புத்தியைக் கொடுக்கும் தலையெழுத்தை எனக்கு எழுதி விடாதே.

ஒரு மனைவி இருக்கையில், மறு மனைவியை மணக்கவும் கணவனை விட்டுக் காலாடியாய் ஓடும் ஈன

ரமாமணி

“நித்யா வெங்கடராமன்”

மணி ஏழு அடித்தது. இரண்டு மணி நேரமாக நோயாளிகளுடன் தன் வீட்டின் ஆஸ்பத்திரி அறையில் நின்று சிகிச்சை செய்துகொண்டிருந்த டாக்டர் ரமா களைதீர்த்துக்கொள்வதற்காக மாடித் தாழ்வாரத்தின் பக்கம் வந்து நின்றாள். என்றுமில்லாத ஒரு புதிய இன்ப உணர்ச்சி அவள் உள்ளத்தள் புகுந்து அவளது வாடிய முகத்தில் ஒரு தனிச் சோபையை எழுப்பியிருந்தது. மாலைப் பொழுதின் அழகில் ஈடுபட்டு நின்ற ரமாவிற்கு, எதிரில் இருந்த திருக்குளமும், அதன் பின் கம்பீரமாக எழும்பி நின்ற கபாலீஸ்வரர் கோபுரமும் அன்றைக்கு இருந்தது போலவேதான் இன்றைக்கும் காட்சி அளித்தன. பதினைந்து ஆண்டுகளுக்குள் மானிட வாழ்க்கையில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுவிடலாம்; ஆனால் ஆகாயத்தை அளாவி நின்ற ஆலயத்தின் கோபுரமும், அதன் பின் உதயமாகியிருந்த வெண்ணிலாவின் தோற்றமும், என்றைக்கும் மாறாத ஈசுவரத் தன்மையை விளக்கியது போல் தோன்றியன.

ஃஃஃ

ரமா அப்பொழுது பத்தொன்பது வயது மங்கையாக விளங்கினாள். வக்கீல் சுந்தரமையரின் சீமந்த புத்திரி. தாய் தந்தையரின் அன்பைப் பூர்ணமாகப் பெற்றவள் அவள். ஏனெனில் அவளுக்குப் பின், பல ஆண்டுகள் ஆன பிறகே அவளது சிறிய தம்பி கோபுவும் தங்கை பாமாவும் பிறந்தார்கள்.

ரமா அந்நாட்களில் கலாசாலை மாணவிகளுக்கு இயல்பான குண விசேஷங்களுடனும், மங்கைப் பருவத்திற்கேற்ற மனோபாவங்களுடனும் விளங்கினாள். யௌவனத்தின் அலக்ஷ்யச் செருக்குடன் சுயேச்சையாக வாழ்க்கை நடத்திய வசந்த காலம்.

நாட்கள் சிறகைவிரித்துப்பறந்து சென்றன ரமாவுக்கு ஏனோ ஏகாந்தம் ரொம்பவும் பிடித்திருந்தது. பருவத்தின் இயல்பினால் தானோ? தந்தை உலக விவகாரங்களைத்தான் பேசுவார். தாயின் பேச்சுகளோ குடும்ப வாழ்க்கையை ஒட்டியதாக இருக்கும். சகோதரர்களின் பிள்ளை மொழிகள் ஒரு சமயம் இன்பத்தையும், வேறொரு சமயம் துன்பத்தையுமே தருவதாயிருந்தது. ஆனால் அவளது மனக்கோட்டைகளைப் பாராட்டவும் அதற்குத் தகுந்த சிகரங்கள் அமைத்து வர்ணங்கள் தீட்டவும் அவள் பகற்கனவுகளுக்கேற்ற எதிர் கனவுகளை விவரிக்கவும், ஒருவனுக்குத்தான் தெரிந்திருந்தது. ஆமாம் வாஸ்தவம், அது ஏன்? ஏனோ!

மணி, அப்பொழுது வைத்திய கலாசாலையில் ஐந்தாவது வருஷம்வாசித்துக்கொண்டிருந்தான். ஹாஸ்டலில் இருந்தவன ஞாயிற்றுக் கிழமைகளில மாமா வீட்டிற்கு வருவான். முறைப்படி மருமகனுக்கும் ஸ்தானத்திலிருந்த போதிலும, மாமனும் மாமியும் அவனை அவ்விதம் பாவிக்கவில்லை. மைலாப்பூர் பிரபல வக்கீல் சுந்தரமையர் எங்கே? ஏழைப் பள்ளிக்கூட வாத்தியாரான (மணியின் தந்தை) வைத்திய நாத ஐயர் எங்கே? ரமாவின் மனத்திலோ விவாகத்தைப் பற்றிய எண்ணமே உண்டாகவில்லை.

இரண்டு ஆண்டுகள் தேய்ந்து மறைந்தன. அன்று மாலை இதே இடத்தில் நின்று, நிலவொளியில் கோபுரத்தின் கம்பீரத்தையும் அழகையும் பார்த்துக்கொண்டிருந்த சமயம்; கீழே வீதியில் ஒரு வண்டி வந்து நிற்கும் சப்தம்; அத்தையும், அத்திம்பேரும் பெட்டிபடுக்கைகளுடன் இறங்கி உள்ளே போகும் காட்சி; கூடத்தில் தாய்தந்தையர்கள் வந்தவர்களை வரவேற்பதும், குசலப்பிரச்னம் செய்வதும்—ஆஹா அது என்ன! அத்தை என்னவோ சொல்லிக்கொண்டிருந்தாளே — மணிக்குக் கல்யாணம் நிச்சயமாகிவிட்டதா? பெரிய இடத்துப் பெண்ணா....? உலகமே சுழன்றது. தனக்கு மணியிடத்தில் ஏற்பட்டிருந்த உணர்ச்சி பரிசுத்தமான காதல் என்பதை ரமா அந்த க்ஷணத்திலேதான் உணர்ந்தாள்.

ஃஃஃ

ஐந்து வருஷத்திற்குப் பிறகுதான மணியும், ரமாவும் மறுபடியும் சந்தித்தார்கள். அந்தச் சந்திப்பு இன்றைக்கும் ரமாவின் மனதில நேற்று நடந்தது போல அவ்வளவு தெளிவாக காட்சி அளித்தது. ரமா, அப்பொழுது வைத்தியகலாசாலையில் ஐந்து வருஷம் படித்து பட்டம் பெற்றிருந்தாள். சொந்தத்தில் ஒரு வைத்திய ஆஸ்பத்திரி ஏற்படுத்தி நடத்திவந்தாள். தன்னுடைய வேலையை உற்சாகத்துடன் செய்துவந்தாள். இன்பம் துன்பம் இல்லாத ஏகாந்த வாழ்க்கை. முகத்தோற்றமும் அதற்கேற்றபடி அமைந்திருந்தது. மணியின் தோற்றத்திலோ வெளிப்படையாக அதிகமான மாறுதல்கள் தென்படவில்லை. எனினும். அவனது அழகான கண்கள் ஒளி இழந்தவை போல் இருந்தன. விவரிக்கமுடியாத பெருந்துயரமும் ஏக்கமும் அவற்றுள் பதுங்கியிருந்தன. ரமாவை ஐந்து வருஷங்களுக்குப் பின் முதல முதலாக சந்தித்தாள். அந்த நிலவொளியிலே மணியின் கண்களைப் பார்த்தவுடன் அவனது புண்பட்ட மனநிலைமையை ஒரு க்ஷணத்தில் அறிந்துகொண்டாள்.

மணியின் பெரிய இடத்து சம்பந்தம் விபரீதமாக முடிந்தது. பர்மாவில் உயர்ந்த உத்தியோகத்தில் இருந்த ராமசந்திர ஐயர், தம் புதல்வியை மணிக்குக் கொடுப்பதாகத் தாமாகவே வலுவில் விவாகப் பேச்சைத் தொடங்கியபோது, வைத்தியநாத ஐயருக்கும், அவர் மனைவிக்கும் அளவற்ற ஆனந்தமும் பெருமையும் ஏற்பட்டது. மணி, ரமாவைத்தான் விரும்பினான். ஆனால் ரமா, தன்னை விட உயர்ந்தவளென்றும், தன்னை கணவனாக ஏற்றுக் கொள்ளமாட்டாள் என்றும் எண்ணினான். பெற்றோர் விருப்பப் பிரகாரம் கல்யாணம் நடந்தது. பிறகு இரங்கூனில் ஒரு ஆஸ்பத்திரியில் மாமனார் சிபார்சின் பேரில் மணிக்கு பெரிய டாக்டர் வேலையும் கிடைத்தது. மனைவி காமாக்ஷியுடன் தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்தான். வாழ்க்கையில் பசையோ பற்றுதலோ இல்லை; காமாக்ஷிக்குக் கொஞ்சம் மந்தசுபாவம். எனினும் பொறுப்பைத் தட்டிவிடவில்லை அவன்.

ஆனால் எதிர்பாராத வண்ணம் இந்தப் பசையற்ற வாழ்க்கைக்கு ஒரு முடிவு ஏற்பட்டது. உலக மஹாயுத்தத்தில் ஜப்பானியர்கள் ஒன்றுசேர்ந்துகொண்டு பர்மாவைத் தாக்கினார்கள். திடீரென்று ஒருநாள் காலை பத்து மணிக்கு அழகான இரங்கூன் நகரம் அதிகமான ஜனநடமாட்டத்துடன் ஜே ஜே என்று இருந்தசமயம், ஜப்பானியர்கள் குண்டுவீச்சினால் தாக்கப்பட்டு அல்லோல கல்லோலப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் இழந்தார்கள். டாக்டர் மணியின் வீட்டின்மேல் ஒரு குண்டு விழுந்துவிடவே, அந்த வீட்ட தெரியாமல் அழிந்துவிட்டது. பாவம் காமாக்ஷியும், அந்த முதல் குண்டுக்குப் பலியானாள். மணி, அச்சமயம் ஆஸ்பத்திரியில் இருந்தபடியால் தப்பிப் பிழைத்தான. இதன் பின் நிகழ்ச்சிகள் வேகமாகவே நடந்தன. பர்மாவில் இருந்து எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்து, பொருள்களை எல்லாம் இழந்த பின், உயிர் தப்பி ஓடிவந்தான் மணி. அவை எல்லாம் இப்பொழுது ஒரு கோரக்கனவாகத் தோன்றின.

ஃஃஃ

திடீர் என்று யாரோ வரும் சப்தம் கேட்டுத் திரும்பினாள் ரமா. என்ன ஆச்சரியம்! மணிதான் எதிரே நின்றான். ராமாவுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

“என்ன ரமா, என்னை அடையாளமே தெரியவில்லையா? நான் அவ்வளவு மாறிவிட்டேனா?” என்று கேட்டுக்கொண்டே பக்கத்தில் வந்து நின்றான் மணி. “அதெல்லாம் ஒன்றுமில்லை. எப்பொழுது வந்தாய்?” என்று வினவினாள் ரமா.

“ரமா இந்த சுயேச்சையான சஞ்சாரத்தை எத்தனை நாள் தனியாகவே செய்யப் போகிறாய்? உன் கனவுகளை உரிமையுடன் பகிர்ந்துகொள்ளும் பாக்கியம் இனிமேலாகிலும் எனக்கு ஏற்படுமா?”

மணியின் அதரங்கள், ரமாவின் அதரங்களை நாடிச் சென்றன. அதற்கு மேல் அங்கிருப்பது அழகல்லவென்று அம்புலியும் அருகில் மிதந்து வந்த மேகத்தினுட் புகுந்தான்.

தீபாவளி மலிவு விலை!

ஸ்விஸ் மேக். சரியானடிப மணி காட்டும் அதி அழகிய நவீன நாகரீக திணுசுகளில் கைக்கடியாரங்கள் மூன்று வருஷ உத்தரவாதம்.

க்ரோமியம் கேஸ்-சதுரம் அல்லது ரவுண்ட் ரூ. 16, நல்ல ரகம் செகண்ட் ஹாண்டுடன் ரூ. 18, மிகவும் உயர்தரமான ரூ. 20, செண்டர் செகண்டுடன் கூடிய ரூ 21, 4 ஜ்வல்-ரவுண்ட் ரூ. 23, 4 ஜ்வல் சதுரம் ரூ 25.

க்ரோமியம் கேஸ் ஜ்வல்கள் நீண்ட சதுரம் கையில் கட்ட தகுந்த வளைவுடன் ரூ. 35, 15 ஜ்வல்கள் ரூ. 55, ரோல்ட்கோல்ட் 5 ஜ்வல்கள் ரூ. 45, 15 ஜ்வல்கள் ரூ. 70.

பாக்கிங், தபால் செலவு இனம்.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்

IMPERIAL TRADING CO. (H.M.)

AISHBAGHGATE - LUCKNOW.

சக்தி ஆருடம்!

சென்னை சர்க்கார் மீன் இலாகா, கெஜட் பதவி உத்தியோகத்திலிருக்கும் ஸ்ரீ எஸ். வி. கணபதி (HYDROLOGIST, 7-6-48-ல் எழுதுகிறார்:—“தங்கள் பலன்கள் ஆச்சரியமானவை. பலன்களில் மிகவும் திருப்தி”

முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0 வி.பி.பி. தனி. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் [illegible]

தீபாவளிப் பண்டிகை

—."சகோதரி. ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள்."—

சாம்பசிவய்யர்— அவர் மனைவி லக்ஷ்மி.

காமாக்ஷியம்மாள்-சாம்பசிவய்யர் சகோதரி.

கேதாரமய்யர்-காமாக்ஷியம்மாள் கணவர்.

லீலா, ராமு, கிட்டு—சாம்பசிவய்யர் குழந்தைகள்.

காமாக்ஷி: ஏண்டாப்பா சாம்பு, நம்ம குழந்தை லீலாவுக்கு. இந்த வருஷம் தலை தீபாவளி. மாப்பிள்ளையும், அவன் பெற்றோர்களும் வரப்போரா. எல்லாம் நன்ருக நடக்கணும்.

சாம்பு: ஆமாம் அக்கா. நீயும் அத்திம்பேரும் பெரியவாளா வந்திருக்கிறீர்கள். ஆகவேண்டிய காரியங்களைபெல்லாம் கவனித்து, நீங்கள்தான் எல்லாவற்றையும் நடத்தி வைக்கவேண்டும். ஜவுளியெல்லாம் வாங்கியாகிவிட்டது. மாப்பிள்ளைக்கு வைர மோதிரம் இதோ பார். திருப்தியாயிருக்கிறதா?

காமாக்ஷி: நன்ருயிருக்கிறது. நம்ம லீலாவுக்கும் சம்பந்தி, ஒரு தங்க ஒட்டியாணம் கொடுக்கப் போருளாம். பதில் மரியாதையாக லக்ஷ்மிக்கும் உனக்கும் அவர்கள் புடவை வேஷ்டி வாங்கிக் கொடுப்பது வழக்கம். அனேகமாக வாங்கிக்கொண்டு வருவார்கள் என்று நினைக்கிறேன்.

ராமு, கிட்டு: அத்தை, இதோ பார் எங்களுக்குக்கூட அம்மாவும் அப்பாவும் சரிகை வேஷ்டியும், பட்டு சட்டையும் வாங்கியிருக்கா. தீபாவளி இன்னும் நானகு நாள்தான் இருக்கு; பட்டாசுதான் இன்னம் வாங்கவில்லை. நாளன்னைக்கு தான் வாங்கித் தருவராம் அப்பா; அத்திம்பேர்! நீங்க இன்னிக்கே கடைக்கு வந்து எங்கள் இரண்டுபேருக்கும் வரணம் மத்தாப்பு பட்டாசு, படபடாக்குச்சி எல்லாம் வாங்கித் தாருங்கள்.

சாம்பு: அத்திம்பேர், இன்னிக்கே வாங்கிவிட்டால், இந்தப் பசங்கள் இன்றுமுதல் வாண வேடிக்கை ஆரம்பித்துவிடுவார்கள். ஒரே தலைவலிதான். அதுக்காத்தான் நாளன்னைக்கு வாங்கலாமே, என்று இருக்கிறேன்.

காமாக்ஷி: ஏண்டியம்மா லக்ஷ்மி, தீபாவளி பக்ஷணம் எல்லாம் செய்ய வேண்டாமா? என்ன திட்டம் போட்டிருக்கிருய்?

லக்ஷ்மி: மைசூர்பாகு, ஜிலேபியும் பண்ணலாம என்று உத்தேவேண்டும். காலம் போகப் போக வழக்கங்களும் மாறுகிறது. அது போகட்டும். தீபாவளி மருந்து செய்யவேண்டாமா?

லக்ஷ்மி: அக்கா, அதுதான் எனக்கு அத்தனை பழக்கம் இல்லை. அது எப்படி செய்வது?

காமாக்ஷி: அதற்கு வேண்டியது 8 சாமான்கள்: சுக்கு, சித்தரத்தை, அரிசிதிப்பிலி, கண்டந்திப்பிலி இந்த நாலும், இரண்டு இரண்டு பலமும்; பரங்கிப்பட்டை, ஓமம், மிளகு, சீரகம் இந்த நாலும் ஒரு ஒரு பலமும் வாங்கி வரச்சொல். இந்த 8 சாமான்களையும் வறுத்து, பொடி பண்ணி, சலித்துவைத்துக்கொள். பிறகு 10 பலம் இஞ்சியை அரைத்து 4 ஆழாக்கு ஜலத்தில் கரைத்து வடிகட்டி தெளிய வைத்து, அந்தத் தெளிவை ஒரு உருளியில் விட்டு 40 பலம் வெல்லம், இல்லாவிட்டால் சீனுகற்கண்டை போட்டு, கொதிக்க ஆரம்பித்ததும், மேற்படி 8 சாமான்களின் பொடியை போட்டு கிளறிக் கொண்டேயிருக்கவேணும். 10 பலம் நெய்விட்டுக் கிளறி சற்று இருகி வரும்போது கொஞ்சம் தேனும் விட்டு பிறகு அடுப்பை விட்டு இறக்கிவிடவேண்டும். சற்று கெட்டியாகி ஆறினவுடன் சுத்தமான ஒரு கண்ணுடி சீசாவில் எடுத்து வைத்துவிடு.

கிட்டு: அப்பா, தீபாவளியென்ருல் என்ன? அடுத்தவாரம் அதைப் பற்றி ஒரு வியாசம் எழுதும்படி எங்கள் வாத்தியார் சொல்லியிருக்கார்.

லீலா: தீபாவளி என்ருல் தீப வரிசை, அதாவது தீப + ஆவலி ஆவலியென்ருல் வரி வரியாக வைப்பது—என் சிநேகிதி ஒருத்தி கங்காபாய் என்பவள வட இந்தியாவிலிருந்து இங்கே காலேஜில் படிக்க வந்திருக்கிருள். அவர்கள் ஊர்களில் தீபாவளிக்கு முதல் நாளிலிருந்தே இரண்டு மூன்று நாட்கள் வீடுகளில் எல்லாம் தீபாலங்காரம் செய்வார்களாம் வீடுகளிலும் தெருக்களிலும். குறுக்கும் நெடுக்குமாக வரிசை வரிசையாக பலவர்ணக் கடிதங்களால் செய்த தீப விளக்குகளை வைத்து அவற்றுள் மெழுகு வத்திகளை ஏற்றிவைப்பார்களாம்.

கிட்டு: அதிருக்கட்டும் அப்பா, தீபாவளி கதை சொல்லுங்கள்.

கேதாரம்: ஏண்டா குழந்தைகளா, உங்களுக்கெல்லாம் நரகாசுரன் கதை தெரியாதா? நரகாசுரன் என்று ஒரு அசுரன் இருந்தானும். ஜனங்களையெல்லாம் முறையிட்டாளாம். அப்ப கிருஷ்ணபகவான் சேனைகளோடு போய் நரகாசுரனேடு யுத்தம் பண்ணி அவனை கொன்ருர். உயிர் போவதற்கு முன் அந்த அசுரனுக்கு நல்ல புத்திவந்து கிருஷ்ணபிரானைத் துதித்து வணங்கினுன். அவனுக்கு நல்ல புத்தி வந்த அந்த அதிகாலை வேளையானது நல்ல புண்ணிய காலம் என்றும் அப்போது எல்லாரும் மங்களஸ்நானம் செய்து ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை தியானம் செய்வது நல்லது என்றும் சொல்லுவார்கள்.

லீலா: அத்திம்பேர், நேற்று இந்த ஊர் மாதர் சங்கத்தில், ஒரு பெரியம்மாள் தீபாவளியைப் பற்றி ஒரு உபந்நியாசம் செய்தார்கள். நரக அசுரன் என்ருல், நரகங்களையெல்லாம் குறிக்கும் ஒரு அசுர தேவதையாம். நரகம் மோக்ஷம் எல்லாம் இங்கேயே இந்த உலகத்திலேயே இடங்களிலும் விசேஷ காலங்களிலும் நிரைய அகல் விளக்குகளும் குத்தி விளக்குகளும் ஏற்றி வைத்தால்தான் மங்களகரமாயிருக்கு—ஆகவே தீபாவளி, கார்த்திகை முதலான விசேஷ காலங்களில் வரி வரியாக தீபங்கள் ஏற்றிவைப்பது அலங்காரமாயும் மங்களகரமாயுமிருக்கிறது.

காமாக்ஷி: லக்ஷ்மி, இந்தப் பேச்சு போதும். வா, கடைக்குப் போய் பக்ஷணங்களை வைப்பதற்கு புதிதாக பாத்திரங்களும், 2 குத்தி விளக்கும் வாங்கிக்கொண்டு வருவோம்.

கேதாரம்: ராமு-கிட்டு, நீங்களும் வாருங்கள். உங்களுக்கு நிறைய வாணங்கள்வாங்கிக்கொண்டு வருவோம். தீபாவளி வருகிறது. இன்று முதல் பட்டாஸ் வெடித்துக்கொண்டிருந்தால்தான் உங்களுக்கும் சந்தோஷம்.

எங்கள் மனமார்ந்த தீபாவளி வாழ்த்துகள்

எலெக்ட்ரிக் சாமான்கள், மோட்டார்கள், ஆயில் என்ஜின்கள், இதர மிஷன்கள், பைப்கள், விற்பனையாளர்கள்.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்

RAJASTAN SYNDICATE

G. P. O BOX. NO.2562, CALCUTTA-1

எமது தீபாவளி வாழ்த்துக்கள்

மோஹன் ராம் கம்பெனியாரின்
பெட்ஷிட்டுகள், டவல்கள்,
சேலைகள் மற்றும்—
★ "M.K.C." சிங்கம் மார்க் பனியன், ★
ஸிலிப்ஓவர்ஸ் அண்டர்வேர்ஸ்,
ஜெண்ட்ச் வகையரு

மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்

மனோஹரன் ஸ்டோர்ஸ்

181, கீழ்வாசல் :: மதுரை

Phone : 219 :: Grams : HARANTALKY

ஏழு நாட்களில் என்ன நடக்கும்

மேஷ ராசி

(அச்வனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

தொழில் துறையில் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளும், சினிமா, சங்கீதம் முதலிய இனங்களில் ஈடுபடுபவர்களுக்கு இவ்வாரம் கடைப் பகுதியில் அநேக அனுகூலங்கள் காணப்படுகின்றன. போட்டி, பந்தயம் முதலிய இனங்களில் உபாயமான வெற்றி.

ரிஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

வீண் கவலைக்கு இடங்கொடாமல் தேக ஆரோக்கியத்தை நன்கு கவனித்து வருவது நல்லது. பணவசதிகளும், தொழில் துறையில் செல்வாக்கும் வெகு திருப்திகரமென்றாலும், செலவு வருமானத்தைக் காட்டிலும் அதிகமென்றே சொல்லலாம்.

மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸூ 3-ம் பாதம் முடிய)

குடும்பத்தில் சுகம், நல்ல தேக ஆரோக்கியம், நண்பர்களின் ஆதரவு, தொழில் துறையில் திருப்தியான நிலைமையும், பணவசதிகளும், மற்றும் சில அம்சங்களாகும். உத்யோகத் துறையிலுள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் அபிமானமும், சம்பள உயர்வும், மேல் வருமானமும் இருந்து வரும்.

கடக ராசி

(புனர்வஸூ கடை பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

லக்னாதிபதி சந்திரன் குஜனுடனும், குருவுடனும் இருப்பதால் இவ்வாரம் பின்பாதியில் திடீரென சில தனபிராப்திகளும், ஸ்திரீகளால் சில அனுகூலங்களும் ஏற்படும். என்றாலும் நினைத்து வரும் காரியங்களில் பூரண வெற்றி பெறுவதற்கு நவம்பர் மாதம் 17-ந் தேதி வரையில் பொறுத்திருக்க நேரிடும். அதுவரையிலும் தாமதத்தால் உண்டாகும் வெறுப்பு உணர்ச்சிக்கும், நம்பிக்கைக் குறைவுக்கும், வீணான எண்ணங்களுக்கும் இடங்கொடாமல் தைரியமாய் இருத்தல் நன்று.

சிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)

ஜன்மத்தில் சனியும், 3-ல் சூரியன் நீசனாய் இருப்பதால் தைரியக் குறைவும், மனதில் உற்சாகமில்லாமையும், தனாதிபதி புதன் சூரியனுடன் 3-ல் இருப்பதால் முதல் பகுதியில் அதிகச் செலவும், பணமுடையும் ஏற்படக்கூடுமென்றாலும் எல்லா சந்தர்ப்பங்களையும் சுலபமாகவே சமாளித்து வருவார்கள். 10-ம் வீட்டை அங்காரகனும், சனியும பார்ப்பதால் தொழில் துறையில் எப்போதுமுள்ள திருப்திகரமான வருமானமும் இருந்துவரும்.

கன்யா ராசி

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய)

வரவுக்கு மிஞ்சின செலவும், வருமானக் குறைவும், ஈடுபட்டு நிற்கும் வீடு, நிலம் முதலியவற்றை ஓர் வழிப்படுத்தி கடன் இல்லாமல் இருக்கும் எண்ணம், குடும்ப சம்பந்தமான விஷயங்களிலும் சீராகக் காணப்படாமை, தேக அசௌக்கியம் முதலியன சில அம்சங்களாகும். பணமுள்ள முதலாளிகள் வெகு ஜாக்ரதையாயிருந்தால் எதிர்காலத்தில் மூலதனம் கொஞ்சம் கொஞ்சமாய் மறைவதைத் தடுக்கக் கூடும்.

துலா ராசி

(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய)

தாராளமான பணவசதிகளும், புதனை சனி பார்ப்பதால் இவ்வாரம் பின் பாதியில் தொழில் துறையில் விசேஷித்த லாபங்களும், தனபிராப்திகளும் ஏற்படக்கூடும். குரு பலம் பெற்று 3-ல் இருப்பதால் கூட்டு வியாபாரம், சகோதரர் மனஸ்தாபம், தகப்பன்--மகன் வாக்குவாதம், வழக்கு வியாஜ்யம் முதலியனவற்றால் சிலர் பாதிக்கப்படலாம்.

விருச்சிக ராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

சென்ற வாரத்தைப் போலவே இவ்வாரமும் தொழில் துறையில் உற்சாகமும் முதல் பகுதியில் சுப விசேஷங்களின் பொருட்டு அதிகச் செலவும், மூன்றாம் பகுதியில் தனபிராப்திகளும் காணப்படுகின்றன. பணவசதிகளும் திருப்திகரமான நிலையில் இருந்துவரும்.

தனுர் ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய)

இவ்வாரம் அங்காரகனும், சந்திரனும் இருவரும் கூடி 12-ல் இருப்பதால் புதன் வியாழனில் வெளியூரிலிருந்து சிலர் தனபிராப்திகளை திடீரென பெறக்கூடும். மற்றும் சிலர் சந்தோஷத்தை அளிக்கும் நல்ல தகவல்களையும், சில விகித அனுகூலங்களையும் பெறக்கூடும். சனி 3-மிடத்தைப் பார்ப்பதாலும், சனியை குரு பார்ப்பதாலும் உத்தியோகத் துறையில் அதிக பொறுப்புகளும், மேலதிகாரிகளின் ஆதரவும், அந்தஸ்தும், கௌரவமும் சில முக்கிய அம்சங்களாகும்.

மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய)

யோககாரகன் நீச்சனான போதிலும் புதனுடன் பரிவர்த்தனையாய் இருப்பதாலே இவ்வாரம் பின் பாதியில் சில தனபிராப்திகளும், அதிகச் செலவும் கலந்தாற்போல் காணப்[illegible]கின்றது. சென்ற வாரத்திலிரு[illegible] பணமுடை ஒழிந்து, பணவசதிக[illegible] பெறுகும். தொழில் துறையில் [illegible] சீரான வருமானம் என்றாலும், செ[illegible] அபாரமாய்த் தென்படுகின்றது.

கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

இவ்வாரம் இரண்டாம் பகுதியில் சிலர் ஓர் சிறிய பிரயாணத்தை ஏற்க[illegible] நேரிடும். தொழில் துறையில் முன்னேற்றமும் லாபங்களும் காணப்படு[illegible]கின்றன. சுக்ரன் 7-ல நீச்சமடைந்த போதிலும் அவ்வீட்டோன் அவனுடன் பரிவர்த்தனையாய் இருப்பது இவர்களுக்கு நல்லதே. ஒப்பந்தங்கள் வெற்றிகரமாய் ஈடுபடக்கூடும். பணவசதிகளும், நாணயமும் பெருகுவது மல்லாமல் தொழில் துறையில் ஓர் புதிய நம்பிக்கையுமிருந்து வரும்.

மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய)

இவ்வாரம் பின் பகுதியில் புதன் அஷ்டமத்திலிருப்பதால் சில ஆதாயங்களும் அனுகூலங்களும் ஏற்படக்கியாயமுண்டு. மேலும் சிலர் வெளியூர் பிரயாணம் செய்யக்கூடும். பணவசதிசன் தேவையான அளவுக்கு இருந்தவரினும், தொழில் துறையில் நவம்பர் மாத 17-ந் தேதிக்கு மேல் பிரபலமும், அமோகமான லாபமும், தொழில் விஸ்தாரமும், கௌரவம் அதிகமாதலும், ஏராளமான பணவசதிகளும் காணப்படுகின்றன.

அனைவருக்கும் எமது தீபாவளி மங்கள வாழ்த்துக்கள்

ஸ்வர்ணமாளிகையின்

பூரண மகிழ்வோடணியும் பொலிவு
மிக்க பூஷணங்கள் என்றென்றும்
அனைவருக்கும் திருப்தியளிக்கும்.

★

P. A. ராஜுசெட்டியார் & பிரதர்

வைர வியாபாரிகள், கோயமுத்தூர்

Tel : "ராஜா" Phone : 268

ஸ்வர்ண பிலிம்சாரின்

நவம்பர் வெளியீடு!

ஸி. ஹொன்னப்ப பாகவதர் **லக்ஷ்மி பாய்**

ராகவேந்திர ராவ், முராராச்சார், சீதாராம சாஸ்திரி, மஹாபல ராவ், அ[illegible], கணபதி பட், ஹரி பட், மஹேஷ்வரய்யா, பண்டரி பாய், ஜெயஸ்ரீ, லக்ஷ்மா, ரமாபாய், இன்னும் பல பிரபல கன்னட நக்ஷத்திரங்கள் நடித்தது.

டைரக்ஷன் : **பொம்மன்—டி. ஈராணி**

கதை, வசனம் : **சுரபி** சங்கீதம் : **சி. ஹொன்னப்ப பாகவதர்** பாட்டு : **சீதாராம சாஸ்திரி**

ஸ்டுடியோ : **பிரகதி பிக்சர்ஸ்**

அன்பர்கள்

அனைவருக்கும்

எமது

மனமார்ந்த

தீபாவளி வாழ்த்துக்கள்.

ஹநுமான

விரைவில் வெள்ளித்திரைக்கு வருகிறது

எனெஸ்கே பிலிம்ஸ்
&
உமா பிக்சர்ஸ்
தயாரிப்பு

நல்ல தம்பி

N.S.கிருஷ்ணன், T.A.மதுரம், P.பானுமதி, S.V.சகஸ்ரநாமம்,
மற்றும்
என்.எஸ்.கே. நாடக சபா நடிகர்கள்
நடிப்பது.

கதை: C.N.அண்ணாதுரை.M.A.

பாடல்கள்: உடுமலைநாராயணகவி

ஸ்டுடியோ: நியூடோன்.

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு.

விவரங்களுக்கு: எனெஸ்கே பிலிம்ஸ்.
6, வெங்கட்ரமய்யர் தெரு, தி. நகர், மதராஸ்.

EDITED AND PUBLISHED BY V. SUNDARAM FOR THE HANUMAN LTD., 57, SIR THYAGARAJA ROAD, THYAGARAYANAGAR
AND PRINTED BY S. JAYARAMAN AT THE KRISHNA PRINTING WORKS, 28, BROADWAY—MADRAS